2940

II N.C.A Debate
Official Report

Vol 25 No 3

5th May 1986

C

V211,31 N86
N86.25.3
136485

வெளியீடு 11-3-1987 Issued 11-3-1987

2940

944187.

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை மே 5, 1986—தொகுதி 25 எண் 3

Monday the May 5, 1986—Volume 25 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3] [Price Rs. 3

136485

## உள்ளடக்கம்.

5—5—1986


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 495—523 |
| 2. தகவல் கோரல் : | |
| தாழ்த்தப்பட்ட மக்களை, அரசு அதிகாரிகள் சாதிப்பெயர் சொல்லி அவமதிப்பு செய்வது குறித்து .. .. .. | 523—525 |
| 3. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) கலசபாக்கம் தொகுதி ஆதமங்கலம் மின் துறை நிலையம் குறித்து .. .. | 525—527 |
| (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வழங்கும் விசைச் செக்குகள் குறித்து .. .. .. | 527—531 |
| 4. அறிவிப்பு— | |
| கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1986 (ஆ.இ.) .. .. | 531 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவு— | |
| கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு 1986 .. .. .. | 531 |
| 6 வரவு-செலவுத் திட்டம் 1986—87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) | 532—651 |
| (அ) கோரிக்கை எண் 1[illegible].—காவல்துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 16.—தீயணைப்புப் பணிகள் | |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 532—534 |
| திருமதி டி. யசோதா .. .. | 534—555 |
| *திரு. செ. செம்மலை .. .. | 555—5[illegible] |


டி 2 எ 101—1

| | | பக்கங்கள் |
|---|---|---|
| திரு. ப. பொன்னுரங்கம் | .. .. | 567—580 |
| *திரு. தெ. பெருமாள் | .. .. | 577—583 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | .. .. | 584—589 |
| திரு. ஜி. கே. ஜெ. பாரதி | .. .. | 590—598 |
| திரு. அ. பாலுசாமி | .. .. | 598—607 |
| *திரு. பொ. உத்திராபதி | .. .. | 608—618 |
| திரு. வே. கு. சின்னசாமி | .. .. | 618—526 |
| டாக்டர். க. நல்லமுத்து | .. .. | 626—633 |
| திரு. மு. பாண்டுரங்கன் | .. .. | 634—640 |
| திரு. எஸ். என் இராமசாமி | .. .. | 640—643 |
| திரு. கு. தமிழரசன் | .. .. | 643—651 |
| 7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் | .. | 652 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, மே 5, திங்கட்கிழமை.

சித்திரை 22, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு."

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

### வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கோவை மாநகரில் வளர்ச்சிப் பணிகள்.

**646—(* வினா எண் 6641) திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக தனியார் மற்றும் அரசுக்குச் சொந்தமான இடங்களை கையகப்படுத்த மாநகராட்சி செயற்குறிப்பு அனுப்பியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(ஆ) கோவை மாநகரத்தின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காக, தனியார் நிலங்களைக் கையகப்படுத்த மேற்கொண்ட 30 செயற்குறிப்புகளில், ஐந்து செயற்குறிப்புகளுக்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவை மாவட்ட

வருவாய் அலுவலரின் ஆய்வில் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை, பள்ளிக்கட்டிடங்கள் கட்டுவதற்கும், சாலைகள் அமைத்தல் மற்றும் சாலைகள் அகலப்படுத்துவதற்கும் தேவையான நிலங்களாகும். அரசுக்குச் சொந்தமான இடங்களை உரிமை மாற்றம் செய்ய 5 செயற்குறிப்புகள் கோவை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. மா. சின்னராசு :** பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகின்ற கோவை நகரத்தில் அரசாங்கத்திற்கும் மாநகராட்சிக்குமான பொது காரியங்களுக்காக புதியதாக அமைக்கப்படுகின்ற லே-அவுட்டுகளில் போதிய இடம் ஒதுக்கவில்லை. சிறிய இடத்தில் லே-அவுட்டுகளில் 5 செண்ட் 10 செண்ட் மட்டுமே ரிசர்வ் சென்ட்டாக வைத்துவிட்டு மீதியை விற்று விடுகிறார்கள். வளர்ந்து வருகின்ற பகுதியில், மாநகராட்சி ஒரு குறிப்பிட்ட பகுதியை பொது காரியங்களுக்கு பயன்படுத்துகின்ற வகையில் ஒதுக்கித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஐந்து இடங்கள் எங்கெங்கு தேர்வு செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஐந்து இடங்கள் எந்தெந்த இடங்கள் என்ற விவரம் இல்லை. அந்த ஐந்து நிலங்களை நில மாற்றம் செய்ய மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தனியார் நிலங்களை சட்டப்படி எவ்வளவு ஒதுக்க முடியுமோ அவ்வளவு ஒதுக்கித்தான் தீரவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். அதன்படி ஒதுக்குகிறோம்.

## தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோதுமை வழங்கல்.

647—(* வினா எண் 8455) **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்திற்காக மத்திய அரசு கோதுமை வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(ஆ) 1985-86 ஆம் ஆண்டிற்கு 44,800 மெட்ரிக் டன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**திரு. எஸ். இராசாராமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கோதுமை வழங்குகின்றபோது இந்த இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு என்று வழங்குகின்றதா அல்லது தமிழக அரசு கேட்டு மத்திய அரசு வழங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத்திற்கு என்று வழங்கப்படுவதில்லை. மாநிலத்திற்கென்று மொத்த அளவாக இது என்.ஆர்.ஈ.பி. ஆர்.எல்.ஈ.ஜி.பி. என்ற திட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகின்றது. குறைந்த விலையில் கோதுமையாக கொடுக்கலாம் என்பதற்காக இந்த கோதுமை கொடுக்கச் சொல்லி இருக்கிறார்கள். இந்த மாவட்டத்திற்கு என்று ஒதுக்குவதில்லை. நாம்தான் இந்த மாவட்டத்திற்கு என்று எவ்வளவு வேலை நடக்கிறதோ அவ்வளவு கோதுமை கொடுக்கிறோம்.

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்தின் வேலைகளுக்கு மத்திய அரசிடமிருந்து கோதுமையை சற்று குறைத்து, அதிக அளவில் அரிசியைப் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமை ஏராளமாக விளைகிறது. கோதுமையை செலவு செய்ய வேண்டும். இதற்குப் பயன்படுத்த வேண்டும் என்பதால் வறுமைக்கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு உணவாகக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று கருதி கோதுமையை வழங்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். அரிசி நிலைமையைப் பொறுத்தவரையில் உயர்த்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறுமைக்கோட்டின்கீழ் வாழ்கின்றவர்களுக்கு வேலைக்காக இந்த கோதுமை அளிப்பதாக அமைச்சர் அவர்கள்

சொன்னார்கள். அரிசி அளிப்பதைவிட எல்லாம் கோதுமையாக வேலைக்கு உணவு திட்டத்தில் கொடுக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா? கோதுமையை சாப்பிடுவதால் எடை குறைந்து சக்தி அதிகமாகிறது என்ற காரணத்தினால் கோதுமையாக நூராவும் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டு மக்கள் அரிசி சாப்பிட்டுப் பழக்கப்பட்டவர்கள். எனவே கோதுமையை முழுவதுமாகத் திணிப்பது என்பது இயலாத காரியம். அந்த யோசனை அரசாங்கத்திடம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு கோதுமையை வழங்கி அதன்மூலம் பல்வேறு பணிகளை நிறைவேற்றி இருப்பதாக அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தெரிய வருகிறது. அப்படியானால் தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கோதுமை வழங்கியதால் என்னென்ன பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன? அவை எந்த அளவுக்கு நிறைவேற்றப் பட்டுள்ளன? இந்த விவரங்களை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வேலை செய்கிறவர்களுக்கு ஒரு நாளைக்கு 8 ரூபாய் கூலியாகக் கொடுக்க வேண்டுமென்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். அந்த 8 ரூபாயிலே இரண்டு கிலோ கோதுமையும், ஒரு கிலோ அரிசியும் வழங்கி எஞ்சியதைப் பணமாகக் கொடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. கோதுமையை மத்திய அரசு நிர்ணயித்த விலையில்தான் கொடுக்கிறோம். அந்த விலை ஒரு கிலோ 1 ரூபாய் 50 பைசா. இப்படி 2 கிலோ கொடுக்கிறோம். அரிசி விலை ஒரு கிலோ 1 ரூபாய் 85 பைசா. மீதம் 3 ரூபாய் 15 பைசா கையிலே பணமாகக் கொடுக்கிறோம். 8 ரூபாய் என்று கொடுக்கிற கூலியை 10 ரூபாயாக உயர்த்தலாமா என்று அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.





**திரு. கூடலூர் இ. வி. வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடைபெறுகிற வேலைகளுக்கு கோதுமை கொடுக்கிறார்கள். தமிழகத்தில் இருக்கிற நம்முடைய தொழிலாளர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் அரிசி உணவில் பழக்கப்பட்டவர்கள். அவர்களுக்குக் கோதுமை பிடிக்கவில்லை. எனவே அவற்றை வாங்கி விற்றுவிடுகிறார்கள். அந்த கோதுமையை மாவாக அரைத்துக் கொடுத்தால், கூடவே எண்ணெயும் கொடுத்தால் பூரியாகச் சுட்டுச் சாப்பிடுவார்கள். அந்த வகையில் எண்ணெயும் கொடுக்கப்படுமா? கோதுமையை மாவாக அரைத்துக் கொடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கோதுமையை அரைத்து மாவாகக் கொடுக்கும் யோசனை எதுவும் இப்போது நம்மிடத்தில் இல்லை. கோதுமையாகத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. கோதுமையைத் தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்துகிற அளவு நாள்தோறும் பெருகிக் கொண்டு வருகிறது என்பதை நாம் உணரவேண்டும். மேலும் கோதுமை சாப்பிடுவதால் உடம்புக்கு நல்லது என்று சொல்லுகிறார்கள். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். எனவே அவர்கள் கோதுமையைப் பயன்படுத்தவில்லை என்று சொல்ல முடியாது. அதனை வாங்குபவர்களில் சிலர் விற்று விடுகிறார்கள். சிலர் அதைப் சாப்பிடுகிற வகையில் ஏதாவது செய்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த விலையில் அதாவது ஒரு கிலோ ஒரு ரூபாய் 50 பைசா என்ற வீதத்தில் 2 கிலோ கோதுமை கொடுக்கிறோம்.

**திரு. பொ. உத்திராபதி:** பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இவ்வாறு கொடுக்கப்படக்கூடிய திட்டம் நல்ல திட்டம்தான். ஆனால் இந்த அரிசியை ஒவ்வொரு யூனியனுக்கும் அனுப்புகிறபோது வேலைக்கான எஸ்டிமேட் போட்டு வருவதில்லை. அரிசி வந்து ஆயிரக் கணக்கான மூட்டைகள் 4 மாதம், 6 மாதம் என்று தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பாக திருத்துறைப்பூண்டியில் அவ்வாறு தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே வேலைக்கு உத்தரவாதம் வருகிற போதும் அரிசி கிடைக்க வேண்டும்: அரிசி வந்தவுடன் வேலைக்கு உத்தரவாதமும் கிடைக்க வேண்டும். இரண்டும் கிடைத்தால் தான் நல்லது. அப்போதுதான் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு வேலையும் கிடைக்கும்; அனுப்பக்கூடிய

அரிசியும் கிடைப்பதாக இருக்கும். எனவே இந்த அரிசியும், வேலைக்கான கூலியும் ஒன்றாக இணைத்துக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? இந்தக் கூலி என்பதைப் பொறுத்தவரையில் 8 ரூபாயை 10 ரூபாயாக உயர்த்தப் போவதாகச் சொல்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். 10 ரூபாய் என்பது அப்படிக் கூலியாகாது. அதுவே கிடைக்கவில்லை. ஆகவே இதனை 12 ரூபாயாக ஆக்கினால்தான் குறைந்தபட்சம் அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் இருக்கும். எனவே அந்த வகையில் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரிசியைக் கொண்டுவந்து தேக்கி வைத்திருப்பது முன்கூட்டியே அவர்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காகத்தான் தேக்கி வைக்கப்பட்டிருக்கிறதே தவிர அது கெட்டுப் போக வேண்டும் என்ற நோக்கத்தோடு தேக்கி வைக்கப்படவில்லை. அடுத்து இப்போது 8 ரூபாய் கொடுப்பதைப் பத்து ரூபாயாகக் கொடுப்பது பற்றி அரசு யோசிக்கிறது என்று சொன்னவுடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 12 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். நான் 12 ரூபாய் என்று சொல்லியிருந்தால் 14 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்பார்கள். இப்படி போட்டி வைத்துக்கொண்டு வரவேண்டியதில்லை.

8 ரூபாயைப் பத்து ரூபாயாக உயர்த்தினாலும் மத்திய அரசு கொடுக்கக் கூடிய தொகை ஒரே தொகைதான். ஆனால் கூலியை 2 ரூபாய் உயர்த்திக் கொடுப்பதன் மூலம் வேலை குறைந்துவிடும். அப்படி வேலைகள்தான் குறையுமே தவிர மத்திய அரசு கொடுக்கக்கூடிய மானியம் உயரப்போவதில்லை. அவர்கள் கொடுக்கின்ற தொகை ஒன்றுதான். எனவே கொடுக்கக்கூடிய பணத்தை நாம் உயர்த்தினால் அந்த அளவுக்கு வேலைகள் குறையும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**திரு. ஆர். தியாகராசன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோதுமையை என்னென்ன விதமாக ஏழை மக்கள் உபயோகப்படுத்தலாம் என்ற வகையிலே ஆங்காங்கு இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன் யோசனை வழங்குமா? ஏனென்றால் கோதுமையை எப்படிச் சாப்பிடுவது என்று தெரியாமல் விற்றுவிடுகிறார்கள். எந்தெந்த விதத்தில் பலகாரம் செய்து



எப்படிச் சாப்பிடலாம் என்ற வகையில் பஞ்சாயத்து யூனியன் அல்லது அந்தக் கோதுமையை யார் வழங்குகிறார்களோ அவர்கள் மூலம் அந்த ஜனங்களுக்கு விளக்கமான வகையில் விளம்பரம் கொடுக்கப்படுமா? அந்த வகையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த மட்டில் கோதுமையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் கிராம மக்களிடமிருந்துதான் நாம் கற்றுக் கொள்ள வேண்டுமே தவிர, நாம் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மயிலாப்பூர் இடுகாடு பகுதியில் சோடியம் விளக்குகள்.

848—(*வினா எண். 2823) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாப்பூரில் உள்ள இடுகாடு பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தும் திட்டம் ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஆம். மயிலாப்பூரில் உள்ள இடுகாடு பகுதியில், இரு சோடியம் ஆவி விளக்குகள் பொருத்த சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.

(முற்பகல் 9-10.)

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் உள்ள இடுகாடு பகுதியில் சோடியம் ஆவி விளக்குகள் போடுகின்ற திட்டத்திற்கான மதிப்பீடு என்னவென்று? அந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கான மதிப்பீடு ரூபாய் 21.240 ஆகும். 1985-86 ஆம் ஆண்டிலேயே அது முடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் டெண்டர் செய்வதில் ஆன காரணத்தால் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. இந்த ஆண்டு 1986-87-ல் ஜூன் திங்களுக்குள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 மே 5

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடுகாடுகளில் இறுதி சடங்குகளுக்கு மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிகமான தொகை வசூல் செய்யப்படுவதால் ஏழைகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு மாநகராட்சி நடவடிக்கை எடுக்குமா? கர்நாடக மாநிலத்தில் உள்ளதுபோல் மின்சார இடுகாட்டை சென்னை மாநகராட்சிப் பகுதிகளிலும் அமைக்க அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடுகாட்டில் வேலை செய்கின்ற வெட்டியான்கள் இதுபோன்ற தவறுகளைப் புரிகின்றார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன. அதைப் பார்க்கச் சொல்லியிருக்கிறேன். எங்கெங்கே அப்படி அதிகமாக தவறுகள் நடக்கின்றன என்று புகார்கள் வந்திருக்கின்றனவோ அங்கே எல்லாம் நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவிட்டிருக்கிறோம். நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பெங்களூரிலே இருப்பது போல மின் சுடுகாடு ஏற்படுத்துவதற்காக சென்னை மாநகராட்சி ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறது.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சகோதரி வளர்மதியின் தொகுதி எந்த அளவிற்கு வசதிகள் பெற்று வளர்ந்திருக்கிறது என்பது அவர்கள் கேட்டிருக்கக்கூடிய வினாவில் இருந்தே அறிந்துக் கொள்ளலாம். அவர் தொகுதி இடுகாட்டில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் பெருமகனார் அவர்களும் அனுமதி தந்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இருந்து அறிய விரும்புவது தமிழகத்திலே பெரிய பேரூராட்சி, நகராட்சி போன்ற இடங்களிலே 4 சாலைகள் கூடுகின்ற பகுதிகளிலே இப்படிப்பட்ட சோடியம் ஆவி விளக்குகள் பொருத்துகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அத்தோடு அவைகளை பொருத்தும்போது தமிழகம் முழுவதும் ஒரே மாதிரியாக, யூனிஃபார்மிட்டியாக அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1986 மே 5]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மைலாப்பூர் தொகுதி வளர்ந்திருக்கிறது என்று தாம் கருதுவதாகச் சொன்னார்கள். அது முழுமையாகவே வளர்ந்த ஒரு தொகுதிதான். இடுகாட்டிலே கொண்டு போய் சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவது தேவையா என்பது போல கேட்டிருக்கிறார்கள். அங்கே வெளிச்சம் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறது. ஆகவே அந்த விளக்குகளை அங்கே போட வேண்டியது அவசியம் என அரசே முன்பே உணர்ந்திருந்தது. அவர்கள் கேள்வி கேட்டார்கள். ஒத்துக்கொண்டிருக்கிறோமே தவிர, கேள்வி கேட்டதனால்தான் போடுவதாக ஒத்துக் கொள்ளவில்லை.

அதேபோன்று நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் 4 வீதிகள் சந்திக்கின்ற முக்கியமான இடங்களில் அதுபோன்று விளக்குகள் போடப்படுமா என்று கேட்டார்கள். எங்கெங்கே விளக்குகள் போட வேண்டும் என்று அந்தந்த நகராட்சிகளும் பேரூராட்சிகளும் விரும்புகின்றனவோ அது பற்றி தீர்மானம்போட்டு அரசை அணுகினால், அரசாங்கம தேவையான உதவிகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மைலாப்பூர் சுடுகாட்டுக்கு சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவதைப் போல தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய நகராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய எல்லா இடுகாடுகளுக்கும் சோடியம் விளக்குகளைப் போட நகராட்சிகளுக்கு அரசு தாக்கீது அனுப்புமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இன்னும் அங்கேயே போடவில்லை. போட்டதற்குப் பிறகு அது பற்றி யோசிக்கலாம்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, பெரும்பாலான சுடுகாடுகளுக்கு சுற்றிலும் மதில் சுவர் இல்லாத காரணத்தால் சமூக விரோதிகள் உள்ளே புகுந்து பல வகையான தீய பழக்கங்களையும் கையாண்டு அந்த இடத்தை கெடுத்து வருகிறார்கள். ஆகவே எல்லா சுடுகாடுகளுக்கும் மதில் சுவர்களைக் கட்ட அரசு ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடுகாடு என்று ஏற்படுத்தியதற்குப் பிறகு அதைச் சுற்றிலும் மதில் சுவர் எல்லையாக இருக்க வேண்டும் என்ற அவசியத்தை அரசு உணர்ந்து இருக்கிறது. ஆனால் மதில் சுவர் இருப்பதனாலேயே ஆபத்தும் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. மதில் சுவரின் பின்னாடி உட்கார்ந்துக் கொண்டு பல விதமான மறைமுகமான காரியங்களைச் செய்வதற்கு சமூக விரோதிகளுக்கு அது துணையாக இருக்கிறது. மதில் சுவர் கட்டாத நிலையிலேயே பட்டப்பகலிலேயே அங்கே கட்டப் பட்டிருக்கும் கல்லறைகளில் போய் உட்கார்ந்துக் கொண்டு சீட்டு விளையாடுவது மற்ற சமூக விரோதமான தீமைகளைச் செய்வது போன்ற பல கெட்டப் பழக்கங்களைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் எங்கெங்கே அவசியமோ அங்கெல்லாம் மதில் சுவர் கட்ட அரசு ஏற்பாடு செய்யும்.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இடுகாட்டுக்கு சோடியம் விளக்கு பொருத்தப்படுவதைப் பற்றி கேள்வி. அது போல நகராட்சிகளிலே 4 தெருக்கள் கூடுகின்ற இடத்திலும் இப்படி சோடியம் விளக்குகள் போடப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேட்டார்கள். ஆனால் இந்த ஆவி விளக்குகளைப் போடக்கூடாது என்று அரசு தடை விதித்து இருப்பதாக நான் அறிகிறேன். அது உண்மையா? அப்படி என்றால் அந்தத் தடையை நீக்கி மீண்டும் அந்த விளக்குகள் போடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் அறிந்தமட்டில் அப்படி தடை இருப்பதாக எனக்குத் தெரியாது. அப்படி தடை எதுவும் இருக்குமானால் அரசு, அதை விலக்கிக் கொள்ளலாம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கொள்கைக் குறிப்பிலேகூட பிணங்களை எரிப்பதற்கு நவீன கருவிகள் பொருத்தப்படுமென்றும், அதற்கு போதிய இடவசதி கிடைக்காமல் இருக்கிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ராஜ்பவன் பகுதியில் அதற்கான இடவசதி இருக்கிறது. ஆகவே அந்த அமைப்பை அங்கே நிறுவ அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இடவசதியை சேர்த்தெடுத்து கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மாநகராட்சி பார்வையிட்ட பிறகு அது சரியான இடமாக இருக்குமென்று தெரிந்தால் அதுகுறித்து பரிசீலிக்கலாம்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதிலும் இருக்கிற இடுகாடுகளில் அங்கே பணியாற்றும் வெட்டியான்கள், அதிகமாகக் கட்டணத்தை பிணத்தை எரிப்பதற்கும், புதைப்பதற்கும் வசூலிக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அரசு ஒரு கட்டணத்தை நிர்ணயித்து மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி அலுவலகங்களில் அதனை பெற்றுக் கொண்டு, நிர்ணயித்த கட்டணத்திற்கு மேல் வசூலிக்காமல் இருக்கிற வகையில் ஒரு ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி நிர்ணயித்திருக்கிற கட்டணங்களை விட சில இடங்களில் இப்படி அதிகக் கட்டணங்கள் வசூலிக்கிறார்கள், தவறு செய்கிறார்கள் என்பது உண்மைதான், அரசுக்கு அது குறித்து புகார்கள் வந்திருக்கின்றன என்று ஒப்புக்கொண்டேன். இதற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்பதை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. நாம் மாநகராட்சி, நகராட்சிகளை கலந்து ஆலோசித்த பிறகு இதில் இறுதி முடிவு எடுக்கப்படும்.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்.

**649—(*வினா எண் 3914) திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூடுதல் குழாய் பதித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) உடுமலைக்கு திருமூர்த்தி அணையிலிருந்து கூடுதல் குழாய் பதித்து குடிதண்ணீர் வழங்கும் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் முடிவடைந்து திட்ட வரைவு ஒன்று ரூ. 425.00 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும், எவ்வளவு காலத்தில் இந்தத் திட்டம் முடிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இதன் திட்ட மதிப்பீடு நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ரூ. 425.00 இலட்சங்கள் ஆகும். வருட பராமரிப்பு ரூ. 8.03 இலட்சங்கள் ஆகும். ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும், தமிழ்நாடு அரசிடமிருந்தும் கடனாகப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசிக்கப்பெற்றுள்ளது. வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

**திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படுமென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, இதையும் நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன். வாரியத்தின் நிர்வாக ஒப்புதலைப் பெற்று அரசுக்கு வந்ததற்குப் பிறகு அரசு இதனைப் பரிசீலிக்கும்.

650—(*வினா எண் 4451) **திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகருக்கு குடிநீர் வழங்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(ஆ) செங்கோட்டை நகராட்சிக்கு தற்போதுள்ள குடிநீர் திட்டத்தை அபிவிருத்தி செய்ய நகராட்சியிடம் ஆய்வுக் கட்டணம் செலுத்துமாறு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கோரியுள்ளது. இக்கட்டணம் செலுத்தப்பட்டவுடன் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு உத்தேச மதிப்பீடு, வாரியத்தால் தயாரிக்கப்படும்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் ஒரே கேள்விக்கான பதில் தான் வந்து கொண்டிருக்கிறது. இந்த ஆய்வுக்கட்டண பிரச்சினை பல முறை இந்த அவையில் பேசப்பட்டு, ஆய்வுக்கட்டணத்தை திட்டத்தோடு சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் இதுகுறித்து உறுதிமொழி அளித்திருக்கிறார்கள். செங்கோட்டையைப் பொறுத்தவரையில் குண்டாறு நதியின் கெபாசிட்டியை உயர்த்துவதன் காரணமாக இன்றைக்கு அந்த நகருக்கு தண்ணீர் கொண்டு வர வாய்ப்பிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, ஆய்வுக் கட்டணம் தொடர்பாக குறிப்பிட்ட கருத்து பேரூராட்சிகளுக்கு, நகராட்சிகளுக்கு இல்லை. ஆகவே நகராட்சி ஆய்வுக் கட்டணம் செலுத்திய பிறகுதான் நாம் அதுபற்றிய ஆய்வுப் பணிகளை எடுக்க முடியும். குண்டாறு நதி நீர் ஆதாரங்களைக் கொண்டு ஆய்வுசெய்து பார்த்தபோது, பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் அதன்மூலமாக குடி தண்ணீர் வழங்க இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மாற்று நீர் ஆதாரத்தை குறித்துதான் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, குண்டாறு நதியில் இருக்கிற தண்ணீர் விவசாயத்திற்கு காணக் கூடியதாகத்தான் இருக்கிறது. அதிலே வெள்ளம் வருகிறபோது 'ஓவர் ஃப்ளோ வாட்டரை', சேமித்து வைக்கலாம் என்ற ஒரு கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே குண்டாறு நதியின் கெபாசிட்டியை உயர்த்துவதற்கு, அதன்

[1986 மே 5

அணையை 15 அடி உயர்த்தலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவ்வாறு உயர்த்துவதற்கு அரசு முன்வருமா? அதைப்போல செங்கோட்டைக்கு அருகிலே ஹரிஹரா நதியென்று இருக்கிறது. அதன் படுகையில் 'அண்டர் கிரவுண்ட் வாட்டர்' மிக அதிகமாக இருக்கிறது. செங்கோட்டை ரெயில்வே நிலையத்திற்கு அங்கேயிருந்து தண்ணீர் எடுத்து வாகன்களையெல்லாம் கழுவுகிற வேலைகளையெல்லாம் செய்கிறார்கள். அந்த ஹரிஹரா நதியிலிருந்து தண்ணீர் எடுத்து செங்கோட்டை நகருக்கு மட்டுமல்லாமல் தென்காசிக்கு கூட தண்ணீர் வழங்கலாம் என்று சொல்கிறார்கள். ஆகவே அரசு அதுகுறித்தும் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, ஆய்வு செய்கின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற கருத்துக்களை எல்லாம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**திரு. தெ. பெருமாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சாம்பவார் வடகரையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 29 லட்சம் ரூபாய் ஒதுக்கி அங்கே இருக்கின்ற மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அடிக்கல் நாட்டினார்கள். அந்த வேலை இன்னும் துவங்கப்படாமல் இருக்கிறது. எப்போது துவங்கப்படும், எப்போது முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, இது உதகை வங்கியின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு இருக்கிற திட்டம். நீர் ஆதாரம் குறித்து சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிய வந்தது. அவைகளைச் சீர் செய்ததற்குப் பிறகு, திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

651—(*வினா எண். 3593) **திரு. கே. உச்சி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆனைகட்டியில் உள்ள ஆதிவாசிகள் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?



1986 மே 5]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆனைகட்டியில் உள்ள ஆதிவாசிகள் பகுதிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று மாவட்ட ஆட்சியாளரின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது, வன இலாக்கா தன்னுடைய பகுதிக்குள் குழாய்களை பதிக்கக்கூடாது என்ற தடையை விதிப்பது இதுபோன்ற மலைப் பகுதிகளில் நம்முடைய குடிநீர் பணிகளை நிறைவேற்றுவதை தடைப்படுத்துவதாக இருக்கிறது. எனவே அதை போக்குவதற்கு, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில், வன இலாக்காவினுடைய அங்கீகாரம் அனுமதி தேவையில்லை என்கிற உத்தரவாதத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெற்றுத் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, குறிப்பிடப்பட்ட இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அப்படிப்பட்ட சிக்கல் எதுவும் இல்லை. அது வகை மூன்றைச் சார்ந்த குடியிருப்பு, அதனுடைய மக்கள் தொகை 100. இதனை மூன்றாம் தரத்திலிருந்து மாற்றுவதற்கும் ஒரு ஆதாரக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்தது இருக்கின்ற, வனத் துறையினுடைய அனுமதி பெறாமலேயே குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்வது என்பது கொள்கைப் பிரச்சனை. இப்போது பதில் சொல்ல இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 652 முதல் 656 வரை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

[1986 மே 5

## நாமக்கல்லில் வீட்டுவசதி வாரியப் பணிகள்.

657—(*வினா எண். 4691) திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தால் வீடு கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) நில ஆர்ஜித பணிக்கு காலதாமதம் ஏற்பட காரணம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) நாமக்கல் பகுதியில் தற்போது மொத்தம் 260 ஏக்கர் நிலங்களை வீட்டுவசதி வாரியத் திட்டங்களுக்காக கையகப் படுத்தும் பணி நடைபெற்று வருகிறது. சில நில சொந்தக்காரர்கள் நில ஆர்ஜிதத்தை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளனர். தடை நீங்கியவுடன், கையகப்படுத்தும் பணி துரிதமாக முடிவுறும்.

## காங்கேயத்தில் குடிசை மாற்றுப் பணிகள்.

658—(*வினா எண் 5542) டாக்டர் அ. பொன்னுசாமி மற்றும் திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் காங்கேயத்தில் உள்ள அண்ணா நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) மற்றும் (ஆ): இல்லை.

டாக்டர் அ. பொன்னுசாமி: பெருமைபெற்ற பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் பெருந்துறையில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதையும் கூட்டுறவு வீட்டு வசதி



1986 மே 5]

சங்கத்தின் மூலமாக ஏழை எளியவர்களுக்கு பெருந்துறையிலே வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக பெருந்துறையில் வீடு கட்டும் திட்டம் தற்போது இல்லை. கிராமப்புற வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட அந்த பகுதியைப் பொறுத்தவரையிலும், பிற்பட்டவர்கள், சமுதாயத்திலே நலிந்த பிரிவினரைப் பொறுத்த வரையில் பட்டா அவர்கள் கையிலே இருந்தால், வீட்டு வசதி சங்கத்தின் மூலமாக நிச்சயமாக அவர்களுக்கு வீடு கட்டுவதற்கு அரசு உதவிகளைச் செய்யும்.

திரு. கா. செ. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைமையிடங்களில் நகரை ஒட்டியுள்ள பகுதிகளில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் சென்னை நகரில் துவங்கி இன்றைக்கு 16 மாவட்டங்களில் 43 இடங்களுக்கு என்று தான் குடிசை மாற்று வாரியப் பணிகள் விரிவுபடுத்தப்பட்டு உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட வட்டத் தலைநகரங்கள் பொறுத்தவரையில் தற்போது அந்த எண்ணம் இல்லை.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்தின் சார்பாக எந்தெந்தப் பகுதியில் வீடுகள் கட்டும் திட்டம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாடிக் குடியிருப்புகளைப் பொறுத்த வரையில், ஈரோடு நகரில் பெரும்பள்ளம் ஓடைத் திட்டத்தில் 468 மாடிக் குடியிருப்புகளுக்கு 119 லட்சத்து, 84 ஆயிரம் ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் 420 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. தற்போது 48 குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இது ஜூன் 86-ல் முடியும்.

அரசு முன்வருமா? பாக்கி வைத்துள்ளவர்கள் மீது சிறப்பான நடவடிக்கைகள் எதுவும் இல்லை என்ற காரணத்தினால் இன்னும் பலர் இதுபோன்று வாடகையை நிலுவையில் வைத்து விடுவார்கள். எனவே இதில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, உள் வாடகைக்கு விடுகிற தன்மையைப் பொறுத்த வரையில் அரசுக்கு தகவல் வருகிற காலங்களில் உடனடியாக வாரிய அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்று அவர்களை காலி செய்ய வேண்டும் என்ற முறையில் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கே. பாலாஜி:** பெருமைமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசை மாற்று வாரியத்தில் பணி செய்கிற அந்தப் பணியாளர்கள் பினாமி பெயர்களில் அங்கிருக்கிற வீடுகளை தங்களுக்கு ஒதுக்கிக் கொண்டு அதைத் தனியாக அவர்கள் வாடகைக்கு விட்டு அவர்களை மிரட்டுவது என்பது மட்டுமல்லாமல் அவர்கள் அரசுக்கு கெட்ட பெயரை ஏற்படுத்து கிறார்கள். அதைக் கண்டுபிடித்து அந்த அலுவலர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து அரசாங்கத்திற்கு இருக்கிற களங்கத்தைக் களைவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவித்ததுபோல் குடிசைமாற்று வாரியப் பணியாளர்கள் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபட்டிருந்தால் அதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத் தலைநகரான சென்னையிலே மூன்றில் ஒருவர் குடிசையிலே வாழ்ந்து கொண்டிருப்பதாக கணக்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. ஏறத்தாழ 2,000 குடிசைப் பகுதிகள் இருப்பதை



அகற்றுகின்ற முறையிலே மாஸ்டர் பிளான் தயார் செய்து, குறுகிய கால வரம்பிற்குள் அவற்றிற்கு வீடுகள் கட்டித்தர அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் 1,202 குடிசைப் பகுதிகளில் 1,63,804 குடும்பங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னையில் இருக்கின்ற குடிசைவாசிகள் அல்லாதவர்களுக்கு உதவுகின்ற தன்மையோடு இந்தத் திட்டங்களைப் பற்றிக் கேட்டார்கள். ஏற்கனவே நான் 10 இடங்களைப் பற்றிய தகவலை இந்த அவையில் முதல் கேள்விக்குப் பதில் சொல்லும் போது சொல்லியிருக்கிறேன். புதிதாக கட்டுவதற்கு நிதி அடிப்படையில் அரசாங்கம் முடிவெடுக்கும்.

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வியாசர்பாடியில் இரண்டு இடங்களில் குடிசை மாற்று வாரியம் வீடுகள் கட்டயிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஏற்கனவே கட்டியுள்ளவைகளுக்கு சாக்கடை வசதி சரியாக இல்லாமல், அந்தப் பகுதி இன்றையதினம் மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு சாக்கடை வசதி சரியான முறையில் செய்வதோடு, குடிதண்ணீர் வசதியையும் செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் நல்ல யோசனையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும்.

**திரு. ஜி. கே. ஜெ. பாரதி:** மாண்புமிகு பேரவை தலைநாயகர் அவர்களே, நம்முடைய குடிசை மாற்று வாரியத்திற்கு ஒழுங்காக வாடகை செலுத்துகின்றவர்களுக்கு, அந்த ஏழையெளிய மக்கள் குறிப்பிட்ட 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் வாடகை செலுத்தினால், அந்த வீட்டை வாடகையின்றி சொந்தமாக்கிக் கொள்ளும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

[1986 மே 5

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் இப்போது இல்லை. தற்போது ரூ. 20, ரூ. 22 வாடகையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. அந்த வீட்டையே அவர்கள் உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்றால், ரூ. 40, ரூ. 45 மாதம் கட்டினால், அப்படிப்பட்ட வாய்ப்பு இப்போதே இருக்கிறது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகளில் மாடி வீடுகள் கட்டுவதற்கு காலதாமதம் ஏற்பட்டால், அங்கே ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் வீடுகளை வெகு விரைவிலே கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைப் பொறுத்தவரையில், இடப் பிரச்சினை உள்ளது. அப்படிப்பட்ட முறை வெடுக்கும்போது, ஒவ்வொருவருக்கும் தனி வீடு வேண்டுமென்ற எண்ணம் வரும். இதனால், மற்றவர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான வாய்ப்பு குறைந்து விடுகிறது. எனவே, அப்படிப்பட்ட திட்டத்தை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும் வாய்ப்பு இப்போது இல்லை.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தில் வீடுகளை வாடகைக்குப் பெற்றுக் கொண்டு, கோடிக்கணக்கான ரூபாய்க்கு மேல் வாடகை செலுத்தாமல் இருக்கக்கூடியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு உடனடியாக ஒரு நல்ல சட்டத்தை உருவாக்கி, அவர்களிடமிருந்து அந்த குடியிருப்புகளைப் பெற்று, அரசுப் பணியில் இருக்கும் தொழிலாளர்களுக்கு, பின்தங்கிய ஏழையெளிய மக்களுக்கு அந்த குடியிருப்புகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் தற்போது இல்லை. சென்னையில் ஏற்கனவே இருக்கும் குடிசைவாசிகளை முறைப்படுத்தி, அவர்களுக்கு பட்டை வழங்கி, அதன்படி அவர்களுக்கு மன்னுரிமை கொடுக்கும் அடிப்படையில் இப்போது திட்டம் இருக்கிறது. எனவே, பின்னால் மற்றவர்களைப் பற்றி கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.



**திரு. க. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வாடகை பாக்கியிருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த வாடகை பாக்கி என்பது உண்மையிலே செலுத்த முடியாதவர்களால் ஏற்பட்ட பாக்கியா? அல்லது அந்த வீட்டை வேறு நபருக்குக் கொடுத்து, பணத்தை வசூல் செய்து, அதைக் கொடுக்காமல் இருப்பவர்களால் ஏற்பட்ட பாக்கியா? இப்படிப்பட்டவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஏதேனும் இதுபற்றி கணக்கெடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கணக்கெடுக்கவில்லை. வாடகை செலுத்தக்கூடியவர்கள்தான், சாமார்த்தியமாக வாடகை செலுத்தாமல் சென்னையில் இருக்கிறார்கள்.

**திரு. வே. கு. சின்னசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வீட்டு வசதி சங்கத்திடமிருந்து கடன் பெறுகின்ற நேரத்தில், முனிசிபாலிடியாக இருந்தால் இரண்டு கிலோ மீட்டர், பேரூராட்சியாக இருந்தால் ஒரு கிலோ மீட்டர் இருக்க வேண்டுமென்ற சட்டதிட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனால் [illegible] அரசு உணர்ந்து, அதை மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புற வீட்டு வசதி சங்கம் ஒரு கட்டுப்பாட்டு எல்லை வைத்திருக்கிறது. பொதுவாக ஏழையெளிய அல்லது சமுதாயத்தில் பிற்பட்ட நிலையிலே இருப்பவர்களுக்கு அரசாங்கம் மூலம் வீடுகள் கட்டித் தருவதற்கு, அவர்களுக்கு உதவுகின்ற தன்மையை அரசு பரிசீலனை செய்யும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி குடிசை மாற்று வாரியங்களில் குடியிருப்பவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் வாடகை கட்டாமல் இருப்பதற்குக் காரணமே, அவர்களுக்கு ஆரம்பத்திலேயே குடிசைவாசிகள் என்று அட்டைகள் வழங்கப்படுவதும் [illegible]

பினாமிகள் பெயரிலும் பல தவறுகள் நடந்து வீடுகள் வழங்குவதிலே பல தவறுகள் நடைபெற்று, குடிசைமாற்று வாரியத்திலே வீடுகள் ஒதுக்கும்போது ஒழுங்கீனங்கள் நடைபெறுவதாக பலரும் பலவாறு சொல்லி, பத்திரிக்கைகளிலெல்லாம்கூட வந்திருக்கின்றன. நீங்கள் இதுகுறித்து விசாரிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா? இவ்வாறு நீண்டகாலமாக நடந்து வந்து கொண்டிருக்கின்ற தவறுகளை நீக்க வேண்டுமானால் அனைத்துக் கட்சிகளிலேயுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்து விசாரிக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒழுங்கீனங்களைப் பொறுத்த வரையில் அப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் இல்லை. மனிதாபிமானத்தின் அடிப்படையில் ஒரு பரிதாபத்தோடு இந்த அரசு குடிசைப்பகுதிகளில் இருக்கின்ற அந்த குடிசைவாசிகளை நினைவில் வைத்துக்கொண்டிருக்கின்ற காரணத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற அந்த வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் தான் வாடகையெல்லாம் நிலுவையாக இருக்கின்றது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், குடியிருப்புகளுக்கு தண்ணீர் வசதி மட்டும் செய்து கொடுக்கப்பட்டால் 22 ரூபாயும்; மின் வசதி மட்டும் செய்துகொடுத்தால் 23 ரூபாயும், தண்ணீர் வசதியும் சேர்த்து செய்துகொடுக்கப்பட்டால் 25 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. மேற்படி எந்தவசதியும் தேவையில்லையென்றால் 20 ரூபாய்தான். இது, வளர்ந்துவருகின்ற ஒரு சமூதாயத்தில், சென்னை பெருநகரத்தைப் பொறுத்தவரையில் இந்த வாடகை கூட கொடுக்க முடியாத ஒரு நிலை வருந்தத்தக்க காரியம். அரசு அதற்கான தக்க நடவடிக்கை எடுக்கும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வாடகை வசூல் செய்வதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்ற நிலையைப் பார்க்கின்றபோது நான் நிச்சயமாக அவர்களைப் பாராட்டுகிறேன்.



**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைமாற்று வாரியத்தில் குடியிருப்பவர்களுக்கு, அவர்களுக்கே அந்த வீடுகளைச் சொந்தமாக்குகின்ற வகையிலே கட்டணம் வசூலிக்கப்போவதாக அறிவிப்புகள் வந்தனவே, அது எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நேரடியான அப்படிப்பட்ட ஒரு எண்ணம் இல்லை. இப்போது இருக்கின்ற தவணைத் தொகைத் திட்டத்தின் அடிப்படையில் தரைத் தளத்தில் இருப்பவர்களுக்கு, அவர்கள் மாதம் 45 ரூபாய் கட்டினால் அவர்களுக்கே மொத்தக் கணக்கில் வருகின்ற காலங்களில் அந்தக் குடியிருப்பு அவர்களுக்கே சொந்தமாகும். முதல் தளமாக இருந்தால் மாதம் ரூபாய் 40 கொடுக்க வேண்டும்; இரண்டாவது தளமாக இருந்தால் மாதம் 35 ரூபாய் கொடுக்க வேண்டும்; மூன்றாவது தளமாக இருந்தால் மாதம் 30 ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த அடிப்படையில் பணம் கட்டினால், இறுதியாக அந்த குடியிருப்புக்கான உரிமை அவர்களுக்கு வழங்கப்படும்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில், ஏழையெளியவர்கள் வாழ்கின்ற பகுதிகளில் என். ஆர். பி. மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கிறார்கள். அதனால் வெகு காலதாமதமாகிறது. ஆகையினால் கிராமப் பகுதிகளில் இதுபோன்ற குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஏற்பாடு செய்து, அந்த ஏழை எளிய மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏற்படுத்த முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொல்லிவிட்டேன். [illegible] [illegible] தமிழக அரசு குடிசைமாற்றுப் பணிகளை [illegible] தமிழகத்தில் நிறைவேற்றி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல் கிராமப்பகுதிகளைப் பொறுத்த வரையில் குடிசைமாற்று வாரியப் பணிகள் இப்போது [illegible]

இல்லை. தற்போது தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லா இடத்திலும் அந்த உரிமை இருக்கின்ற தன்மையில் இப்போதே அந்த வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், நலிவுற்றவர்கள் அல்லது சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் அந்தக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலமாக வீடு கட்டுகின்ற அந்த உரிமையை இப்போதே பெறலாம்.

## குமரி மாவட்டத்தில் மீன்பிடித் துறைமுகங்கள்

**660—(*வினா எண் 4793) டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுக வேலையை விரைந்து முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் மேற்கு அலை தடுப்புச் சுவர் கட்டி முடிக்கப்பட்டது. கிழக்கு அலை தடுப்புச் சுவர் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியினை விரைவில் முடிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு பணி முன்னேற்றம் காலமுறையாக ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிருந்த சூப்பரின்டெண்டிங் என்ஜினியரை மாற்றி விட்டார்கள். அங்கே வேலை நடப்பதாக எனக்குத் தெரிய வில்லை. எந்த ஆண்டில் வேலை முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே தெளிவாகச் சொன்னேன். அடிக்கடி அலுவலர்களை அழைத்துப் பேசி, வேலைகளை விரைவுபடுத்தி முடிக்க வேண்டுமென்று அவர் களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. விரைந்து வேலை நடைபெற்று வருகிறது.





**திரு. செ. இரத்தினவேலு:** பேரவையின் தலைவர் அவர்களே, சின்னமுட்டத்திலே கட்டப்பட்டிருக்கும் மீன்பிடி துறைமுகத்தின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? அதிலே மத்திய அரசினுடைய பங்கு ஏதாவது உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982-ல் சின்னமுட்டத்தில் ஒரு மீன்பிடி துறைமுகம் கட்ட ஒப்புதல் அளித்து, அதற்கான அப்போதைய மதிப்பீடு 234 லட்சம் ரூபாய். இதில் 50 சதவீதத்தை மத்திய அரசு ஏற்கிறது. மேற்படி செலவினம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சின்னமுட்டத்தில் புயல் கடப்பதைக் கருத்தில் கொண்டு, அலை தடுப்புச் சுவரின் உயரத்தை 3 மீட்டரிலிருந்து 5 மீட்டருக்கு உயர்த்தவும் மற்றும் அதன் வடிவமைப்புகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்தியதன் காரணமாக இத்திட்டத்தினுடைய மதிப்பீடு 7 கோடியே 63 லட்சம் என்று கணக்கிடப்பெற்று, திருத்த மதிப்பீடு மத்திய அரசின் நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் திருத்திய மதிப்பீட்டுக்கு மத்திய மீன் வள கடல் ஓர பொறியியல், நில இயக்குநர் இசைவினைப் பெற்று அனுப்புமாறு மத்திய அரசு கோட்டுக் கொண்டுள்ளது. இது இந்த அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**661—(*வினா எண் 5534)—திரு. மா. சுந்தரதாஸ் மற்றும் டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் அரபிக்கடலில் தேங்காய்ப்பட்டிணம், இரயிம்மன் துறையில் தாமிரபரணி ஆறு கடலோடு கலக்கும் இடத்தில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ):** கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டிணம் என்னு மிடத்தின் மீன்பிடி படகுகள் தங்குமிடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன்பிடி துறைமுகத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானது என்று பல தடவை நாங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், கடல் ஓர பகுதியில் மக்கள் வாழ்கிற அனைத்து இடங்களிலும் கல் போட்டு ஆகிவிட்டது. ஆகவே அவர்கள் மீன் பிடிக்க கேரளாவுக்குச் செல்லவேண்டும். அப்படி அங்கே சென்றால் அவர்கள் இவர்களை இரண்டாம் தர மக்களாக கருதி மீன் பிடிக்க விடுவது இல்லை. எனவே இந்த உண்மை அரசுக்குத் தெரியுமா? ஏறத்தாழ 400 படகுகள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அப்படி உள்ள அந்த 400 படகுகள் வேலை செய்யாமல் இருக்கிற காரணத்தால் அங்கே அவர்கள் வேலை செய்ய முடியவில்லை. ஆகவே தமிழ்நாடு மீனவர்கள் கஷ்டப்படுகிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தத் திட்டத்தை அமலுக்கு கொண்டு வர அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்ற காரணத்தால் தான் அந்த தேங்காய்பட்டணத்தில் அந்த மீன்பிடி தோணித் துறையை கட்டுகிற நடவடிக்கையை நாம் எடுப்பதற்கு ஆய்வு நடத்தி வருகிறோம் என்பதை முதலிலேயே நான் தெரிவித்தேன். அவர்களுடைய முழுமையான அறிக்கை கிடைத்த உடன் இதைப்பற்றி விரைவில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போது ஆராய்ச்சி முடியும்? எப்போது வேலை தொடங்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேலை தொடங்க வேண்டு மானால் அதற்குரிய பொறியாளர்கள் ஒப்புதல், அதற்கான தகுதி வாய்ந்த அதிகாரிகளுடைய பரிந்துரைகள் இவற்றை எல்லாம் ஒட்டுமொத்தமாக பரிசீலித்து முடிவு செய்ய வேண்டிய ஒரு திட்டமாக இது இருக்கிறது. எனவே அவசரமாக இப்படிப்



பட்ட காரியங்களை முடித்துவிட முடியவில்லை. எனவே இதை தீவிரமாக, அவசரமாகப் பரிசீலித்து சீக்கிரமாக முடிவுக்கு கொண்டு வர நாம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

**திரு. கு. அ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மீன் பிடி துறைமுகங்கள் எத்தனை இருக்கின்றன? அதற்கு ஆகும் செலவு எவ்வளவு? எத்தனை படகுகள் புதிதாக விடப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மீன்பிடி துறைமுகங்கள் சென்னையிலும், கடலூரிலும், தூத்துக்குடியிலும் 13 கோடியே 13 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு இருக்கின்றன. தோணித் துறைகள் ஐந்து 44.54 லட்சம் ரூபாயில் கட்டப்பட்டு இருக்கின்றன. இதன் மூலமாக 1,144 படகுகள் பயன்பட்டு வருகின்றன. மற்ற விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 662 முதல் 665 வரையிலும் குறுகிய கால வினா 10-ம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### தாழ்த்தப்பட்ட மக்களை, அரசு அதிகாரிகள் சாதிப் பெயர் சொல்லி அவமதிப்பது குறித்து.

**திரு. கி. ராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய மேலான அனுமதியின் பேரில் என்னுடைய இராஜபாளையம் தொகுதியில் நடந்த ஒரு வருந்தத்தக்க சம்பவத்தைப் பற்றி இங்கே அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இராஜபாளையம்

நகரத்தில் மங்காபுரமும், கம்மாபட்டியும் ஆதி திராவிடர்கள் வசிக்கும் பகுதிகள் ஆகும். ஒரு குடும்பத்தில் ஏற்பட்ட பூசல் காரணமாக, கடந்த மாதம் இரண்டு தரப்பினர் இடையில் ஒரு கலவரம் ஏற்பட்டு, கம்மாபட்டியைச் சேர்ந்த ஒரு பகுதியினர் 17—4—1986 அன்று இராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றபோது அங்கே இருந்த சப்-இன்ஸ்பெக்டர் திரு. சீனியா பிள்ளை என்பவர் கீழ்த்தரமாகவும், திட்டி இருக்கிறார். அவர் சொன்ன வார்த்தைகள்—தயவுசெய்து இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பில் இருக்க வேண்டும் என்றால் அனுமதியுங்கள். இல்லை என்றால் நீக்கிவிடுங்கள். தந்தியில் கண்டபடி நான் சொல்வதைச் சொல்லி விடுகிறேன்.

. . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேற்கூறப்பட்ட வார்த்தைகள் நீக்கப்பெறுகின்றன. நீங்கள் இதை அமைச்சரிடம் கொடுத்து விடுங்கள். அவர் வந்த பிறகு பதில் கொடுக்கச் சொல்கிறேன்.

**திரு. கி. ராமன்:** சீனியா பிள்ளை பற்றி உரிஜன மக்கள் புகார் கொடுத்திருப்பது இது முதல் தடவையல்ல. கடந்த காலத்திலும் என்னிடம் புகார்கள் வந்திருக்கின்றன. காவல் நிலையத்திற்குப் போகும் அரிசனப் பெண்களை மிகவும் கேவலமாக, அவர்கள் நாணிக் கூசுகின்ற அளவிற்கு, பேசுவதாகவும் அவருடைய பேச்சைக் கேட்டு காவல் நிலையத்திலுள்ள காவலர்களுக்கே அருவருப்பாக இருக்கிறது என்றும், எந்தப் புகார் கொண்டு போனாலும் தட்சிணை இல்லாமல் பதிவு செய்வதில்லையென்றும், சம்பந்தமில்லாத ஆட்களை கேசுகளில் சம்பந்தப்படுத்தி, மறுபடி அவர்களை விடுவிப்பது போல நடித்து, அதற்கும் பணம் வாங்குவதாகவும், அரிசன மக்கள் மிகவும் மரியாதைக் குறைவாக நடத்தப்படுகிறார்கள் என்றும் எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



17—4—1986 அன்று திரு. சீனியா பிள்ளை அவதூறாகப் பேசியது என்னை நேரடியாகப் பாதிப்பதாகும், இதர இனத்தவர்களால் ஆதிதிராவிட மக்களுக்கு கொடுமைகள் இழைக்கப்பட்டால் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க காவல்துறையில் ஒரு தனிப் பிரிவே இருக்கிறது. ஆனால், காவல் துறையினரே அந்தக் கொடுமையைச் செய்தால் எங்கே போவது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கவனத்தை ஈர்த்து விட்டீர்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வரட்டும். காவல் துறை மானியத்தில் அவர் பதில் சொல்வார்.

**திரு. கி. ராமன்:** ஆகவே இதுபோன்ற சம்பவங்கள் மேலும் தொடராமல் இருக்க, உடனடியாக விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடரையும் விசாரித்து, ஒடுக்கப்பட்ட மக்களின் குடியுரிமையை நிலைநாட்டும் வகையில், தவறுசெய்த அதிகாரிகள் பெயரில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

### 3. கவன ஈர்ப்பு

### கலசப்பாக்கம் தொகுதி ஆதமங்கலம் மின்துணை நிலையம் குறித்து.

**திரு. மு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள ஆதமங்கலம் மின்துணை நிலையத்தின்மீது இடி விழுந்ததன் விளைவாக அப்பகுதியிலுள்ள வீராளூரிலிருந்து சுமார் 10 ஊர்களில் தினம் அரை மணி நேரம் கூட மின்சாரம் வராமையால் விவசாயப் பம்பு செட்டுக்களை இயக்க முடியாமல் சுமார் 2,000 ஏக்கர் நிலங்களில் பயிர் செய்யப்பட்டுள்ள நெற்பயிர் சாவியாகும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன். அதுபற்றி பரிசீலித்து, கவனஞ் செலுத்துமாறு மின்துறைக்கு அறிவுரை வழங்கப்படும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மே 5

**அறிக்கை.**

கலசப்பாக்கம் தொகுதியிலுள்ள ஆதமங்கலம் மின் துணை நிலையத்தின்மீது இடி விழவில்லை. ஆயினும், 1985 ஆம் வருடம் ஜூன் திங்கள் 31-ம் நாள் இயக்கிவைக்கப்பட்ட இரு 1.6 எம்.வி.எ. மின் மாற்றிகளில் ஒன்று, செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாள் பழுதடைந்து விட்டது. அதற்குப் பதிலாக உடனே நிறுவ, மாற்று மின் மாற்றி இல்லாததால் சில மின் பளுக்கள் காஞ்சி துணை மின் நிலையத்திற்கு தற்காலிகமாக மாற்றப் பட்டன. இரண்டு 3.15 எம்.வி.எ. மின் மாற்றிகள் முன்பே பிறப்பிக்கப்பட்ட கொள்முதல் ஆணையின்படி மே திங்களில் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றன. அவை கூடிய விரைவில் நிறுவப்பட்டு இயக்கி வைக்கப்படும். அதன் பிறகு வீராளூர் மற்றும் இதர பத்து கிராமங்கள் காஞ்சி துணை மின் நிலையத்திலிருந்து ஆதமங்கலம் துணை மின் நிலையத்திற்கு மாற்றப்படும்.

வீராளூர் மற்றும் இதர பத்து கிராமங்களுக்கு நாள்தோறும் ½ மணி நேரம் கூட மின்சாரம் வழங்கப்படவில்லை என்ற முறையீடு சரியானதாகத் தோன்றவில்லை. இந்த ஊர்களுக்கு அமுலில் உள்ள முறையான நேரங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கல்பாக்கம் உற்பத்தி நிலையம் மற்றும் தூத்துக்குடியில் ஒரு இயந்திரம் இயங்காததால், மின் கட்டமைப்பில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணத்தினால் 31—3—1986 முதல் 18—4—1986 வரை, குறைவான நேரங்களுக்கே மின்சாரம் வழங்கப்பட்டது.

இப்பொழுது மின்சார கட்டமைப்பு சீராக ஆகிவிட்ட படியால், அமுலில் உள்ள முறையான நேரங்களில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதும் கலசப்பாக்கம் தொகுதியில் சுமார் 10 ஊர்களில் மின்சாரம் அடிக்கடி குறைவாக வருகின்ற காரணத்தால், அந்த மோட்டாரினுடைய காயில்கள் தீய்ந்து விவசாயிகள் மிகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்,



1986 மே 5]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதுபற்றி மின் வாரியத்தினர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**(ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் வழங்கும் விசைச் செக்குகள் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், என்.எஸ்.வி. சித்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலம் வழங்கப்பட்டுள்ள சுமார் 20,000 விசைச் செக்குகளிலுள்ள தயாரிப்பு குறைபாடுகளின் காரணமாக அவை இயங்காமலுள்ளதால் கடன் பெற்றவர்கள் படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இது வரை 3,596 மின்விசைச் செக்குகள் மட்டுமே தனி நபர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கவன ஈர்ப்பு தீர்மானத்தில் கூறியுள்ளதுபோல், 20,000 விசைச் செக்குகள் வழங்கப்படவில்லை.

ரோட்டரி போன்ற செக்குகளுக்கு அதிக மூலதனம் தேவைப்படுவதினாலும் சிக்கன முறையில் சுலபமாக இயக்கக்கூடிய ஓவர் ஹெட் விசைச் செக்கினை கதர் கிராமத் தொழில் ஆணையம் கண்டுபிடித்தது. இவைகள் 1972-73 முதல் 1980-81 வரை விநியோகம் செய்யப்பட்டன. 1981-82-ல் மேற்படி விசைச் செக்கின் அமைப்பில் மாறுதல் செய்யப்பட்டது. இவ்வாறு

மாறுதல் செய்யப்பட்ட "போர்டபிள் டைப்" விசைச் செக்கு, 1981-82 ஆம் ஆண்டு முதல், கதர் ஆணையத்தின் தொழில்நுட்ப ஒப்புதலுடன், தமிழ்நாடு அரசு நிறுவனமான "டான்சி" மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது.

விசைச் செக்கை ஒரு சிறு இயந்திரமாகவே கருத வேண்டியுள்ளது. இவ்விசைச் செக்கினை நிறுவவும், பராமரிக்கவும், பழுது பார்க்கவும் சிறிது அனுபவம் தேவைப்படுகிறது. இந்த அனுபவம் இல்லாதவர் விசைச் செக்கை இயக்கும்போது பினியன், கிரௌன், சாப்ட், பால்பேரிங் போன்ற பாகங்கள் பழுதடைய நேரிடலாம். இவ்வாறான நிகழ்வுகளில் பழுதடையும் பாகங்களை செப்பனிட்டு நிவர்த்தி செய்திட "டான்சி" நிறுவனத்திடம் தொடர்பு கொண்டு, வாரியத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனவே, விசைச் செக்கு தயாரிப்பில் குறைபாடுகள் உள்ளன என்று கூறுவதற்கில்லை.

அவ்வப்போது தேவையான வகையில் விசைச்செக்கில் அபிவிருத்தியும் ( improvement ) தேவைப்படுகிறது. நன்றாக இயக்கப்படும் செக்கில் புகாருக்கு இடமிருக்காது. பழுதடைந்திருக்கும் விசைச்செக்குகளை எப்படி பழுதுபார்த்து இயங்க வைக்கலாம் என்பதனைக் கண்டறிய தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தலைமைச் செயல் அலுவலர், சென்னை கதர் ஆணைக்குழு இயக்குநர், விசைச் செக்கு உபயோகிப்போர் சங்கத் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் "விவேக்" விசைச் செக்கு தயாரிப்பு உரிமையாளர் மற்றும் தனிப்பட்டவர்கள் ஆகியோர் 22—4—1986 அன்று தென்னாற்காடு மாவட்டம் புதுப் பேட்டை எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினையும் அப்பகுதியில் செயல்படும் விசைச்செக்குகளையும் பார்வையிட்டனர். அப்போது கீழ்க்கண்ட ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன :—

(1) விசைச் செக்குகளின் வடிவமைப்பில் (design) குறைகள் இருந்தால் அவைகளை நிவர்த்தி செய்து மேற்கொண்டு அபிவிருத்தி செய்ய ஆலோசனை வழங்க ஒரு தொழில்நுட்ப குழு அமைக்கலாம்.



(2) புதியதாக இத்தொழிலை மேற்கொள்ளும் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளிக்கலாம். ஏற்கனவே இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோருக்கு ( Beneficiaries ) மறு பயிற்சி (Reorientation) அளிக்கலாம்.

(3) பயிற்சி பெற்ற வாரிய அலுவலரைக் கொண்டு விசைச செக்குகளை அவ்வப்போது காலமுறையாக ஆய்வு செய்யலாம்.

இந்த ஆலோசனைகளை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

விசைச் செக்குகள் வாங்கிய வகையில் கடன் பெற்றவர்கள் இன்னல்களுக்கு ஆளாகாமலிருக்க, அவர்கள் கடனை திரும்ப செலுத்தும் காலம், ஐந்து ஆண்டுகளிலிருந்து இப்போது பத்து ஆண்டு காலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே 20,000 செக்குகள் வழங்கப்படவில்லை என்றும், கிட்டதட்ட 4,000 செக்குகள் தான் வழங்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் டிக் மூலமாகவும், பாங்குகளின் மூலமாகவும், செயல்பட்டு, 20,000 செக்குகள் வழங்கப்பட்டு, அவர்கள் இன்றைக்கு ஒரு அமைப்பாகவே இயங்கி வருகிறார்கள். இந்தச் செக்குகளை மதுரையிலே நானே நேரிலே சென்று பார்த்தபோது எல்லா செக்குகளும் இயங்கவில்லை. அந்தச் செக்குகளின் டிசைனில் மிஸ்டேக் இருக்கிறது என்றும் சரியாக இல்லை என்றும் தெரிகிறது. அதற்கு 2 ஹார்ஸ் பவர் போட்டிருக்கிறார்கள். அதன்மூலம் டர்ன் அவுட் இல்லை. அதனுடைய 3 ஹார்ஸ் பவர் மோட்டார் போட்டுத் தரவேண்டும். அவை பாகங்கள் எல்லாமே உடைந்திருக்கின்றன. இங்கே பழுதடைந்திருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பழுதடையவில்லை, உடைந்தே போயிருக்கிறது. அதனுடைய காயில்கள் நல்ல இரும்பினாலே போடப்படவில்லை. ஆகவே அந்த டிசைனை மாற்றி, நல்ல பரிகாரம் காண்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே விவர அறிக்கையிலே விவரமாகக் கூறியிருக்கிறேன். கதர்த்தொழில் வாரியத்தின்

மூலம் இதுவரை வழங்கப்பட்ட மின்விசை செக்குகள் 3,728. அதிலே இதுவரை வெற்றிகரமாக செயல்பட்டது 3,596, அதிலே இன்னும் வழங்கப்பட வேண்டிய செக்குகள் 132. மொத்தம் இதுவரை நிறுவிய விசைசெக்குகள் 3,483. இன்னும் நிறுவப்பட வேண்டிய செக்குகள் 113. இதிலே கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 217-ம் தனிப்பட்டவர்கள் மூலம் 2,928-ம் செயல்படுகின்றன. இதுவரை மின் இணைப்பு எதிர்பார்த்து இருப்பவை 338 விசை செக்குகள். மாண்புமிகு உறுப்பினர் அவைக்குத் தவறான கருத்தை இங்கே கூறியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த மின்விசை செக்குகளில் பினியன், கிரௌன், சாஃப்ட், பால்பேரிங் போன்றவை எல்லாம் பழுதடைகிற நேரத்திலே டான்சி மூலமாக ஆட்களை அனுப்பி பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த முறையில் பல்வேறு மாவட்டங்களில் 107 மின்விசைச் செக்குகள் பழுதுபார்க்கப்பட்டு இருக்கின்றன. 2 எச்.பி. மின்விசைச் செக்குகளை அமைத்திருக்கிறார்கள். அதற்குப் பதிலாக 3 எச். பி. மின்விசைச் செக்குகளை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அதுபோன்ற கோரிக்கை அரசுக்கு இதுவரை வரவில்லை.

*** திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ரூல்படி ஒரு கேள்விதான். (குறுக்கீடு) புரியவில்லையென்றால் திரும்பப் படித்துப் பாருங்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வேங்கடரமணன் அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட தொழிலில் உள்ளவர்கள் என்னிடம் அதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருப்பது எந்த அடிப்படையில் என்று எங்களுக்குத் தெரியவில்லை. பொதுவாகவே அந்தச் செக்குகள் சரியாக இயங்கவில்லை. அவைகளை வாங்கி வைத்திருக்கிறவர்கள் அதனால் நிறைய நட்டம் வந்திருக்கிறது என்று எங்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் அதை பரிசீலிப்பார்களா? ஒரு செக்கின் விலை என்ன? அதனுடைய அவுட் டர்ன் என்ன? எவ்வளவு சாறு பிழியப்



படுகிறது? வேறு செக்குகளுடன் அவை ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டனவா? அந்த வடிவமைப்பிலே கோளாறுகள் இருப்பதாகக் கூறுகிறார்களே, அதைத் திருத்தியமைக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, ஒரு மின்விசைச் செக்கில் ஆண்டு ஒன்றுக்கு எண்ணெயும் பிண்ணாக்கும் உற்பத்தி செய்ததில் 35 கோடி ரூபாய் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவரங்களையெல்லாம் அவர்களுக்கு அனுப்பிவையுங்கள்.

### 4. அறிவிப்பு.

### கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 5. அரசினர் சட்டமுன்வடிவு.

### கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

**மாண்புமிகு திரு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. நா. வீராசாமி:** இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 6. வரவு-செலவுத் திட்டம் 1986-87 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

#### (அ) கோரிக்கை எண் 15—காவல்துறை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் 1,06,23,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், பாபநாசம் நகரில் காவல் துறை காவலர்கள் குடியிருப்புக்கள் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டும், குடியிருப்பு கட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசிற்கு காவல் துறை தலைமை அலுவலர் மூலம் அனுப்பப் பட்டுள்ளதற்கு அனுமதி வழங்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,06,23,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லையில் காவலர் பயிற்சி பள்ளி ஒன்று அமைக்க வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,06,23,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரம், எழும்பூர் தொகுதியில் கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்புகள் பழமையானவைகளாக இருப்பதால்



அவைகளை இடித்து விட்டு புது குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 15 — காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,06,23,53,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

#### (ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,34,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள ஜெயங் கொண்டம் தீயணைப்பு நிலையத்திற்கு வாகனங்களை புதிதாக வாங்கிக் கொடுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,34,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தீயணைப்பு நிலையத்திற்கு தீயணைப்பு வண்டி ஒதுக்கீடு செய்யவேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,34,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. சு. பாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புளியந்தோப்பு வ.உ.சி. நகரில் ஏற்படுத்தி உள்ள தீயணைப்பு நிலையம், ஓலையால் கட்டப்பட்டு காற்று மழையால்

விழ்ந்துள்ள கொட்டகையை மாற்றி பாதுகாப்பான இடமாகக் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 16—நியமனைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,34,06,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை பற்றிய விளக்கக் குறிப்பும், நியமனைப்புப் பணிகள் பற்றிய விளக்கக் குறிப்பும்** மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு ஏற்கனவே வழங்கப் பட்டிருக்கின்றன. அவற்றையே முன்னுரையாக ஏற்று நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக் கொள்ளும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். விவாதத்திற்குப் பிறகு பதில் உரைக்கிறேன்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை மானியக் கோரிக்கை எண். 15, மற்றும் தமிழ்நாடு நியமனைப்புப் பணிகள் பற்றிய மானியக் கோரிக்கை எண். 16 ஆகியவைகளின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் என்னுடைய கருத்துக்களை அவைமுன் வைக்கின்றேன்.

நாட்டு மக்களுடைய உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பினை அரசு ஏற்றிருக்கின்றது. அந்த முழுப் பொறுப்பினையும் காவல் துறையிடம் ஒப்படைத்து, அந்தப் பணி எவ்விதம் நடைபெறுகிறது என்பதை அரசு கண்காணிக்கிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப காவலர்களுடைய தொகையையும் அதிகரிக்கச் செய்து, நவீன முறையில் நடைபெறுகின்ற குற்றங்களைப் புலனாய்வு செய்திட, அறிவியல்

** 158-266-ம் பக்கங்களில் இணைப்பு II 653-670 ஆக அச்சிடப் பெற்றுள்ளன



சாதனங்களை அமைத்துக் கொடுத்தும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் ஏற்படும் கால விரயத்தைக் குறைப்பதற்காக ஆயிரக்கணக்கான கைரேகைப் பதிவுகளை ஏற்படுத்தியும், அதிலே குற்றவாளிகளைக் குறுகிய காலத்திலே கண்டுபிடிக்க வேண்டுமென்பதற்காக கம்ப்யூட்டர் முறை மூலமாகத் தேர்ந்தெடுக்கும் நவீன வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத் தக்கதுதான்.

(முற்பகல் 10-00)

இருப்பினும்கூட, குற்றங்கள் குறைந்திருக்கின்றனவா என்பதை நாம் பார்க்கின்றபொழுது 1984 ஆம் ஆண்டு 62 கொலைகள் நடைபெற்றிருக்கின்றன; 42 கொலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு 76 கொலையாக உயர்ந்துள்ளது. 1984-ல் 62 கொலைகளில் 42 கண்டுபிடிக்கப்பட்டது என்றால் 20 கொலைகள் கண்டு பிடிக்கப்படவில்லை. 1985-லே 76 கொலைகள் என்று உயர்ந்துள்ளது. அதைப்போல வழிப்பறியும் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அதிகரித்து இருக்கிறது. சிறு திருட்டுகள் மட்டும் தான் 1984-ல் 1,378 ஆக இருந்தது. 1985-ல் 1,788 என்று 90 சிறு திருட்டுகள் குறைந்திருக்கின்றன. ஆனால் பெரிய திருட்டுகளோ 110 அதிகரித்து இருக்கிறது. 90 சிறு திருட்டுகள் குறைந்து இருக்கிறது என்று சொன்னால் பெரிய திருட்டுகள் 110 ஆக உயர்ந்திருக்கின்ற நிலைமையை பார்க்கின்ற போது சிறு திருட்டுக்காரர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கப்பட்டு இருக்கிறதோ என்ற நிலை தோன்றுகிறது. அது மட்டுமல்லாமல் கூட்டுமொத்தமாகப் பார்க்கையில் கண்டுபிடிப்புகள் 4.3 விழுக்காடு உயர்ந்து இருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். திருவள்ளுவர் கூறியதுபோல் குடிமக்களுக்கு துன்பம் வராமல் அவர்களைப் பேணிக் காப்பதும், சமுதாயத்தில் காணப்படும் குற்றங்களை தக்க தண்டனையால் ஒழிப்பதும் மன்னனின் பெருமையாகும்.

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்'

என்ற வள்ளுவர் வாக்குப்படி பார்த்தால் தக்க தண்டனையால் குற்றங்களை ஒழிப்பதில்லை. நடக்கின்ற குற்றங்கள் வழக்கம் போல் சுபிட்சமாக நடந்துகொண்டிருக்கின்றன. காவல் துறையின் தலையாய கடமை கண்டுபிடிப்பது. அதுவும் வழக்கம்போல் கண்டுபிடிக்கப்படுகின்றன. குற்றங்கள் அதிகரிப்பதைத்

தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுத்தால் மக்களை துன்பம் வராமல் பேணிக் காக்க முடியும் என்கின்ற சூழ்நிலையை நாம் கவனித்தாக வேண்டும். இங்கே கொள்கைக் குறிப்பிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். சிறிய சிறிய சச்சரவுகள் ஏற்படுமானால் அந்த சிறிய சிறிய சச்சரவுகளை காவல் துறையிலே ஒருவருக்கொருவர் சமாதானம் செய்து அதை உடனடியாகத் தீர்த்துவிட வேண்டுமென்று இருக்கிறது. நான் தெரிந்து கொள்ள விரும்புவது சிறிய சிறிய சச்சரவுகளைத் தீர்க்கக்கூடிய சூழ்நிலையில் காவல் நிலையங்கள் இல்லை. ஒரு உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சிறு சிறு சச்சரவுகள் எல்லாம் காவல் துறைக்கு போகின்றபோது அங்கே தீர்த்து வைக்கின்ற சூழ்நிலை இருந்தாலும்கூட—சப்-இன்ஸ்பெக்டர் இருப்பார். ஆனால் அவர் இன்ஸ்பெக்டரைப் பார்க்கச் சொல்வார். இன்ஸ்பெக்டர் அநேகமாக வெளியிலே போயிருப்பார். முன்பெல்லாம் 5 போலீஸ் ஸ்டேஷனுக்கு ஒரு இன்ஸ்பெக்டர் என்ற நிலைமை இருந்தது. அதை மாற்றி ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனுக்கும் ஒரு இன்ஸ்பெக்டர் என்ற நிலைமை இருந்தும் கூட, இது போன்ற சிறிய சச்சரவுகள் இன்ஸ்பெக்டர் காவல் துறையில் இல்லாத காரணத்தினால் தீர்க்கப்படமுடியாமல் இந்த சிறிய சச்சரவுகள் பெரிதாகக்கூடிய வாய்ப்புகள் ஏற்படுகின்றன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் சிறு குற்றங்களை செய்கின்றவர்கள் எச்சரிக்கை செய்து விடப்பட வேண்டும் என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் சிறிய குற்றங்கள் செய்கின்றவர்களை காவல் நிலையத்தில் மிகக் கடுமையாக நடத்துகின்றார்கள். ஜாமீனுக்குப் போகின்றவர்களைக் கூட ஒரு கௌரவமான முறையிலே ஒரு நாகரிகமான முறையிலே காவல் துறையைச் சார்ந்தவர்கள் நடத்துவது கிடையாது. அவர்களை கேவலப்படுத்தி தகாத வார்த்தைகளால் பேசி அவர்களை அவமானப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், ஒரு சிறு தவறு செய்தால் கூட ரூ. 50 செலுத்தாமல் ஜாமீனிலே வெளியே வரமுடியாத நிலைமை இருக்கிறது.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதைப்போல என்னால் ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்ட முடியும். நான் பெயரைக் கேட்டால் சொல்வதற்குக்கூட கடமைப் பட்டிருக்கிறேன். குடித்துவிட்டு ஒருவர் தெருவிலே போய்க கொண்டிருக்கும்போது 2, 3 பேர் சேர்ந்து அவனை அடித்து ரத்தக் காயப்படுத்தி, அவன் ரத்தம் சொட்டச் சொட்ட போலீஸ் நிலையத்திற்குப் போகின்றான். போலீஸ் நிலையத்திற்குப் போய் அங்கே இருக்கின்றவர்களிடம் புகார் கொடுக்கும்போது இன்னின்னார் என்னை அடித்தார்கள் என்று சொல்லி புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் யார் அடித்தார்களோ, ரத்தக் காயம் ஏற்படுத்தினார்களோ, அவர்களை எச்சரிக்கை செய்யவில்லை. சமாதானப்படுத்தி அனுப்பியிருக்கலாம். அதற்குப் பதிலாக, அடித்தவர்கள் போலீஸ் நிலையத்திலே வந்து பார்க்க வேண்டிய முறையிலே பார்த்த காரணத்தாலே பிறகு நடந்தது என்ன என்று சொன்னால், ஏற்கெனவே அடிபட்டு ரத்தக் காயத்தோடு உள்ளே நுழைந்தவரையே பின்னர் போலீஸார் உள்ளே தள்ளி லாக் அப்பிலே வைத்துவிடுகிறார்கள் என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது வேறு எங்கும் நடந்தது இல்லை. சென்னை மாநகரத்திலே எழும்பூர் காவல் நிலையத்திலேதான் இதுபோன்ற சூழ்நிலைகள் வளர்ந்து வருகின்றன என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இப்படி சாதாரணமாகக் காயம் உண்டாக்குகிறவர்களைக் கூட எச்சரிக்காமலும், சமரசப்படுத்தாமலும் இருந்து பாதிக்கப் பட்டவர்களையே உள்ளே வைக்கிற நிலைமை ஏற்பட்டால், இப்படி சிறு சூழ்நிலையிலே ஆரம்பிப்பது பெரிதாக நாளைக்கு வளரக்கூடிய நிலைமை உருவாகாமல் போகுமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீதிக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டிய காவல்துறை இன்றைக்கு நாணயத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கிற நிலைமையை நாம் பார்க்கிறோம். இங்கே கூட நான் ஒரு புகாரைக் கொண்டு வந்திருக்கிறேன்.

எஸ். கே. ஜி. வீரமணி என்பவர் சிதம்பரம் தாலுக்கா, பறங்கிப் பேட்டை வட்டார காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர். இவர் அண்மையில் நடந்த தேர்தலில் தீவிரமாக ஈடுபட்டு கட்சி

வேட்பாளரை வெற்றி பெறச்செய்தார். தோல்வியுற்றவர்கள் ஆத்திரம் தாளாமல் வீரமணிக்கு ஆதரவாக இருந்து உழைத்த வர்கள்மீது பொய்ப்புகார் கூறி லஞ்சம் கொடுத்து வழக்குப் போட புதுப்பட்டிப் போலீசாரைத் தூண்டினார்கள். பொய் வழக்கும் போட்டு விட்டார்கள். இதை அறிந்த வீரமணி அவர்கள் போலீசாரின் இந்த நிலையைக் கண்டித்த காரணத்தால் சாராய வியாபாரி ஒருவரைத் தூண்டி பொய்ப்புகார் ஒன்று கேட்டு வாங்கி அதன்பேரில் வீரமணியைக் கைது செய்து குற்றப்பிரிவு 307-ன் கீழ் வழக்கு போட்டுள்ளார்கள். தற்போது வீரமணி அவர்கள் கண்டிஷனல் பெயிலில் உள்ளார்கள். அவர்கள் கொடுத்த புகாரைக்கூட இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** நீங்கள் இப்போது சொல்வதைப் பார்த்தாலே, அதுபற்றிப் புகார் கொடுக்கப்பட்டு அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது என்று தெரிகிறது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தான் அவ்வாறெல்லாம் செய்யவில்லை என்று சொல்லக்கூடும். அதை யெல்லாம் இங்கு வந்து நாம் சொல்வது என்பது சரியாக இருக்காது. ஆகவே அது சம்பந்தமான வழக்கு நடந்துகொண்டு இருக்கிறது என்று நீங்களே சொல்வதால் அந்த ஸ்பெசிக்குக்கு உள்ளே போக வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) . . . அதுபற்றி நிரூபிக்க வேண்டியது கோர்ட்டிலே தானே தவிர இங்கு இல்லை.

**திரு. வி. பி. சிந்தன்:** மாற்றுத்தலைவர் அவர்களே, ஒரு வழக்கு சம்பந்தமாக இங்கே பேசுகிறபோது போலீஸ் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வது உறுப்பினர்களின் உரிமை. அந்த உரிமையை நீங்கள் பறிக்கக்கூடாது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை):** போலீஸ் நடந்துகொண்ட முறையைப் பற்றி விமர்சிக்கலாம். ஆனால் அந்த கேஸ் எந்த வகையில் போடப்பட்டது என்பது பற்றி குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் பேசக்கூடாது. கோர்ட்டிலே தான் அதெல்லாம் நிரூபிக்கப்பட வேண்டும். இங்கே அந்த ஸ்பெசிபிக்கேஸுக்கு உள்ளே போய் பேச வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**திருமதி டி. யசோதா:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் உண்மை நிலவரம் என்று வாதாடுவதற்காகச் சொல்லவில்லை. போலீஸ் நடந்துகொள்ளும் முறை பற்றி நான் போலீஸ் துறை மானியக் கோரிக்கையிலே பேசிக்கொண்டிருக்கிறேன். அந்த வழக்கின் உள்ளே நான் போகவில்லை. 307-ன்கீழ் கேஸ் போட்டது பற்றியும் நான் சொல்லவில்லை. போலீஸ் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தான் சொல்கிறேன். போலீஸைப் பொறுத்தவரையில் வேண்டியவர்கள், வேண்டாத வர்கள் என்பது இருக்கக் கூடாது. அப்படி நம்பித்தான் அவர்களிடத்திலே அரசாங்கம் பொறுப்பை ஒப்படைத்து இருக் கிறது. ஒட்டுமொத்தமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை மக்களின் உயிருக்கும், உடைமைக்கும், உரிமைக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பில் காவல் துறை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு என்பது இருக்கக்கூடாது. அவர்களுக்கு வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற உணர்வு இருக்கக்கூடாது என்பது பற்றி இந்த மானியக் கோரிக்கையின் மீது நான் சொல்வது தவறாக இருக்க முடியாது. மேலும் காசு உள்ளவர்கள் எதைச் செய்தாவது தப்பித்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு நிலைமை வளரக்கூடாது என்பதற்காகத்தான் இதை நான் சுட்டிக்காட்டுகிறேன். காவல் துறை இருக்கிறது; தண்டனை கிடைக்கிறது என்ற அச்சம் இல்லாமல், காசு இருக்கிறது, அது நம்மைக் காப்பாற்றிவிடும் என்ற நிலைமை மக்கள் மத்தியில் ஏற்பட்டால், அது உண்மையாக சட்டம், ஒழுங்கை நிலைநிறுத்துமா என்பதைப் பற்றி அவர்களுக்கே நான் விட்டுவிடுகிறேன்.

(முற்பகல் 10-10)

இந்தச் சூழ்நிலையை ஒட்டி நான் சில விவரங்களை உங்களுக்குக் கொடுக்கிறேன். வியாசர்பாடியிலே தன் நண்பரின் தாயாரை கேலி செய்தார்கள் என்கிற காரணத்தால் கட்டாரி என்பவர் வெட்டி கொலை செய்யப்படுகிறார். அந்தக் கொலை அங்கே நடைபெற்றிருக்கிறது. அப்படி கொலை நடந்திருக்கிற நிலையில் அது தொடர்பாக வேறு எந்தவிதமான அசம்பாவித சம்பவமும் நிகழாமல் இருப்பதற்காக போலீசார் உஷார் படுத்தப்பட வேண்டுமா, வேண்டாமா? அப்படி போலீஸ் துறை பாதுகாப்பாக உஷாராக செயல்பட்டு இருக்குமானால், அந்தக்

கட்டாரி என்பவரின் கொலை நடந்த 4-வது நாளிலேயே அது தொடர்பான தளபதி என்பவர் கடத்திச் செல்லப்பட்டு அடித்துக் கொலை செய்யப்பட்டு, மூன்று சக்கர வண்டியிலே கொண்டு போய் மாதவரம்—எருக்கஞ்சேரி ரோட்டில் உள்ள கிணற்றிலே வீசி எறிந்து, பழிக்குப் பழி என்ற படலத்தை நடத்தி முடித்திருக்க முடியாது. ஆகவே கட்டாரி என்பவர் கொலை செய்யப்பட்ட உடனேயே காவல் துறை உஷார்பட்டிருந்தால், அல்லது உஷார் நிலையில் இருந்திருந்தால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்திருந்தால், தளபதி என்பவர் கொலை செய்யப்படாமல் காப்பாற்றப்பட்டிருக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று அரசு காவல் துறையை நவீனப்படுத்தி வருகிறது. ஆனால் பொதுமக்களுக்கு காவல் துறையிடம் நம்பிக்கை இருக்கிறதா என்பதைப் பற்றி நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இல்லை, நம்பிக்கை இல்லவே இல்லை. பொதுமக்களுக்கு காவல் துறையிடம் இருந்த நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகிறது. ஒரு குற்றத்தைக் கண்ணாலே கண்டவர்கள் கூட கண்டதை வெளியிலே சொல்ல அஞ்சுகிறார்கள். சாட்சி சொல்ல முன் வர அஞ்சுகிறார்கள். போலீஸ் எப்போதும் தங்களுக்கு பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்குத் துளி அளவு கூட கிடையாது. இப்படிப்பட்ட ஒரு தாழ்வு மனப்பான்மை பொதுமக்களிடம் வளர வளர, யாரும் எப்படி வேண்டுமானாலும் பகிரங்கமாக குற்றங்களைச் செய்யலாம் என்று துணிச்சலோடு குற்றவாளிகள் அதிகரிக்கிறார்கள். கொலை செய்யக்கூடிய துணிச்சல் ஒரு பக்கம் வளர்ந்து வருகிறது என்பது மாத்திரம் அல்ல; ஒரு உயிரை சில்லு சில்லாக சிதைத்து, சித்திரவதை செய்து, கொலை செய்யக் கூடிய ஒரு மிருகத்தனமும் அதிகமாக பரவ ஆரம்பித்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட, அண்மையிலே நடந்த ஒரு சம்பவத்தை இந்த அவைக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

17—4—1986 வியாழக்கிழமையன்று இரவு சென்னை எழும்பூரில் ஆல்பர்ட் தியேட்டருக்கு எதிரில் நடைபாதையில் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகின்ற சாமந்தி என்பவர் தன்னுடைய மனைவி கிருஷ்ணவேணியுடன், தன்னுடைய 3 வயது ஒரே மகன் பாலாஜி





என்பவனுடன், மற்ற 3 பெண் குழந்தைகளுடன் தூங்கிக் கொண்டிருந்திருக்கிறார். அன்று அவர் படுத்திருந்த இடம் ஆல்பர்ட் தியேட்டரின் வெளியே பக்கத்திலே போலிஸ் கமிஷனர் அலுவலகமும் பாந்தியன் ரோட்டிலே இருக்கிறது. பக்கத்திலேயே இருக்கிற ரெயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்கு போகின்றவர்களும் வருகின்றவர்களுமாக, இரவு என்றும் பகல் என்றும் பாராமல் விளக்குகள் வெளிச்சம் கக்கிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை. அந்த இடம் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. அந்த இடத்திலே பட்டப்பகல் போல விளக்குகள் எரிந்துக் கொண்டு காட்சி அளிக்கும் அந்த இடத்திலேயே தூங்கிக் கொண்டிருந்த சிறுவன் பாலாஜியைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள். காலையில் விழித்திருந்து ரெயில்வே ஸ்டேஷனுக்கு வேலைக்கு, ரிக்ஷா இழுத்து செல்ல வேண்டிய அவன் தன் மகனைப் பார்க்கிறான், காணவில்லை. உற்றார் உறவினர்கள், தெரிந்தவர்கள் எல்லோரையும் விசாரிக்கிறார்கள். சொந்த பந்தங்களையெல்லாம் போய் பார்க்கிறார்கள். சுற்றிச் சுற்றி தேடுகிறார்கள். குழந்தையைக் காணவே இல்லை. குழந்தை காணாமல் போகிறது 17—4—1986 அன்று. ஆனால் பின்னால் அது கண்டு பிடிக்கப்படுகிறது. போலீசிலும் புகார் செய்திருக்கிறார்கள். போலீசார்கள் அதைக் கண்டு பிடித்தார்களா என்று சொன்னால் இல்லை. போலீஸ் நாய் வரவழைத்து மோப்பம் பிடிக்கச் செய்தார்கள். அந்த போலீஸ் நாய்கண்டு பிடித்ததா என்று சொன்னால் இல்லை.

அப்படியானால் யார் கண்டு பிடித்தார்கள் என்று சொன்னால், எழும்பூரின் அருகில் உள்ள கிரவுண்டிலே பன்றி மண்ணை கிளறி தோண்டியிருக்கிறது. அதைப்பக்கத்திலே உட்கார்ந்து பார்த்திருந்த சிலர், அது மண்ணைத் தோண்டத் தோண்ட துண்டு துண்டாகக் கிடைத்த ஒரு சடலத்தைப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் போய் இப்படி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கே 3 வயதுச் சிறுவன் பாலாஜியை கண்ணைத் தோண்டி, கையை துண்டு துண்டாக வெட்ட, அவனுடைய உடல் அங்கே கொலை செய்யப் பட்டுப் போடப்பட்டிருக்கிறது. அப்படி ஒரு பயங்கரமான நடவடிக்கை அங்கே நடந்திருக்கிறது. அதற்குப் பிறகு போலீசார் அங்கே வந்திருக்கிறார்கள்.

இந்த நிலைமை சென்னையில் மட்டும் தானா என்று கேட்டால் இல்லை. மீனாட்சி அம்மன் வீற்றிருக்கிற மதுரை மாநகரிலே கூட இப்படிப்பட்ட கொலைகள் நடந்திருக்கின்றன. இராமசாமி என்பவருடைய 6 வயது மகள் லோகாம்பாள் என்பவள் கடத்திச் செல்லப்பட்டு, தலையை மொட்டை அடித்து, இரண்டு கைகளும் துண்டிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டு, அனுப்பாவடி, ஐராவதநல்லூர் என்ற இடங்களின் இடையிலே ஓடுகிற ஒரு ஓடையின் கீழ் போட்டிருக்கிறார்கள். அதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்தச் செய்திகளைப் பார்க்கும்போது இப்படிப்பட்ட ஒரு கொடிய செயலை செய்ய மனம் வந்தாலும், எப்படி தைரியம் வந்தது என்றுதான் புரியவில்லை. எங்கோ காடுகழனிகளில் நடக்க வேண்டிய சம்பவங்கள் நகர்ப்புறங்களில் நடக்கின்றன என்றால் யாருடைய கவனக்குறைவால் இந்த கொலை பாதகச் சம்பவங்கள் நிகழ்கின்றன? பெற்றோர்களின் கவனக்குறைவா அல்லது காவல் துறையினரின் கவனக்குறைவா என்பதை அறிய விரும்புவது தவறாக இருக்க முடியாது என்றே கருதுகிறேன்.

அதைப்போல சாலை விபத்துக்கள் கட்டுக்கடங்காமல் நடைபெறுகின்றன. சாலை விபத்துக்களைக் குறைக்க நடவடிக்கைகள் பல மேற்கொள்ளப்பட்டும் விபத்துக்கள் குறைந்த பாடில்லை. அன்றாடம் ஆம்னி பஸ்கள் காதைத் துளைக்கும் பாட்டுகளோடும் கண்ணைப் பறிக்கும் வீடியோ படக்காட்சிகளோடும் சாலைகளில் தூசு பறக்கிற வகையில் செல்கிற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக சென்னை எழும்பூரில் நடந்து கொண்டிருக்கிறது. அரசு பேருந்துகள் நிற்க இடமில்லை. ஆம்னி பஸ்கள் எல்லா இடங்களையும் சொந்தமாக்கிக் கொண்டிருக்கின்றன. கேட்டால் எல்லா ஆம்னி பஸ்களும் கட்சிக்காரர்களுக்குச் சொந்தமென்று சொல்கிறார்கள். அந்த வகையில் காவல்துறையும் கட்சிக்காரர்களுக்குச் சொந்தமாகி விடுகிறது. பொதுமக்கள் சாலையில் நடக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். மாலை வேளையில் எழும்பூர் ரெயில் நிலையம் பக்கம் போனால், எலுமிச்சை பழம் காவும், தேங்காய், பூசணிக்காய் உடைப்பதும், தூபதீப ஆராதனையும் வழியை மறைத்துக் கொண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. உடைந்து சிதறும் தேங்காயைப் பொறுக்குவதற்கு சிறுவர் பட்டாளம் காத்துக் கொண்டிருக்கின்றன. இந்த ஆர்ப்பாட்டம் தினமும் நடந்துகொண்டிருக்கிறது. இந்த அமளிகளை பொதுமக்கள் கடப்பதற்குள்



படும்பாடு பெரும்பாடாய் இருக்கிறது. வெளியே சென்றவர்கள் வீடு திரும்புகிற வரையில் நம்பிக்கையே இல்லை. இந்த வாகனங்களின் விபரீதங்களால் போக்குவரத்தில் ஏற்படும் எல்லா இடையூறுகளையும் களைந்து, கட்டுப்படுத்தி சாலை விபத்துக்களைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அன்றாட சம்பவங்களில் ஒன்றாக துப்பாக்கிச்சூடும் நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டில் 17 முறைகள் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. இனக்கலவரத்தைச் தடுக்க ஆறு முறை துப்பாக்கிச் சூடு நடந்துள்ளதாக இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மற்ற 11 தடவைகளில் அரிசி கடத்துவதாகக் கருதப்பட்டு, நிறுத்தச் சொல்லியும் லாரிகள் நிறுத்தாத காரணத்தால் இரண்டு முறை அவைகளை நிறுத்துவதற்கு துப்பாக்கிச் சூடு நடந்திருக்கிறது. இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது தான். ஆனால் துப்பாக்கிச்சூடு நடத்தியதால் என்ன பலன்? அரிசியை கடத்திக் கொண்டு லாரிகள் செல்கின்றன. அந்த லாரிகளை நிற்கச் சொல்லியும் நிறுத்தவில்லை. அவைகளை நிறுத்துவதற்காக துப்பாக்கியெடுத்து சுடுகிறோம். அப்படி சுட்டதற்குப் பின்னால் லாரி நின்றதா, பிடிபட்டதா, என்றால் இல்லை. துப்பாக்கிச்சூடு நடத்தியதற்குப் பிறகும் லாரிகள் ஜாக்கிரதையாக, மிகத் திறமையாக, தந்திரமாக தப்பியோடி விட்டன என்பதைத் தான் நம்முடைய கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே துப்பாக்கிச்சூடு நடத்தியும் பிரயோஜனம் இல்லை. நம்மை விட ஜாக்கிரதையாக, திறமையாக லாரி டிரைவர்கள் இருக்கிறார்கள்.

அடுத்து, திருச்சி மாவட்டத்தில் நெற்குப்பை வழியாக பொம்பலூர், திருவளந்துறை ஆகிய ஊர்களுக்கு பேருந்து வசதி கேட்ட மக்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியிருக்கிறீர்கள். பொதுமக்கள் பஸ் வசதி கேட்கிறார்கள். அப்படி கேட்டதற்காக அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்கிறீர்கள். துப்பாக்கிச்சூடு நடத்தும் அளவிற்கு அந்தப் பகுதி மக்கள் கொதிப்படையும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, அந்தக் கோரிக்கை அந்த அளவிற்கு அவர்களுக்கு வேகம் ஏற்படுத்தியிருக்கிற சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு முயற்சி எடுத்திருக்க வேண்டும். அவர்கள் பஸ் கேட்டார்கள் என்பதற்காக துப்பாக்கியால் பதில் சொல்லியிருக்கிறீர்கள்.

[திருமதி டி. யசோதா] [1986 மே 5

அதேபோல பெரியார் ஆயக்கட்டிலே திருமங்கலம் பிரதான கால்வாயில் தடங்கலற்ற தண்ணீர் விநியோகம் கோரி மதுரை ஊரக மாவட்டம் உசிலம்பட்டி தாலுக்காவில் உள்ள செல்லம்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களைச் சார்ந்தவர்கள் 11—12—1985-ல் உசிலம்பட்டியில் வாகனப் போக்குவரத்தை தடுத்தும், கல் எறிந்தும் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், தனியார் பேருந்துகள், மற்றும் லாரிகள் முதலியவற்றை சேதப்படுத்தியதால் துப்பாக்கிச்சூடு நடந்திருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் பேருந்து கேட்பதற்கும் துப்பாக்கிப் பிரயோகம், தண்ணீர் கேட்டாலும் துப்பாக்கிப் பிரயோகம் என்கிற நிலைமை ஏற்பட்டிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அதே மதுரை மாவட்டத்தில் செல்லாயிபுரத்தைச் சேர்ந்த தவசிகோடி தேவர் காவல் நிலையத்தில் குறிப்பறையில் உள்ள மேல்நிலை ஜன்னல் வலைக்கம்பியில் தூக்குப் போட்டுக் கொண்டு செத்திருக்கிறார் என்ற செய்தி கேட்டு கொதிப்படைந்த மக்கள் நீதி கேட்க, துப்பாக்கியால் பதில் தரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-20)

இத்தனை துப்பாக்கிச் சூடுகளுக்கும் காரணம் காட்டப்பட்டிருக்கிற போது 4—12—1985 அன்று அயோத்தியாகுப்பம் மீனவர்கள் எதற்காக வாகனப் போக்குவரத்தை தடுத்தார்கள்? குடிசைமாற்று வாரியத் தலைவர் என்ன கருதினார் என்பதற்கான காரணங்களை ஏன் குறிப்பிடவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன என்றால், 5 பேர்கள் உயிரிழக்கவும், 4 பேர்கள் காயம் அடையவும் நேர்ந்தது என்றும் காவல்துறை ஆணையாளர், துணை ஆணையாளர்கள், ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் என்று இப்படி 89 பேர்கள் காயமுற்றதாகவும் மற்ற 18 காவல்துறை வாகனங்கள் உட்பட மொத்தம் 49 வாகனங்கள் சேதமானதாகவும் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, துப்பாக்கிச் சூட்டுக்கு ஆதி காரணம் என்ன என்பதைத் தெரிவிப்பதில் தயக்கம் ஏன்? ஆனால் சென்னை மக்கள் அறிந்திருப்பதிலே இருந்து குடிசை மாற்று வாரியத்தில் வேலை செய்கிற ஒரு நபருக்கு அயோத்தியாகுப்பத்திலே



1986 மே 5] [திருமதி டி. யசோதா]

சாராயக் கடை வைக்க இடம் ஒதுக்கியதாகவும், அதைத் தடுத்த மீனவர் பிரதிநிதி ஒருவர் தாக்கப்பட்டதால், தாக்கிய குடிசை மாற்று வாரிய உறுப்பினர் மீது நடவடிக்கை எடுக்கும்படி குடிசை மாற்று வாரியத் தலைவரிடம் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிக் கேட்டவர்களிடம் குடிசை மாற்று வாரியத் தலைவர் கொஞ்சம் கடுமையாகப் பேசி, விரட்டியதன் காரணமாக, ஆத்திரம் அடைந்த அந்த மீனவர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள் என்பதுதான். இப்படி ஒரு அடிப்படைக் காரணத்தை குறிப்பிடாமல், மொட்டைத் தலையன் குட்டையில் விழுந்தான் என்பதைப் போல சொல்லி, மீனவ நண்பர்களைக் கொடியவர்கள் போல சித்தரிக்கக்கூடாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுமக்களோடு நல்லுறவை ஏற்படுத்துவதில் காவல் துறையினுடைய பங்கு மிகச் சிறந்ததாக உள்ளதாக இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டு உள்ளது. இது உண்மையாக இருக்குமானால், இத்தனை துப்பாக்கிச் சூடுகள் ஏன்? துப்பாக்கித் துரைத்தனத்தை அகற்றியதற்குப் பிறகுமா, ஆண்டுக்கு 17 துப்பாக்கிச் சூடு என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கோவை ஐயாசாமி காலனியில் உள்ள வேலாயுதம் செட்டியார் என்பவருடைய மனைவி தனலட்சுமியினுடைய மகள் துளசி என்பவர் 31—8—1985-ல் திருச்சி ஆட்டுக்காரத் தெருவில், தன்னுடைய மருமகன் செல்வராஜ் இல்லத்தில் கொலை செய்யப்பட்டதாக சந்தேகிக்கிறார்கள். 28—1—1980-ல் 15 பவுன் நகை மற்றும் நல்ல முறையில் சீர் வசதிகளோடு திருமணம் செய்து கொடுக்கப்பட்ட மகள் துளசியை அடிக்கடி வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதன் காரணமாக தாய் வீடு வருவதும், சமாதானம் செய்து அனுப்புவதுமாக இருந்து கடைசியில் இறந்துவிட்டாள் என்கிற தந்தி வந்ததால், அவளுடைய மரணம் குறித்து சந்தேகம் ஏற்பட்டபோது அந்தத் தாயார் பாலக்கரை காவல் நிலையத்திலே புகார் கூறியிருக்கிறார்கள். புகார் கூறிய நேரம் இரவு நேரம். காவல் துறை போலீசார் சொல்லிவிட்டார்களாம், இப்போது ராத்திரியாக இருக்கிறது. இரவு நேரத்திலே ஒன்றும் செய்ய முடியாது, பொறுத்து விடியட்டும் என்று சொல்கிறார்கள். பிறகு அந்த அம்மையார் திருச்சி டி.எஸ்.பி. அவர்களிடம் முறையிட

அவர்கள் தலையிட்டு, பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, காலம் கடத்துகின்றார்கள் என்று அந்த அம்மா மிகவும் வேதனை யோடு சொல்கிறார்கள். என்னுடைய மகளை எரிக்க வேண்டுமா அல்லது புதைக்க வேண்டுமா என்று கேட்கிறார்கள், நாளைக்கு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கட்டும் என்பதற்காக நான் எரிக்க வேண்டாம், புதையுங்கள் என்று சொன்னதற்குப் பிறகும், அந்தச் சடலத்தை புதைக்காமல் எரித்து விட்டார்கள். ஆனால் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை, நாங்கள் பலமுறை போய்ப் பார்த்தோம். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். கொடுமையினாலே இது திருமணம் முடிந்தபிறகு வரதட்சணைக் கொடுமையினாலே இது போன்ற கொலைகளும் தற்கொலைகளும் நடைபெறுவதை சான்னால் போலீஸ் நிலையத்திலே உள்ளவர்கள், அலட்சியப் படுத்துவது என்பதை நாம் தடுத்தாக வேண்டும்.

திருமணம் நடந்து 2, 3 மாதங்களில் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, பெற்றோரிடம் வந்து சேர்ந்த மகளை மீண்டும் தாலி கட்டியவனிடம் சேர்க்க பணம் இல்லாமல், வேறு ஒருவருக்கு மணம் செய்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு ஏற்கனவே வரதட்சணை கேட்டு அனுப்பிய அந்த மருமகன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். திருமணம் செய்த பிறகு, இரண்டாவது பெண்ணையும் இதுபோன்ற வரதட்சணை கேட்டு தொல்லைப்படுத்துகிறான். தொல்லையைப் பொறுக்க முடியாத அவள், வேறு ஒருவனோடு ஓடிவிடுகிறாள். மூன்றாவ தாக அவன் புதுமாப்பிள்ளை போல், மூன்றாவது திருமணம் செய்துகொள்கிறான். மூன்றாவது திருமணமும் செய்து கொண்டபிறகு, இந்த வரதட்சணை கேட்டு தொல்லை செய்கின்ற போது, அவனுடைய தொல்லை தாங்காமல் தாய்வீட்டுக்கு அவள் வந்துவிடுகிறாள். இந்த வழக்கை காவல் துறையில் இருப்பவர்கள் ஆராய்கிறார்கள். கடைசியில் பெண்கள் சாட்சி சொல்வதற்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். காரணம் ஏற்கனவே இவனாலே வரதட்சணை கொடுமைக்கு ஆளாக்கப் பட்டு மற்றொருவனிடம் வாழ்ந்து கொண்டு இருக்கிற அந்த நல்வாழ்க்கை கெட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக. தன்னை [illegible] வாழ்க்கையை, தான் தொல்லைப் படுத்தப்பட்டதை அவர்கள் சொல்ல மறுக்கிறார்கள். இரண்



டாவதாக வந்தவளும், அதே நிலைமையில் அவனை விட்டுவிட்டு வந்துவிட்டோம், சனியன் தொலைந்துவிட்டது, இப்போது வேறு [illegible]வரோடு நல்ல வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறோம், [illegible]ம் போய் தற்போது சாட்சி சொன்னால், ஏற்கனவே தவறாக [illegible]று ஒருவருடைய மனைவி என்பதை ருசுப்படுத்துவது போல் [illegible]ருக்கும் என்பதை விரும்பாமல், சாட்சி சொல்ல வரவில்லை. அதேபோல், மூன்றாவது திருமணம் செய்து கொண்டவளும், ஐயோ, நம்முடைய வீட்டுக்காரனைப் பற்றிக் குற்றம் சாட்டி விட்டால், இருக்கின்ற வாழ்க்கையும் போய்விடுமே என்ற அச்சத்தின் காரணமாக, அதைத் தாங்கிக் கொள்ளுகின்ற நிலை மையும், பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமையும் இன்றைக்கு இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அளவுக்கு பெண்கள் பாது காப்புச் சட்டத்தினுடைய நிலை இருக்கிறது.

இன்னும்கூட ஒன்று. சமீபத்தில் ஏழுகிணறு பகுதியில் நடந்தது. திருமண வயது அடையாத ஒரு பெண்ணை, திருமண வயது அடையாத ஒரு ஆண் கடத்திச் சென்று விட்டான். இருவரும் கணவன் மனைவியாக இருந்து இருக்கி றார்கள். பிறகு போலீஸ் நிலையத்திலே புகார் செய்யப்பட்டு, அந்த இரண்டு பேரையும் ஏழுகிணறு காவல் நிலையத்துக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். கொண்டு வந்ததற்குப் பிறகு திருமண வயதை அடையாத அந்தப் பெண்ணை அவர்கள் அரசாங்கத்தினுடைய சமூக குற்றவாளிகளைப் பாதுகாக்கின்ற பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் கொண்டுபோய் சேர்ப்பதற்கு காவல் துறையினர் முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணைப் பெற்றவர்களே அதற்குச் சம்மதிக்கவில்லை. இரண்டு பேரும் சமாதானமாகப் போய் விடுகிறோம் என்று சொல்லிவிட்டு வெளியே வந்ததற்குப் பிறகு ஒரு வாரத்திற் குள்ளே எந்தப் பெண்ணுக்கு வயது நிரம்பவில்லை என்று சொல்லி காவல் துறையினர் கொண்டு வந்தார்களோ, எவனை வயது நிரம்பாத இளைஞன் என்று சொன்னார்களோ அந்த வயது நிறையாத பெண்ணுக்கும், வயது பூர்த்தியாகாத அந்தப் பையனுக்கும் திருமணத்தை பெற்றோர்களே நடத்தி வைத்து விடுகின்றார்கள். ஆக திருமண வயது நிரம்பாதவர்கள் தன்னிச்சையாகப் போனால் இந்தச் சட்டம் பிடிக்கிறது;

அவர்கள் தலையிட்டு, பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. ஆனால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, காலம் கடத்துகின்றார்கள் என்று அந்த அம்மா மிகவும் வேதனை யோடு சொல்கிறார்கள். என்னுடைய மகளை எரிக்க வேண்டுமா அல்லது புதைக்க வேண்டுமா என்று கேட்கிறார்கள், நாளைக்கு நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கட்டும் என்பதற்காக நான் எரிக்க வேண்டாம், புதையுங்கள் என்று சொன்னதற்குப் பிறகும், அந்தச் சடலத்தை புதைக்காமல் எரித்து விட்டார்கள். ஆனால் இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க வில்லை, நாங்கள் பலமுறை போய்ப் பார்த்தோம், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். திருமணம் முடிந்தபிறகு வரதட்சணைக் கொடுமையினாலே இது போன்ற கொலைகளும் தற்கொலைகளும் நடைபெறுவதை சொன்னால் போலீஸ் நிலையத்திலே உள்ளவர்கள், அலட்சியப் படுத்துவதை என்பதை நாம் தடுத்தாக வேண்டும்.

திருமணம் நடந்து 2, 3 மாதங்களில் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, பெற்றோரிடம் வந்து சேர்ந்த மகளை மீண்டும் தாலி கட்டியவனிடம் சேர்க்க மனம் இல்லாமல், வேறு ஒருவருக்கு மணம் செய்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு ஏற்கனவே வரதட்சணை கேட்டு அனுப்பிய அந்த மருமகன் வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்கிறான். திருமணம் செய்த பிறகு, இரண்டாவது பெண்ணையும் இதுபோன்ற வரதட்சணை கேட்டு தொல்லைப்படுத்துகிறான். தொல்லையைப் பொறுக்க முடியாத அவள், வேறு ஒருவனோடு ஓடிவிடுகிறாள். மூன்றாவ தாக அவன் புதுமாப்பிள்ளை போல், மூன்றாவது திருமணம் செய்துகொள்கிறான். மூன்றாவது திருமணமும் செய்து கொண்டபிறகு, இந்த வரதட்சணை கேட்டு தொல்லை செய்கின்ற போது, அவளுடைய தொல்லை தாங்காமல் தாய்வீட்டுக்கு அவள் வந்துவிடுகிறாள். இந்த வழக்கை காவல் துறையில் [illegible] வாபஸ்பெறுகிறார்கள். கடைசியில் பெண்கள் சாட்சி சொல்வதற்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். காரணம் ஏற்கனவே இவனாலே வரதட்சணை கொடுமைக்கு ஆளாக்கப் பட்டு மற்றொருவனிடம் வாழ்ந்து கொண்டு இருக்கிற அந்த நல்வாழ்க்கை கெட்டுவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாக, தன்னை [illegible] வாழ்க்கையில் தான் தொல்லைப் படுத்தப்பட்டதை அவர்கள் சொல்ல மறுக்கிறார்கள். [illegible]





டாவதாக வந்தவளும், அதே நிலைமையில் அவனை விட்டுவிட்டு வந்துவிட்டோம், சனியன் தொலைந்துவிட்டது, இப்போது வேறு ஒருவரோடு நல்ல வாழ்க்கை வாழ்ந்து கொண்டு இருக்கிறோம், நாம் போய் தற்போது சாட்சி சொன்னால், ஏற்கனவே தவறாக வேறு ஒருவருடைய மனைவி என்பதை ருசுப்படுத்துவது போல் இருக்கும் என்பதை விரும்பாமல், சாட்சி சொல்ல வரவில்லை. அதேபோல், மூன்றாவது திருமணம் செய்து கொண்டவளும், ஐயோ, நம்முடைய வீட்டுக்காரனைப் பற்றிக் குற்றம் சாட்டி விட்டால், இருக்கின்ற வாழ்க்கையும் போய்விடுமே என்ற அச்சத்தின் காரணமாக, அதைத் தாங்கிக் கொள்ளுகின்ற நிலை மையும், பெண்களுக்கு பாதுகாப்பற்ற நிலைமையும் இன்றைக்கு இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அளவுக்கு பெண்கள் பாது காப்புச் சட்டத்தினுடைய நிலை இருக்கிறது.

இன்னும்கூட ஒன்று. சமீபத்தில் ஏழுகிணறு பகுதியில் நடந்தது. திருமண வயது அடையாத ஒரு பெண்ணை, திருமண வயது அடையாத ஒரு ஆண் கடத்திச் சென்று விட்டான். இருவரும் கணவன் மனைவியாக இருந்து இருக்கி றார்கள். பிறகு போலீஸ் நிலையத்திலே புகார் செய்யப்பட்டு, அந்த இரண்டு பேரையும் ஏழுகிணறு காவல் நிலையத்துக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். கொண்டு வந்ததற்குப் பிறகு திருமண வயதை அடையாத அந்தப் பெண்ணை அவர்கள் அரசாங்கத்தினுடைய சமூக குற்றவாளிகளைப் பாதுகாக்கின்ற பெண்கள் பாதுகாப்பு இல்லத்தில் கொண்டுபோய் சேர்ப்பதற்கு காவல் துறையினர் முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பெண்ணைப் பெற்றவர்களே அதற்குச் சம்மதிக்கவில்லை. இரண்டு பேரும் சமாதானமாகப் போய் விடுகிறோம் என்று சொல்லிவிட்டு வெளியே வந்ததற்குப் பிறகு ஒரு வாரத்திற் குள்ளே எந்தப் பெண்ணுக்கு வயது நிரம்பவில்லை என்று சொல்லி காவல் துறையினர் கொண்டு வந்தார்களோ, எவனை வயது நிரம்பாத இளைஞன் என்று சொன்னார்களோ அந்த வயது நிறையாத பெண்ணுக்கும், வயது பூர்த்தியாகாத அந்தப் பையனுக்கும் திருமணத்தை பெற்றோர்களே நடத்தி வைத்து விடுகின்றார்கள். ஆக திருமண வயது நிரம்பாதவர்கள் தன்னிச்சையாகப் போனால் இந்தச் சட்டம் பிடிக்கிறது;

அதையே பெற்றோர்கள் செய்தால் இந்தச் சட்டம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல் நம்முடைய காவல்துறை அதிகாரி ஒருவர் பெயரில் 'கபாடி ஆட்டக் குழு' ஒன்று இயங்கி வருகிறது. காவல் துறையின் அனைத்து மட்டத்திலே உள்ளவர்கள் பங்கு கொண்டிருக்கிறார்கள். சமீபத்தில் விளம்பரப்படுத்தப்பட்ட சுவரொட்டியில்கூட 'இதய தெய்வம்' என்று அந்தக் காவல்துறை அதிகாரியினுடைய பெயரைப் போட்டிருக்கிறார்கள். நான் அதை குறை சொல்லவில்லை. அரசியல்வாதிகள்தான் தங்களுடைய தலைவர்களை 'இதய தெய்வம்' என்று சொல்வார்கள். ஆனால் அதிகாரிகளும் இதைப்போல 'இதய தெய்வம்' என்று சொல்லக்கூடிய சூழ்நிலைகள் வருமேயானால் அந்த 'இதய தெய்வம்' என்று சொல்கின்றவர்கள் எவ்வளவு சலுகைகளை இந்தக் காவல்துறை அதிகாரிகள் மூலமாக பெறவேண்டுமென்று எச்சரித்து, நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்பது மட்டுமல்ல, அதேநேரத்திலே பொதுமக்களிடத்திலே அவர்களுக்கு எந்த அளவுக்கு அச்ச சூழ்நிலைகள் ஏற்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதைப்போல இன்னொன்று, நம்முடைய காவல்துறை தலையிட வேண்டியதற்கு தலையிடாது; தலையிடக்கூடாததற்கெல்லாம் நம்முடைய காவல் துறை தலையிடுகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன.

இப்போது என்னுடைய தொகுதியிலேகூட, தண்டலம் பகுதியில் கோயில் நிலம் இருக்கிறது. அந்தக் கோயில் நிலத்திலே அரிசனங்கள் குடிசைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள். குடிசை போட்டுக் கொண்டிருக்கின்ற அந்தப் பகுதி, கோயிலுக்குச் சொந்தமானது. அதை அனுபவிக்கின்ற உரிமை அரிசனங்களுக்கு கொஞ்சம் அதிகமாகவே உண்டு. அப்படி இருக்கின்ற போது அரிசனங்கள் குடிசைபோட்ட அந்த இடத்தை— கோயில் நிலத்தை, போலீஸார், யாரோ ஒருவர் புகார் கொடுத்திருக்கிறார் என்னுடைய நிலம் என்று சொல்லி, ஆகவே அங்குள்ள அரிசனங்களை அப்புறப்படுத்தப் போகிறார்கள். நான்கூட சொன்னேன், நீங்கள் இதிலே தலையிடவேண்டாம் என்று. அது கோயில் நிலம்; கோயிலைசார்ந்தவர்கள் பார்த்து அவர்களே அப்புறப்படுத்தட்டும் என்று. தனிப்பட்டவர்கள் கொடுக்





கின்ற புகாரின் மீது நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று நான் சொன்னேன். ஆனாலும்கூட, தனிப்பட்ட நபர் அந்த அரிசனங்கள்மீது கோர்ட்டிலே வழக்கு போட்டிருக்கிறார். வழக்குக்கூட நடைபெற இருக்கிறது. ஆக, அந்த இடத்திலே அரிசனங்கள் குடியிருக்கின்றார்கள் என்பது உண்மையாகி விட்டது; உறுதியாகிவிட்டது. இன்றைக்கு 'பொஸஷன்' அவர்கள் கையிலே இருக்கிறது. ஆக, வழக்கு மன்றத்திற்குப் போய் அங்கே நியாயம் நிலைபெறப்பட்டு, அதற்குப்பிறகு அந்த நியாயத்தினுடைய அடிப்படையிலே நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களேயானால் அதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைவிட்டு 100 பேர் 'கொட்டகை' போட்டிருக்கிறார்கள், ஆனால் ஒருவர் பேச்சைக் கேட்டுக்கொண்டு அதுவும் அவருக்கு அது பட்டா நிலமாக இருந்தாலும்கூட பரவாயில்லை, நீங்கள் தஸ்தாவேஜுகளைப் பார்த்து அவர்களை நீக்குவதற்கு உரிமை இருக்கிறது. அதுகூட இல்லாத சூழ்நிலையிலே கோயில் நிலத்திலே குடியிருக்கின்ற அரிசனங்களை அகற்றுவதற்கு போலீஸார் முன் வருகிறார்கள்.

அதைப்போல மாங்காட்டிலே மாரியம்மாள் என்ற ஒரு அரிசனத் தாய் இருக்கிறார். அவருக்கு இருக்கின்ற வீட்டை மற்றவர்கள் அப்புறப்படுத்த முயற்சிக்கிறார்கள். அதற்கு அவர் கோர்ட்டுக்குப்போய் இந்த இடம் எனக்கு உரியதுதான் என்றும், அது மாரியம்மாளுக்கு சொந்தமான இடம் என்று சொல்லி தீர்ப்பு வாங்கி வந்ததற்குப் பிறகும்கூட, அந்தத் தீர்ப்பை நான் குன்றத்தூர் போலீஸ் ஸ்டேசனில் பலமுறை எடுத்துச் சொல்லி, அந்த இடம் அவர்களுக்கு உரியது, அவர்களை யாரும் தொந்தரவு செய்யாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னாலும்கூட அந்தச் சூழ்நிலையிலே நடவடிக்கை எடுப்பதற்கு அங்கே இருக்கின்ற நிர்வாகம் தயாராக இல்லை. காரணம் மாரியம்மாள் ஏழை; யாரும் தெரியாத ஒரு அப்பாவி. இந்த சூழ்நிலை அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அடுத்து, மைலாப்பூரிலே 'இந்த சாஸ்வத சகாய நிதி' என்று இருக்கிறது. அங்கேகூட தகராறு ஏற்பட்டிருக்கிறது. அங்கிருக்கின்ற தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியவர்களிடத்திலே தகராறு ஏற்பட்டிருக்கிறது. பொதுமக்களுடைய பொருள்களெல்லாம் அங்கே இருக்கின்ற பாதுகாப்புப் பெட்டகத்திலே இருக்கின்றன. அந்தப் பாதுகாப்புப் பெட்டகத்தி

(முற்பகல் 10-30)

னுடைய சாவி, தலைவரிடம் ஒன்று, செக்ரட்டரியிடம் ஒன்று என்று இருக்கும்போல் இருக்கிறது. ஆகவே அந்த சாவி இருவரிடம் இருக்கும்போதே அந்த பூட்டை உடைத்து அதை ஆப்பரேட் செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு அதை மயிலாப்பூர் காவல் நிலையத்தில் சொன்னால்கூட நடவடிக்கை எடுக்காத சூழ்நிலை இருக்கிறது என்று சொன்னால் பாவமாக இருந்தால் என்ன, நீங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் பின் தங்குவீர்களானால் பொதுமக்கள் இவர்கள் மேல் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் நான் ஒரு சில கருத்துக்களை இறுதியாகக் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன். தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்தவர்களுடைய குறைகளைச் சுட்டிக்காட்டிய அதே நேரத்தில் என்ன இருந்தாலும் அவர்கள் நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், அவர்களும் நம்முடைய மக்களில் ஒருவராக இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய நலன்களைப் பற்றி கருத வேண்டியது இந்த அவையினுடைய கடமை என்ற காரணத்தால் அவர்களைப் பற்றி ஒரு சில கருத்துக்களை நான் முன் வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு தனியாக வீட்டு வசதி வாரியம் நிறுவப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்கிறேன். அதை துரிதமாக்கி காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு உடனடியாக வீடு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல எங்கு பார்த்தாலும் ஜாதிக் கலவரங்கள் நடைபெறுகின்றன. தமிழகம் முழுவதும் என்று நான் சொல்ல மாட்டேன். சிற்சில இடங்களில் இந்த மாதிரி ஜாதிக் கலவரங்கள் நடக்கின்ற இடங்களை குறித்துக் கொண்டு இந்த இடத்தில் இருக்கின்ற காவல் நிலையங்களை வரிசைப்படுத்தி வைத்துக் கொண்டு அந்த காவல் நிலையங்களுக்கு வேண்டிய டெலிபோன் வசதி, வண்டி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் காவல் நிலையங்களையும் நாம் பலப்படுத்தி ஆக வேண்டும். ஆக அதிக



மான காவலர்களையும், அதிகாரிகளையும் நியமிக்கக்கூடிய சூழ்நிலையை நாம் உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்

அதேபோல் கிரைம் சம்பந்தப்பட்ட வழக்குகள் அதிகமாக இருக்கின்ற பகுதிகளை எல்லாம் வரிசைப்படுத்தி எங்கெங்கே இதுபோன்ற குற்றங்கள் நடைபெறுகிறதோ அந்தக் குற்றங்களை எல்லாம் வரிசைப்படுத்தி அந்தக் காவல் நிலையங்களுக்கு நீங்கள் அதிகமான பலத்தைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கேயும் வண்டி வசதியையும், டெலிபோன் வசதியையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக டி.எஸ்.பி. 101 பேர் இருக்கிறார்கள். காவல் நிலையங்களோ 984 இருக்கின்றன. ஒரு டி.எஸ்.பி.க்கு 9 முதல் 10 காவல் நிலையங்கள் என்று பொறுப்பு கொடுத்து இருக்கிறோம். ஆனால் என்னுடைய செங்கற்பட்டு மாவட்டத்திலோ ஒரு டி.எஸ்.பி.க்கு 15-க்கு மேற்பட்ட காவல் நிலையங்கள் வருகின்றன. அப்படி வருகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற ஒரு டி.எஸ்.பி. க்கு 9 முதல் 10 காவல் நிலையங்கள் தான் பொறுப்புக்கு வருகின்றன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள டி.எஸ்.பி.க்கு 15, 16 காவல் நிலையங்கள் என்று வருகின்றன. இதனால் வேலைப் பளு அதிகமாக இருக்கின்றது. எப்படி நாம் மாவட்டங்களைத் தனியாக பிரிக்கிறோமோ அதைப் போல இந்த போலீஸ் நிலையங்களையும் பிரித்து அவர்களுக்கு ஒரேவிதமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உண்டான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஜனவரி மாதத்திலிருந்து நாம் மது விலக்கை அமல் செய்ய இருக்கிறோம். கள்ளச் சாராயத்தை ஒழிப்போம் என்று சொல்லி நல்லச் சாராயம் கொண்டு வந்தோம். இப்போது நல்லச் சாராயத்தை எடுத்து விட போகிறோம். மறுபடியும் கள்ளச் சாராயம் வராமல் இருக்காது என்று சொல்லுவதற்கு நான் தயாராக இல்லை. கள்ளச் சாராயம் வரும். இந்த கள்ளச் சாராயம் எப்படி காய்ச்சுகிறார்கள் என்று சொன்னால்

பானையில் காய்ச்சுகிறார்கள். போலீஸ் ஒரு கம்பியை எடுத்துக் கொண்டு போய் அதை உடைத்து விட்டு வந்து விட முடியும். அந்த நல்லச் சாராயம் போகப்போகிறது ஜனவரி மாதத்தி லிருந்து என்று சொன்னால் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு பர்மனென்டாக பேக்டரியை ஆரம்பிக்கப் போகிறார்கள். பர்மனென்டாக கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கு என்ன வழி? பானையில் இருந்தால் போலீஸ்காரர்கள் உடனே உடைத்து விட்டுப் போகிறார்கள். அதற்காக சிமெண்டில் இப்போது கட்டலாம் என்ற நிலைமை உருவாகியிருக்கிறது. சிமெண்டில் அவர்கள் கட்டலாம் என்ற நிலை ஏற்படும்போது . . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக எதையும் கற்றுக் கொடுக்காமல் இருப்பது நல்லது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வந்தார்கள். ஆனால் அவர்கள் இரவு நேரத்தில் கூட்டத்தில் வந்தார்கள். மதிய நேரம் அப்படி சுற்றுப்புறமாக வந்தார்கள் என்றால் அந்த குன்றத்தூர் பகுதியில் எவ்வளவு பெரிய பானையில் காய்ச்சுகிறார்கள் என்பதை கண்கூடாகக் கண்டு களித்துவிட்டு வந்து இருக்கலாம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கண்டு விட்டு என்று சொன்னால் பரவாயில்லை. களித்து விட்டு என்று சொல்வது சரியாக வராது.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. சாதாரண பானைகளை யெல்லாம் தடியால் அடித்து உடைத்து விடுகிறார்கள். ஆனால் இதுபோன்று சிமெண்ட் கான்கிரீட்டினால் போடப்பட்ட பானை களை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஆக அடிக்கடி அவைகளை தகர்க்கின்ற சூழ்நிலை ஏற்படும்போது போலீசாரின் எண்ணிக்கை கூடுதலாக இருக்க வேண்டும். போலீசாருடைய



வசதிகள் அதிகமாக இருக்கவேண்டும். போலீசாரின் பலமும் அதிகமாக இருக்க வேண்டும். இதைக் கூட்டித்தான் ஆகவேண்டுமென்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று தேவைகளுக்கேற்ப பணிகளுக்கு அதிகாரி களை நியமிப்பதில் காலதாமதத்தைக் குறைத்து உடனுக்குடனே உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது கூட, சப் இன்ஸ்பெக்டர் வேலைக்கு இண்டர்வியூ செய்து கிட்டத்தட்ட 10 மாதங்களுக்கு மேலாகியும் கூட, இது வரையில் அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்படவில்லை. அந்த உத்தரவுகள் உடனாக வந்தால், மக்களுக்கு சேவைசெய்கின்ற அதிகாரிகளின் எண்ணிக்கை உயரும். குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின் எண்ணிக்கையும் குறையும்.

இப்போது போலீஸ் ஸ்டேஷனுக்கு போனால், சப் இன்ஸ் பெக்டர் உட்காருவதற்கு ஒரு சேர் இருக்கும். இன்ஸ்பெக்டர் உட்காருவதற்கு ஒரு சேர் இருக்கும். ரைட்டர் உட்காருவதற்கு ஒரு சேர் இருக்கும். அதற்கு மேல் பர்னிச்சர் இருப்பதாகத் தெரியவில்லை. நாங்கள் யாராவது போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனால், அந்த ரைட்டரை, அல்லது ஏட்டையாவை எழுந் திருக்கச் சொல்லி, அந்த நாற்காலியை எடுத்துப்போட்டு உட்கார சொல்கின்ற நிலைமை இருக்கிறது. 984 காவல் நிலையங்கள் தமிழகம் முழுவதும் இருக்கின்றன. ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், ஒரு ஸ்டீல் சேரும், ஒரு பெஞ்சும் வாங்கிப் போட்டால், நம்முடைய போலீஸ் மானியத்திலே கோடிக் கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டு விடப் போகிறதா? ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும், ஒரு பெஞ்சும், ஸ்டீல் சேரும் வாங்கிக் கொடுத்தால். மொத்தம் 3,000, (பெஞ்ச் 1,000 ஸ்டீல் சேர் 2,000) வாங்கிக் கொடுத்தால், அங்கு போகின்றவர்கள் கௌரவ மாக உட்கார்ந்து பேசுவதற்கு ஒரு வாய்ப்பு உருவாகும். அதை நீங்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழக முதல்வர் அவர்கள் விளையாட்டில் பிரியமுள்ளவர், விருப்ப முள்ளவர். அதிலே அதிகமான அக்கறை காட்டக் கூடியவர்கள். அப்படி இருக்கிறபோது, காவல் துறையிலே உள்ளவர்களை

இந்த விளையாட்டுகளில் ஈடுபடுத்துவதில், முழு முயற்சியை அதிகமான அளவில் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், முன்பு ஜேசுநாதன், பிரான்சிஸ் போன்ற அகில இந்திய ஹாக்கி விளையாட்டு வீரர்களை தமிழ்நாட்டு காவல் துறையிலிருந்துதான் பெற்றிருந்தோம்.

இன்றைக்கு ஹைதராபாத்திலிருந்து ஃபுட் பால் டீம் வருகிறது என்று சொன்னால், கூட்டம் கூட்டமாக அதைப் பார்ப்பதற்கு மக்கள் திரண்டு போகிறார்கள். இதுபோன்று சென்னையிலே நம்முடைய காவல் துறையினரை ஏற்படுத்த முடியாதது அல்ல. அதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையினரை அதிகமான அளவில் ஊக்கப்படுத்தி, அதிலே குறைபாடுகள் இருந்தால், அதை நீக்கி, காவல் துறையினரை அதிக அளவில் சேர்த்துக் கொள்வதற்கான சூழ்நிலையை இந்த மானியத்தின் மூலமாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், தமிழ் மக்களுடைய நெஞ்சங்களிலே நிறைந்திருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற காவல் துறை, தீயணைப்புப் பணிகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன்.

உரலுக்கு ஒரு பக்கம் இடி, மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் அடி என்று சொல்வார்கள். அதுபோன்று காவல் துறையைப் பொறுத்தவரையில், அவர்களுக்குத் திரும்பிய பக்கம் எல்லாம் அடி என்கின்ற அளவில் பல்வேறு விமர்சனங்களுக்கு ஆட்படுத்தப்பட்டு, ஒரு துறையாக இன்றையதினம் காவல் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எந்தவித காரணமும் இல்லாமல், இந்தச் சமுதாயம் குறிப்பாக யசோதா அம்மையார் போன்றவர்கள் காவல் துறையை ஏதோ சந்தேகக் கண்ணோட்டத்தோடு, தவறான கண்ணோட்டத்தோடு பார்க்க வருகிறார்கள். இன்றைக்கு இது காவல் துறையின் குற்றமா? சமுதாயத்தின் குற்றமா? என்று ஆராய்ந்து





பார்த்தால், நடந்துவிட்ட நிகழ்ச்சிகளுக்கு காவல் துறையினரை மட்டும் பழிபோட்டு, சமுதாயம் தப்பித்துக் கொள்ளப் பார்ப்பது, எந்த விதத்திலேயும் நியாயமல்ல, அது சரியானதுமல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
மற்றத் துறைகளுக்கும் காவல் துறைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் பார்த்தாக வேண்டும். . . .

(முற்பகல் 10-40)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் காவல் துறையை சந்தேகக் கண்கொண்டு பார்க்கவில்லை. தவறான கண்ணோட்டத்தோடும் சந்தேகக் கண்ணோட்டத்தோடும் நான் பார்ப்பதாக அவர் சொல்வதை நான் மறுக்கிறேன். அது மட்டுமல்ல, கொள்கை விளக்கக் குறிப்பிலே கொடுத்துள்ளவை பற்றி என்னுடைய கருத்துக்களை நான் சொன்னேன். அது இந்தக் காவல் துறைக்கும் அரசுக்கும் உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான் சொன்னேனே தவிர யாரையும் எந்தக் கண்ணோட்டத்துடனும் பார்க்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* *

**திரு. செ. ஆறுமுகம்:**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும்? இது பாயின்ட் ஆப் ஆர்டர், இல்லை. இது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. செ. செம்மலை:** சமுதாயம் என்று நான் சொல்வது தமிழ்ச் சமுதாயத்தைக் குறிக்கும் (குறுக்கீடு) ஒட்டுமொத்தமாக தமிழ்ச் சமுதாயத்தைக் குற்றம் சொல்வதாக திரு. ஆறுமுகம் எடுத்துக் கொள்ளக்கூடாது. தமிழ்ச் சமுதாயத்திலே உள்ள சில சந்தேகப் பிராணிகளைத்தான் நான் சொன்னேனே தவிர ஒட்டுமொத்தமாகச் சொல்லவில்லை. உறுப்பினர் திருமதி யசோதா அவர்களும் கூட போலீஸ் துறையைப் பற்றிய சந்தேகத்தை விட்டுவிட்டிருப்பார்களானால் நான் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். ஒன்றை நாம் இங்கே

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

பேசுகின்றபோது உணர்ந்து பார்க்கவேண்டும். மற்றத் துறைகளுக்கும் காவல் துறைக்கும் உள்ள வேறுபாட்டை நாம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மற்றத் துறைகளில் ஒரு தரப்பினர் மட்டுமே வந்து தனக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொள்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் காவல் துறையைப் பொறுத்தவரையிலும் எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் இரண்டு தரப்புகளும் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கும். அதிலே ஒரு தரப்பினருக்கு நியாயம் வழங்குகிறபோது இன்னொரு தரப்பினர் அநியாயம் இழைக்கப் பட்டுவிட்டதாக நினைக்கிறார்கள். அதே காரியத்தை மற்றத் துறை செய்திருந்தால் அப்படிப்பட்ட இழிசொல் அவர்களுக்கு வருவது இல்லை. இப்படி இருக்கிற நிலைமைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். மதிப்பிற்குரிய சி.பி.ஐ. முன்னாள் டைரக்டராக இருந்த திரு. சி. வி. நரசிம்மன் ஒரு பேட்டியிலே ஒரு கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். காவல் துறையினர் நல்லதும் செய்கிறார்கள், கெட்டதும் செய்கிறார்கள். அவர்கள் செய்கிற கெட்ட விஷயத்திற்கு அதிகமாக பப்ளிசிடி கிடைக்கிறது. போலீசாருடன் நெருங்கிப் பழகியவர்களை விட மற்றவர்கள் மூலம் தெரிந்துகொண்டவர்கள் தான் மோசமான இமேஜை வைத்திருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நிலைமை அது முற்றிலும் உண்மையாக இருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது. இவ்வளவு பிரச்சினைகளிலும் தமிழகத்திலே இருக்கிற காவல் துறை மிகத் திறமையாக, பாரபட்சம் இல்லாத முறையில் செயல்பட்டு வருகிறது என்பதைப் பெருமையோடு எண்ணிப் பார்க்கவேண்டும். எப்போதுமே வெயிலில் இருந்தவர்களுக்குத்தான் நிழலின் அருமை புரியும் என்று சொல்வார்கள். வெளி மாநிலங்களிலே உள்ள காவல் துறையோடு நம்முடைய காவல் துறையை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது தான் நம்முடைய காவல் துறையின் சிறப்பு தெளிவாக விளங்கும். இன்றைக்கு அகில இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரையில் அமைதிப் பூங்காவாக இருக்கிற முறையிலே நம்முடைய காவல் துறை இருந்து வருகிறது என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். அதேபோல் வெளிநாடுகளிலேயே உச்ச கட்ட அளவில் வளர்ந்து இருக்கிற அமெரிக்க நாட்டில் உள்ள நியூயார்க் நகரில் கூட



மாலை 6 மணிக்கு மேல் யாரும் 5 டாலர்களுக்கு மேல் எடுத்துச் செல்லக் கூடாது என்ற உத்திரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இரவு நேரங்களிலே பெண்கள் பயமின்றி சென்றுவரக்கூடிய அளவுக்கு நிலைமை இருப்பது காவல் துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்பதை நிரூபிப்பதாக இருக்கிறது. டெல்லியிலே நடைபெறுகிற ஆசிய விளையாட்டுப் போட்டியா, தமிழ்நாடு காவல் துறையினர்தான் அழைக்கப்படுகிறார்கள். முன்பு இந்தியத் துணை ஜனாதிபதியாக இருந்த திரு. இதயதுல்லா அவர்கள் (குறுக்கீடு). . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம், நீங்கள் உட்கார்ந்து பேசுவது முறையல்ல.

திரு. செ. செம்மலை: துணைத் தலைவரவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் துணை ஜனாதிபதியாக இருந்த திரு. இதயதுல்லா அவர்கள்கூட தங்களுக்கு கார்டு டூட்டியாகத் தமிழ்நாட்டு போலீஸ்தான் இருக்க வேண்டும் என்று தமிழ்நாட்டுப் போலீசைத்தான் தங்களுடைய கார்டு டூட்டிக்கு வைத்துக் கொண்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்களுடைய மெய்க்காப்பாளராகத் தமிழ்நாட்டு எஸ்.பி. தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

சென்னை நகரத்தில் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தில்—என்றைக்கும் ரெவின்யூ டிபார்ட்மெண்ட் தான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்யும், ஆனால் அந்த நேரத்தில்— காவல் துறையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு சென்னை நகரத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களினுடைய பாராட்டுதலையும் பெற்றிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

போப்பாண்டவர் அவர்கள் சமீபத்தில் வந்தபொழுது கட்டுக்கடங்காத கூட்டத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாத அளவிற்குக் காவல் துறை பாதுகாப்பை வழங்கியது என்பதைப் போன்ற காவல் துறைக்குப் பெருமை சேர்க்கின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை என்னாலே சுட்டிக்காட்ட முடியு

தமிழகத்தை எடுத்துக் கொண்டால் Organised violence என்ற அளவுக்கு எந்த சம்பவமும் நடந்ததாகக் குறிப்பிட்டு நிச்சயமாகச் சொல்ல முடியாது.

உத்திரப் பிரதேசத்தில் சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளையர்களின் கூடாரமாக இருக்கிறது. ஆந்திராவில் முகமூடிக் கொள்ளைகள் நடக்கின்றன; டெல்லியிலே நடக்கின்றன; உத்திரப் பிரதேசத்திலே நடக்கின்றன. அங்கெல்லாம் அந்தக் கொள்ளைக்காரர்கள் ரூட் அவுட். செய்யப்பட்டதாக மாநில அரசுகளிடமிருந்து செய்திகள் வரவில்லை. அங்கே கொள்ளைக்காரர்கள் விடப்படுகிறார்கள் அல்லது தப்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்கள் தமிழகத்திற்கு வந்து காரியங்களைச் செய்கின்றபொழுது பிடிபடுகிறார்கள்; தண்டிக்கப்படுகிறார்கள் என்பதைத்தான் இன்றைக்கு வரலாறு நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், வடநாட்டுக் கொள்ளைக்காரர்கள் இங்கே வந்து கொள்ளையடித்தபொழுது, கொள்ளையடித்தவன் ஒரு இடத்திலே விட்டுச் சென்ற சாதாரண பீடித் துண்டை வைத்து, அதில் இருக்கின்ற லேபிலை வைத்து, அது எங்கே தயார் செய்யப்பட்டது, அந்தப் பீடி எங்கே தயார் செய்யப்பட்டது, எந்த மாநிலத்திலே தயார் செய்யப்பட்டது என்பதைக் கண்டுபிடித்து, அந்த மாநிலத்தைச் சேர்ந்தவரின் கை ரேகைகளை ஒப்பிட்டுப் பார்த்து, தமிழ் நாட்டில் திருடியவனை, கொள்ளையடித்தவனை வட நாட்டில் பிடித்த காவல் துறை தான் தமிழ்நாட்டுக் காவல் துறை என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் கூட மற்ற மாநிலக் காவல் துறையைவிட தமிழ்நாட்டுக் காவல் துறை தான் இன்றைக்கு சிறப்பாகச் செயல்பட்டு கொண்டு வருகிறது. இதற்குச் சில உதாரணங்களைக்கூட நான் சொல்ல விரும்புகிறேன்





1984 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் Crimes detected இதன் சதவீதம் 65.5 தமிழ்நாட்டில்; அதைப் போன்று 1985 ஆம் ஆண்டு குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்ட விழுக்காடு 69.8. ஆனால் அகில இந்திய சராசரி 50-க்கும் குறைவாகத்தான் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். properties recovered என்ற வகையில் களவு போன சொத்துக்களை மீட்பதில் அகில இந்திய சராசரி 40 விழுக்காடுதான்; ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அது 61.5 விழுக்காடாக இருந்து வருகிறது.

சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் களவு போன சொத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டதன் விழுக்காடு 78 என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதாவது வங்கி கொள்ளைகள் என்ற வகையில் பார்த்தால் நம்முடைய மரியாதைக்குரிய மத்திய அமைச்சர் Minister of State for Finance, அவர்கள் நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கின்றபொழுது சொல்கிறார், 1984 ஆம் ஆண்டு ஜூனிலிருந்து 1985 ஆம் ஆண்டு ஜனவரி வரையில் உள்ள 6 மாத காலத்திற்குள் இந்தியா முழுவதும் 50 வழக்குகள் Bank Robberies என்ற வகையில் நடந்திருக்கின்றன: ஆனால் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் தமிழ் நாட்டிலே அப்படிப்பட்ட ஒரு Bank Robbery என்ற அளவிற்கு சம்பவமோ அல்லது குற்றமோ நடைபெறவில்லை. இதை அவருடைய பதிலில் இருந்த புள்ளிவிவரங்கள் காட்டிக் கொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே குற்றங்களே நடக்கவில்லை, எப்படித் தமிழ் நாட்டினுடைய காவல் துறையினுடைய சாதனையாகும் என்று கூட இங்கே சிலபேர் கேட்கக் கூடும். ஆனால் எப்பொழுதுமே தந்தை கண்டிப்பானவராக இருந்தால் பிள்ளையும் கட்டுப்பாட்டோடு வளரும் என்று சொல்லுவார்கள். அதைப் போல தவறுகள் அதிகமாகச் செய்யாத இந்த தமிழ்ச் சமுதாயத்தினுடைய பண்பாட்டை நம்முடைய தமிழகக் காவல் துறை காப்பாற்றிக் கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் ஒரு படப்பாடல் மூலம் அன்றைக்கு வலியுறுத்தியதெல்லாம், "திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பது. ஆகவே, திருட்டை முழுவதுமாக ஒழிக்க முடியாது. ஆனால் அதைக் கட்டுப்படுத்த முடியும்; குறைக்க முடியும். சிறுபிள்ளைகள் விளையாடுவார்கள்; அப்பொழுது ஒருவன் ஓடி ஒளிந்து கொள்வான்; இன்னொருவன் அவனைக் கண்டுபிடிப்பான். ஆனால், கண்டுபிடிப்பவனை விட ஒளிந்து கொள்பவன் திறமையானவனாக இருந்தால் இவனால் கண்டுபிடிக்க முடியாது. காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு ஒரு கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு குற்றம் செய்கின்றவர்கள், குற்றங்களை புரிவதில் திறமையானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சைன்டிபிக் முறையிலே திருடிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறை ரெக்ரூட்மெண்ட் செய்கின்றபோது அதை மறுபரிசீலனை செய்து அந்தத் தேர்வு முறையை நீங்கள் மாற்றி அமைத்தாக வேண்டும். ஏனென்றால் இன்றைக்கு திருடர்கள் வெகு சாமார்த்தியமாக அந்தக் குற்றங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தேர்வு முறை செய்யும்போது, காவல் துறைக்கு ஆட்களை நியமிக்கும்போது குற்றவாளிகளை விட சாமார்த்தியமானவர்களை, திறமையானவர்களை தேர்ந்தெடுத்து, அந்தக் கண்டுபிடிப்புகளுக்கு சக்தி படைத்தவர்களாக அவர்களை உருவாக்கிவிட வேண்டும். அப்போதுதான், காவல் துறைக்கு கிடைத்துள்ள டி.ஜி.பி. ரவீந்திரன் போன்ற பல ரவீந்திரன்களை உருவாக்க முடியும். மோகன்தாஸ் போன்ற பல மோகன்தாஸ்களை உருவாக்க முடியும். கமிஷனர் தேவாரம் போன்ற பல தேவாரம்களை உருவாக்க முடியும். ஐ.ஜி. ஸ்ரீபால் போன்ற பல ஸ்ரீபால்களை உருவாக்க முடியும். இந்த ரெக்ரூட்மெண்டிலே நீங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். பள்ளிப் பருவத்திலிருந்து விளையாட்டு வீரர்களை தயாரிப்பதில் 'கேட்ச் தெம் யெங்' (Catch them young) என்று சொல்வார்கள். மாவட்டங்களில் கூட, காவல் துறையினர் போலீஸ் ஸ்கூல் ஆரம்பித்து சிறு வயதிலிருந்து அந்தத் துறையிலே பணியாற்ற விரும்புகிற ஆர்வம் உள்ளவர்களை சேர்த்து தயார் செய்தால் நன்றாக இருக்கும். எனவே தேர்வு



சென்னை-600 008. 136485

முறையை தயவுசெய்து மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஏற்கனவே நான் சொன்னதுபோல் இந்த நவ நாகரிக உலகத்திலே ஒயிட் காலர்ட் கிரிமினல்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். முன்பெல்லாம் குற்றவாளிகளை உருவத்தை வைத்தே தெரிந்து கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு சாதுரியமாக சைன்டிபிக் முறையிலே மிக நுட்பமாக அந்தத் திருட்டுக்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் காவல் துறையை குறையாகச் சொல்லவில்லை. இன்வெஸ்டிகேஷன் பவர் அவர்களுக்கு குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பீஹார் முன்னாள் ஐ.ஜி. சின்ஹா அவர்கள் ஒரு பேட்டியிலே சொல்கின்றபோது "பொதுவாக இப்போது காவல் துறைக்கு இன்வெஸ்டிகேஷன் திறமை அவ்வளவாக இல்லை" என்ற கருத்தை சொல்லியிருக்கிறார்கள். ஆட்களைத் தேர்ந்து எடுக்கும்போது பயிற்சி கொடுக்கும்போது நல்ல முறையிலே தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுக்க வேண்டும். இன்றைக்கு பி.டி.சி. பி.ஆர்.எஸ். போன்ற பயிற்சி பள்ளிகளில் பணிபுரிகின்ற இன்ஸ்பெக்டர்கள் விருப்பத்தோடு பணி புரிபவர்களாகத் தெரியவில்லை. அங்கே போட்டாலே பனிஷ்மெண்ட் என்று கருதுகிறார்கள். இங்கே கொடுக்கப்படுகின்ற சம்பளம்தான் அங்கேயும் கொடுக்கப்படுகிறது. எனவே பயிற்சி கொடுக்கும்போது அதில் ஆர்வம் உள்ளவர்களை தேர்ந்தெடுத்து, அதிக சம்பளம் கொடுத்து, அந்தப் பயிற்சி காலத்திலே இதுபோன்ற இன்வெஸ்டிகேஷன் முறைகளை எப்படி எப்படியெல்லாம் திறமையாக குற்றங்களை கண்டுபிடிக்க வேண்டும் என்பது பற்றிய பாடங்களையெல்லாம் பயிற்சி மூலம் சொல்லித் தருவது நல்லதாக இருக்கும். அந்த வகையிலே பயிற்சியை அளிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு காவல் துறையைப் பொறுத்தவரை பெரிய பெரிய குற்றங்களை கண்டுபிடிக்க உயிரையும் பணயம் வைத்து போராடி வெற்றி பெறுகின்ற காவல் துறையினர் சின்ன சின்ன பிரச்சனைகளில் பொது மக்களுடைய முகச் சுளிப்பிற்கு ஆளாகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. உதாரணமாக இந்த பெட்டிஷன் என்கொயரி, நான்-காக்னிசபுள்

[திரு. செ. செம்மலை] 1986 மே 5

அஃபன்ஸ் போன்றவை, பெட்டி கேசஸ், சிறு வழக்குகளை பதிவு செய்து முடிப்பதிலே சில தவறுகள் நடப்பதாகச் சொல்வதை நாம் யாரும் மறுக்க முடியாது. மனுக்கள் மீது விசாரணை என்று கூறி, இரு தரப்பினரையும் தனித்தனியாக காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரணை செய்வதில் பல தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இதனால் பொது மக்கள் மத்தியிலே போலீசினுடைய இமேஜ் குறைந்து விடுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, அன்-டச்சபிலிட்டி என்ற அந்த சட்டத்தின் கீழ் புகார் கொடுக்கும்போது, அதில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு இருப்பதை வரவேற்கிறேன். ஆனால் சில சமயம் அதை பழி வாங்குவதற்கு பயன்படுத்திவிடுகிறார்கள். அப்படிப் பட்ட புகார்கள் மீது அல்லது மனுக்கள் மீது விசாரணை செய்வதாக இருந்தாலும் சரி, மற்ற புகார்கள் மீது விசாரணை செய்வதாக இருந்தாலும் சரி என்னுடைய வேண்டுகோள் இந்த விசாரணையை காவல் நிலையத்தில் வைத்து நடத்தக்கூடாது. காவல் துறையில் விசாரணை நடப்பதால் தான், அதிகாரிகள் இப்படிப்பட்ட விமரிசனங்களுக்கு ஆளாகிறார்கள். எனவே சம்பவம் நடந்த இடத்திற்கு காவல் துறை அதிகாரியை அனுப்பி, பொது மக்கள் மத்தியிலேயே அந்த விசாரணையை நடத்தி அங்கேயே டிஸ்போஸ் செய்ய வேண்டும், பைசல் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட முறையை தயவுசெய்து கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு காவல் துறையில் ஆட்கள் அதிகம் இல்லை என்று கூட ஒரு குறைபாட்டைச் சொல்கிறார்கள். இன்றைக்கு ஆயிரம் பேருக்கு ஒரு போலீஸ் என்று நாம் கொள்கைக் குறிப்பிலே சொன்னாலும் கூட 80 ஆயிரம், 85 ஆயிரம் என்று மக்கள் தொகை இருக்கின்ற சரகத்தைக் கொண்டிருக்கிற ஒரு காவல் நிலையத்தில் 12 ப்ளஸ் 1, 11 ப்ளஸ் 1 என்ற வகையில் தான் காவலர்கள் இருக்கிறார்கள். அந்தக்



1986 மே 5] [திரு. செ. செம்மலை]

காவலர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். புதிய காவல் நிலையங்கள் ஆரம்பிப்பதை நான் வரவேற்கிறேன். புதிய ஆட்கள் எடுப்பதையும் நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே இருக்கின்ற பழைய காவல் நிலையத்துக்கு இன்னும் அதிகமான ஆட்களை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறு, சிறு வழக்குகளைப் பொறுத்தவரையில் அவற்றைப் பைசல் செய்வதற்கென்று ஒரு தனி அமைப்புக்கு விட்டால் கூட நல்லது என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் சென்ற முறை ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது தமிழ்நாட்டில் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை மீண்டும் அமைக்க இருக்கிறோம், அதுபற்றிப் பரிசீலிக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை கிராம அளவிலே அமைத்து அதற்கு சில அதிகாரங்களைக் கொடுத்து இப்படிப் பட்ட சிறிய வழக்குகளை அதாவது நான்-காக்னிசபிள் அஃபன்ஸ்-ஆக இருந்தாலும், பெட்டி கேஸஸ்-ஆக இருந்தாலும் அவற்றை எல்லாம் அந்தக் கோர்ட்கள் பைசல் செய்கிற, முடித்து வைக்கிற நிலைமையை உருவாக்க வேண்டும். அப்படிப்பட்ட தனி அமைப்பை அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் பொது மக்களுக்கும் பிரச்சினை தீரும்; காவல் துறைக்கும் சுமை குறையும்.

காவல் நிலையத்தைப் பொறுத்தவரையில் காவல் நிலையத்திலே பணியாற்றுகிறவர்களுடைய நடவடிக்கை பற்றிய ஒரு ஃபீட் பேக் காவல் துறை அதிகாரிக்குக் கிடைக்க வாய்ப்பு இல்லை. இன்றைக்கு ஒரு ஹெட் கான்ஸ்டபிள் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் அந்தக் காவல் துறையினுடைய இன்ஸ்பெக்டர் அல்லது சப்-இன்ஸ்பெக்டர் கான்ஃபிடன்ஷியல் ரிப்போர்ட்டை மேல் அதிகாரிகளுக்கு அனுப்புகிறார்கள். இன்ஸ்பெக்டர் பற்றிய கான்ஃபிடன்ஷியல் ரிப்போர்ட்டை டீ.எஸ்.பி. மேல் அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். டீ.எஸ்.பி. பற்றிய ரிப்போர்ட்டை எஸ்.பி. மேலே அனுப்பி வைக்கிறார். இப்படிப்பட்ட நடைமுறைதான் இருக்கிறது. இப்படிப்பட்ட நடைமுறையின் காரணமாக அனுப்பப்படுகின்ற அந்த ரிப்போர்ட் நிச்சயமாக பாரபட்சமான ரிப்போர்ட்டாகத்தான் இருக்கும் என்பது என்னுடைய கருத்தாகும்.

அதுபோல் பொது மக்களின் அபிப்பிராயம் என்ன, ஒரு காவல் நிலையம் எந்த அளவுக்குச் செயல்படுகிறது, காவலர்கள் எந்த அளவுக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி எல்லாம் ஆய்வு நடத்துவதற்காக ஒரு தனி அமைப்பு நிச்சயமாக இருக்க வேண்டும். பொது மக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டு ஆய்வு நடத்தி, அதன் மேல் நடவடிக்கை எடுத்தால்தான் அந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கக் கூடிய காவலர்களுக்கு நிச்சயமாக ஒரு எச்சரிக்கை விடுவதாக அது இருக்கும். அப்போதுதான் அவர்களுக்கு ஒரு மாரல் ஃபியர் நிச்சயமாக இருக்கும். அது பொது மக்களுக்கும் வசதியானதாக இருக்கும், காவல் துறையின் சேவையும் நிச்சயமாக பொது மக்களுக்குக் கிடைக்கும். ஆண்டுக்கு இரண்டு முறை இப்படிப்பட்ட ஆய்வுகளைக் காவல் நிலையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகள், ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகள் ஆகியோர் செக்யூரிட்டி பீரோ என்ற அமைப்பை அமைத்துக் கொண்டு, தனியார்கள் பாதுகாப்புக்கு ஆட்களை அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை அமைத்து வருகிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் அவர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஏன் இதை அரசாங்கம் ஆரம்பிக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். திருவிழாவாக இருந்தாலும் சரி, திருமண வைபவமாக இருந்தாலும் சரி, அந்தந்த சரகத்தில் இருக்கிற காவல் நிலைய அதிகாரிகள்தான் பாதுகாப்புக்குச் செல்கிறார்கள். அப்படிச் செல்வதன் காரணத்தால் அவர்களுடைய பணிகள் பாதிக்கப் படுகின்றன. அவர்கள் இல்லாத அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு குற்றங்கள் அதிகமாக நடைபெற வாய்ப்பு இருக்கிறது. எனவே இப்படிப்பட்ட ஒரு அமைப்பை அரசே அமைத்தால் நல்லது. செக்யூரிட்டி கார்ப்பரேஷன் என்ற அமைப்பை அமைத்து அதிலே ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகளைத் தலைவராகப் போட்டு ஓய்வு பெற்ற காவல் துறை அதிகாரிகளையும்,! ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களையும்



வைத்து இப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்தால் நியாயமான ஊதியமும் கிடைக்கும்; பொது மக்களுக்கும் வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், நானும் நீங்களும் சட்டக் கல்லூரியில் படிக்கிற காலத்திலே Ignorance of Law is no excuse என்று படித்திருக்கிறோம். இன்றைக்கு சட்டங்களை மீறுபவர்களுக்குத் தண்டனை உண்டு. ஆனால் சட்டங்களைப் பற்றிய மக்களுக்கு சில நேரங்களில் தெரிவதில்லை. எவ்வளவோ சட்டங்களை இந்த மன்றத்தில் நாம் போடுகிறோம். ஆனால் அவை மக்களுடைய பார்வைக்கு வருவதில்லை என்பது தான் என்னுடைய கருத்து. மனித வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டங்களைப் பற்றி மக்கள் தெரிந்துகொள்கிற வகையில் பள்ளிகளின் பாடத் திட்டங்களோடு சேர்த்து அந்த வகையில் அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்துவது நல்லதாக இருக்கும்.

(முற்பகல் 11-00)

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் வரதட்சிணை பற்றிச் சொன்னார்கள். வரதட்சிணைக் கொடுமையால் ஏற்படும் கொலைகள் இந்தக் காவல் துறைக்கு ஒரு சவாலாகவே இருந்து கொண்டிருக்கிறது என்ற அவர்களுடைய கருத்தோடு என்னுடைய ஒரு கருத்தையும் நான் இணைத்துச் சொல்ல விரும்புகிறேன். இதற்கெல்லாம் நடந்த பிறகு பரிகாரம் தேடுவதை விட ஆரம்பத்திலேயே எப்படித் தடுப்பது என்பதைப் பற்றி காவல் துறை யோசிக்க வேண்டும். எனவே எனது ஒரு யோசனையாக நான் சொல்ல விரும்புவது, அனைத்துத் திருமணங்களையும் கட்டாயமாக, அத்தாட்சி பெற்ற ஒரு அதிகாரியிடம் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்கின்றபோதே வரதட்சிணை சம்பந்தமாக இருக்கின்ற பிரச்னையை அங்கேயே தீர்த்துவிட முடியும். அதற்குப் பிறகு ஏற்படுகின்ற சம்பவங்கள் போன்றவற்றை காவல் துறையினர் கண்காணித்து அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். ஆகவே எல்லாத் திருமணங்களையும் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற நிலைமையை உருவாக்க வேண்டும்.

இறுதியாக நான் முடிக்கும் முன், தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில், அதனை விட்டு விடக் கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் இது மக்களோடு தொடர்பு இல்லாத ஒரு துறையாக இருந்து கொண்டிருக்கிறது. பொது மக்களுக்கு, தீ விபத்து திடீரென்று ஏற்பட்டால் அந்தத் தீயை அணைக்க முன்னெச்சரிக்கையாக எப்படி எப்படி செய்ய வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து இந்தத் துறை பயிற்சி அளித்தால் நல்லது. அல்லது அப்படிப்பட்டப் பயிற்சி முகாம்களையாவது ஆங்காங்கே நடத்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் எங்காவது விபத்துக்கள் ஏற்பட்டால், அந்தப் பகுதியைப் பற்றிய தன்மைகளை அந்தத் தீயணைப்புத் துறையினர் முன்பாகவே தெரிந்து வைத்துக் கொள்ளக் கூடிய ஒரு சூழ்நிலை காணப்படுவதில்லை. அதற்கென்று ஒரு ஆக்ஷன் பிளான் என்ற வகையில் ஒரு முன் நடவடிக்கை குறிப்புகள் அவர்களிடத்தில் இல்லை. அந்தந்த நகரத்தில் உள்ள குடியிருப்புகளில் எங்கெங்கே தீ விபத்துக்கள் அடிக்கடி ஏற்படும், அதற்குரிய சாத்தியக் கூறுகள் எங்கெங்கே இருக்கின்றன என்பதை ஸ்டடி செய்து, எப்படி எப்படி அதனைக் கட்டுப்படுத்த வேண்டும், எந்தெந்த இடத்திற்கு என்னென்ன சாதனங்களை இயந்திரங்களை எடுத்துச் செல்ல வேண்டும், எந்த எந்த இடங்களிலே வண்டிகளை நிறுத்த வேண்டும். எந்தெந்த இடங்களிலே தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டும். எந்த எந்த இடங்களிலே தீ பரவாமல் தடுக்க வேண்டும் என்பனவற்றையெல்லாம் முன்னதாகவே விவரங்களைச் சேகரித்து, குறிந்த இடங்களில் சர்வே செய்யப்பட்டு ஒரு ஆக்ஷன் பிளான் தயாரித்து, அதன்படி நிர்வகிக்கச் செய்தால் தீ விபத்து ஏற்பட்டவுடன் உடனடியாக வண்டி அங்கே விரைந்து சென்று தீயை அணைக்க உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொண்டு, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடம் நான் சென்ற முறை ஒரு வேண்டுகோளை வைத்திருந்தேன்.





என்னுடைய தொகுதியில் தாளசம்பட்டியில் ஒரு காவல் நிலையத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டிருந்தேன். அதை கவனத்தில் வைத்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் அங்கே காவல் நிலையத்திற்கான கட்டடம் ஒன்றைக் கட்டி வருகிறார்கள். எனவே இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் இனிமேல் காவல் துறையின் பிரிவோ, தீ அணைப்பு நிலையமோ ஆரம்பிப்பதற்கு கோரிக்கைகள் இடமே இல்லை. அப்படி அந்த அளவிற்கு, கோரிக்கைகள் வைத்தால் தான் காரியங்கள் ஆற்றப்படும் என்ற நிலை இல்லாது, தாய் உள்ளத்தோடு எல்லா இடங்களிலும் காரியங்களை ஆற்றி, திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். அப்படிப்பட்ட மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளையும் வரவேற்று, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் மற்றத் துறைகளிலே பேசுகிறபோது பாலிசி நோட் என்றும் டிமாண்ட் என்றும் குறிப்பிட்டு பேசுகிறோம். ஆனால் இந்தக் காவல் துறையைப் பொறுத்தமட்டில் ஃபையர் சர்வீஸ் டிமாண்ட் என்றும், போலீஸ் டிபார்ட்மெண்ட் டிமாண்ட் என்றும் சொல்லாமல், ஒரு "ரெவ்யூ" என்ற முறையில் ஒரு ஆய்வே செய்கிறோம். கடந்த காலங்களில் எல்லாம் எப்படி இந்தக் காவல் துறை பணி ஆற்றியிருக்கிறது என்பதற்கு இங்கே ஒரு ஆய்வையே நடத்திக் கொண்டிருக்கிறோம். அத்தோடு கோரிக்கையாகவும் வைத்து, அந்தத் துறையின் செலவிற்கு தேவையான பணத்தை ஒதுக்கித் தருகிற வழியிலும் ஏற்பாடுகளைச் செய்கிறோம். ஆகவேதான் அதை ரெவ்யூ என்று சொல்ல வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

நான் இதிலே முதலிலே சொல்ல விரும்புவது, இந்த ரெவ்யூவை படித்துப் பார்த்த போது இதிலே உண்மைகள் நிரம்ப இருக்கக்கூடும் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் சென்னையிலே நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி படிக்கும்போது, சென்னையிலேயே இருந்து கொண்டு, அதை நேரில் பார்த்து

வந்த எல்லைப் போன்றவர்களுக்கு, ஒரு சமயம் இதில் கொடுத்திருக்கும் எல்லா செலவுக்களுமே அப்படித்தானோ என்றுதான் எனக்குத் தெரியவில்லை.

உதாரணத்திற்கு பெரிய மீனவர் குப்பாக்கம் ஆகிய மெரினா மீனவர் குப்பாக்கம் கூட்டிருக்கு முழு பொறுப்பும் போலீஸ் அதிகாரிகளுடையது தான் என்று நான் எண்ணமாட்டேன். அதற்கும் அதில் பொறுப்பு உண்டு. ஏனென்றால் ஒரு பகுதி காலமாக காவல் துறையினர் அதன் சங்கங்களை கண்டறிந்தனர். மீனவர்களுடைய வயிற்றெரிச்சலையும் வாங்கிக் கொண்டு அவர்களை பணியாற்றி வந்தார்கள். ஆனால் ஆக அந்த ஒரு பகுதி காலமாக அந்தப் பிரச்னைக்கு தீர்வு காணாமல் இருக்கவே, அதில் 6 பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள் என்ற அளவுக்கு பிரச்னையைக் கொண்டு சென்றதால் போலீசாரும் கடுமையான நடவடிக்கையை மேற்கொண்டார்கள். அதற்கும் இந்த அரசுதான் காரணம் என்ற குற்றச்சாட்டை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது.

ஒரு மாநிலத்தின் காவல் துறையும், தீ அணைப்புத் துறையும் சரியாக முறையாக இயங்க வேண்டுமானால் அதற்குத் தேவையான அத்தனை சாதனங்களையும் சேகரித்துக் கொடுத்து, உரிய நேரத்தில் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றிட வேண்டும். ஏனென்றால் மற்றத் துறைகளைப் போன்றது அல்ல இந்தத் துறை. எனக்கு முன்பு பேசிய ஆளும் கட்சியைச் சார்ந்த அருமை சகோதரர் ஒருவர் கூட, அவர்கள் செய்கிற நல்ல காரியங்களை யாரும் பாராட்டுவதே இல்லை. ஆனால் செய்கின்ற தவறுகள் மட்டும் உடனே பேசப்பட்டு வருகின்றன என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட துறை அது. மற்ற துறைகளைப் போன்றது அல்ல அந்தத் துறை. மக்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கின்ற ஒரு பொறுப்பு, உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய ஒரு பொறுப்பு அந்தத் துறைக்கு இருக்கிறது. மற்றத் துறைகளுக்கு கிடையாது. பயர் சர்வீஸுக்கு வேண்டுமானால், விபத்து ஏற்படும்போது அந்தப் பொறுப்பு இருக்கலாம், மற்றவைகளுக்கு கிடையாது. அதனால் தான் சிறு தவறு நடந்து விட்டாலும் அது மிகைப்படுத்திப் பேசப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதுமட்டுமல்ல, நம்முடைய காவல் துறை மானியத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு வாக்குறுதியை, உறுதிமொழியைத் தந்தார்கள்: வெளியூரில் பார்க்கிறபோது பல்வேறு பகுதிகளில் காவல் துறையினர் சமூக விரோதிகளை, குற்றவாளிகளை கைது செய்யப் போகிறபோது குற்றவாளிகள் அவர்களை கத்தியால் குத்துவது போன்ற நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன. ஒரு கான்ஸ்டேபிள் நெஞ்சிலே பலமுறை குத்தியிருக்கிறான். அதிலேயிருந்து காவல் துறையினரைப் பாதுகாக்க வேண்டுமென்றால் அதற்குரிய ஆயுதங்களைக் கொடுக்க வேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு முதலமைச்சர் அவர்கள் 1984 ஆம் ஆண்டு காவல் துறையினருக்கு துப்பாக்கி வழங்கப்படும் என்று சொன்னார்கள். வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழக காவல் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

நாமெல்லாம் சென்னையில் இருக்கிறோம். 1984 ஆம் ஆண்டில் போலீஸ் மானியக் கோரிக்கையின்போது முதலமைச்சர் பேசியதை சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். சென்னை நகரில் இரவு ரோந்துப் பணிக்காக தற்போது பணிபுரியும் 350 முன்னாள் இராணுவத்தினரைத் தவிர கூடுதலாக 250 முன்னாள் இராணுவத்தினர் பகலில் நடக்கும் குற்றங்களைத் தடுப்பதற்கென நியமிக்கப்படுவார்கள். இதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு 9 லட்சம் ரூபாய். தற்போது முதலமைச்சர் அவர்கள் இந்த அரிய கருத்தைத் தெரிவித்தார்கள். நாங்கள் அறிந்த வரையில் சென்னை மாநகரத்தில் முன்னாள் இராணுவத்தினர் ரோந்து வருகிறார்களா என்றால் இல்லை. அப்படி வருகிறார்கள் என்றால் என்னுடைய தொகுதியில் 20 பேர்களாவது வந்து கொண்டிருக்க வேண்டும். பகலில் 10 பேர்களாவது வர வேண்டும். அப்படி வருகிறார்களா? தொகை ஒதுக்கியாகி விட்டது. முதலமைச்சர் இதே மானியத்தில் பேசுகிறபோது அறிவித்தாகிவிட்டது. இந்த மூன்றாண்டுகளாக முன்னாள் இராணுவத்தினரை எங்களால் பார்க்க முடியவில்லை. கூர்க்காக்களைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இரவு நேரத்தில் ரோந்து வருவதற்காக பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே இப்படி அறிவிப்பாக காவல்

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 மே 5

துறையினருக்கு வேண்டியதைச் செய்கிறேன் என்று சொல்லி விட்டு போதிய வசதி செய்யாத காரணத்தால் தான் இந்தத் துறை பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறது.

அதேபோல நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்னொரு அறிவிப்பையும் செய்தார்கள். என்ன தெரியுமா? முகமூடி கொள்ளையர்கள் அதிகமாகி விட்டார்கள். ஆகவே அவர்களைப் பிடிப்பதற்காக துறையில் இருக்கிற ஆயுதங்களோ, வாகனங்களோ போதுமானதாக இல்லை. அவை சரியானவையாக இல்லை. பணிகளை துரிதமாக சோபிஸ்டிகேடட் முறையில் செய்வதற்கு எலிகாப்டர் வாங்கப்படும் என்று கூட அறிவிப்பு செய்தார்கள். நடந்ததா, எத்தனை எலிகாப்டர்கள் வாங்கப்பட்டன என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் தமிழ்நாடு காவல் துறையினருக்கு யூனிபாரம் வழங்கப்படும் என்று 1984 ஆம் ஆண்டில் அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்ததை அப்படியே படிக்கிறேன். தமிழ்நாடு சிறப்பு காவல் படையினர் பிரிவில் பணியாற்றுபவர்களுக்கு மட்டும் ஆண்டிற்கு இரண்டு செட் உடைகள் வழங்கப்படும். இயற்கைச் சீற்றங்களைப் பொருட்படுத்தாமல் பணிபுரியும் காவலர்களுக்கு, சார்நிலை அதிகாரிகளுக்கு அந்தந்தப் பணிகளில் ஈடுபடும்போது மழை கோட்டும், கம்பூட்ஸ்களும் குறிப்பிடப்பட்டவர்களுக்கு முதல் கட்டமாக ரூபாய் 7.50 இலட்சம் செலவில் வழங்கப்படும். அவை வழங்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன். ரெவியூவில் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பழைய காட்டன் துணி என்றால் அது சீக்கிரத்தில் நைந்து விடுகிறது. ஆகவே டெரி காட்டன் துணியாக வழங்க உத்தேசித்திருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. அது அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ ஒருசில இடங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்கு கூட மதுரையில் இதுகுறித்து விசாரித்தேன். பல ஆண்டுகளாக யூனிபாரம் வழங்கவில்லை என்று சொல்கிறார்கள். சென்னையிலும் அப்படி. அங்கொன்றும் இங்கொன்றுமாக வழங்கியிருக்கிறீர்கள். அதை எப்படி வழங்கியிருக்கிறீர்கள்?



1986 மே 5] [திரு. ப. பொன்னுரங்கம்]

5 அடி 6 அங்குலம் இருப்பவர்களுக்கு 5 அடி 3 அங்குலத்தில் சட்டை, ட்ரவுசர்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதைப் போட்டுக் கொண்டால் மேலே தூக்கி விடுகிறது. இப்படி பெரியதாகவும், சிறியதாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அவர்களின் கோரிக்கை என்னவென்றால் ஒன்று துணியாகக் கொடுத்து தைத்துக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். அல்லது பணமாகக் கொடுத்து யூனிபாரம் ப்ராட்யூஸ் பண்ண வேண்டுமென்று உத்தரவிட வேண்டும். அதுதான் வசதியாக இருக்கும். ஆகவே அந்த முறையில் அவர்களுக்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, காவல் துறையில் அப்பாய்ன்ட்மென்ட்ஸ் கூட முறையாக செய்யவில்லை. இந்த ரெவியூவில் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. *I.P.S. Cadre Post on:*

**"However, the 13 candidates allotted for the year 1982-83. . .** எப்போது அப்பாய்ன்மெண்ட் நடக்கிறது தெரியுமா? 1982-83-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு, அந்த அதிகாரிகளுடைய அப்பாயின்ட்மெண்ட் நடந்தது 1985-ல். They were appointed in 1985. அப்பாய்ன்மெண்டிலே டிலே அப்படிப்பட்ட நிலை. 1979-80, மற்றும் 1982 ஆகிய கால கட்டங்களில் எஸ்.ஐ. செலக்சனை நாம் நடத்தினோம். 1 வருட காலமாக அவர்களுடைய சர்டிபிகேட்டை வாங்கி வைத்துக் கொண்டு இருந்தோம். அதற்குப் பிறகுதான் திருப்பித் தந்தார்கள். ஆனால் அப்பாயின்ட்மென்ட் நடந்ததா என்றால், இல்லை. 1984-லே செலக்சன் வைத்தோம். இந்த 1984 செலக்சனுக்கு எல்லோரும் வந்திருந்தார்கள். 1985-லே ரிட்டன் டெஸ்ட் கூட வைத்தோம். ஆனால் இதுவரைக்கும் அந்த இன்ஸ்பெக்டர்களுக்கான அப்பாயின்ட்மென்ட்டைக் கொடுத்திருக்கிறார்களா என்றால், இல்லை. இப்படி இருக்குமானால் எப்படி இந்தத் துறை சரியாக, முறையாக இயங்கும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 மே 5

மேலும் வெளியிலேதான் இப்படிப்பட்ட நிலைமை என்று பார்த்தால், உள்ளேயும் இந்தமாதிரி நிலைமைதான் இருந்து கொண்டு இருக்கிறது. கடந்த ஆண்டுக்கு முன்பு என்று கருது கிறேன். டிபார்ட்மெண்ட் டெஸ்ட் என்ற பெயரில், டிபார்ட்மென்டில் உள்ள குவாலிபைட் பெர்சன்களுக்கு எஸ்.ஐ. போஸ்டுக்காக அவர்களை செலக்ட் பண்ணுவதற்காக அழைக்கிறார்கள். அவர்களும் வருகிறார்கள். செலக்சனும் முடிகிறது. ஆனால் அப்பாயின்ட்மெண்ட் உண்டா என்றால், ஓர் ஆண்டுக்காலமாக இல்லை. எனவே வெளியிலே பார்த்தால்தான் இப்படிப்பட்ட மோசமான நிலைமை இருக்கிறது என்றால் உள்ளேயும் இதே கதைதான். ஆகவே இந்த நிலைமையில் இந்தத் துறை இயங்கிக் கொண்டு இருப்பது வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாகும்.

நான் ஒன்றிரண்டு சம்பவங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1985—86ல் நடைபெற்ற சம்பவங்களை மட்டும் சொல்ல வேண்டுமென்றால் நிரம்ப இருக்கிறது. ஆகையினாலே ஒன்றிரண்டு சம்பவங்களை மட்டும் நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அமைச்சருடைய ஆய்வு உரையில் பயங்கரமான 'sophisticated method is being adopted by the Police department' என்று இருக்கிறது. அப்படி இருக்கின்றபோது, இந்த துறையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக நாட்டிலே இப்படிப்பட்ட குற்றங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. குற்றங்கள் ரோட்டிலே நடைபெறுகின்றன. வீட்டிலே நடைபெறுகின்றன; தெருவிலே நடைபெறுகின்றன; கல்யாண வீட்டில் நடைபெறுகின்றன. ஆனால் இந்தக் குற்றங்கள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறதா என்றால் இதுவரைக்கும் நான் அறிந்தவரையில் இல்லை. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் ஒன்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

ஒரு அம்மையார் பட்டதாரியானவர். அவருடைய செயின் திருட்டுப் போகிறது. மயிலைப் பகுதியில், அவர்கள் போலீஸ் ஸ்டேசனிலே கம்ப்ளெயின்ட் செய்கிறார்கள், என்னுடைய செயின் திருடு போய்விட்டது என்று. ஆனால் கம்ப்ளெயின்டை பதிவு செய்துவிட்டு, காவல்துறை, இதுநாள் வரையில் கிட்டத்தட்ட 6 மாதங்கள் ஆகின்றன. எந்தவிதமான



1986 மே 5] [திரு. ப. பொன்னுரங்கம்]

நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. எனக்கு பக்கத்திலே இருக்கின்ற உறுப்பினர் செல்வராஜ அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அணுகி ஐயா, இப்படி ஒரு சம்பவம் நடைபெற்றிருக்கிறது. நீங்கள் உரிய நடவடிக்கையை, துரித நடவடிக்கையை எடுக்க ஏற்பாடு செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டும் கூட, 2, 3 மாதங்கள் ஆகியும் கூட மக்கள் பிரதிநிதியே சென்று முறையிட்டும் கூட, அந்தக் காரியம் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

அதுமட்டுமல்லாமல், செங்கற்பட்டு மாவட்டத்தில் திருக்கழுக்குன்றத்திற்குப் பக்கத்தில் இருக்கிற செட்ராஸ் என்ற பகுதியில் இரண்டு பிரிவினருக்கு, அதாவது மீனவர்களுக்கும் மீனவர் அல்லாதவர்களுக்கும் ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக வழக்கு பதிவு செய்யப்படுகிறது, இது 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு இப்போதுதான் எனக்கு தகவல் தெரிவித்து இருக்கிறார்கள். என்ன என்று வழக்கு பதிவு செய்கிறார்கள், வழக்குக்கு மீனவர்கள் மட்டும் சென்று வருகிறார்கள் 2, 3 வருடமாக, அவர்கள் வருவதில்லை. என்னிடம் முறையிட்டார்கள். கலவரம் என்றால் இரண்டு தரப்பார்களும் வருவார்கள். ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை, அவர்கள் வரவில்லை என்று என்னிடம் சொன்னார்கள். நான் சார்ஜ் சீட்டை வாங்கி பார்க்கிறபோது, அங்கே இருக்கிற காவல் துறை ரொம்ப அருமையாக வழக்கு தொடுத்து இருக்கிறது. எப்படி இருக்கிறது என்றால், 2 குரூப்புகளைச் சார்ந்தவர்கள் சண்டை போட்டுக் கொண்டால், ஒரு குரூப்பை சாட்சியாகவும், இந்த மீனவர்களை குற்றவாளியாகவும் ஆக்கி, வழக்கு போட்டு இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. ஆகவே இதுபோன்ற முறையில் காவல்துறை முறைகேடாக நடப்பதை கண்டிக்காமல் இருக்க முடியாது. ஆகவே போலிஸ் துறையினுடைய அணுகு முறை எப்படி இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அண்மையிலே ஒரு சம்பவம், 7, 8 நாட்களுக்கு முன்புதான் நடைபெற்று இருக்கிறது. உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டிய காவல்துறை உயிரை வாங்குகிறது. காவல் துறை லாக்கப்பிலே தூக்குப் போட்டுக் கொள்கிறான். கொளுத்திக் கொள்கிறான் என்றால் உங்களுடைய அணுகு முறையினாலே, அவன் தூக்குப் போட்டுக் கொண்டான், அவன் கொளுத்திக் கொண்டான். இப்படிப்பட்ட சம்பவங்கள் பல்வேறு இருக்கின்றன. என்னிடம் தகவல் இருக்கிறது. அவைகளை எல்லாம் சொல்ல வேண்டும் என்றால், நேரம் இல்லை. ஒரு Postman by name Mohan attached to Teynampet Post office burnt himself to death on Sunday because of false implication in a Police case அவன் செய்த தவறு 2 ஆயிரம் மதிப்புள்ள ஒரு டி.டி. 'அன்ரிஜிஸ்ட்டர்ட்' போஸ்ட்டிலே வந்திருக்கிறது. தவறுதலாக அதை ஒருவனிடம் தந்துவிட்டான், அவன் அதை எடுத்துக் கொண்டு போய் 'என்கேஷ்'—பணமாக்கி விட்டான். பிறகு, எனது 'டிராப்ட்' போய் சேரவில்லை என்று 'சென்டர்' ஒரு கம்ப்ளைன்ட் கொடுக்கிறார். அந்த கம்ப்ளைண்டை எடுத்துக் கொண்டு, போலீஸ் நடவடிக்கையின் மூலமாக வந்த விளைவு தான் இந்த மோகன் தற்கொலை செய்துகொண்டதற்கான காரணம். ஏனென்றால், இந்தக் காவல் துறையானது முறையாக அவனை அழைத்தோ, அல்லது சம்பந்தப்பட்டவர்களை அழைத்தோ அல்லது பணத்தை வாங்கியவனை அழைத்தோ விசாரணைசெய்து கேட்டிருப்பார்களேயானால் அவன் உணர்ச்சிவயப்பட்டிருக்க மாட்டான்; அவமானத்துக்கு ஆளாகிவிட்டோமே, கேவலப்படுத்தப்பட்டு விட்டோமே, திருடன் ஆக்கப்பட்டுவிட்டோமே என்ற வேதனை, இல்லையென்றால் அவன் செத்திருக்கமாட்டான் (குறுக்கீடு). இப்போதைய தகவல் அவன் அடித்துக் கொல்லப் பட்டிருக்கிறான். ஆக அந்தப் போலீஸினுடைய (குறுக்கீடு). . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தகவல் என்ன ஒரு நிமிடத்திற் குள்ளே திரும்ப வந்து விட்டதா? தற்கொலை என்று இப்போது தான் சொன்னார். இப்போது 2 வினாடிக்குள்ளே எப்படி தகவல் வந்தது? புரிய வில்லை.





**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, பத்திரிக்கையிலே இருக்கக்கூடிய செய்தியை வைத்து, நம்பி, அது சரியாக இல்லை என்ற அபிப்பிராயத்திலே பேசுகிறார் கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த வேறு சிலரும் அந்த 'ஸ்பாட்'க்குச் சென்று, மனித உரிமைக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு). . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது அவரையே திசைதிருப்புகின்ற வகையிலே, அந்தக் கட்சியைச் சார்ந்த உறுப்பினரே சொல்வது சரியல்ல.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, சரியான தகவலைத் தருகிறோம்; அவ்வளவுதான்; முரண்பாடு அல்ல. தற்கொலை அல்ல, அடித்துக் கொல்லப் பட்டதற்கு போதுமான, நம்பத்தகுந்த காரணங்கள் இருக் கின்றன என்ற ஒரு கருத்தை, சமீபமாகக் கிடைத்த ஒரு புதியத் தகவலை கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். (குறுக்கீடு). . . .

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் இந்தச் சபையை நடத்துவதென்று. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து நீங்கள் அமருங்கள்; திரு. பொன்னுரங்கம் அவர்கள் பேசட்டும்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, திருட்டு எந்தமாதிரி யெல்லாம் நடைபெறுகின்றது? அது நம்முடைய இன்எஃபி சியன்ஸி தான். ஏனென்றால் காவல் துறை இருக்கக்கூடிய இடத்திலேயே காவல்துறை யூனிபார்மை போட்டுக் கொண்டு போய் கொள்ளை அடிக்கிறார்கள். இரண்டு மாதங்களுக்கு முன்னாலே விருத்தாசலத்திலே இதுமாதிரி ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. எப்படியென்றால், ஆந்திராவைச் சேர்ந்த அப்பனும் பிள்ளையும் மதுரைபோய் நகைகளை விற்று பணத்தைக் கொண்டு வருகிறார்கள். விருத்தாசலத்திலே, போலீஸ் உடையோடு சென்று, ரெயில்வே ஸ்டேஷனிலே அவர்

களை பிடித்து அவர்களிடமிருந்த பணத்தைக் கொள்ளையடித்திருக்கிறார்கள். ஒவ்வொரு ரயில்வே ஸ்டேஷனிலும் காவல் துறையினர் இருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது, அந்தப் பகுதியைச் சார்ந்த அதிகாரிகள்தானா என்று அங்குள்ள காவல்துறை அதிகாரிகளுக்குத் தெரியாதா? ஆக காவல்துறை பொறுப்பற்ற முறையிலே நடந்துகொள்கின்ற காரணத்தால்தான் இதுபோன்ற வருந்தத்தக்க சம்பவங்கள் எல்லாம் நடைபெறுகின்றன என்று என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

நான் இப்போது குற்றச்சாட்டுகளிலிருந்து, கோரிக்கைகளுக்கு வருகிறேன். முதலில் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு தனி குவாட்டர்ஸ் வேண்டும். போலீஸ் குவாட்டர்ஸில் தண்ணீர் இல்லை. நாம் எது சப்ளை செய்யாவிட்டாலும் பரவாயில்லை; குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். என்னுடைய தொகுதியிலே கூட குடிதண்ணீர் இல்லை. குப்பைக் கூளங்கள் ரொம்பிப்போய் கிடக்கின்றன. பில்டிங் எல்லாம் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளை ரிப்பேர் செய்வதும் கிடையாது. அந்தக் குப்பைகளையெல்லாம் எடுங்கள் என்று லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷனிடம் சொன்னால், இல்லை, இல்லை. அது பி.டபிள்யூ.டி.க்குச் சொந்தமான இடமென்று சொல்லிவிடுகிறார்கள். ஆக, இதுபோன்ற குறைபாடுகளையெல்லாம் நீக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் போலீஸ்காரர்களையெல்லாம் 24 மணி நேரம் 'மொபிலைஸ்' பண்ணுகிறார்கள். அந்த நேரத்தில் அவர்களுக்குச் சேர வேண்டிய படி, வேஜஸ் வழங்கப்படுவதில்லை. 24 மணி நேரம் காவல் துறையிலே வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு 7.50 காசு வழங்குவது என்ன முறை? மூன்று வேளை சோற்றுக்கு அது கொடுக்கப்படுகிறதா? இட்டிலி ஐந்து பைசாவா விற்கிறது? காபி என்ன 15 பைசாவா விற்கிறது? ஆக இது முறையல்ல. இதற்குப் பதிலாக One dav wages should be paid. இன்னும் சொல்லப் போனால், ஓவர் டைமாகக் கூட கொடுக்க வேண்டும். அந்த மாதிரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அந்த பேமெண்ட்கூட அடுத்த மாத சம்பளத்துடன் வருகிறதா என்றால் அதுவும் கிடையாது. 4, 5 மாதங்கள் கழித்துதான் வருகிறது. அவன் அதுவரைக்கும் என்ன பண்ணுவான்? கடன்பட்டு, அதற்குவேறு வட்டி கட்டிக்கொண்டிருப்பான். ஆக இந்த நிலைமைகளையெல்லாம் நீக்க வேண்டும். நாங்கள் சொன்னதைப்போல துணியாகவோ, பணமாகவோ தருவதுதான் நல்லது. இராணுவத்திலே பணியாற்றுகின்றவர்களுடைய பிள்ளைகளையெல்லாம் குவாட்டர்ஸிலிருந்து அழகாக பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். மத்திய சர்க்கார் நமக்கு வழிகாட்டுகிறது. ஆனால் போலீஸ்காரன் பிள்ளை, தொங்க தொங்க ஓடுவான். போலீஸிலே எத்தனையோ வண்டிகள் வாங்குகிறார்கள். இப்போதுகூட வண்டி வாங்கப் போவதாகச் சொன்னீர்கள். அந்தந்த பகுதிக்கு ஒரு வண்டி என்று வைத்து அந்த பிள்ளைகளை கொண்டு போய் பள்ளிகளில் சேர்க்க வேண்டும் என்ற உணர்வில் சொல்லுகிறேன். ஏன் என்றால் அப்போது தான் பொறுப்பு வரும். நம்முடைய அரசு நம்முடைய பிள்ளைகளை பொறுப்பு ஏற்றுக் கொள்கிறது. நம்முடைய பிள்ளைகளை படிக்க வைப்பதற்கு இந்தச் சலுகைகளை எல்லாம் செய்து தருகிறது நம்முடைய அரசு என்று நினைத்து இதற்காக பாடுபட வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் உருவாக்கவேண்டும் இது போன்ற காரியங்களில் எல்லாம். (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11-20)

அரசு விடுமுறை இல்லையாம். அவன்—போலீஸ்காரன்—மனிதன் இல்லையா? மற்ற டிபார்ட்மெண்டில் அரசு விடுமுறை இருக்கும்போது அவர்களுக்கு மட்டும் இல்லை என்றால் என்ன நியாயம்? தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது எந்த அரசில் இல்லாமல் இருந்தாலும் சரி, அதை இந்த அரசு செய்யவேண்டும். நீங்கள் தான் நல்ல அரசாங்கம் என்று சொல்லுகிறீர்களே.

அது மட்டும் அல்ல, கோவையிலிருந்து இங்கே போஸ்டிங், திருநெல்வேலியிலிருந்து இங்கே போஸ்டிங் போடுகிறார்கள். 6 மாதத்திற்கு ஒரு முறை, 3 மாதத்திற்கு ஒரு முறை தங்களுடைய பெற்றோர்களையோ, உற்றார் உறவினர்களையோ பார்க்க வேண்டும் என்றால் அவர்கள் வாங்குகிற சம்பளத்தில் காசு கொடுத்து போக வேண்டும் என்றால், இப்போது ரயில் ஃபேரும், பஸ் ஃபேரும் கட்டுப்படியாவது இல்லை. இதை

பரிசீலனை செய்து இலவசமாக அந்த காவல் துறையினருக்கு பால் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முன் மாதிரி கூட இருக்கிறது. நான் அறிந்த மட்டில் கேரளாவிலும், கர்நாடகாவிலும் இந்த முறை இருப்பதாக நான் அறிகிறேன். மற்ற துறைகளில் பின்பற்றாவிட்டாலும் கூட இந்த துறையிலாவது கேரளாவையும், கர்நாடகாவையும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஓய்வு பெற்றவர்களுடைய பிள்ளைகள் படித்து வருகிறார்கள். வேலை கிடைக்கவில்லை — இப்போது யாருக்கும் வேலை கிடைக்கவில்லை—அவன் ரிட்டையர் ஆகிவிட்டால் அந்த குடும்பத்தில் எல்லோரும் வேலை இல்லாதவர்களாக ஆகி விடுகிறார்கள். ஆகவே போலீஸ் துறையிலிருந்து ஓய்வு பெறுகின்றவர்களுடைய பிள்ளைகளுக்கு வேலையில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கூட ஓய்வு பெற்றவன்தான். சென்டிரல் கவர்மென்டிலிருந்து நான் ரிசைன் செய்து விட்டு 15 நாள் கழித்து போனேன். 24 ஆயிரத்து சொச்சம் பணத்தை உடனே கொடுத்து விட்டார்கள். ஆனால் நம்முடைய காவல் துறையில் 6 மாதம், 7 மாதம் ஆனாலும் கூட ரிட்டையர் ஆன பிறகு பணம் தரவில்லை. அதை எக்ஸ்பிடைட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதிலே ஒரு விநோதம் என்ன என்று சொன்னால் நமக்கு கொஞ்சம் ஸ்டேஷனரி கிடைக்கிறது. அந்த காவல் துறைக்கு ஸ்டேஷனரியே கிடையாது. 3 மாதத்திற்கு 15 பின் கொடுக்கிறார்கள். அது போதுமா? 3 மாதத்திற்கு 15 பின் தரப்படுகிறது. இங்கே நாம் புகார் தரப்போனால் நம்மிடம் பேப்பர் கேட்கிறார்கள். இந்த மாதிரியான இந்த சாதாரண வேலைகளை கட்டாயம் செய்ய வேண்டும். இந்த மாதிரி இருப்பதால் எந்த மனிதனுக்கும் வெக்ஸ் தான் வரச் செய்யும், அதிருப்தி தான் வரச்செய்யும், கோபம் தான் வரச் செய்யும். இதுபோன்ற சாதாரண குறைபாடுகள் களையப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுவும் இல்லாமல் எப்.ஐ.ஆர். தயார் செய்வதற்கு சின்ன கேஸ், பெரிய கேஸ் போன்றவைகளுக்கு தனித் தனியாக புத்தகங்கள் தேவை. அப்படி இல்லாமல் ஒட்டு மொத்தமாக போடுவதாக அறிகிறோம். அது முறை அல்ல,





சரி அல்ல, என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன் Sophisticated method ஆக இந்த துறை இன்னும் சிறப்பாக இருக்க வேண்டுமானால் — எல்லா துறைகளிலும் ஒரு தப்பைச் செய்கிறோம். இன்று காலையில் நானும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் மதுரையிலிருந்து வண்டியில் வந்தோம். மாம்பலத்தில் எங்கு பார்த்தாலும் குப்பையும் கூளமுமாக இருக்கின்றன. அவ்வளவு குப்பை கூளங்களை வைத்துக்கொண்டு நாம் Sophisticated method -ஐப் பற்றி பேசுகிறோம்.

இங்கே 'litter free zone' என்ற இடத்தில் பேப்பர்களை மிஷின் எடுத்துக் கொண்டு போகிறது. இங்கே மட்டும் பேப்பர்களை கார்ப்பரேஷனின் இன்ஜின் மோட்டார் வண்டிகள் எடுத்துக் கொண்டு போகிறது. ஆனால் அங்கே எல்லாம் குப்பையும் கூளமும் ரொம்பிப் போய் கொசுத் தொல்லை தாங்க முடியாத அளவுக்கு மாம்பலத்தில் இருக்கும் மக்கள் எல்லாம் இரவு எல்லாம் விழித்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த அளவுக்கு ஒரு கேவலமான நிலை இருக்கிறது. அதைப்போலத் தான் இந்த இலாக்கா குப்பையும் கூளமுமான சாதாரண விவகாரங்களை எல்லாம் வைத்து விட்டு Sophisticated method -ஐ நாங்கள் அடாப்ட் செய்கிறோம். Skull Evidence எடுப்பதில் இத்தனை சாதனை, F.I.R. போடுவதில் இத்தனை சாதனை, இந்த மாதிரி Sophisticated method -ஐ எல்லாம் அடாப்ட் செய்ய இன்ஜின் மிஷன் வாங்கியிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருப்பது முறை அல்ல, சரி அல்ல. அதுவும் தேவை, சாதாரண இந்த குப்பை கூளங்களாக உள்ள குறைபாடுகளை அகற்ற வேண்டும். ஆகவே இதுபோன்ற விவகாரங்கள் எல்லாம் ஏற்படுமானால் இவைகள் எல்லாம் முறையாக இல்லாத காரணத்தால் அடுத்து வருகின்ற நிதி ஆண்டில் முறையாக சீராக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நான் இப்போது எதிர்க்கிறேன். அடுத்த நிதி ஆண்டில் அது குறித்து பார்த்துவிட்டு அது குறித்து கருத்து கூறுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவருடைய காவல்துறை, தீயணைக்கும் துறையினுடைய

[திரு. தெ. பெருமாள்] [1986 மே 5

மானியக் கோரிக்கைகளை ஆதரித்துப் பேசுகின்ற வாய்ப்பை தந்தமைக்காக என்னுடைய நன்றியை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய காவல் துறையினர் எந்த அளவிற்கு சிறும் சிறப்புமாக, செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், எந்த அளவிற்கு நம்முடைய தமிழ்நாட்டில் குற்றங்கள் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் இங்கே எடுத்துக் கூறினார்கள்.

நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழகக் காவல் துறையினரை—மத்திய அரசின் கட்டுப்பாட்டிலே இருந்த பஞ்சாபிலே நடைபெற்ற ஒரு இனக் கலவரத்தின்போது, இங்கு இருக்கின்ற சிறப்புக் காவல் துறையினரை—அழைத்து, அங்கே திறம்படச் செயல்பட்டார்கள் என்று மத்திய அரசே பாராட்டுகின்ற அளவிற்கு தமிழக காவல் துறையினர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசப்படுகின்ற குற்றங்கள் விசாரிக்கப்படுகின்றபோது சில நேரங்களில் சில தவறுகள் நடைபெறுவது இயற்கை தான். இங்கே எனக்கு முன் பேசிய அருமை எதிர்க் கட்சி நண்பர்கள், அவர்களுக்குண்டான பாணியிலே இந்த காவல் துறையினர் சில நேரங்களில் சில குற்றங்களை கண்டு பிடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள்.

நான் உதாரணத்திற்கு ஒன்றைச் சொலல விரும்புகிறேன். மற்ற மாநிலங்களில் எல்லாம் முகமூடிக் கொள்ளைத் திருடர்கள் கொள்ளையடித்து நாட்டை சூறையாடுகின்ற நிலைமையில், இங்கே அந்தக் கொள்ளையர்களை திறம்பட, தீவிரமாக அடக்கி, இன்றையதினம் மக்கள் மத்தியில், இந்த பய உணர்வு இல்லாத அளவிற்கு காவல்துறை செயல்படுகின்றது என்பதை நிச்சயமாக நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, தமிழக அரசைப் பொறுத்தவரையில், எந்த இடத்தில் ஜாதிக் கலவரங்கள் மூண்டாலும் சரி, எங்கு மதக் கலவரங்கள் மூண்டாலும் சரி, அங்கே சென்று உடனடியாக தமிழகக் காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து முன்னெச்சரிக்கையாக வந்து, அதனை அடக்கி இன்றையதினம் திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



1986 மே 5] [திரு. தெ. பெருமாள்]

அதுமட்டுமல்ல, இன்றையதினம் எந்த அளவிற்கு வன்முறைகள் எங்கெங்கு நடைபெறுகிறதோ, அங்கெல்லாம் சென்று அதை ஒடுக்கிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கடையநல்லூர் தொகுதியில் எப்போதுமே சாதிக் கலவரங்கள் நடந்து கொண்டிருக்கக்கூடிய காட்சியை நாம் காண முடியும். இப்படிப்பட்ட சாதிக் கலவரங்களை தூண்டிவிடுகின்றவர்களை அடக்கி, நல்ல முறையில் செம்மையாக, இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், காவல்துறை அதிகாரிகள் அந்த அளவிற்கு, பாராட்டக் கூடிய அளவிற்கு இன்றையதினம், இதய தெய்வம் புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கி, காவல் துறையினர் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

சில நேரங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று இங்கே சொன்னார்கள். துப்பாக்கிச் சூடுகள் நடந்தன என்றும் சொன்னார்கள். உள்ளபடியே நாம் காவல்துறையினருடைய இடத்தில் இருந்து பார்த்தால், உண்மையிலே எந்த அளவிற்கு மனச் சங்கடம் ஏற்படும் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அந்த நிலையில்தான் இவர்கள் இருக்கிறார்கள். நாட்டையும் காப்பாற்ற வேண்டும், நாட்டு மக்களையும் காப்பாற்ற வேண்டும். அந்த அளவில்தான், நாட்டு மக்கள் அவர்கள் மீது ஒரு வெறி, கோபம் இருக்கக் கூடிய நிலையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். எனவே அதனை அடக்க பல நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். முதலில் தடியடி செய்கிறார்கள். தடியடிக்குப் பிறகு துப்பாக்கியை எடுக்கின்ற ஒரு துர்பாக்கியமான நிலை காவல் துறையினருக்கு ஏற்படுகிறது. அதையெல்லாம் தடுப்பதற்கு பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருக்கின்ற நாம் தான் உறுதுணையாக இருக்க வேண்டும். கலவரங்களைத் தூண்டி விடுவதில் ஈடுபடுகின்றவர்கள் உள்ள அந்தந்த இடங்களில் அதனை அளவிற்கு தடுத்து நிறுத்துவோமானால், நிச்சயமாக குற்றங்கள் பெருகாது. அதற்கு காவல் துறையினருக்கு நாம் உறுதுணையாக இருப்போம். அந்த அளவிற்கு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கக் கூடிய நாம் ஈடுபட வேண்டும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், தீயணைப்புப் படை ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீயணைக்கும் படைக்குரிய வண்டிகள் தாப்பட்டிருக்கின்றன. எங்கள் ஊரில் எப்போதுமே சாதிக் கலவரங்கள் அதிகபட்சமாக வருகிற நிலை இருக்கிற

[திரு. தெ. பெருமாள்] [1986 மே 5

காரணத்தினால் தீப்பிடிக்கும் சம்பவங்கள் ஏற்படுகிறபோது அதற்காக தண்ணீர் டாங்குகள் உள்ள தீயணைப்பு வண்டிகள் தேவைப்படுகின்றன. கடையநல்லூரிலே இருக்கிற அந்த வண்டி பாளையங்கோட்டை பொருட்காட்சிக்கு கொண்டு செல்லப்பட்டு விட்டது. நான் மாண்புமிகு துணைத் தலைவர் மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதிக்கு டாங்கு உள்ள வண்டியினைத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

என்னுடைய கடையநல்லூர் தொகுதியிலே சொக்கம்பட்டி என்ற கிராமத்திலே ஒரு ஓ.பி. காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையத்தை குற்றவாளிகளைப் பிடிக்கக்கூடிய முறையிலே தனிக் காவல் நிலையமாக ஆக்கித்தர வேண்டுமென்று நான் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு இந்த அளவுக்கு நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கின்றது. எனது தொகுதியிலே உள்ள அச்சன்புதூரில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அந்தக் காவல் நிலையம் இன்றைக்கு வாடகைக் கட்டிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அங்கே உள்ள காவல் நிலையத்திற்கும், காவல் ஆய்வாளருக்கும், காவலர்களுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்காக புதிதாக ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தக் காவல் நிலையத்தினைக் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள பொதுமக்களைப் பாதுகாக்கின்ற பணியை நம்முடைய காவல் துறை நன்கு நிறைவேற்றி வருகிறது. இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு சிறப்பாக பணிபுரிகிற காவல் துறையினருக்கு அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்காக அவர்களுடைய குடும்பங்களிலே இருக்கின்ற பெண்கள் சிறு சிறு தொழில்களைச் செய்யக்கூடிய முறையிலே அவர்களுக்காக கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்தி அவர்



1986 மே 5] [திரு. தெ. பெருமாள்]

களுடைய வாழ்க்கைத் தரத்தை அதன் மூலமாக உயர்த்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டால்தான் லஞ்சத்தை ஒழிக்கமுடியும். காவல் துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் நியாயமாக நடந்தாலும்கூட யாரோ ஒருவர் செய்கிற காரியத்தினாலே காவல் துறையை லஞ்சம் என்று சொல்லக்கூடிய நிலை, பொது மக்கள் மத்தியில் நிலவுகிறது. அதைப் போக்குவதற்காக அவர்களுடைய குடும்பங்களிலே உள்ளவர்களை உழைப்பிலே ஈடுபடச்செய்து லஞ்சம் என்ற பெயர் ஏற்படாத அளவுக்கு செயல்பட வேண்டும். அரசு செய்கிற பல திட்டங்களில் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையினர் மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி நண்பர் பேசியதைப்போல 24 மணி நேரமும் இந்த நாட்டுக்காக, இந்த நாட்டு மக்களுக்காக, இந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நல்லபல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வார்த்தை சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

கடையநல்லூரைப் பொறுத்தவரையிலே அதுபெரிய நகரம். அடிக்கடி அங்கே மதக் கலவரங்கள் ஏற்படுகிற சூழ்நிலை உருவாகக் கூடிய இடம். அங்கே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அலுவலகம் ஒன்று அமைத்துதரவேண்டும்.

அதோடு ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு ஜீப் கொடுக்க வேண்டும். ஒரு கிராமத்திலிருந்து ஒருவர் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விட்டுச் சென்று விடுகிறார். காவல் துறை ஆய்வாளர் தான் எப்படி அந்த இடத்திற்குச் செல்வது என்று தவித்துக் கொண்டிருக்கிறார். புகார் கொடுத்தவரிடமே பணம் பெற்று வண்டியை ஏற்பாடு செய்து அந்த இடத்திற்குச் செல்கிற நிலைமை இருக்கிறது. இதை லஞ்சம் என்று மற்றவர்கள் கூற வாய்ப்பு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்காக ஒவ்வொரு சர்க்கிளுக்கும் ஒரு ஜீப்பை கண்டிப்பாக அரசு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேசுகின்ற வாய்ப்பைக் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன். அண்ணா நாமம் வாழ்க. நன்றி, வணக்கம்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு** : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, தமிழகத்தினுடைய தலைவரெல்லாம் தலைவர் புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த அவையின் மூலம் தெரிவித்துக் கொள்வது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்ற பின்பு, இந்த ஆண்டு உலகத்தினுடைய கிறிஸ்தவ சமுதாயத்தினுடைய தலைவர் போப்பாண்டவர் அவர்கள் இந்தத் தமிழகத்திற்கு வந்தபொழுது சென்னையிலே இலட்சக்கணக்கான பொது மக்கள் கூடிய அந்த நேரத்தில் எந்தவிதமான அசம்பாவிதமும் இல்லாத வகையில் அவரை வரவேற்று, அவர் நாடடுக்குச் செல்கின்ற வகையில் ஒரு சீரிய, ஒழுங்கான பாதுகாப்பை இந்தத் தமிழகத்தினுடைய காவல் துறை கொடுத்து அயல்நாட்டிலிருந்து வந்த போப்பாண்டவர் அவர்கள்கூடப் பாராட்டுகின்ற வகையில் நல்லதொரு பாதுகாப்பை நம்முடைய காவல் துறை அளித்தது என்பது உலகத்திலேயே பெருமைப்படக்கூடிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்ற அந்த நேரத்தில், கிராமப்புறங்களிலேயெல்லாம் சட்டம்—ஒழுங்கைப் பாது காக்கின்ற வகையில், எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாவண்ணம் உள்ளாட்சித் தேர்தலில் பெருமை சேர்ந்த நம்முடைய தமிழகக் காவல் துறையைச் சார்ந்த அதிகாரிய பெருமக்கள் உரிய பாதுகாப்பை நல்கி, அந்தத் தேர்தலை முடித்துக் கொடுத்தார்கள்.

அதேபோன்று, பல்வேறு மாநிலங்களிலே முகமூடிக் கொள்ளையர்கள் அதிகமாக இருந்து பொது மக்களுடைய சொத்துக்களை அபகரிப்பது போன்ற காரியங்கள் நடந்தன. ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற இந்தக் காவல் துறை, சென்னை நகரத்தைப் பொறுத்த அளவிற்கு, தமிழ் நாட்டைப் பொறுத்த அளவிற்கு அதிகமான சம்பவங்கள் நடைபெறாவண்ணம் உரிய பாதுகாப்பைக்



கொடுத்து, காவல் துறையைச் சார்ந்த நண்பர்கள் உன்னிப்பாக இருந்து பொது மக்களைக் காத்திருக்கிறார்கள் என்று சொல்கின்றபொழுது உள்ளபடியே புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றிருக்கின்ற காவல் துறையை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

அதேபோன்று, பல்நெடுங்காலமாகத் திருப்பத்தூரிலும், தர்மபுரி மாவட்டத்திலும் நக்சலைட்டுகளின் தொல்லைகள் மக்கள் தூங்க முடியாத அளவிற்கு இருந்தது. கட்சி மாச்சரியம் அற்ற பொது மக்களெல்லாம் இரவு முழுவதும் தூங்க முடியாத சூழ்நிலை இருந்த காலமெல்லாம் போய் இப்பொழுது எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் நம்மைக் காக்கும் கடவுள் என்று நினைத்து, புரட்சித் தலைவருடைய படத்தை ஒவ்வொருவருடைய வீட்டிலேயும்—வடாற்காடு மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களெல்லாம் காவல் தெய்வம் என்று கருதி அவருடைய படத்தை வீட்டிலே வைத்து வணங்குகின்ற வகையில் எங்கள் பகுதியில் நக்சலைட்டுகளை ஒழித்து, அவர்களைக் காத்த புரட்சித் தலைவர் அவர்களுடைய காவல் துறையைப் பொறுத்த அளவில் இந்த அவையின் மூலம் நான் பாராட்டியே ஆக வேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த ஆண்டில் சென்னையைப் பொறுத்த வரையில் பெரிய அளவில் வெள்ளம் வந்தது. அதனால் பொது மக்களெல்லாம் தத்தளித்துக் கொண்டிருந்த நேரத்தில் நம்முடைய தமிழகத்துக் காவல் துறையைச் சேர்ந்த நண்பர்கள் உரிய நேரத்தில் அவர்களுக்கு உதவக்கூடிய வாய்ப்பைக் கொடுத்தார்கள். கீழ்ப் பகுதியிலே தாழ்வான பகுதியிலே இருந்தவர்களைப் போட்டுகளின் மூலமாக மேல்பக்கம் கொண்டு வந்து அவர்களுக்கு உரிய பாதுகாப்பைக் கொடுத்து, தண்ணீர் வடிகின்ற வரையில், தங்கள் உயிரைக்கூட மதிக்காத வண்ணம் நம்முடைய காவல் துறையைச் சேர்ந்த ஆணையர் அன்பிற்குரிய தேவாரம் அவர்கள் தலைமையில் சென்னையிலே உரிய பாதுகாப்பைக் கொடுத்தார்கள். ஏழை எளிய மக்கள் வெள்ளத்தில் சிக்காத வண்ணம், அந்த மக்களுடைய உயிருக்குப் பாதுகாப்பு கொடுத்த நம்முடைய காவல் துறையை நாம் பாராட்டி ஆக வேண்டும்.

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1986 மே 5

நம்முடைய காவல் துறையைப் பொறுத்தவரையில் உலகத்திலே இன்றைக்கு நல்ல மரியாதை இருக்கும்போதிலும், இந்தியாவைப் பொறுத்த வரையில் டெல்லியிலே உள்ள உச்சநீதிமன்றத்தைப் பாதுகாக்கின்ற பணியில் தமிழ்நாட்டுக் காவல்துறையைச் சார்ந்த காவலர்கள் பொறுப்பேற்றிருக்கிறார்கள் என்கின்ற பொழுது இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக இந்தத் தமிழக மாநிலக் காவல் துறை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டில சேலத்தில் விஜயகுமார் என்பவர் புரட்சித் தலைவரின் காவல்துறையில் இருந்தார். இன்றைக்கு மத்தியிலே ஆளுகின்ற இளைய பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய செக்யூரிட்டி ஆபிசர் என்று சொல்லக் கூடிய பாதுகாவலராகத் தமிழ் நாட்டைச் சேர்ந்த காவல் துறை அதிகாரி சென்றிருக்கிறார் என்று சொன்னால், தமிழ்நாட்டு காவல் துறையின் மீது மத்திய அரசாங்கமும், மத்திய அரசாங்கத்தை ஆளுகின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களும் எந்த அளவுக்கு அன்பு வைத்திருக்கிறார்கள், நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த மானியத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 1985-ம் ஆண்டைப் பொறுத்தவரை நம்முடைய தமிழ்நாட்டு காவல்துறை அதிகாரி பெருமக்கள் எல்லாம் சீராகவும், செம்மையாகவும், திறம்படவும் உழைத்து இருக்கிறார்கள், என்பதை மெச்சுகின்ற வகையில் இந்திய குடியரசுத் தலைவர் மரியாதைக்குரிய ஜெயில் சிங் அவர்கள் குடியரசுத் தலைவர் பதக்கத்தை இந்த ஆண்டு 22 அதிகாரி பெருமக்களுக்கு தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டின் மீது மத்திய அரசு எந்த அளவுக்கு மரியாதை வைத்திருக்கிறது என்பதைச் சொல்லியாக வேண்டும். அதோடு மட்டுமல்லாமல் 10 ஆண்டு காலம் ஒரு காவல்துறை அதிகாரி ஒழுங்காக பணியாற்றுகிறார் என்றால் அவர்களுக்கு முதலமைச்சர் பதக்கம் என்கின்ற பதக்கத்தை வழங்குகின்ற ஒரு திட்டத்தை 1982-ல் கொண்டு வந்தார்கள். இது எதற்காக என்றால், அதிகாரி பெருமக்கள் 10 ஆண்டுக்காலம் சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடந்தால் அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காகத்தான் அந்தத் திட்டத்தின் கீழ் இந்த ஆண்டில் 1,359 காவல் துறை நண்பர்கள்



1986 மே 5] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

முதலமைச்சருடைய பதக்கத்தை பெற்றிருக்கிறார்கள். அந்த அளவுக்கு இன்றைக்கு சிறப்பாகவும், செம்மையாகவும் காவல் துறை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காந்தியார் சொன்னார், தீண்டாமை ஒழிப்பு என்று. ஆனால் இன்றைய காந்தி, இரண்டாம் காந்தி, எங்கள் காந்தி, புரட்சித் தலைவர் அவர்கள் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் 22 மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு துணை இன்ஸ்பெக்டர், 2 ஹெட்கான்ஸ்டபிள், 4 கான்ஸ்டபிள் ஆகியவர்களை வைத்து மாவட்டத்தினுடைய தலைமை காவல் அதிகாரி தலைமையின் கீழ், பல இனத்தவர்கள், ஹரிஜன மக்களைத் துன்புறுத்தக் கூடாது, அப்படி துன்புறுத்தினால் உடனே அவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு எங்கள் காந்தியாக இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய ஆட்சியில் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதைப்போல புரட்சித் தலைவர் ஆட்சியில் 10 போக்குவரத்து உதவி நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். நம்முடைய தென்பகுதியிலே உள்ள அத்தனை பேரும் திண்டுக்கல் வழியாக சென்னைக்கு வந்தாகவேண்டி இருப்பதால், பல்வேறு இடங்களில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதனால் ஆக்சிடென்ட் ஏற்படுகிறது. வண்டிகள் ரிப்பேராகி நிற்கிறது. எனவே திருட்டு, கொள்ளைகள் இருக்கக்கூடாது என்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் ட்ராபிக் ஜாமாகிறது என்று சொன்னால் அதனை ஒழுங்குபடுத்தி, சென்னைக்கு உடனே வந்தாக வேண்டும் என்ற உணர்வோடு, நமக்காக, நாட்டு மக்களுக்காக, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக—சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வந்தாக வேண்டியிருப்பதால்—10 போக்குவரத்து உதவி நிலையங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. புரட்சித் தலைவர் ஆட்சியை பொன் எழுத்துகளிலே பொறிக்காக வேண்டும். காரணம் என்ன என்றால், இன்றைக்கு நாதியற்று இருந்த தமிழ் சமுதாயத்திற்கு புரட்சித் தலைவர் அவர்கள் தஞ்சாவூரிலே ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கியதோடு மட்டுமல்லாமல் உலகத்தில் உள்ள அத்தனை தமிழர்களும் ஒன்றாகச் சேர்ந்து தங்களுடைய உணர்வுகளை

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1986 மே 5

பயிர்ந்துகொள்வதற்காக, நம்முடைய தங்கத் தலைவர் 5 கோடி தமிழ் மக்களுடைய பாதுகாவலர், புரட்சித் தலைவர் அவர்கள் மதுரையிலே ஒரு தமிழ்ச் சங்கத்தை உருவாக்கியது தமிழகத்தின் வரலாற்றிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அந்த விழாவிலே காவல் துறையின் சார்பாக, தமிழ படித்த ஒரு புலவரை, ஒரு அறிஞரை, அன்பிற்குரிய ஸ்ரீபால் அவர்களைக் கலந்துகொள்ள வைத்து, இந்தத் தமிழ்த் துறையிலே காவலருக்குரிய இடத்தைக் கொடுத்து, காவலருக்கும் பங்கு உண்டு என்பதை நிரூபித்திருக்கிறார். இதன் மூலமாக காவல் துறை ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருக்கிறது. அந்த வாய்ப்பைப் புரட்சித் தலைவர் அவர்கள், நம்முடைய இதய தெய்வம் அவர்கள்தான் தந்திருக்கிறார்கள் என்று சொல்கிறபோது உள்ளபடியே காவல் துறையைச் சேர்ந்த நண்பர்கள். . . (குறுக்கீடு) . . எனவே அந்த அளவுக்குக் காவல் துறையைப் பொறுத்தவரையில் புரட்சித் தலைவர் அவர்கள் மரியாதை கொடுத்திருக்கிறார்கள்.

1984-ல் 35,887 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை 23,517 வழக்குகள். ஆக சென்ற ஆண்டு 65.5 விழுக்காடு வழக்குகள் காவல் துறையைச் சேர்ந்த நண்பர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. 1985 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில் குறைவாகத்தான் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவை 35,277 வழக்குகள். அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை 24,622 வழக்குகள். ஆக 69.8 விழுக்காடு என்ற வகையில் இந்த முறை அதிகமாகக் கண்டுபிடித்து இருக்கிறார்கள் காவல் துறை நண்பர்கள். அவர்கள் சீராகவும், சிறப்பாகவும் செயலாற்றி வழக்குகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதை நாம் பாராட்டியாக வேண்டும். அதோடு மட்டுமல்ல. காவலர்களைப் பொறுத்தவரையில் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால்—இங்கே இருக்கிற அரசியல்வாதிகள் கூடப் பேசினார்கள். காவலர்கள் வருகிறார்கள், தடியடி நடத்துகிறார்கள், துப்பாக்கியால் சுடுகிறார்கள் என்றெல்லாம் பேசினார்கள். நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் சும்மாவா இருக்க முடியும்? அவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு சக்தி கொடுக்கப்பட்டிருக்கிறது; கண்ணீர்ப்புகைக் குண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது; துப்பாக்கி



1986 மே 5] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பிரச்சினை வருகிறபோது அதாவது இரண்டு கோஷ்டிகள் மோதுகிறார்கள் என்று சொன்னால் காவல் துறையினர் லத்தியை வைத்துக்கொண்டு கசாப்புக் கடைக்காரன் காரணத்தைச் சொல்வது போல் பிரச்சாரமா செய்துகொண்டு இருக்க முடியும்? பிரச்சினைகளைத் தீர்க்க உதவியாக இருக்கும் என்பதற்காகத்தான் அவை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

காவல் துறையினரைப் பொறுத்தவரையில் எப்போதுமே அவர்கள் மக்களின் தோழர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் ரவுடிகளுக்குத் தோழனாக இருக்க முடியாது. ரவுடிகளை ஒழிக்க வேண்டும். அந்த வகையில் சமூக நீதியை நிலைநாட்ட அவர்களுக்கு. . . . . (குறுக்கீடு) எனவே அந்த அளவுக்கு இன்றைக்கு காவல் துறையைச் சேர்ந்த நண்பர்கள் நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அன்றாடப் பத்திரிகையைப் பார்க்கிறபோது . . . . (குறுக்கீடு) ஆபாச சுவரொட்டிகள் வெளியிடுவது போன்ற பல காரியங்கள் இன்றைக்கு நடப்பதை நாம் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இவற்றைப் பற்றி என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் இவையெல்லாம் சிவில் மேட்டர்ஸ், ஆகவே "Defanation suit" போட்டு பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். அப்படிக் கோர்ட்டுக்குப் போனால் 5 ஆண்டு காலம் ஆகிவிடுகிறது. அதன் காரணத்தால் தவறுகள் செய்ய காரணமாக அது அமைகிறது. இவற்றை எல்லாம் ஐ.பி.சி. 292-(ஏ)-ன் கீழ் கொண்டு வந்து தண்டிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் தண்டராம்பட்டில் தீயணைப்பு நிலையம் வேண்டுமென்று சென்ற முறை கூட நான் பேசியிருக்கிறேன். எனது பகுதி மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதி. எனவே அங்கே தீயணைப்பு நிலையம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தினந்தோறும் பத்திரிகை பார்க்கிறோம். அதிலே ரியல் எஸ்டேட் என்று விளம்பரம் வருகிறது . . . (மணியடிக்கப் பெற்றது)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவைத் துணை நாயகர் அவர்களே, காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை மானியங்களின் மீது பேசுகிற வாய்ப்பளித்த எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினுடைய சார்பாக அரசுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொண்டு இந்த மானியங்களின் மீது கருத்துக்களை வழங்கலாம் என்று எண்ணுகிறேன்.

(முற்பகல் 11-50)

குறிப்பாக தமிழகத்தினுடைய காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மிகச் சிறப்பான செயல்களைச் செய்வதில் வல்லவர்கள்; நல்லவர்கள். இது உலகம் அறிந்த ஒன்று தான். ஆனால் இன்றையதினம் தமிழக மக்கள் காவல் துறையின் மீது எவ்வளவு அருவருப்பான எண்ணத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் உள்ளபடியே உணர்ந்துதான் ஆகவேண்டும். காரணம் நம்பிக்கைக்கு நாணயமாக இருக்க வேண்டியவர்கள் நம்பிக்கையே இழக்கின்ற அளவுக்கு சில காரியங்களைச் செய்கிற நிலை ஏற்படுகிறபோது, அவர்கள் மீது நம்பிக்கையை இழந்து விடுகிற ஒரு சூழ்நிலையை நாம் பார்க்கிறோம். குறிப்பாக சொல்ல வேண்டுமானால் நம்முடைய சென்னை இராயபுரத்திலே அதன் சரகத்திற்கு உட்பட்டு 4 என்ற எண் கொண்ட ஒரு காவல் நிலையத்தை 18—1—1986 அன்று புதியதாக திறந்து வைத்திருக்கிறார்கள். அப்படி திறந்து வைக்கப்பட்ட காவல் நிலையத்திற்கு ஒரு ஆய்வாளர், ஒரு சார்பு ஆய்வாளர் மற்றும் சில காவலர்கள் இருக்கிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு என்ன வேலை என்று அரசாங்கம் தன்னுடைய காவல் துறையின் மூலம், அரசு ஆணையின் மூலம் இன்னமும் தெரிவிக்கவே இல்லை. ஆகவே அவர்களுக்கு அங்கே என்ன வேலை செய்வது என்று புரியவே இல்லை. அவர்கள் அங்கே தினமும் பஞ்சாயத்துத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். 18—1—1986 அன்று திறந்து வைக்கப்பட்ட அந்தக் காவல் நிலையத்தில் பணியாற்றுபவர்களுக்கு என்ன வேலை செய்ய வேண்டும் என்ற உத்தரவுகளைப் போட்டு, ஏரியாக்களைப் பிரிக்காது இருக்கின்ற நிலை உள்ள காரணத்தால், அங்குள்ள ஆய்வாளர்களுக்கும் காவலர்களுக்கும் ஊதியம் வீணாகத்தான் வழங்கப்படுகிறது என்பதை நான் இதன்





மூலம் மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வந்து, அவர்கள் அதை நன்றாக விசாரிக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதைவிட வேடிக்கை என்னவென்று சொன்னால அந்தக் காவல் நிலையத்தின் மூலம் எந்த வழக்கும் போட முடியாது. அவர்கள் குற்றவாளிகளைக், கண்டுபிடித்தால் கூட வழக்கு போடும் அதிகாரம் இன்னும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இப்படி ஒரு காவல் நியைம் இருப்பது முறைதானா என்று கேட்டுக் கொண்டு, சென்னை இராயபுரத்திலே 4 என்ற எண் கொண்ட காவல் நிலையத்தின் நிலைமை அப்படி இருக்கிறது, அதனை மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரின் தனிக் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மேலும் நம்முடைய காவல் துறையினுடைய சட்டம் 1962 ஆம் ஆண்டிலே போடப்பட்டது. அந்தச் சட்டத்தைத்தான் நாம் இன்னமும் வைத்துக் கொண்டிருக்கிறோம். சில மைனர் சேஞ்சஸ் தவிர, சிற்சில சிறிய மாற்றங்களைத் தவிர, வேறு பெரிய மாற்றங்கள் எதையும் நாம் உண்டாக்கவில்லை. இனியாவது இந்தக் காவல் துறையிலே மிகப் பெரிய மாற்றங்களை உண்டாக்கிக் காட்டி, மக்களாட்சியிலே மக்களுடைய உணர்வுக்கு மதிப்பளித்துச் செய்கின்ற வகையிலே இந்தக் காவல் துறையை உருவாக்கியாக வேண்டும். மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

கடந்த 6 ஆண்டு காலமாக சார்பு ஆய்வாளர்களை தேர்ந்தெடுக்கின்ற ஒரு வாய்ப்பு நம்முடைய அரசின் சார்பில் கொடுக்கப்படவே இல்லை. அதைப் பெற வேண்டும். நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் அவர்கள் கூட போலீஸ் மெடல் பேரேடு என்ற விழா நடக்கும்போது அதிலே இது குறித்து உரையாற்றினார்கள். இந்தக் காவல் துறைக்கு சார்பு ஆய்வாளர்களை உடனே காலதாமதம் இன்றி எடுக்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோளையும் அவர் விடுத்திருக்கிறார். மேலும் நம்முடைய காவல் துறையில், தலைமைக் காவலர்களாகப் பணியாற்றி வருகின்றவர்கள் 6 ஆண்டு காலமாக, 7 ஆண்டு காலமாக, பதவி உயர்வு என்பதே இல்லாத வகையிலே, தகுதி இருந்தும், பதவி உயர்வுத் தகுதி கொடுக்கப்படாமல் அப்படியே இருப்பதை பார்க்கிறோம்.

அதற்காக கிட்டத்தட்ட 100 ரிட் மனுக்களுக்கு மேல் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நம்முடைய காவல் துறையின் உயர் அதிகாரிகள் ஒவ்வொரு ஆண்டும் யார் யார் எல்லாம் மூத்த நிலையிலே சீனியாரிட்டி லிஸ்டிலே இருக்கிறார்கள் என்று டிபார்ட்மெண்டினுடைய பேனலை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பிக்க வேண்டும். அதிலே இருந்து தகுதியானவர்களை உயர் பதவிக்கு தேர்ந்தெடுக்கின்ற உரிமையும் வழங்கப்பட வேண்டும்.

மேலும் சில நேரங்களில் காவல் துறை ஆய்வாளர்கள் அல்லது மற்ற காவலர்கள் விடுப்பு எடுத்துச் செல்லுகின்ற நேரத்தில், அவர்கள் மேலும் 21 நாட்களுக்கு வேலைக்கு வராமல் இருந்து விட்டால், டெஸர்ட்டட் என்ற முறையிலே அவர்கள் வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். அப்படி நீக்கப்பட்டவர்கள் ஏராளமாக தமிழகத்திலே இருக்கிறார்கள். அப்படி நீக்கப்பட்டவர்களை எல்லாம் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற ஒரு இரக்கச் சிந்தனையோடு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சட்டத்தை ஒரு அரசு ஆணையின் மூலம் பிறப்பித்தார்கள். அந்த அரசு ஆணை எண் 1382/81. அந்த ஆணையின்கீழ் பொது மன்னிப்பு என்ற நிலைமையிலே அவர்களையெல்லாம் மீண்டும் வேலைக்குச் சேர்க்கலாம் என்ற நிலைமையை உருவாக்கினார்கள். ஆனால் அதிலே 40 வயதிற்குள் உள்ளவர்கள் என்று ஒரு திருத்தத்தையும் சேர்த்துவிட்டார்கள். அதனால் 40 வயதிற்கு மேல் 41 இருக்கலாம்; 45-ம் இருக்காலம்; ஆனால் அவர்களுக்கு காவல் துறையில் இன்னமும் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் சர்வீஸ் இருக்கின்ற நிலைமையில், இன்னமும் அந்தத் துறைக்கு உழைக்கலாம் என்று அவர்கள் நம்பிக்கையோடு இருக்கிற நிலைமையில், இப்படி வயது வரம்பு குறிப்பிட்டதால் அவர்கள் திரும்பவும் வேலைக்கு வர முடியாத சூழ்நிலை இருக்கிறது. விடுப்பில் சென்றவர்கள் ஏதோ வர முடியாத சூழ்நிலையில் அப்படி 21 நாட்களுக்கு வராமல் இருந்திருப்பார்களே தவிர வேறு இருக்காது. ஆகவே அவர்களை மன்னித்து மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ள அரசு ஆணை மூலம் நம்முடைய அரசு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும். இராணுவத்திலே கூட இப்படி டெஸர்ட்டட் என்று சொல்லி விடுப்பில் இருந்து





திரும்பி வராதவர்களை வேலைக்கு சேர்க்காமல் இருப்பதுண்டு. ஆனால் அவர்களே இப்போது சிலருக்கு மன்னிப்பு தந்து தகுந்த காரணங்களின் அடிப்படையில் வேலைக்கு சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தது போல, காவல் துறையிலே உள்ள சிறப்பு அதிகாரிகளாக இருந்தாலும் சரி, சிறப்பு ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி, ஆய்வாளர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு வேலை வாய்ப்பை மீண்டும் ஏற்படுத்திக் கொடுத்து, ஏற்கெனவே பிறப்பித்திருக்கிற அரசு ஆணை எண் 1382/81-இல் திருத்தம் செய்து, இன்னமும் 19 ஆண்டுக் காலம், 15 ஆண்டு காலம் என்று சர்வீஸ் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிற, அந்தக் காவலர்களுக்கு, ஆய்வாளர்களுக்கு, சிறப்பு ஆய்வாளர்களுக்கு, ஒரு விளம்பரத்தின் மூலம் அல்லது அரசே அவர்களை யார் யார் என்று தெரிந்து நேரிடையாக தாக்கீதுகளை அனுப்பி, அவர்களுக்கு நல்ல தகவல்களைத் தந்து மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் நான் அரசின் கவனத்திற்கு கொண்டு வந்து, வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்தால் செய்திகள் முடிந்தவுடனே, 'காணாமல் போனவர்கள்' என்ற தலைப்பில் ஒரு அறிவிப்பைச் செய்கிறார்கள். அதில் 5 வயதிலிருந்து 15 வயது வரையில் இருக்கிற காணாமல் போன குழந்தைகளைப் பற்றி தெரிவிக்கிறார்கள். நம்முடைய காவல் துறை அதிகாரிகள் தினம் தினம் இந்தச் செய்தியைப் பார்க்கிறார்கள். காணாமல் போன குழந்தைகள் என்ன ஆகின்றன? அவர்களைக் கண்டுபிடிக்க தனிப் படையை நம்முடைய அரசு காவல் துறையில் பணித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் காவல் கைதிகளை அடித்து மரணமுற்றனர் அல்லது துன்புறுத்தப்பட்டனர் என்ற செய்தி எல்லா ஆட்சிக் காலத்திலும் தொடர்ந்து வருகிறதே, இந்த நிலையை நம்முடைய அரசு ஆராய்ந்திருக்கிறதா? அல்லது அந்தத் துறையைச் சார்ந்தவர்கள் ஆராய்ந்திருக்கிறார்களா? இதற்குக் காரணம் அடிப்படைக் கோளாறு தான். வெள்ளையர்

காலத்தில் அவர்கள் தங்களுடைய ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இந்தியர்களை அடிமைகளாக நினைத்து ஏற்படுத்திய சட்டங்கள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கின்றன. அவற்றின் குறைகளைக் களைய வேண்டுமென்பதை அரசு அறிய வேண்டும்.

காவல் துறையின் மீது கூறப்படும் குறைபாடுகள், பிணைய கைதிகளாக அழைத்துச் செல்லப்படுபவர்களை பதிவேடுகளில் காட்டாமல், தன்னிச்சையாகக் கொண்டு போய் வைக்கிறார்கள். இதனால் கலகம் சர்வசாதாரணமாக அந்தப் பகுதியில் எழுகிறது. இதைத் தடுத்தே தீர வேண்டுமென்ற உணர்வு எல்லா அரசியல் தலைவர்களுக்கும் இருந்தாலும், இதுகுறித்து சில ஆலோசனை களைச் சொல்லாம் என்று கருதுகிறேன். என்ன ஆலோசனைகள் என்றால், காவல் நிலையத்தில் எப்போது வேண்டுமானாலும் சென்று லாக்கப்பில் குறிப்பேடுகளில் பதியப் பெற்றவர்கள் தான் இருக்கிறார்களா என்பதை அறிய வேண்டும். இதைச் சரியாக செய்திருக்கிறார்களா, அல்லது அத்துமீறல்கள் நடந்திருக்கிறதா என்பதைக் கண்காணிக்க ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு கண்காணிப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும். அந்தக் கண்காணிப்புக் குழுவில் நம்முடைய தேர்தல் ஆணையாளர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் ஒட்டுமொத்த உறுப்பினர்களை அதிலே சேர்த்து, மேலும் வழக்கறிஞர்கள், பொறியியல் வல்லுநர்கள், மருத்துவர்கள், பொது மக்கள் சார்பாக நல்ல அறிஞர்கள் போன்றவர்களை நியமிக்க வேண்டும். அந்தக் குழுக்களின் மூலம் பிணையக் கைதிகளின் துன்பங்களை உணரக்கூடிய வாய்ப்பை உருவாக்க வேண்டும். பிணையக் கைதிகளை, குறிப்புகளில் நல்ல முறையில் பதியச் செய்தால் தவறுகளையும், பல்வேறு கட்சிகளில் ஏற்படுகிற குழப்பங்களையும் தடுக்க முடியும்.

அடுத்து, நகை மற்றும் சாமான்கள் திருட்டு ஏற்பட்டு விடுமானால் குற்றம் சொல்பவர் சந்தேகப்படுபவர்களைப் பற்றி சொல்லிவிடுவார்கள். அப்படி சந்தேகப்படுபவர் கிடைக்கவில்லை யென்றால் காவல் துறையில் அவர்களின் தாய், தந்தை, சகோதரி, மனையாள் போன்றவர்களை அழைத்து வந்து துன்பப்படுத்துகிற கொடுமை ஒழிக்கப்பட வேண்டும். சந்தேகப்படுபவர்கள் கிடைக்கிற வரையில் காத்திருந்து, அவர்கள் எப்படி தப்பித்துச் சென்றார்கள் என்பதை அறிந்து, அதன் மூலம் அவர்களைக்





கண்டுபிடிக்க வேண்டும். அவர்களுடைய வீட்டிலிருந்து தாய், தந்தை, மனையாள் போன்றவர்களைப் பிடித்து வந்து துன்புறுத்துகிற நிலை ஒழிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குற்றவாளிகளைப் பிடித்தால் 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றத்தில் நடுவர் முன் நிறுத்த வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. ஆனால் அப்படிச் செய்வதில்லை. அவர்களைக் கைது செய்தும் கூட அந்தக் குறிப்புகளில் கொண்டு வருவதில்லை. அப்படிக் கொண்டு வரப்படாமல் நாள் கணக்கில் காவல் நிலையங்களில் இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டி அவர்களின் உறவினர்கள் எல்லாம் ஹேபியஸ் கார்பஸ் என்ற ரிட் மனுவை ஏராளமான பொருள் செலவில் தாக்கல் செய்கிறார்கள். பல்வேறு சந்தர்ப்பங்களில் காவல் துறையின் இந்தப் போக்கைக் கண்டித்து தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரிகள் குறித்து நிர்வாக ரீதியிலே என்ன தண்டனை தருகிறீர்கள்? நிர்வாக ரீதியிலே தண்டனை தருவதற்கு அரசுக்காவல் துறைக்கு அறிவித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

தனி மனிதனுடைய சுதந்திரத்தை கிள்ளுக் கீரையாக நினைக்கிற துறையாக காவல் துறை இருக்கிறது என்பதை நாம் மனப்பூர்வமாக உணர்ந்தாக வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் தண்டிக்கப்பட்ட ஒரு அதிகாரிக்கு நம்முடைய அரசுகூட அண்ணா விருதை வழங்கியுள்ளது. இந்த விருதைத் தந்தது தவறு என்று ஒரு நபர் அங்கே மீண்டும் ஒரு வழக்கைத் தொடுத்திருக்கிறார். ஒரு வழக்கில் புலன் விசாரணை முடிந்த பிறகு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்வது என்பது அறிவுபூர்வமான செயல். அந்த முறையில் குற்றப் பத்திரிகை, சார்ஜ் ஷீட் போடாததால் உண்மையான குற்றவாளி தப்பித்து விடுகின்றார். இந்தக் குறிப்பின் 11 ஆம் பக்கத்தில் கூட ஒன்றைக் குறிப்பிட்டிருக் கிறார்கள். 1985 ஆம் ஆண்டில் இந்த வழக்கு தொடுப்புப் பணிகளில், 665 வழக்குகள் பதிவு செய்யப்பட்டத்தில், 22 வழக்கு களில்தான் தண்டனை முடிவு அடைந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலைமையைப் பார்க்கின்றபோது, சார்ஜ் சீட் போடுவதற்கு என்று தனிப்பட்ட

[திரு. ஜி. கே. ஜெ. பாரதி] [1986 மே 5

ஒரு துறையை 'டைரக்டரேட் ஆப் பிராசிகியூசன்' என்ற ஒரு துறையைப் போட்டு, அவர்கள் மூலமாக இந்த சார்ஜ் சீட்டுகள் எல்லாம் தயாரிக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய உணர்வினை நம்முடைய அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12-00)

காரணம் என்ன என்றால், சில வாரங்களுக்கு முன்பாக ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் திருப்பதிக்குச் சென்றார்கள். சென்றுவருகின்றபோது அந்தப் பேருந்தில் ஒரு பிக்பாக்கெட்காரன் அவர்களுடைய பணத்தை எடுத்து விடுகிறான். அவனைப் பிடித்து கையும் களவுமாக சென்னையில் உள்ள எஸ்பிள்னேட் காவல் நிலையத்தில் ஒப்படைக்கிறார்கள் அவர்கள் சொல்கிறார்கள், இந்த பிக்பாக்கெட்டைப் பிடித்தது சோழவரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடமாகும். ஆகவே அங்கே செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். இது சட்டப்படி தவறு என்பது அந்தக் காவல் துறைக்குத் தெரியவில்லை. ஆகவே இதுபோன்ற குறைபாடுகளை யார் கொடுத்தாலும் அந்தப் பகுதியைச் சேர்ந்த காவல் நிலையத்தில் இருப்பவர்கள் பதிவு செய்து, ஆராய்ந்து விசாரணையை நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே மேலும் நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால், அவர்களுடைய குடும்பத்தினருக்கு, உறவினர்களுக்கு 100 ரூபாய் கொடுக்கிறார்கள். அதை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். மேலும் இறந்தவர்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு தர வேண்டும். காவல் துறையில் உள்ளவர்களின் குழந்தைகளுக்கு மேல் படிப்பு படிக்கச் செல்ல விரும்புகின்றவர்களுக்கான செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்ல வசதியான வீடுகளைக் கட்டித் தர வேண்டும். மேலும் கழிவு அறைகள் நல்ல முறையில் இல்லை. அதையும் செய்து தர வேண்டும்.



1986 மே 5] [திரு. ஜி. கே. ஜெ. பாரதி]

மேலும் காவல் துறையினுடைய மானியக் குறிப்புகளில் பல்வேறு விளக்கங்களை, வெற்றிகளைப் பெற்றிருக்கிற பெருமைகளை எல்லாம் நம்முடைய அமைச்சர் பெருமக்களாகிய அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய திருவொற்றியூரிலே கிட்டத்தட்ட 33 கொலைகள் நிகழ்ந்து இருக்கின்றன, நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற பிறகு. ஆனால் இதுவரையில் யார் யார் தண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றால், ஒருவரும் தண்டிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே இவைகளை ஆராய்ந்து அறிய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைச் சார்ந்திருக்கின்ற பல்வேறு காவல் நிலையங்களில், உதாரணமாக மாதவரம் மூலக்கடையை எடுத்துக் கொண்டால், 4, 5 காவலர்கள்தான் இருக்கிறார்கள். இப்படி 4, 5 காவலர்கள் இருந்தால் அவர்களை வைத்து வேலை செய்ய முடியுமா? எனவே காவல் துறையில் உள்ள காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அதேநேரத்தில் மணலியிலும் இப்படித்தான். திருவொற்றியூரிலும் இப்படித்தான். கத்திவாக்கத்திலும் இப்படித்தான். மாதவரம் பால் பண்ணையிலும் இப்படித்தான். ஆகவே இந்தக் காவல் துறையில் பணிபுரிகின்ற காவலர்களின் எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும். நான் முன்பு கூட வேண்டுகோள் விடுத்து இருக்கிறேன். என்னுடைய திருவொற்றியூர் பகுதியையும், மற்றும் புழல் வட்டத்தையும் சென்னையில் உள்ள காவல் துறையிலே சேர்க்க வேண்டும் என்று. அரசு ஆணை பிறப்பித்து இருப்பதாக அறிகிறேன். ஆனால் கத்திவாக்கத்தை விட்டுவிட்டார்கள். எனவே இந்த கத்திவாக்கத்தையும் சென்னையிலே சேர்க்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

அடுத்து, நம்முடைய தாய்மார்களை ஆடவர்கள் இன்பம் பொருட்களுக்காக பேணுகிறார்கள். அவர்களுடைய வரதட்சணைப் பொருட்களுக்காக கணவன்மார்கள் பல நேரங்களில் கொலை செய்கின்ற செய்திகள் தினமும் பத்திரிகையில் வருகின்றன. ஆகவே இந்த வரதட்சணைக் கொடுமையில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கு ஐ.பி.எஸ்.

படித்த பெண்கள் தலைமையிலே ஒரு தனிப் படை ஒன்றை அமைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காவல் துறையில் உள்ள பெண்களுக்கு ஒரு பேண்ட்டும், சர்ட்டும் கொடுத்திருக்கிறார்கள். இதை விடுத்து, நல்ல காக்கிப் புடவையை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களுக்கு உடையிலே ஒரு சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் இந்தப் பெண்மணிகளுடைய உடல் பாகங்கள் நலிவு அடையாமல் இருப்பதற்காக, இந்த இயற்கைச் சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இன்றைய சூழ்நிலையில் போலிச் சாமியார்களும் வரதட்சணைக் கொடுமைகளும் ஒழிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் அதேநேரத்தில் ஒரு வாலிபன் பல்வேறு பெண்களை திருமணம் செய்து கொண்டு, பல பெண்களை ஏமாற்றி விடுகிறான், பொருட்களை ஏமாற்றிவிடுகிறான், வஞ்சித்து விடுகிறான், வாழ்க்கையை ஏமாற்றிவிடுகிறான், கற்பைச் சூறையாடிவிடுகிறான். இந்தக் கொடுமைகளை எல்லாம் முறியடிக்க வேண்டும் என்றால், அவர்களுக்கு பல்வேறு தண்டனைகளைக் கொடுப்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் மூலமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது.)

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற காவல் துறை, தீ அணைப்பு மானியங்களில் பேச வாய்ப்பு கிட்டியமை பெரும்பேறாக எண்ணி, என் எண்ணத்திலே எழுகின்ற கருத்துக்களை இந்த மாமன்றத்தில் எடுத்து வைக்க விழைகிறேன்.

சுதந்திரம் பெற்ற பின்பு இந்த நாட்டை காங்கிரஸ் கட்சி பல ஆண்டு காலமாக ஆண்டது. அதைப் போன்று திராவிட முன்னேற்றக் கழகமும் 7½ ஆண்டுக் காலம் தமிழகத்தை ஆண்டது. ஆனால் அப்போது இந்தத் தமிழ் நாட்டில் இருந்த காவலர்களின் கண்ணீர் துடைக்கப்பட்டதா? அல்லது காவலர்



களின் கவலையைப் போக்க முடிந்ததா என்றால் இல்லை. ஆனால் புரட்சித் தலைவர் 1977 ஆம் ஆண்டு இந்தப் புண்ணிய கொலு மண்டபத்தில் முதல்வராக பொறுப்பேற்றதற்குப் பின்னால் காவலர்களின் குழி விழுந்த கண், தளர்ந்த நடை, ஒட்டிய வயிறு, அடுப்பெரியா வீடு என்றெல்லாம் ஒன்றாகி வாட்டி வதைத்த வறுமையை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து காவல் துறையினரின் இன்னல்களைப் போக்கி, அவர்களது கண்ணீரைத் துடைத்து, அவர்கள் கவலையின்றி தங்களுடைய கடமையை ஆற்றுவதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்தார் என்பதை உங்களிடத்திலே நான் மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் எதிர்க்கட்சியினர், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி செய்கின்ற காரணத்தினால் வரிக்கு வரி குற்றம் சாட்ட வேண்டுமென்பதற்காக, மற்ற கட்சிக்காரர்கள் அலசி ஆராய்ந்தால் இது ஜனநாயகத்துக்கு உகந்த கல்வி; முறையும் அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் புரட்சித் தலைவருடைய அரசு வருகின்ற இன்னல்களை ஏற்பதற்காக மனப் பக்குவம் பெற்றால்தான் ஜனநாயக ஸ்தாபகத்திற்கு உகந்தது என்று மக்கள் எண்ணுவார்கள் என்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

தமிழ் நாட்டிலுள்ள காவல் துறை, இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகத்தில் தான் சட்டம் ஒழுங்கை கட்டிக் காக்கின்றது. ஆனால் சட்டம் ஒழுங்கு காவல் துறையால் கட்டிக் காக்கப்படுகிறது என்பதை நான் விமர்சனம் செய்வதற்கும் பாராட்டுவதற்கும் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இதற்கு முன்னாலே ஆட்சி செய்தவர்கள் இவர்களுடைய துன்பங்களைப் போக்குவதற்கு எண்ணிப் பார்த்ததுண்டா என்றால், இல்லை. ஆனால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், வெளிநாட்டு காவல் துறை எவ்வாறு எலக்ட்ரானிக்ஸ் எக்யூப்மெண்ட்ஸ்-களையும் மற்றும் கம்ப்யூட்டர்களையும் அவர்கள் உபயோகித்து நல்ல காவல் துறையாக திகழ்ந்து கொண்டிருக்கின்றதோ அதுபோன்று தமிழக முதல்வர் அவர்கள், தமிழக காவல் துறைக்கு அந்த எக்யூப்மெண்ட்ஸ் களையும், கம்ப்யூட்டர்களையும் வாங்கிக் கொடுத்து உலகப்

கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் இதுபோன்ற நிலை இருக்கிறதா என்பதை நீங்கள், இந்தச் சட்ட மன்றத்திலே இருக்கின்ற அத்தனை பேர்களும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

வட மாநிலத்தில் திடீர் திடீரென்று கொலைகளும், கொள்ளைகளும் நடைபெறுவதை நீங்கள் அறிவீர்கள். இதுபோன்ற நிலைமைகள் பல மாநிலங்களிலும் இருக்கின்றன. தமிழகத்திலும் இதுபோன்ற பல கொள்ளைக் கூட்டங்கள் திடீர் திடீரென்று தோன்றினாலும், தோன்றுகின்ற அதே நேரத்தில் அவர்களை கிள்ளி எறிந்திடக் கூடிய காவல் துறையினர் தமிழ் நாட்டிலே இருக்கின்றார்கள். அந்த வட மாநிலத்தில், மத்திய

(பிற்பகல் 12-10)

பிரதேசத்தில் காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்துகிறார்கள். அந்த மாநிலத்தை ஆளுகின்ற காங்கிரஸ் முதலமைச்சர் கூட அங்கே கொலை, கொள்ளை நடத்தி வந்த அந்த பூலான் தேவி போன்ற ஒரு பெண்ணை பிடிக்காமல் பயந்து இருந்து வந்ததை நாம் அறிந்து இருக்கிறோம். அந்த கொலை, கொள்ளையை நடத்தி வந்த அந்த பூலான்தேவியை பிடித்தார்களா அல்லது அடக்கினார்களா என்றால் இல்லை. ஆனால் அந்த பெண் பூலான்தேவியே வந்து அந்த முதலமைச்சரிடம் சரணாகதி அடைந்தாள் என்பதை நாம் எல்லாம் அறிந்து இருக்கிறோம். அந்த நாட்டில் எவ்வாறு காவல் துறை சட்டம் ஒழுங்கை கட்டிக் காத்துக்கொண்டிருக்கிறது எப்படி இருக்கிறது என்றால், என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அதேபோல் மாண்புமிகு புரட்சித் தலைவர் தமிழக முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் கருணை உள்ளம் கொண்டவர். அவரை எல்லோரும் போற்றுவதற்கு காரணம், புரட்சித் தலைவர் எந்தவிதமான கொலை பாதகச் செயலும் செய்யாதவர். மேலும் இல்லை என்று வருபவர் களுக்கு விரைந்து அள்ளிக் கொடுக்கும் அருள் நெஞ்சம் கொண்டவர், ஏழை எளியவர்களுக்கு எந்த சட்டத்தை இட்ட வேண்டும் என்று சொல்கிறார்களோ அந்தச் சட்டத்தை

13D485

[திரு. அ. பாலுசாமி] [1986 மே 5

நிட்டுவதற்கு ஒரு ஒப்பற்ற தளநாயகராக இருந்தவர் தான் புரட்சித் தலைவர் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த காலத்தில் 18 ஆண்டு காலம் இந்த நாட்டை காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்தது. அதேபோல் 7½ ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி செய்தது. ஆனால் தமிழக மக்கள் அத்தனை பேரும், இந்த சட்ட மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் பெண்களை மாலை 6 மணிக்கு மேல் கைது ஆக்கி காவல் நிலையத்தில் வைக்கக் கூடாது என்ற சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று அத்தனை ஆண்டுகளாக இந்த காவல் துறை மானியத்தில் எடுத்து வைத்தார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக முதலமைச்சராக 1977 ஆம் ஆண்டு ஆட்சி பீடத்தில் ஏறினார்கள். அப்போது இந்த சட்டத்தில் காவல் துறை மானியத்தில் விரிவாக பேசப்படுகிறது. அப்படி பேசப்படுகிற நேரத்தில் எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர், மற்றவர்கள் எல்லாம் கூறுகிறார்கள். பெண்களை மாலை 6 மணிக்கு மேல் கைதியாக்கி காவல் நிலையத்தில் அடைக்கக்கூடாது, அங்கே பெண்களுக்கு பலவிதமான சங்கடங்கள் நேரிடுகின்றன. ஆகவே இதை போக்கிட ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் கூறினார்கள். உடனே புரட்சித் தலைவர் அவர்கள் அந்த ஆண்டே இந்த சட்டத்தை தமிழகத்தில் நிறைவேற்றிய ஒரே ஒரு தளநாயகர் புரட்சித் தலைவர் என்பதை நான் உங்களுக்கு மெத்த பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் ஏழை எளியவர்கள் சைக்கிளில் 2 பேர் போகக் கூடாது. அப்படி 2 பேர் போனால் காவல் துறையினர் பிடித்து அவர்களை பல கஷ்டத்திற்கு உள்ளாக்கி அனுப்புகிறார்கள். அதைப்போல புரட்சித் தலைவர் அவர்கள் மானிய கோரிக்கை வருகின்ற நேரத்தில் மற்ற கட்சித் தலைவர்களும், மற்ற கட்சி உறுப்பினர்களும் ஏழை எளியவர்கள் செல்லக்கூடிய சைக்கிளில் 2 பேர் போனால் காவல் துறையினர் பிடித்துக் கொள்கிறார்கள். அவர்களை சார்ஜ் செய்கிறார்கள். அந்த பழக்கத்தைக் கட்டுவதற்கு கூட [illegible] அவர்கள் [illegible] சைக்கிளில் 2 பேர் போகலாம் என்று நீங்கள் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று



1986 மே 5] [திரு. அ. பாலுசாமி]

புரட்சித் தலைவர் அவர்களிடம் அந்த கருத்தை எடுத்து வைக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உடனே அந்தச் சட்டத்தை இந்தச் சட்ட மன்றத்திலே நிறைவேற்றினார்கள் என்பதை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதை எதற்கு கூறுகிறேன் என்றால், இங்கே பல பேர்கள் பேசினார்கள், இங்கே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி யசோதா அம்மையார் இங்கே கூறினார்கள். தமிழ் நாட்டில் கொலை விகிதாச்சாரம் 1985-86 ஆம் ஆண்டு பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் இதுபோன்று மற்ற மாநிலங்களில் கொலை விகிதாச்சாரத்தை குறிப்பிட்டு, இருந்திருப்பார்களானால் இந்த மாநிலத்திற்கும் அந்த மாநிலத்திற்கும் எத்தனை விகிதாச்சாரம் குறைந்து இருக்கிறது என்பது தெரியும்.

இங்கே மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லும்போது காவல் நிலையங்களில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், ரைட்டர் போன்றவர்கள் உட்காருவதற்கு சேர் இருக்கிறது என்றும், மற்றவர்கள் போனால் உட்காருவதற்கு சேர் இல்லை என்றும் கூறினார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இதுபோன்று சேர் இல்லை என்றால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அந்த காவல் துறை அலுவலகத்திற்கு சென்றால் அந்த எஸ்.ஐ. அவர்களை எழுந்து நிற்க வைத்து, அவர்கள் அதில் உட்கார்ந்து இருக்கிறார்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இங்கே 1962 ஆம் ஆண்டை கொஞ்சம் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்போது கலைஞர் அவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கிறார்கள். அப்போது ஒரு கவிதை தருகிறார், அதில் ஒரு தொகுப்பை இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

'நாடாளும் மந்திரிக்கு நலியாமல் வாழ்வதற்கு, ஓடாக தேய்த்திட்ட அப்பாவிப் புத்திரனே குருவி கூடார விட்டுக்குள்ளே குலவுகின்ற குலவிளக்கே, கொசுக் கடிக்கு அஞ்சாமல் கோவை மலர்கண் வளராய், காக்கிச் சட்டை போட்டுக்கிட்டு, சிவப்பு தொப்பி மாட்டிக்கிட்டு, நாட்டை காக்கும் வீரனுக்கு உன்னைப் போல் நானும் வந்து பிறந்து விட்டால் காவி உடை வேண்டாமா'

என்று பாடியவர் யார் என்றால் கலைஞர் கருணாநிதி அவர்கள். தமிழகத்தின் தளபதி என்று எல்லோரும் கொண்டிருக்கிறார்கள். அந்த எதிர்க்கட்சித் எவ்ணிக் கருணாநிதி அவர்கள் பாடினார்கள். ஆனால் அவர் தலைவர் நாட்டை 7½ ஆண்டு காலம் ஆண்டார். அந்தக் காவல் துறையினர் இந்த போட்டிருந்த காக்கிச் சட்டையை கழட்டுகின்ற சட்டத்தைக் கொண்டு வந்தாரா? ஆனால் புரட்சித் தலைவர் தமிழகத்தின் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னர் அந்த காக்கிச் சட்டையைக் கழற்றி டெரிகாட்டன் சட்டையை போடுவதற்குச் சட்டத்தை கொண்டு வந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தான் என்பதை சட்ட மன்றத்தின் மூலமாக தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுபோன்று தான் சிவப்புத் தொப்பியை மாற்றிக்கூட, நாட்டைக் காக்கும் வீரர்கள் என்னைப் போல்... (குறுக்கீடு)

திரு. ஆ. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெரிகாட்டன் சட்டை போட்டதைப் பற்றிச் சொன்னார்கள். அது தி.மு.க. ஆட்சியில் தான் கொண்டு வரப்பட்டது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு உறுப்பினர் தி.மு.க. ஆட்சியில் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். ஆனால் காக்கிச் சட்டையை கழற்றியது அண்ணா தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த சிவப்புத் தொப்பியை மாட்டிவிட்டு, அந்த வீரனுக்குப் பிறந்துவிட்டால், அந்த சிவப்புக் காவியுடை வேண்டுமடா என்று பாடிய நிலையில், அந்த சிவப்புத் தொப்பியைத் தூக்கி எறியச் செய்தவர் புரட்சித் தலைவர் தான்.

அதுபோன்று காவல் துறையினரை நல்ல முறையில் குடியமர்த்தி, அவர்களுடைய குழந்தைகளை வளர்ச்சியடையச் செய்வதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களுக்கு வீடு கட்டும் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அதன் மூலமாக, காவல் துறையினரின் குழந்தைகள் எந்தத் தொல்லைகள் எதுவும் இல்லாமல் நல்ல முறையில் வளர்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



| மாவட்டத்தின் பெயர். | வட்டத்தின் பெயர். | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | தஞ்சாவூர் கோட்டம், | |
| | தஞ்சாவூர் .. | தஞ்சாவூர். |
| | கும்பகோணம் .. | கும்பகோணம் |
| | மன்னார்குடி .. | மன்னார்குடி. |
| | நாகப்பட்டினம் .. | நாகப்பட்டினம். |
| | திருவாரூர் .. | திருவாரூர். |
| | நன்னிலம் .. | நன்னிலம். |
| | மயிலாடுதுறை .. | மயிலாடுதுறை. |
| | பட்டுக்கோட்டை .. | பட்டுக்கோட்டை. |
| | ஒரத்தநாடு .. | ஒரத்தநாடு. |
| | திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம், | |
| திருநெல்வேலி : | | |
| | திருநெல்வேலி .. | பாளையங்கோட்டை. |
| | திருநெல்வேலி .. | திருநெல்வேலி (பேட்டை). |
| | தென்காசி .. | தென்காசி. |
| | தென்காசி .. | கடையநல்லூர். |
| | கோவில்பட்டி .. | கோவில்பட்டி. |
| | தூத்துக்குடி .. | தூத்துக்குடி. |
| | தூத்துக்குடி .. | தூத்துக்குடி அனல் மின் நிலையம். |
| | திருச்செந்தூர் .. | திருச்செந்தூர். |
| | நாங்குநேரி .. | நாங்குநேரி. |
| | அம்பாசமுத்திரம் .. | அம்பாசமுத்திரம். |
| கன்னியாகுமரி : | | |
| | அகஸ்தீஸ்வரம் .. | நாகர்கோவில். கன்னியாகுமரி. |
| | விளவங்கோடு .. | குளித்துறை. |
| | இராமநாதபுரம் கோட்டம், | |
| இராமநாதபுரம் : | | |
| | இராமநாதபுரம் .. | இராமநாதபுரம். இராமேஸ்வரம். |
| | பரமக்குடி .. | பரமக்குடி. |
| பசும்பொன் முத்துராமலிங்கம் : | | |
| | காரைக்குடி .. | காரைக்குடி. |
| | தேவக்கோட்டை .. | தேவக்கோட்டை. |
| | சிவகங்கை .. | சிவகங்கை. |

| மாவட்டத்தின் பெயர். (1) | வட்டத்தின் பெயர். (2) | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (3) |
|---|---|---|
| காமராசர் : | | |
| | ஸ்ரீவில்லிபுத்தூர் .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| | இராஜபாளையம் .. | இராஜபாளையம். |
| | சாத்தூர் .. | சாத்தூர். சிவகாசி. |
| | அருப்புக்கோட்டை | அருப்புக்கோட்டை. |
| | விருதுநகர் .. | விருதுநகர். |



## இணைப்பு-3

அரசினரால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்டு இன்னும் தொடங்கப்படாமல் உள்ள தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்.

| | மாவட்டத்தின் பெயர். (1) | தீயணைப்பு நிலையத்தின் பெயர். (2) |
|---|---|---|
| 1. | சேலம் .. | சங்ககிரி. ஏற்காடு. |
| 2. | திருச்சிராப்பள்ளி .. | அரியலூர். அரவக்குறிச்சி. |
| 3. | இராமநாதபுரம் .. | கமுதி. திருப்பத்தூர். வத்திராயிருப்பு. |
| 4. | பசும்பொன் முத்துராமலிங்கம். .. | சிங்கம்புணரி. |
| 5. | கன்னியாகுமரி .. | குலசேகரம். பத்மநாபபுரம் அல்லது தக்கலை. |
| 6. | கோயம்புத்தூர் .. | சத்தியமங்கலம். வால்பாறை. |
| 7. | மதுரை .. | கொடைக்கானல். கம்பம். சோழவந்தான். வேடசந்தூர். |
| 8. | திருநெல்வேலி .. | சங்கரன்கோவில். விளாத்திகுளம். சாத்தான்குளம். ஸ்ரீவைகுண்டம். |
| 9. | வட ஆற்காடு .. | நாட்றம்பள்ளி. செய்யார். சோளிங்கர். |
| 10. | தென் ஆற்காடு .. | திட்டக்குடி. காட்டுமன்னார்கோவில். குறிஞ்சிப்பாடி. |
| 11. | புதுக்கோட்டை .. | ஆலங்குடி. திருமயம். கீரனூர். |

| மாவட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 12. தஞ்சாவூர் .. | பேராவூரணி.<br>சீர்காழி.<br>திருத்துறைப்பூண்டி.<br>பாபநாசம்.<br>திருக்காட்டுப்பள்ளி. |
| 13. செங்கற்பட்டு .. | மறைமலை நகர்.<br>செங்குன்றம். |



## இணைப்பு 4.

தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்கள் :—

1. சேலம் (ஹஸ்தம்பட்டி).
2. தஞ்சாவூர் (2-ஆவது தீயணைப்பு நிலையம்)
3. ஊத்தங்கரை.
4. கழுகுமலை.
5. முதுகுளத்தூர்.
6. பவானி.
7. பாலக்கோடு.
8. உத்திரமேரூர்.
9. புல்லம்பாடி.
10. இலுப்பூர்.
11. கடமலைக் குன்று.
12. சங்கராபுரம்.
13. பொன்னேரி.
14. குடவாசல்.
15. பென்னகரம்.
16. திருவிடைமருதூர்.
17. கொல்லிமலை.
18. ஜவ்வாதுமலை.
19. கல்ராயன்மலை.
20. தரங்கம்பாடி.
21. வாசுதேவநல்லூர்.

## இணைப்பு 5.

1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இருபத்தியெட்டாம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புப் படைப் பணியாளர்களின் எண்ணிக்கை.

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். (1) | பதவி எண்ணிக்கை. (2) |
|---|---|
| 1. தீயணைப்புத் துறை இயக்குநர் | 1 |
| 2. தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் | 2 |
| 3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 14 |
| 4. உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 5. உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து) | 1 |
| 6. நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 168 |
| 7. நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 11 |
| 8. உதவி நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 9. முன்னணித் தீயணைப்போர்கள் | 519 |
| 10. ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் | 157 |
| 11. தீயணைப்போர் கம்மியர் | 8 |
| 12. தீயணைப்போர் ஓட்டுநர்கள். | 783 |
| 13. பற்றவைப்பாளர் (வெல்டர்) | 1 |
| 14. தீயணைப்போர் தச்சர் | 1 |
| 15. தீயணைப்போர் (அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள்) | 3,032 |
| மொத்தம் .. | 4,728 |



நிர்வாகப் பணியாளர்கள் :

| | |
|---|---|
| 1. தீயணைப்புத் துறை இயக்குநரின் நிர்வாக நேர்முக உதவியாளர் | 1 |
| 2. கண்காணிப்பாளர்கள் (தேர்வுத் தரம்) | 3 |
| 3. கண்காணிப்பாளர்கள் | 15 |
| 4. உதவியாளர்கள் | 44 |
| 5. இளநிலை உதவியாளர்கள் | 51 |
| 6. சுருக்கெழுத்து தட்டச்சர்கள் | 3 |
| 7. தட்டச்சர்கள் | 18 |
| 8. பதிவு கட்டறை எழுத்தர்கள் | 15 |
| 9. அடிப்படை பணியாளர்கள் | 42 |
| மொத்தம் .. | 192 |

## இணைப்பு—6.

**கடந்த ஆண்டு தீயணைப்புத் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சம்பந்தமாக அரசு அறிவித்த சலுகைகளின் விவரங்கள் :—**

(1) தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நல நிதிக்கு அரசு அளித்துவந்த மானியத் தொகை ரூ. 10,000-லிருந்து ரூ. 50,000-க்கு உயர்த்தப்பட்டது.

(2) தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளியில் பணியாற்றும் போதனையாளர்களுக்கு போதனைப் படி மாதந்தோறும் கீழ்க்கண்டவாறு வழங்க அரசு ஒப்பளித்துள்ளது :—

| | ரூபாய். |
|---|---|
| நிலைய தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து) | 50 |
| ஓட்டுநர் எந்திரக் கம்மியர் | 25 |
| தீயணைப்போர் ஓட்டி | 25 |

இப் பணியாளர்கள் மேலே கூறிய போதனைப் படி அல்லது நடைமுறையில் இருக்கும் விதிகளின்படி அவர்களுக்குரிய சிறப்பு ஊதியம் இதில் எது அவர்களுக்கு நன்மை பயக்குமோ அதுமட்டுமே பெறத் தகுதியுடையவராவர்.

136485
சென்னை-600 008.
V211,31 N86

நான் உங்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த டாக்டர் பட்டம் பெறுவதற்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் என்ன சம்பவம் நடந்தது என்பதை நீங்கள் எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். அங்கே உதயகுமார் என்ற மாணவன், இந்த டாக்டர் பட்டம் கலைஞருக்கு எதற்காக கொடுக்க வேண்டுமென்ற ஒரு வினாவை எழுப்பினார். ஆனால் அவர்கள் ஒன்றும் செய்யவில்லை. ஆனால் அந்த வினாவை எழுப்பியதற்காக, அன்று காவல் துறையை கைப்பொம்மையாக ஆட்டி வைத்தார் கலைஞர் கருணாநிதி அவர்கள். அன்று அந்த உதயகுமார் என்னும் மாணவன் கொலை செய்யப்பட்டான். கொலை செய்யப் பட்டவன் உதயகுமார் தான் என்று அந்த விசாரணையில் புலனாக்கப்படுகிறது. உதயகுமார் என் மகன்தான் என்று அவனுடைய தாய் தந்தையர் முதலிலே சொல்கிறார்கள். அதற்குப் பிறகு கொல்லப்பட்ட உதயகுமார் என் மகன் இல்லை என்று அவர்களை செல்ல வைப்பதற்கு அன்றைய காவல் துறையை கலைஞர் அவர்கள் கைப்பாவையாக ஆட்டி வைத்தார்கள் என்பதை உங்களுக்குச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

அதுபோன்று கிளைவ் ஹாஸ்டல் சம்பவம். இதுபோன்று எண்ணற்றவைகளை என்னால் எடுத்து வைக்க முடியும் என்பதை உங்களுக்கு தெரிவிக்க நான் ஆசைப்படுகிறேன்.

அதுபோன்று இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் சொன்னார்கள். துப்பக்கிச் சூடுகள் காதைத் துளைக்கின்றன எங்களுடைய ஆட்சியிலே என்று. கொலைக் குற்றங்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பது அண்ணா தி.மு.க. ஆட்சியில் என்று சொன்னார்கள். வழக்குகள் போடப்பட்டு, குற்றங்களை அதிகமாகக் கண்டுபிடித்து, தண்டித்து இருப்பது, அண்ணா தி.மு.க. ஆட்சியில் தான். காவல் துறையிலே சட்ட மன்ற உறுப்பினர்களோ அல்லது அமைச்சர்களோ, யாரும் கூடுபடவில்லை. ஆனால் தி.மு.க. ஆட்சி செய்கின்ற காலத்தில், மாவட்டச் செயலாளர் மாவட்ட ஆட்சித் தலைவர் போல் செயபட்டார். வட்டச் செயலாளர்கள்தான் அன்று டி.எஸ்.பி. யாகவும், மாவட்ட கண்காணிப்பாளர் போலவும்,

போலீஸ் அதிகாரிகள் போலவும் செயல்பட்டார்கள், என்றால், அன்றே அந்த நிலையில், எந்த அளவிற்கு தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு கட்டிக் காக்கப்பட்டது என்பதை சற்றுச் சிந்திக்க வேண்டுமென்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். காவல் துறையின் கடந்த காலக் கருத்துக்களை எடுத்து வைக்க வேண்டுமென்றால் பல கருத்துக்களை எடுத்து வைக்க முடியும். வத்தலக்குண்டில் 1972 ஆம் ஆண்டு இடைத் தேர்தல் நடைபெற்றது. அங்கே வெற்றி பெறுவதற்கு தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் வேலை செய்து வருகிறார்கள். அ.இ.அண்ணா தி.மு.கவும் வெற்றி பெறுவதற்காக வத்தலக் குண்டிலே ஆறுமுகம் என்பவர் வாக்குச் சேகரிக்கிறார். வாக்குச் சேகரிக்கச் செல்கிற நேரத்திலே தி.மு.க. வைச் சேர்ந்தவர்களால் கொலை செய்யப்படுகிறார். ஆனால் அந்த ஆறுமுகத்தின் மனைவி நிறைமாத கர்ப்பிணி, அந்த ஆறுமுகத்தைப் பார்க்க கூட செல்ல முடியவில்லை. காவல் துறை அலுவலகத்தில் அமர்ந்து கொண்டு. . . .

(பிற்பகல் 12.20)

**திரு. சு. பாலன் :** இந்த கேஸ் நடத்தப் பெற்று குற்றமற்றவர் என்று தீர்ப்பாகிவிட்டது. ஏன் அதை மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்?

**திரு. அ. பாலுசாமி :** அன்றைக்கு ஆட்சியிலே இருந்தவர்கள் ஆறுமுகத்தைக் கொலை செய்த புகார் மனுவை அ.இ.அண்ணா தி.மு.க. கொடுக்கச் செல்கிறது, அந்தக் காவல் நிலையத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அமர்ந்து கொண்டு புகார் மனுவை வாங்கக்கூடாது என்று தடுத்து வருகிறார்கள். இதுபோன்று எண்ணற்றவைகளை என்னால் எடுத்து வைக்க முடியும்.

விவசாயிகள் பிரச்சினை, ஒரே நாளில் எத்தனை விவசாயிகள் கொலை செய்யப்பட்டவர்கள்? 17 விவசாயிகளை சுட்டுப் பொசுக்கினார்கள். இரும்புக்கரம் கொண்டு அடக்குவேன் என்று கூறினார்கள். ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் இத்தனை ஆண்டுகாலம் இருந்தார்கள், இரும்புக்கரம் கொண்டு அடக்கு வேன் என்று சொன்னார்களா? இரும்புக் கரம் நீளும் என்று சொன்னார்களா? எத்தனையோ போராட்டங்களை தி.மு.க





தூண்டியது சட்டம் ஒழுங்கைக் குலைக்க வேண்டுமென்பதற்காக, ஆனால் புரட்சித் தலைவர் அவர்கள் அவர்களையெல்லாம் அழைத்து அவர்கள் என்ன என்ன கோரிக்கைகள் வைத்தார்களோ அவைகளை நிறைவேற்றினார்கள்.

தீயணைப்புபற்றி ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நிலக்கோட்டை, தாலுகா தலைமையிடமாக இருப்பதால் அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போலவே என்னுடைய ஊரான வாடிப்பட்டி தாலுகாவிலே உள்ள குருவித்துறை என்ற இடத்திலே வருடத்திற்கு பல கேஸ்கள் வருகின்றன. ஆகவே அங்கே ஒரு காவல் நிலையத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, நேரம் ஒதுக்கிக்கொடுத்த மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு நன்றி கூறி, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன், நன்றி வணக்கம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தைக் குறிப்பிடுகிறபோது அண்ணா காஞ்சி மாவட்டம் என்று சொன்னார்கள். அதுபோன்ற மாவட்டம் நம் மாநிலத்தில் இல்லை. யாரோ ஒரு சிலர் அவர்களுக்கு என்று மட்டும் பெயரை வைத்துக்கொண்டால் இந்த அவைக்குறிப்பில் அப்படி இருக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செங்கற்பட்டு மாவட்டம் என்று தான் அது இருக்கும். அவைக்குறிப்பில் அதைத் திருத்தச் சொல்கிறேன். திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டிருக்கும் மாவட்டம்தான் அண்ணா மாவட்டம்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அப்படி ஒரு மாவட்டம் இல்லை, அதைச் சொன்ன திரு. பொன்னு ரங்கம் இந்த அவையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் இருக்கிறேன்.

**திரு. சு. பாலன் :** நாங்கள் அழைக்கிறோம் அண்ணா மாவட்டம் என்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விட்டிலேதான் அப்படி அழைக்கலாம். சபையிலே அப்படி அழைக்க முடியாது ஜி.ஓ. இருக்கிறது. அதற்கு அதிகாரம் எல்லாம் வேண்டும்.

*திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் காவல்துறை, தீயணைப்பு மானியக் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவைமீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழகத்தின் போலீஸ் துறை உண்மையிலேயே இந்தியாவிலே ஒரு பாராட்டுப் பெற்ற துறை என்பதில் யாருக்கும் சந்தேகம் கிடையாது. ஆனால் இந்தத் துறையில் இருக்கக்கூடிய சில குறைபாடுகளையும் சொல்வது எதிர்காலத்திலே நன்மையாக அமையும் என்ற நோக்கத்தில் சொல்ல விழைகிறேன். போலீஸ் துறை என்ற பெயரால் பல இடங்களில் போலீசார் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் இடையே உறவு முறையில் வேகமாக பகைமை வளர்ந்து வருகிறது; கிராமங்களிலேயும், நகரங்களிலேயும் இப்படிப்பட்ட பகைமை வளர்ந்து வருகிறது. அதைத் தடுப்பதற்கு அமைச்சரவர்கள் உயர்ந்த போலீஸ் அதிகாரிகளை வைத்துக் கொண்டு, அந்தப் பகைமையைக் குறைத்து, பொதுமக்களைப் பாதுகாக்கின்ற துறையாக இந்தக் காவல்துறையை வளர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது ஒன்று.

இரண்டாவதாக, போலீசுக்கு ஆள் எடுக்கிறார்கள். 300 ஆட்களை எடுக்க வேண்டுமென்றால், வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக 30,000 பேர்கள் அங்கே வருகை தருகிறார்கள். இது ஒவ்வொரு ஆண்டும் வருகின்ற காட்சியாக இருக்கிறது. அப்படி அவர்கள் 30,000-க்கும் மேற்பட்ட அளவில் வருகின்ற பொழுது, அந்த இளைஞர்களை எப்படி ஒழுங்குபடுத்துவது, எப்படி வரிசைப்படுத்துவது என்பதைப் பற்றிக் கடைப்பிடிப்பதற்குப் பதிலாக ஒரே அவியலாகக் குவித்து, இறுதியில் கட்டுக்கடங்காமல் லத்தி சார்ஜ் செய்து, அடித்து, பல இளைஞர்கள் மண்டை உடைந்து, கால் உடைந்து ஊருக்குத் திரும்புகின்ற காட்சி நடைபெறுகிறது. சென்ற ஆண்டில் நமது சென்னையிலே நடந்தது, அதுபற்றிப் பேசப்பட்டது. சமீபத்தில் திருச்சியிலேயும் இதே நிலைமை ஏற்பட்டிருக்



கிறது. எதிர்காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் ஏற்படாவண்ணம் தடுத்து நிறுத்த வேண்டும். வருகின்ற இளைஞர்களை இந்தக் குழப்பத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். 300 பேர்கள் தேவை என்றால் அதற்குத் தகுந்தாற்போல்தான் அழைப்பும் கொடுக்க வேண்டுமே தவிர இப்படித் தமிழகம் முழுவதும் உள்ளவர்களுக்கு அழைப்பு கொடுத்து, 30,000 பேர்கள் வந்து, அவர்கள் தங்குவதற்கோ, திரும்பி ஊருக்குப் போவதற்கோ பாதுகாப்பு இல்லாமல் இருப்பது நல்லது அல்ல. இதை எதிர்காலத்திலே ஒழுங்கு படுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அன்டச்சபிளிட்டி வழக்குகளைப் பொறுத்தவரையில், குற்றம் செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது இது ஒரு வியாபாரம் போல மாற்றப்படுகிறது. யாராவது ஒரு மனு போட்டால் அதை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அங்கே ஏதோ செய்து அவர்களை ஜாமீனில் விட்டு விட்டுப் போய்விடுகிறார்கள். குறிப்பிட்ட தேதியைச் சொல்லி அன்றைக்கு அவர்களை வரச்சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். பத்து ஈரங்கிகள் நடக்கும்; பிறகு அங்கே சமாதானம் நடக்கும், எனவே, நான் கேட்பதெல்லாம், எந்தப் பகுதியிலே தவறு நடந்தாலும் உரியவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதுதான் துறைக்கு அழகே தவிர, சமாதானம் பேசி, அதனால் வரும் தவறுகளின் காரணமாக காவல்துறைக்குக் கெட்ட பெயர் ஏற்படக்கூடாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நகரங்களிலேயும், கிராமங்களிலேயும் வழக்குகள் போகின்றன. யார் வழக்கு கொடுத்தாலும் சட்டப்படி, வழக்கு பதிவு செய்யப்பட்டு, இரசீது கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. கொஞ்ச காலம் அந்த முறையைக் கையாண்டார்கள். ஆனால் இப்போழுது பெரும்பகுதியில் அந்த முறை கடைப்பிடிக்கப்படுவதில்லை. வழக்கு வாங்குவதில் இரண்டு குரூப்புகள் இருக்கின்றன. ஏட் இருப்பார், இன்னொரு பக்கம் ரைட்டர் இருப்பார். இவர் முன்னால் வாங்குவதா, அவர் முன்னால் வாங்குவதா என்ற பிரச்சனை நடக்கும். பிறகுகூட அதை வாங்குகிறார்களே தவிர, அதைப் பதிவு செய்வதில்லை: இரசீது கொடுப்பதும் இல்லை. இந்த நிலையைப் போக்க வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 மே 5

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஒருவன் திருடி விட்டான் என்று புகார் வந்தால், அவனை 3 நாட்கள் வரையில் தேடுவார்கள், அதற்குள் அவன் கிடைக்க வில்லை என்றால், அவனுடைய மனைவி, அவனுடைய குழந்தைகள், அவனுடைய அம்மா, அப்பா ஆகிய எல்லோரையும் கொண்டு போய் ஸ்டேஷனில் வைத்துவிடுகிறார்கள். ஏன் இப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால், அந்தப் பெற்றோர் களிடம் அவர்கள் சொல்கிறார்கள், உங்கள் மகனைக் கொண்டு வந்து ஒப்படையுங்கள் உங்களை விட்டு விடுகிறோம் என்று இந்த நிலையில் நடப்பது நல்லது அல்ல. எனவே, யார் தவறு செய்தாலும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் தவிர, குடும்பத்தையே அலைய விடுவது நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நகை திருட்டுக்களைப் பொறுத்தவரையில் பார்த்தால், பலயிடங்களில் இலட்சக் கணக்கான ரூபாய்க்கும் திருட்டுப் போகிறது; பத்து ரூபாய்க்கும் திருட்டுப் போகிறது. ஆனால் திருட்டுப் போகும் இந்த நகைகளெல்லாம் உண்மையிலேயே அந்த நகை முழுமையும் கிடைப்பதாக எனக்குத் தெரியவில்லை. சிலயிடங்களிலே முழுமையாகக் கிடைக்கின்றன; சிலயிடங்களிலே கோர்ட்டில் போய் வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். கோர்ட்டுக்குப் போனால் பாதி கிடைக்கிறது, பாதி கிடைக்க வில்லை. இது என்ன என்று கேட்டால், நாங்கள் கொடுத்து விட்டோம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட முறையில், திருட்டு கொடுத்தவர்களுக்கு முழுமையாக அவைகள் கிடைப்ப தில்லை. இது முழுமையாகக் கிடைக்க, ஏதாவது நகை கிடைத்தவுடன், இது ஒரு பவுன் தோடு, இது அரை பவுன் மோதிரம் என்று அப்படியே அச்சிட்டு அந்தத் திருட்டுக் கொடுத்தவர்களுக்கு ஒரு கடுதாசி கொடுத்து விட வேண்டும். அந்தக் கடுதாசியை வைத்து அவர் கோர்ட்டிலே பெறவேண்டும். அந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.



1986 மே 5] [திரு. பொ. உத்திராபதி]

அதைப்போல, விவசாயத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் கிராமப்புறங்களிலே சட்டக்கூலி கேட்கிறார்கள். சட்டக் கூலியே தஞ்சை மாவட்டம் தவிர வேறு எந்த மாவட்டத்திலேயும் கிடைக்கிறதே இல்லை. 8, 10 ரூபாய் கிடைப்பதில்லை, 5, 4 ரூபாய் என்றுதான் செங்கல்பட்டு மாவட்டத்திலேயெல்லாம் கிடைக்கிறது. ஆனால், சட்டக்கூலி வாங்கிக் கொடுப்பதற்குப் பதிலாக, இப்படிக் கூலி கேட்கிற அவர்களுக்குப் பாதகமாக, நிலப் பிரபுக்களுக்கு ஆதரவாகத்தான் காவல்துறை பலயிடங் களில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அதையெல்லாம் போக்க வேண்டும். அந்தப் பொதுமக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும்; அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பெண்களை அழைத்துக்கொண்டு வந்து போலீஸ் நிலையத்திலே வைக்கக்கூடாது என்று சட்டம்கூட இருக்கிறது. ஆனால் அதைக் கடைப்பிடிக்கிறார்களா? கடைப்பிடிப்பது கிடையாது. பலயிடங்களில் பார்த்தால் பெண்கள் காவல் நிலையத்திலேயே கற்பழிக்கப் பட்டார்கள் என்று பத்திரிகையிலே வருகிறது. இப்படிப் பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. நான் மொத்தமாக எல்லாவற்றையும் சொல்லவில்லை. இதையெல்லாம், தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதோடு, தவறு செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். . . . . என்றும் கேட்டுக் கொள்கிறேன். கும்பகோணத்தில் கல்லூரியிலே ஒரு மாணவன் தகராறு காரணமாக காவல் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு போய் அடித்துக் கொல்லப்பட்டான். இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. கேட்டால், தற்கொலை என்று சொல்கிறார்கள். ஒரு கொலை நடந்து மறைக்கப்பட்டு இருக்கிறது. எப்படி தற்கொலை செய்ய முடியும்? எப்படி கயிறு கட்டி சாக முடியும்? இப்படி போலீஸ் நிலையத்தில் வைக்கப் பட்ட அந்த கைதியை அடித்து கொன்றவுடன், அவன் தூக்கு போட்டுக் கொண்டான் என்று கூறுவது சரியில்லை.

(பிற்பகல் 12-30)

சீர்காழி தாலுக்காவில் ஒரு முஸ்லீம் அம்மையார் கொலை செய்யப்பட்டுவிட்டார்கள். அதிலே ஒரு ஹரிஜன மூர்த்தி கைது செய்யப்படுகிறார். அவர் அடிக்கப்பட்டு செத்ததற்கு தஞ்சை மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள் மருத்துவமனையில் அவன் இறந்துவிட்டதாக சொன்ன பிறகு அவனுடைய தந்தையிடம் அவனை ஊருக்கு கொண்டு போக வேண்டுமானால் ரூ. 2,000 செலவாகும் என்று கூறி அங்கேயே புதைத்துவிட்டார்கள். இன்னும் விசாரணையில் இருக்கிறது. இந்த மாதிரி காரியம் நடக்கக்கூடாது. உண்மையை விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாயவரம் டி.எஸ்.பி. எல்லைக்குள் பல வழக்குகள் மறைக்கப் படுகின்றன. சமீபத்தில் ஒரு கொலை நடந்து மறைக்கப்பட்டு இருக்கிறது. எனவே இவற்றை பெரிய அதிகாரிகள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம், இரண்டாம் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தில் 3 குற்றவாளிகள் வழக்கு மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இது நடைமுறையிலே இருக்கின்ற விஷயம். போலீஸ்காரர்கள் அந்த கோர்ட்டில் புகுந்து அந்த 3-ல் ஒருவர் ஜெயராமன் என்பவரை அடித்து இழுத்துப் போகிறார்கள். வழியில் இருந்த அவருடைய தங்கை ஜெயலட்சுமியை 2442 நம்பர் உள்ள தனியார் வேனில் கடத்திச் சென்றிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டும். இது கோர்ட்டை அவமதிப்பது ஆகாதா என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டுள்ளேன்.

அடுத்து வேதாரண்யத்தில் கருப்பம்புலம் என்பது ஒரு பெரிய ஆதிக்க சக்தி உள்ள இடம். எங்கள் கட்சிக்காரர் சா. கி. முருகையன் பஞ்சாயத்துத் தேர்தலில் நின்றார்கள். சிதம்பரம் மகன் பாஸ்கர் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர், அந்த ஹரிஜன குடும்பத்தை அடித்து, அவர்கள் மீது வழக்கு போடுகிறார். வழக்கை எடுக்கவில்லை, நான் போய் வழக்கை எடுக்கச் சொன்னேன். வேதாரண்யம் காவல் துறையும் டி.எஸ்.பி. சொல்கிறார். அந்த ஊரிலே யாரும் சாட்சிக்கு வரமாட்டார்கள். சாட்சிக்கு வந்தால் அந்த ஊரிலே





யாரும் இருக்க முடியாது. சாட்சி இல்லாமல் நான் எப்படி வழக்கு போட முடியும் என்றார். நான் 'நீங்கள் வழக்கு போடுங்கள்', என்று சொல்கிறேன். இதற்கு பிறகு அவரிடமிருந்து 7 ஆடுகள், 10 மூட்டை நெல், ஒரு சினை மாடு, 45 குறுநிலம் சவுக்கு மரம் எல்லாம் வெட்டியாகிவிட்டது. இதுவரையில் 7 பேர் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பாக்கி பேர் மீது நடவடிக்கை இல்லை. தமிழகத்தில் பேர் பெற்ற இடம் கருப்பம்புலம். ஆதிக்க சக்திகளுக்கு காவல் துறையினர் தலை வணங்காமல் நியாயத்திற்கு ஏழை எளியவர்கள் பக்கம் நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாதிக்கப்பட்ட சிதம்பரம் பொருள்களை மீட்டுக் கொடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து பட்டுக்கோட்டை தாலுக்கா கரிசைக்காடு. ஒரு ஹரிஜனப் பையனும் வேறு ஜாதி இந்துப் பெண்ணும் போய் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணியிருக்கிறார்கள். இதற்காக பெரும்பகுதி பேர் திரண்டு ஊரில் அவர்களை விரட்டி யிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் காவல் துறையில் நடவடிக்கை இல்லை. காவல் துறையின் கை கட்டப் பட்டிருக்கிறது. இதை உடனடியாக விசாரிக்க வேண்டும்.

அடுத்த கோரிக்கை. முத்துப்பேட்டை சர்க்கிள் அலுவலகம் பொறுப்பில் 7 காவல் நிலையங்கள் உள்ளன. முத்துப்பேட்டை சர்க்கிள் நிலையத்தை பிரித்து கோட்டூரில் ஒரு சர்க்கிள் நிலையத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொரடாச்சேரி, வடபாதிமங்கலம், கூத்தா நல்லூர் காவல் நிலையங்கள் டி.எஸ்.பி. அலுவலகம் கீழ தஞ்சை திருத்துறைப்பூண்டி உள்ளது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கொரடாச்சேரி மேல தஞ்சை உட்பட்ட பகுதியில் இருக்கிறார். எனவே இந்த காவல் நிலையத்தை மேல தஞ்சையுடன் மன்னார்குடி டி.எஸ்.பி. யுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது பொது மக்களுக்கு ஆதாரவாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 மே 5

அடுத்து தீயணைப்பு நிலையம். இப்போது இருக்கின்ற வண்டிகள் எல்லாம் பெரும்பகுதி சரியாக இல்லை என்பதால் ஸ்டார்ட் பண்ண மாட்டேன் என்கிறது. மன்னார்குடியில் பல ரிப்பேர் இருக்கிறது. சீர்படுத்தணும் என்றால் கவர்ன்மெண்ட் அனுமதி வாங்க வேண்டும் என்கிறார்கள். எப்போது கவர்ன்மெண்ட் அனுமதி வாங்குவது, எப்போது எரிகின்ற வீட்டை அணைப்பது? எனவே உடனே அனுமதி வழங்கி சீர்செய்ய வேண்டும். திருத்துறைப்பூண்டிக்கு தீயணைப்பு நிலையம் கேட்டிருந்தேன். இடம் கேட்டார்கள். இடமும் வாங்கி கொடுத்திருக்கிறோம். பொது மக்கள் மூலமாக, சர்வ கட்சி, ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர் எல்லோரும் சேர்ந்து கமிட்டி போட்டு இடமெல்லாம் வாங்கி கொடுத்திருக்கிறோம். இந்த மாதக் கடைசியில் வண்டி கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டைச் செய்த அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவித்து இந்த மாதத்தில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து 700 காவல் துறை அதிகாரிகளுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மனுக்களை எல்லாம் மனிதாபிமான அடிப்படையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையினர் சில கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனமாகக் கேட்டு நிறைவேற்ற வேண்டும். காவல் துறையினருக்கு 20 நாட்கள் இருந்த விடுப்பு இப்போது 12 நாட்களாகக் குறைக்கப்பட்டு இருக்கிறது. இரவும் பகலுமாக அவர்கள் மனைவி, குழந்தைகளைப் பிரிந்து விட்டு பொதுச் சேவையில் ஈடுபடுகிறார்கள். எனவே அவர்களுக்கு 20 நாட்கள் அந்த லீவை வழங்க வேண்டும்.

உணவுப்பண்டங்கள் என்பதைப் பொறுத்தவரையில் 24 கிலோ அரிசி கொடுக்கப்பட்டது. அது இப்போது 12 கிலோவாகக் குறைக்கப்பட்டுவிட்டது. மீண்டும் 24 கிலோ அவர்களுக்கு வழங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல் காவல் துறையில் உள்ளவர்களின் குடும்பத்தில்



1986 மே 5] [திரு. பொ. உத்திராபதி]

உள்ளவர்களுக்குந் தகுதி அடிப்படையில் வேலை கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவலர்களுக்கு 20 யூனிட் மின்சாரம் இலவசமாகக் கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இதுவரையில் அது வழங்கப்படவில்லை. இனிமேலாவது அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உதவி ஆய்வாளர்களுக்கு மேலே இருக்கும் எல்லா அதிகாரிகளுக்கும் வாகனம் வைத்துக்கொள்ள பெட்ரோல் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஆனால் காவலர்களுக்கும், தலைமைக் காவலர்களுக்கும் அது வழங்கப்படவில்லை. இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும்.

அடுத்து, மழைக் காலத்தில் காவலர்களுக்குக் கோட் கொடுக்க வேண்டும். அதாவது கடுமையான மழை வருகிறது. கடுமையான வெள்ளம் வருகிறது; புயல் வருகிறது. அப்போது காவல் துறையினரை அந்த இடங்களுக்கு அனுப்புகிறார்கள். சாதாரண டிரஸ்ஸோடு அவர்கள் அங்கே போய் பணியாற்ற முடியாது. எனவே அவர்கள் அனைவருக்கும் மழைக் கோட் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இதே சட்டமன்றத்தில் அவர்களுக்கு வீட்டு வாடகை கொடுப்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது இன்னும் வழங்கப்படவில்லை. அதையும் அவர்களுக்குக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 20 ஆண்டுகள் சர்வீஸ் ஆனால் அவர்களுக்குத் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். அதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. பெரிய அதிகாரிகளுக்கு யார் தேவைப்படுகிறார்களோ அவர்களுக்குத்தான் இந்த 20 ஆண்டுகள் சர்வீஸ் ஆனால் பதவி உயர்வு வழங்கப்படுவதாகக்

[திரு. பொ. உத்திராபதி] [1986 மே 5

தகவல் இருக்கிறது. எனவே உண்மையிலே 20 ஆண்டுகள் சர்வீஸ் ஆனவர்களுக்கு அந்த சர்வீஸ் அடிப்படையில் அதைக் கொடுக்க வேண்டும்.

சென்னை மாநகரில் முக்கியமான அலுவல்களுக்குப் பயன்படுத்தப்படும் காவலர்களுக்கு இப்போது 24 மணி நேரத்திற்கு 6 ரூபாய்தான் படி வழங்கப்படுகிறது. இன்றைக்கு கோட்டையிலே வேலை செய்பவர்களை எடுத்துக் கொண்டால் அநேகமாக நாம் வருவதற்கு முன்பாகவே வருகிறார்கள். நாம் போன பிறகுதான் போகிறார்கள். எனவே அவர்களுக்கு இவ்வாறு 6 ரூபாய் என்று வழங்குவதற்குப் பதிலாக ஒருநாள் ஊதியமாக வழங்குவதற்குரிய வகையில் அமைச்சர் அவர்கள் அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, காவலர்களுக்குச் சங்கம் வைக்க உரிமை கோரி பல ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டு வருகிறார்கள். போராட்டம் எல்லாம் முன்பு நடந்திருக்கிறது. அதனால் பல காவலர்கள் கூட பாதிக்கப்பட்டார்கள். மேற்கு வங்கத்தில் காவல் துறையினருக்குச் சங்கம் வைக்க உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிப்படி அவர்கள் சங்கம் வைக்க அந்தச் சங்கத்தின் மூலமாக பல்வேறு உரிமைகளை அரசாங்கத்திடமிருந்து கோரிப் பெற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, பெரிய அதிகாரிகளுக்கு ஸ்பெஷல் டியூட்டி என்ற வகையில் காவலர்களை அனுப்புகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை ஏன் இருக்க வேண்டும்? மூன்று வருஷங்களுக்கு முன்பு கூட இதுபற்றிப் பேசியிருக்கிறேன். அவர்களுக்கு உதவிக்கு வேண்டுமானால் வேறு ஆட்களைப் போட்டுக் கொள்ளட்டும். அவர்கள் தான் அதிகமாகச் சம்பளம் வாங்குகிறார்களே, தேவையானால் வேறு ஆட்களை அவர்கள் நியமித்துக்கொள்ளட்டும். ஆனால் காக்கிச் சட்டையைப் போட்டுக் கொண்டு போய் பெரிய அதிகாரிக்கு கத்தரிக்காய், முருங்கைக்காய் வாங்கிக் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலைமை இருக்கக் கூடாது. இப்படிப்பட்ட வகையில் பெரிய



1986 மே 5] [திரு. பொ. உத்திராபதி]

அதிகாரிகள் அவர்களைப் பயன்படுத்துகிறார்கள். பெரிய அதிகாரிகளும் காக்கிச் சட்டைதான் போடுகிறார்கள், இவர்களும் காக்கிச் சட்டைதான் போடுகிறார்கள். அந்தக் காக்கிச் சட்டை என்பதற்குக் கூட மரியாதை இல்லாமல் இவ்வாறு பெரிய அதிகாரிகள் செய்யக் கூடாது. அந்தப் பெரிய அதிகாரிகளுக்குத் தேவை என்றால் 150 ரூபாய், 200 ரூபாய் கொடுத்து வேறு சம்பள ஆட்களை வைத்துக் கொள்ளலாம். அல்லது அரசாங்கத்தின் மூலமாகவே அவர்களுக்கு பியூன் போன்றவர்களை நியமித்துக் கொடுக்கலாம். காவல் துறையினருக்கு ஸ்பெஷல் டியூட்டி என்ற வகையில் அங்கே அனுப்பி பெரிய அதிகாரிகளுக்கு இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யச் சொல்லக்கூடாது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பே இதே சட்டமன்றத்தில் இதுபற்றிப் பேசப்பட்டு அமைச்சர் அவர்களும் வாக்குறுதி கொடுத்தார்கள். இவ்வாறு காவலர்களை பெரிய அதிகாரி வீட்டுக்கு அனுப்ப மாட்டோம் என்று சொன்னார்கள். எனவே அந்த ஸ்பெஷல் டியூட்டி என்பதை உடனடியாக எடுத்துவிட வேண்டும். அடுத்து காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். அவற்றில் மழைக் காலத்தில் ரொம்பப் பேர் குடியிருக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எல்லா மழைத் தண்ணீரும் அப்படியே உள்ளேயே கொட்டுகிறது. ரிப்பேர் பண்ணுவதே கிடையாது. அந்த அடிப்படையில் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். குறிப்பாக மண்ணடி காவல் குடியிருப்புகள் அப்படித்தான் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் குடிதண்ணீரும் கிடையாது. மின்சாரமும் கிடையாது. இவைகளையெல்லாம் கவனித்து அரசு முழுமையாக அவர்களுக்கு வசதிகளைச் செய்து தர வேண்டும் என்று அரசுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

அதேபோல காவல் துறையினரையும் நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மகாத்மா காந்தி என்றைக்கு நள்ளிரவில் ஒரு பெண் தன் தாய் வீட்டிலிருந்து எல்லா நகைகளும் போட்டுக் கொண்டு தன் வீட்டிற்கு பயம் இல்லாது போகக் கூடிய ஒரு சூழ்நிலை உண்டாகிறதோ அன்றுதான் முழுமையான சுதந்திரம் என்று சொன்னார்களே, அதுபோல என்றைக்கு தமிழகத்தில்

ஒரு நல்ல பெண் அப்படி போகக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறதோ அன்றுதான் காவல் துறை தமிழகத்தில் சிறப்பாக செயல்படுகிறது என்று பொருள் என்பதைச் சொல்லிக் கொண்டு இன்றைக்கு அப்படி நல்ல பெண்கள் நள்ளிரவில் வெளியே போக முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, அதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு உண்மையான குற்றவாளிகள் பணம் வைத்திருந்தால் தப்பித்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. காவல் துறையின் பெரிய அதிகாரிகளை நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பணம் படைத்தவர்களாக இருந்தாலும் சரி, ஏழைகளாக இருந்தாலும் சரி, யார் குற்றவாளிகளோ அவர்களைப் பிடித்து தண்டனை கொடுக்க வேண்டுமே தவிர, பணம் படைத்தவர் என்பதால் தப்பிக்க விடக்கூடாது. இன்றைக்கும் கையில் 5 லட்சம் இருந்தால் ஒரு கொலையே செய்துவிட்டு தப்பித்து விடலாம் என்ற மனோபாவமே வளர்ந்து வருகிறது. இதைப் போக்க எதிர் காலத்திலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தொழிலாளர்கள், விவசாயிகள், ஏழை எளிய மக்கள் போராடக் கூடிய நோத்தில் காவல் துறையினர் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதற்குப் பதிலாக முதலாளிகளுக்கு பாதுகாப்புக் கொடுப்பது, அந்த மக்களுக்கும் போலீசாருக்கும் இடையே ஒரு விரோத மனப்பான்மையான எண்ணம் வந்துவிடுகிறது. ஆகவே, அதைத் தடுப்பதற்கு பெரிய அதிகாரிகளும், அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு அரசின் போலீஸ் கொள்கை தவறானது என்பதைத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. கு. சின்னசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் துறை மற்றும் தமிழ்நாடு தீ அணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற அனுமதி தந்தமைக்கு நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



குறிப்பாக இன்றையதினம் பேசுகிற நேரத்தில், ஒவ்வொரு மாற்றுக் கட்சி நண்பர்களும் காவல் துறையின் மீது குற்றங்களைச் சுமத்திக் கொண்டு வந்தார்கள். ஆனால் இந்திய வரலாற்றிலேயே தமிழக வரலாற்றிலேயே இதுவரை எத்தனையோ கட்சிகள் ஆட்சி நடத்தி வந்தாலும், காவல் துறையில் தலையீடே இல்லாத ஒரு ஆட்சி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் இந்த ஆட்சியில்தான் என்பதை இந்த உலகம் அறியும் என்பதை நான் இந்த நேரத்திலே அவைக்கு நினைவுப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆளுகின்ற அமைச்சர்களானாலும், சட்ட மன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும், இந்தத் துறையின் நடவடிக்கைகளில் நாங்கள் தலையிடுவதே இல்லை என்பதை இந்த நேரத்திலே அனைவரும் ஒத்துக் கொண்டேயாக வேண்டும். குறிப்பாக இதை பல காங்கிரஸ் நண்பர்களும் என்னிடத்திலே தமாஷாகப் பேசிக்கொண்டிருக்கிறபோது, குறிப்பிட்டிருக்கிறார்கள். உங்களுடைய கட்சியின் ஆட்சிக் காலத்திலேதான், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே தான், காவல் துறையில் தலையீடு இல்லாத ஒரு அரசு நடந்து வருகிறது என்று மனம் திறந்து என்னிடத்திலே பாராட்டி யிருக்கிறார்கள், அதை நான் காது கொடுத்துக் கேட்டிருக்கிறேன் என்பதையும் எடுத்துச் சொல்லிக் கொள்கிறேன்.

அந்த அடிப்படையில்தான் இன்று வரையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதையும் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழக காவல் துறை என்றாலே இந்தியத் துணை கண்டம் முழுவதும் ஒரு தனி மதிப்பு, மரியாதை நிலவி வருவதை பல உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்கள். விளக்கமாகப் பேசியும் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு மரியாதை, மதிப்பு இருப்பதற்குக் காரணம் தமிழக காவல் துறையின் அதிகாரிகள் மீது அவர்கள் வைத்திருக்கிற நம்பிக்கை தான் என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். எப்போதும் நம்பிக்கைக்கு உரியவர்கள் தமிழக காவல் துறையினர் என்ற காரணத்தினாலே தான், மதிப்பிற்குரிய, மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் சொந்த பாதுகாப்பிற்காக தமிழக காவல் துறையைச் சார்ந்த அதிகாரிகள் நியமிக்கப்

பட்டிருக்கிறார்கள். நம்முடைய மதிப்பிற்குரிய துணை ஜனாதிபதி அவர்களுக்கும் அதேபோன்று தமிழக காவல் துறையின் அதிகாரிகள் தாம் பாதுகாவலர்களாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். பஞ்சாபிலே கலவரம் நடந்தபோது மட்டுமல்ல, இந்தியத் துணை கண்டத்திலே வேறு எங்கு அடக்க முடியாத கலவரம் நடந்தாலும் அங்கே நம்பிக்கையோடு அனுப்பி வைக்கப்படுகின்ற காவல் துறையினர், மைய அரசால் முழு நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்ளப்படுகின்ற காவல் துறையினர், தமிழக அரசின் காவல் துறையினர் தாம் என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றையதினம் காவல் துறையிலே இருக்கின்ற உயர் அதிகாரிகளை தேர்வு செய்கின்ற நேரத்தில் அரசின் ஆட்சியிலே இருக்கின்றவர்களின் எந்தவிதமான தலையீடும் இல்லாமல், தேர்வுக்கு வந்தவர்களை தகுதி அடிப்படையிலே, திறமை அடிப்படையிலே தேர்வு செய்யப்படுகின்ற ஒரு துறையாக அது தமிழகத்திலேதான் நடைபெற்று வருகிறது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறையில் தேர்வு செய்யப்பட்டவர்களைப் பார்த்தால் கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் இப்படி அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும், கட்சி சம்பந்தப்படாதவர்களும் அதில் இருக்கிறார்கள். ஆகவே தேர்வு செய்கிறபோது தலையீடு இல்லாமல், தகுதியின் அடிப்படையில் அதிகாரிகள் தேர்வு செய்கிற ஒரு முறை தமிழகத்தில் நடைபெற்று வருகிறது என்பதைக் கூற கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே நடந்து வருகிற பல்வேறு தவறுகளை காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சொன்னார்கள். குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் கடத்தல் சக்ரவர்த்தி என்று பெயர் பெற்ற சோப்ராஜ் சிறையிலிருந்து தப்பித்துச் சென்றான். பத்திரிகையில் பார்த்தோம், உலகம் முழுவதும் இதுபற்றி தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் டெல்லி திஹார் சிறைச்சாலையில் நடைபெற்றது. அந்தச் சிறைச்சாலை யாருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கிறது என்பதை தயவுசெய்து அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



**திருமதி டி. யசோதா :** தலைவர் அவர்களே, டெல்லி சிறைச்சாலையிலிருந்து தப்பித்து விட்ட பிறகு, அங்கே யிருக்கிற போலீஸ் அதிகாரிகள் திறமையாக செயல்பட்டு மறுபடியும் அவனை பிடித்து உள்ளே அடைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. கு. சின்னசாமி :** துணைத் தலைவர் அவர்களே, அங்கேயிருந்து தப்பித்துச் சென்ற நிகழ்ச்சி நடைபெற்றது என்பதைத் தான் குறிப்பிட்டேன். அடுத்து, காவல் துறையைப் பொறுத்தவரையில் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அதனை நாடிச் செல்கிற நிலைமை இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்தால், காவல் நிலையத்தில் ஏதாவது ஒரு சம்பவம் என்றால், எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் அங்கே போகிற நிலைமை இருக்கிறது. சில நேரங்களில் நாம் செல்கிற காரியம் நடக்கும். சில நேரங்களில் கோரிக்கை உண்மைக்குப் புறம்பானதாக இருந்தால் நடக்காமல் இருக்கும். ஆகவே கோரிக்கை நிறைவேறவில்லையே என்ற ஆத்திரத்தில் தான் இங்கே பேசி தீர்த்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல தமிழகத்தில் இருக்கிற எந்தத் துறையாக இருந்தாலும் அவற்றை பாதுகாக்கிற பொறுப்பு காவல் துறைக்கு இருக்கிறது. மின்துறையில் மின்சாரத் திருட்டு நடைபெற்றால் அவர்கள் உடனே காவல் துறையைத்தான் நாடுகிறார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் கடன்களை கட்டாயப்படுத்தி வசூல் செய்ய வேண்டுமென்றால் அவர்களும் காவல் துறையைத் தான் நாடுகிறார்கள். அதேபோல வருவாய்த் துறையில் வரி வசூலிக்கிற நேரத்தில் காவல் துறையைதான் அவர்களும் நாடுகிறார்கள். இப்படி நடக்கிற ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் ஏற்படுகிற விளைவுகளுக்கு காவல் துறை தான் குற்றம் சாட்டப்படுகிறது. வரி வசூல் செய்கிறபோது தகராறு அல்லது வேறு ஏதாவது சம்பவம் நடந்துவிட்டால் முதலாவதாக குற்றம் சாட்டப்படுகிற நிலையில் காவல் துறை இருக்கிறது. இந்த நிலைமைதான் இன்றைக்கு தமிழக காவல் துறைக்கு இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. வே. கு. சின்னசாமி] [1986 மே 5

இன்றையதினம் ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு ஜீப் கொடுக்க வேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு டீசல் ஜீப் கொடுக்க வேண்டும்; அல்லது ஒரு வேன் கொடுக்க வேண்டும். இங்கே சொல்கிறபோது சர்க்கிளுக்கு ஒரு வாகனம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றையதினம் மக்கள் தொகை அதிகமாகியிருக்கிறது. அதேபோல பிரச்னைகளும் அதிகமாகி இருக்கின்றன. இந்த நிலையில் காவல் நிலையத்திற்கு ஒரு ஜீப் அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விளக்கக் குறிப்பில், அரசு மேலும் ரூபாய் 350 இலட்சம் செலவில் 150 காவல் நிலையக் கட்டடங்களையும், ரூபாய் 331.71 இலட்சம் செலவில் 95 காவல் நிலையக் கட்டடங்களையும் கட்ட தீர்மானித்துள்ளது என்று கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை கொண்டு வர விரும்புகிறேன். பெரியார் மாவட்டத்தில் கடத்தூர் என்ற ஊரில் ஒரு காவல் நிலையம் இருந்து கொண்டிருக்கிறது. அது கோபிசெட்டிபாளையத்தில் இருக்கிற காவல் நிலையம். அதற்கு சொந்த கட்டடம் கிடையாது. 1977 ஆம் ஆண்டில் சட்ட மன்ற உறுப்பினராக ஆனதிலிருந்து நான் இதுகுறித்து கேட்டுக் கொண்டிருக்கிறேன். இதுவரையில் கட்டடம் கட்டப்படவில்லை. ஆகவே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற கட்டடங்களில் அதுவும் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் அந்த ஊர் சாதாரண கிராமம். குடியிருப்பதற்கு வீடு கூட கிடையாது. காவல் நிலையம் இப்போது இருப்பது சின்ன சிமெண்ட் கொட்டகை போல இருக்கிறது. சப்-இன்ஸ்பெக்டர் சற்று உயரமானவராக இருந்தாலும் தலையில் இடித்துக்கொள்கிற நிலைமை இருக்கிறது. வெயில் நேரங்களில் யாரும் உள்ளே உட்கார முடியாது. ஆகவே கடத்தூர் காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 5] [திரு. வே. கு. சின்னசாமி]

(பிற்பகல் 12-50)

அடுத்து, பெரியார் மாவட்டத்தில் இராயர்பாளையம் என்ற பகுதி இருக்கிறது. இராயர்பாளையம் பகுதியில் திருடுவது என்பது இன்றைக்கு நேற்றல்ல, 50, 60 ஆண்டு காலமாக அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் திருட்டுத் தொழிலைத்தான் அதிகமாக செய்து வந்தார்கள். அந்தப் பகுதியில் ஒரு காவல் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்களிடம் எடுத்துக் கூறி இருந்தோம். அங்கே ஒரு புறக் காவல் நிலையம் இருந்ததை, இன்றைக்கு காவல் நிலையமாக மாற்றம் செய்து தந்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அந்தப் பகுதி மக்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று, மரியாதைக்குரிய இங்கே இருக்கின்ற அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்வது இராயர்பாளையம் பகுதிக்கு நீங்கள் நேரடியாக வாருங்கள். நேரடியாக வந்து அவர்களோடு பேசி, அவர்களைத் திருத்துவதற்கு ஏதாவது முயற்சியை நீங்கள் செய்ய வேண்டும். குறிப்பாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசு ஏற்பட்டதற்குப் பின்பு, அந்தப் பகுதியிலே கல்விக்கூடங்கள் ஏற்பட்டன. 1977 வரை அங்கே எந்த ஆரம்பக் கல்வி நிலையமும் கிடையாது. அதற்குப் பின்புதான் ஆரம்பக் கல்வி நிலையங்கள் எல்லாம் ஏற்பட்டன. அதற்குப் பின்புதான் சத்துணவுக் கூடம், பள்ளிக் கட்டிடம் எல்லாம் கட்டித் தரப்பட்டது. ஓரளவிற்கு அங்கே உள்ள மக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் திருந்தி இருக்கிறார்கள். கல்வி அறிவு வளர்ச்சியை வளர்த்திருக்கிறார்கள். மரியாதைக்குரிய பிற்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்கள் உதவியோடு, கடந்த ஆண்டு அங்கே மாணவர்கள் தங்கும் விடுதி ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 10, 15 பேர்கள் தற்போது படித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு பகுதியில் இருந்து கொண்டு இருப்பவர்கள் பல குற்றங்களைச் செய்து கொண்டு வந்தவர்கள், அந்தக் குற்றங்களை அவர்கள் தொடர்ந்து செய்து வருகிறார்கள். எனவே அப்படிப்பட்டவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன், அந்தப் பெரும்பகுதி குற்றங்களை, கொள்ளைக்

குற்றங்களைச் செய்பவர்களுக்கு ஜாமீன் எடுப்பதற்கு வழக்கறிஞர்கள் தயவுசெய்து செல்லாமல் இருக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தீயணைப்பு நிலையங்களைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே கொடுக்கிற நேரத்திலே கோவை மாவட்டத்தில் உள்ள சத்தியமங்கலம் என்று கொடுத்திருக்கிறார்கள். கோவை மாவட்டமாக இருக்கின்ற காலத்திலேயே, அங்கே சத்தியமங்கலம் தனி தாலுக்காவாக பிரிக்கப்பட்டு அங்கே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கு நம்முடைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இதுவரையில் தொடங்கப்படவில்லை. கோபியிலேயிருந்து, தாளவாடி வரை செல்ல வேண்டும் என்றால், நிச்சயமாக அங்கே இருக்கின்ற, கோபியிலே இருக்கின்ற தீ அணைப்புத் துறையால் செல்வது என்பது நடைபெற முடியாத காரியம். ஆகவே கோவையிலே இருக்கின்ற சத்தியமங்கலம் என்பதை மாற்றி, பெரியார் மாவட்டத்தில் இருக்கிற சத்தியமங்கலத்திற்கு இந்த ஆண்டு தீ அணைப்பு நிலையம் ஒன்றினைத் தயவுசெய்து உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்தத் தீயணைப்புத் துறையிலே இருக்கின்ற அந்த வண்டிகள் எல்லாம் மிகவும் பழமையானவையாக இருக்கின்றன. அவைகளை மாற்றி, புது வண்டிகளாக அமைத்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பழைய வண்டிகள் எல்லாம் போகும்போது பாதி வழியிலேயே நின்றுவிடுகின்றன. போகும்போது நின்றுவிட்டால், செல்ப் போட்டால்கூட அதை எடுக்க முடியாத நிலைமை இருக்கிறது. எனவே இந்த வண்டிகளை எல்லாம் நல்ல கண்டிஷனில் வைப்பதற்கு உரிய நிலைமையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் இந்தக் காவல் துறையில் குற்றப் பிரிவு, சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரிவு என்று இரண்டு பிரிவுகளாக வைத்திருக்கிறார்கள். சில நேரங்களில் பொது மக்கள் யாரிடத்திலே எந்த இடத்திலே எந்தப் புகாரை கொடுப்பது என்பதுகூட தெரியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே காவல்





நிலையத்தில் உள்ள சப்-இன்ஸ்பெக்டர் அல்லது சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகிய இரண்டு பேரும, 'லா அன்ட் ஆர்டர் மற்றும் கிரைம்' ஆகிய இரண்டு வேலையையும் ஒருவரே பார்க்கின்ற நிலைமை வர வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக ஜெயிலில் குற்றம் சாட்டப்பட்ட கைதிகளை அடைக்கிறார்கள். அவர்களை கோர்ட்டுக்கு விசாரணைக்காக அழைத்து வருகிறார்கள். எனவே இப்படிப்பட்ட நேரத்தில் காவல் துறையில் குறைவான ஆட்கள் இருக்கிறார்கள், ஆகவே போதிய அளவிலே இல்லாத நிலைமையில் அவர்கள் வெளியிலே பந்தோபஸ்துக்குச் செல்லுகின்ற நேரத்திலே இவர்களை அழைத்துச் செல்ல ஆட்கள் இல்லை என்று சொல்லி, அழைத்து வருவதற்கு காலதாமதம் ஆகிறது. இதனால் வாய்தாக்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஜெயிலில் இருக்கின்ற குற்றம் சாட்டப் பட்ட குற்றவாளிகளை அழைத்து வருவதற்கு தனியாக ஒரு பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று. காவல் துறையினர் இருக்கின்ற குடியிருப்பு களில் குடிநீர்ப் பிரச்சனை அதிகமாக இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட இடங்களில் காவல் துறையின் மூலமாக ஆழ் குழாய் கிணறுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல் குறிப்பாக போலீஸ்காரர்கள் ரிடையர் ஆகி விட்டால், அதற்குப் பிறகு, அவர்கள் குடும்பம் நடத்துவதற்கு அவர்களால் இயலவில்லை. ஆகவே கீழ்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் ஓய்வு பெறுகின்ற நேரத்தில், அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு, தங்களுடைய வாழ்வை நடத்துவதற்கு, வங்கிகளின் மூலம் கடன் உதவி செய்தால், அவர்கள் தங்கள் வாழ்க்கை நடத்த ஒரு தொழிலைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். எனவே அவர்கள் வங்கிகளின் மூலமாக கடன்கள் பெறுகின்ற திட்டத்தை காவல் துறையில் உருவாக்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் ஓய்வு பெற்றால், அவர்கள் சரியாக குடும்பம் நடத்துவதற்கான நிலைமைகள் இல்லை என்பதை அறிந்து,

காவல் துறையில் மிகவும் அனுபவம் பெற்ற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள், அவர்களைக் கொண்டு, ஓய்வு பெறுகின்ற அதிகாரிகளுக்கு வங்கிகளின் மூலம் குறிப்பிட்ட தொகையைக் கடனாகக் கொடுத்து, அதன் மூலமாக அவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு நீங்கள் நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடிக்கிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான காவல் துறை மற்றும் தீ அணைப்புத் துறையின் மானியக் கோரிக்கைகளின் மீது, பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களைத் தலைவராகக் கொண்ட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என் நன்றியைக் கூறி, என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே காவல் துறையினுடைய வீரதீர செயல்களையும், சிறப்புகளையும், அநீதிகளையும், அட்டூழியங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துக் கூறி இருக்கின்ற இந்த நேரத்திலே, இங்கே முதல்வரின் சிறப்புப் பரிசுகளைப் பெற்ற சிறப்புமிக்க, தீரமிக்க, வீரமிக்க காவல் துறை அதிகாரிகளை என் உளமாரப் பாராட்டுகிறேன். இந்தச் சிறப்புமிக்க தமிழகத்தினுடைய காவல் துறை இன்று சிறுகச் சிறுக சீரழிந்து கொண்டு வருவதை உண்மையிலேயே நாம் ஒத்துக்கொண்டு தான் ஆக வேண்டும். சிறப்பு ஒரு பக்கம் இருக்கின்றபோது, சிறப்பின்மை இருப்பதையும் நாம் இந்த நேரத்தில் எண்ணிப்பார்த்து அந்தச் சிறப்புக்கு மட்டும் வழி வகுக்கின்ற ஒரு நல்ல முடிவினை எடுத்தாக வேண்டுமென்ற ஒரு காரணத்தினாலேதான் நாம் இந்த மானியக் கோரிக்கையை இங்கே வைத்திருக்கிறோம். இங்கே, இந்தக் காவல் துறை சிறப்பிழந்து வருவதற்கு மிக மிக முக்கியமான காரணமாகக் கருதப்படுவது இங்கே பல ஆண்டு காலமாக திறமை மிக்க, சிறப்பு மிக்க காவலர்களை நியமிக்காதது ஒரு காரணமாக இருக்கக் கூடும் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே தமிழக அரசு விரைவில் திறமை மிக்க, நேர்மையான தேர்வாணைக் குழு ஒன்றை அமைத்து இங்கே சிறப்பான, திறமை மிக்க காவலர்களைத் தேர்ந்தெடுத்து இந்த மக்களுடைய



உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பதுடன், அவர்களுடைய மானத்தையும் காக்க வேண்டுமென்று இந்த வேளையிலே வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே தீ அணைப்புத் துறையை எடுத்துக் கொண்டு பார்ப்போமானால் அந்தத் துறையில் சிறப்பு மிக்கவர்கள், மிகவும் சிறப்பான முறையில் பயிற்சி பெற்றவர்கள் உள்ளபடியே அவசரத்துக்கு உதவக்கூடிய ஒரு துடிப்பான, அவசரத்துக்கு உதவக்கூடிய ஒரு மனப்பக்குவம் பெற்ற தீ அணைப்பு வீரர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வாகனமும் பிற வசதிகளும் சரி, அவைகள் சிறப்பான முறையிலே இல்லை என்பது இங்கே எல்லோருடைய கருத்தாகத்தான் இருக்க வேண்டும். இந்தத் தீ அணைப்பு வாகனங்களை எடுத்துக் கொண்டால் அந்த வாகனங்களெல்லாம் மிக மிக வயதானதாகவும், அவைகள் தள்ளிவிட்டால்தான் ஸ்டார்ட் ஆக முடியும் என்ற நிலையிலும் இருக்கின்றன. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் எனது பெரம்பலூர் தொகுதியில் இருக்கின்ற தீ அணைப்பு நிலையத்தில் இருக்கின்ற வாகனத்தைப் பார்க்கின்றபோது, அங்குள்ளவர்களுக்கு அவசரமாக உதவி செய்ய வேண்டுமென்று உள்ளத் துடிப்பு இருந்தபோதிலும் அந்த வாகனம் ஒத்துழைக்காத காரணத்தினால் அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்ய முடியாமல் தவிக்கின்ற நிலைமையை நானும் நேரிலே பார்த்திருக்கிறேன்.

(பிற்பகல் 1-00)

இங்கே சிறப்புகளைப் பற்றி நாம் அதிகம் பேசவேண்டும்தான். காவலர்களைப் பாராட்ட வேண்டும். பரிசுகளை வழங்க வேண்டும். அதேநேரத்திலே, பொறுப்புமிக்க அதிகாரிகள் நமக்கெல்லாம் எல்லா வகையிலும் பாதுகாப்பு அளிக்கக் கூடிய இந்தக் காவல் துறை அதிகாரிகள் அவர்களுடைய கடமையை மறந்து, நீதியை அங்கே இழந்து, அவர்கள் பணத்துக்கு அடிமையாகி பல இடங்களிலெல்லாம் காவல் துறையினராலேயே இந்த அநீதிகள் இழைக்கப்படுகின்றன என்ற கருத்து மக்களிடையே இங்கே நிலவி வருவதையும் நாம் மறுக்க முடியாது காவல் துறையில் தவறுகள் செய்வதற்கும், அநீதி வழி நடப்பதற்கும் இந்தச் சமுதாயம்தான் பொறுப்பு என்று மாண்புமிகு

[டாக்டர் க. நல்லமுத்து] [1986 மே 5

உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். அந்தச் சமுதாயத்தைச் சீரிய முறையில் இங்கே அமைத்துக் கொடுப்பதும் இந்த ஆட்சியின் கடமையாகத்தான் இருக்க வேண்டும். இங்கே ஒட்டுமொத்தமாக சமுதாயம் தான் பொறுப்பு என்று கூறுவதை விட சமுதாயத்தில் ஒரு சில நடுநிலை இல்லாதவர்கள், நீதி மனப்பான்மை இல்லாதவர்கள், ஒழுக்கம் கெட்டவர்கள் காவல் துறையை கையில் பிடித்துக் கொண்டு அவர்கள் எண்ணம் போல் நடப்பதற்கு காவல் துறையைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இது தான் உண்மை. ஆகவே, இங்கே அவர்கள் செய்கிற தவறுக்கு சமுதாயத்தின் மீது மொத்தமாக கூறுவது அவ்வளவு சாலச் சிறந்ததாக இருக்க முடியாது. இங்கே கொலை, கொள்ளை, கற்பழிப்பு, முகமூடிக் கொள்ளை, வரதட்சிணைக் கொடுமை என்று ஒவ்வொன்றாக கூறிக் கொண்டு இருப்பதை விட எனது பெரம்பலூர் தொகுதியில் இருக்கின்ற பெரம்பலூர் காவல் நிலையம், அரும்பாவூர் காவல் நிலையம், மங்களமேடு காவல் நிலையம் இதுபோன்ற காவல் நிலையங்களில் நடைபெறுகின்ற உண்மையில் நடந்த ஒரு சில உதாரணங்களை வைத்துக் கொண்டு இந்த காவல் துறையை எவ்வாறு சரி செய்ய வேண்டும் என்ற கருத்துக்கு நாம் வரலாம் என்று இங்கே ஒரு சில உதாரங்களைக் கூற விரும்புகிறேன். பெரம்பலூரில் காவல் நிலையம் இருக்கிறது.

* *

(பிற்பகல் 2.00)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு நேரடியாகத் தெரிந்து, புரிந்த தன்மையில் இருக்கின்ற குற்றச்சாட்டுக்களை இங்கே கொண்டு வரலாம். இந்த வழக்குகளுக்கு உள்ளே போகாமல் அவர்கள் அந்த குறைபாடுகளைக் கொண்டு வந்து சொல்லலாம். காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது குறைபாடுகளை, அவர்கள் குற்றங்களை இழைத்தால் அந்த குற்றங்களைச் சொல்லலாம். ஆனால் அவர்கள் இப்படி எல்லாம் செய்தார்கள் என்றால் நாளைக்கு இல்லை என்று வந்து விட்டால் சட்டமன்ற உறுப்பினா

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1986 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இங்கே பேசியதை வைத்து யாரும் வழக்கு தொடுக்க முடியாது. இதுவே பத்திரிகையில் வருமானால், வெளியிலே சொல்லப்படுமானால் அதை வைத்து வழக்கு தொடுக்க உரிமை உண்டு. ஆக அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவர்களைக் கேட்டால் இவர்கள் இல்லை என்று சொல்லி விசாரிக்கப் போகும்போது எதுவும் இல்லை என்று ஆகிவிட்டால் அந்த சட்டமன்ற உறுப்பினர் பேசிய பேச்சை வைத்து எந்த வழக்கும் யாரும் எழுப்ப முடியாது. ஆக அப்படிப்பட்ட தன்மையில் நாமே நம்முடைய கண்ணியத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். பெருமையான தன்மையும் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் ஆனால் வெளியே வழக்கு தொடுக்க, நடவடிக்கை எடுக்க இந்த அரசு ஆயத்தமாக இருக்கும். அதை எல்லாம் எழுதி கொடுக்கலாம். அதைப்பற்றி நாம் நடவடிக்கை எடுக்கலாம். அந்த குறைகளை, குற்றங்களைச் சொல்லலாம். சொன்னதாக தெரிகிறது என்று சொல்லுவது சரியல்ல. அந்த இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் இருந்ததாகத் தெரியவில்லை. அப்படி இல்லாதபோது இப்படி செய்கிறார், போகிறார் என்று சொல்லுவது எல்லாம் பொருந்தி வராது. இது நல்லது அல்ல. ஆகவே அந்தப் பகுதியை நீக்கி விடலாம். மற்றவற்றைச் சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * அதை எல்லாம் நீக்கிவிடும்படி உத்திரவிடுகிறேன்.

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சம்பவங்களைப் பற்றி எல்லாம் அங்கே பாதிக்கப்பட்ட தம்பதிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாநில காவல் துறை தலைவர் அவர்களுக்கும், மாவட்டக் கண்காணிப்பாளர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் புகார் மனுக்களை அனுப்பியிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் நடந்தது 21—1—1986. இன்றுவரை அதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதை நான் ஏன் இந்த மன்றத்திலே கூற விரும்பினேன் என்றால், அவர்கள் அனுப்பிய புகார் மனுக்கள் எல்லாம் அந்த காவல் நிலையங்களுக்குச் சென்றாலும்,

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அங்கு இருக்கிற காவல் துறை அதிகாரிகள்தான் விசாரணை செய்கிறார்கள். அவரே விசாரணை செய்கிறபோது அவர்கள் அந்தத் தம்பதியினரைப் பார்த்து கேட்கிறார்கள், நீங்கள் என்ன புகார்கள் அனுப்பினாலும், அவைகளை எல்லாம் நாங்கள் தான் விசாரிப்போம். உங்களுக்கு எந்த விதத்திலும் தொல்லைகளைக் கொடுக்க முடியும். ஆகவே இன்றைக்கு நாங்கள் கொடுக்கிற வெள்ளைப் பேப்பரில் கையெழுத்து போட்டுக் கொடுத்துவிட்டால், பிரச்சினை முடிந்தது, என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு.) . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்றபோது, அந்தத் தம்பதியர்கள் முதலமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும், மற்றவர்களுக்கும் இதுபற்றி புகார் மனுவை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்தப் புகார் மனுவை உறுப்பினர் அவர்களுக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்று கருதுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் இதுபற்றி சொல்லிவிட்டதன் காரணமாக, அவரிடத்திலே கொடுத்திருக்கின்ற அந்த புகார் மனுவை, பேரவைக் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு தருவார்களேயானால், அதன் மீது உள்துறை செயலாளர் மூலமாக, உயர் அதிகாரிகள் மூலமாக, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த அவையில் உறுதிமொழி தருகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து :** நன்றி. இங்கே கற்பழிப்பு பற்றி முன்பே கூறிவிட்டேன். நான் கொலைகள் பற்றி கூற விரும்பவில்லை. இங்கே திருட்டைப் பற்றிக் கூற விரும்புகிறேன். திருட்டிலே பல வகை உண்டு. பிக்பாக்கெட்டும் திருடு தான். வீட்டிலே கன்னம் வைத்துத் திருடுவதும் திருடு தான். வங்கிகளில் கொள்ளையடிப்பதும் திருடுதான்.

என்னுடைய பெரம்பலூர் தொகுதியிலே ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா இருக்கிறது. அந்த வங்கியிலே பல கையாடல்கள் நடைபெற்றிருப்பதாக எனக்கு நிறைய புகார் மனுக்கள் வந்தன. வந்த மனுக்களையெல்லாம் 'த்ரூ ப்ராப்பர் சேனல்' மூலமாக





எந்த அளவிற்கு அனுப்ப முடியுமோ, அந்த அளவிற்கு அனுப்பச்
செய்தேன். அங்கே பெருமுயற்சி எடுத்துக் கொண்டு, காவல்
துறை அதிகாரிகளிடம் மிகவும் பணிவோடு, இவற்றுக்கு எல்லாம்
தயவுசெய்து, தக்க நடவடிக்கை எடுங்கள் என்று வேண்டி
விரும்பிக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர்கள் நான்
கொடுத்த ஒரு சில புகார் மனுக்கள் மீது நடவடிக்கை
எடுத்திருக்கிறார்கள். இங்கே ஒரு புகார் மனு 23—3—1985-ல்
கொடுக்கப்பட்டது. அதற்கு டி-ஆர். போட்டது 29—11—1985.
என்.ஆர்.ஐ. அக்கௌண்ட்டை மொஹமட் ஷரிப் என்பவர்
வைத்திருந்தார். என்.ஆர்.ஐ. அக்கௌண்டிலிருந்து ரூ. 28,000
களவாடப்பட்டு, கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றி
மொஹமட் ஷரீப் மூலமாக ஒரு கம்ப்ளெயிண்ட் கொடுக்கப்
பட்டது. அந்த கம்ப்ளெயிண்ட் மீது இதுவரை எந்த நடவடிக்
கையும் எடுக்கப்படவில்லை. இன்னும் எடுப்பார்களா என்ற
நம்பிக்கையை இழந்து விடுகிற நிலைமையிருக்கிறது. அந்த
வங்கியில் இதுபோன்ற நிறைய கையாடல்கள் நடைபெற்றிருக்
கின்றன. அங்கு வரகூர் என்ற பகுதியிலே இருக்கின்ற கீழ்ப்புலியூர்
கிராமத்திலே சிலோன் அகதிகள் மத்திய அரசின் மூலமாக
வங்கிக் கடன்கள் பெற்று, குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.
40, 50 பேர்கள் அதே வங்கியிலே தங்களுடைய சொந்த
சேமிப்பாக ரூ. 10,000, ரூ. 15,000 என்ற அளவில் வைத்திருக்
கிறார்கள். அந்தப் பணத்திலே அவர்கள் தேவைக்காக,
விவசாயத்திற்கு அல்லது சொந்த செலவினங்களுக்காக
எடுக்கின்றபோது அங்கே அவர் கையெழுத்து போட்டதுபோல்
ஃபோர்ஜரி செய்யப்பட்டிருக்கிறது. அதுபற்றி நானே
புகார் மனு அதே போலீஸ் ஸ்டேஷனிலே கொடுத்திருக்கிறேன்.
ஆனால் அதற்கும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
ஏழை மக்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்.
இலங்கையிலிருந்து அகதி மக்களாக வந்தவர்கள். அவர்களுக்கு
இந்த போலீஸ் நிலையத்தின் மூலம் எந்தவித உதவியும் இல்லை.
இதற்கு முன்பிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் இதைப் பற்றி
பேசியிருக்கிறார் என்று கேள்விப்படுகிறேன். நானும்
அவர்களுக்கு உதவி செய்கின்ற முறையில் தான் இதைச்
சொல்கிறேன். எனவே இதைக் குற்றச்சாட்டாக எடுத்துக்
கொண்டுவிட வேண்டாம். உணர்வு பூர்வமாக நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளுக்கு இருக்கிறது. அப்படிப் புகார்கள் செய்யப்பட்டதா என்ற விவரத்தை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் க. நல்லமுத்து :** தலைவர் அவர்களே, அந்தப் புகார்கள் மீது எல்லாம் அந்தந்தக் காவல் நிலையங்களிலே அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்ற காரணத்திற்காக மேல் அதிகாரிகளுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் புகார் மனுக்கள் எல்லாம் அனுப்பப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நண்பருடன் அந்த அருப்பாவூர் நகரத்திற்கு, நாங்களெல்லாம் வாக்கு சேகரிக்கச் சென்றோம். அந்த கான்டிடேட், எம்.எல்.ஏ. ஆகிய நான் எல்லோரும் போனோம். அங்கே இரண்டு அரசியல் பிரமுகர்கள் எங்களை அந்த ஊரில் வாக்கு சேகரிக்க விடாமல் தடுத்து நிறுத்தி தாக்குவதற்கு முயற்சி செய்தார்கள். அவ்வாறு முயற்சி செய்த காரணத்தால் நாங்கள் முதலமைச்சர் உட்பட அனைவருக்கும் தந்தி கொடுத்திருக்கிறோம்; பிட்டிஷன்களை மனுக்கள் கொடுத்திருக்கிறோம். பல போராட்டங்களுக்கு இடையிலே அங்கே எஃப்.ஐ.ஆர். போடப்படுவதாகக் கேள்விப்பட்டோம். ஆனால் அந்த எஃப்.ஐ.ஆர். மீதிலே இதுவரை ஏதாவது நடவடிக்கை எடுத்தார்களா என்றால் இல்லை என்று நான் கூறுகிறேன் என்றால், மேற்கொண்டு அவர்கள் அதே தவறைச் செய்து எங்களுக்கு இன்னும் துன்பங்களை விளைவிக்கும் அந்த வாய்ப்பிருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கே இந்த நிலை என்றால் இங்கே சாதாரண மக்களுக்கு எவ்வாறு பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது என்பதை வினாவாக எழுப்ப விரும்புகிறேன். இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. பாண்டுரங்கன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தின் காவல் தெய்வம் தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பேரவை முன் வைத்திருக்கின்ற காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். "நண்பனைக் காணாவிடத்து நெஞ்சாரவே புகழ்தல்" என்பதுதான் நண்பனைப் பற்றிப் புகழ்வதில் சிறந்த முறை என்று சொல்லுவார்கள்.



நம்முடைய போலீஸ் நண்பர்கள் தமிழகமெங்கும் பரவியிருக்கின்ற காரணத்தால் இந்த மாமன்றத்திலே அவர்கள் செய்கின்ற நல்ல சேவைகளைப் புகழ வேண்டிய கடமை நமக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய காவல் துறையைப் பொறுத்தமட்டில் நீண்ட நெடிய பெருமையுடையது. இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்லாமல், உலக நாடுகளிலே இருக்கின்ற காவல் துறைகளோடு ஒப்புமை கூறத்தக்க அளவிற்குச் சிறப்பு மிக்க ஒன்றுதான் நம்முடைய காவல் துறை. கொலை வழக்கானாலும், கொள்ளை வழக்கானாலும், திருட்டு வழக்கானாலும், அடிதடி வழக்கானாலும் நம்முடைய போலீஸ் அதிகாரிகள் இதுசம்பந்தமாகப் புலன் விசாரணை செய்து உடனுக்குடன் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து உரிய நடவடிக்கையெடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தருகிறார்கள்.

நான் தமிழ்நாடு காவல் துறை சம்பந்தமான ஆய்வுரையில் துருவி துருவிப் பார்த்தேன். சென்னையில் நடந்த கிரிமினல் குற்றங்கள்; தமிழகத்தில் பல மாவட்டங்களில் நடந்த கிரிமினல் குற்றங்கள், ஏன் பல தாலுக்காக்கள், கிராமங்கள் அளவிலே நடந்த குற்றங்கள் ஆகியவைகளை நம்முடைய திறமை மிக்க போலீசார் எவ்வாறெல்லாம் கண்டுபிடித்தார்கள் என்ற விவரங்கள் அதில் காணப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய அரசு போலீஸ் அதிகாரிகளுக்கு, போலீஸ்காரர்களுக்கு எவ்வாறெல்லாம் உதவி செய்தது என்பது பற்றியும் மிகத் தெள்ளத் தெளிவாக அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். திருவண்ணாமலையில், நான் வசிக்கும் தெருவிலேயே சில ஆண்டுகளுக்கு முன்னால் பாஸ்கர் என்ற ஒரு நபர், வேறொருவர் வீட்டிலே, ஆண் துணையில்லாத நிலைமையிலே ஒரு வயதான தாயாருடைய கழுத்தை சவரக் கத்தியால் அறுத்துக் கொன்று, அந்தத் தாயினுடைய கழுத்திலே இருந்த பொன் நகைகளையெல்லாம் களவாடிக் கொண்டு போய்விட்டார். போலீசார் இறந்தவருடைய கணவனையே முதலில் சந்தேகப்பட்டு அவரையும் விசாரிக்கத்

தவறில்லை. பிறகு அந்தக் கத்தி வீட்டின் பின்னாலே உள்ள கிணற்றிலேயிருந்து கண்டுபிடிக்கப்பட்டு, திருவண்ணாமலையிலே உள்ள முர்-இருந்தும் நிலையங்களைச் சார்ந்த அத்தனை நபர்களையும் விசாரணை செய்த பின்னர் ஒரு சவரக் கடையிலே அந்தக் கத்தியைக் களவாடிய நபரைக் கண்டுபிடித்து, பெங்களூர் சென்றிருந்த அந்த நபரை மிக லாவண்யமாகப் பிடித்து அவர் மீது 302 ஐ.பி.சி.யின்படி வழக்கு தொடர்ந்து தூக்குத் தண்டனைக் கூடப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பு இங்கே இந்த அறிக்கையில் இல்லை என்றாலும் அதை இந்த மாமன்றத்திலே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்றே நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 1-20)

அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியாகிய கலசப்பாக்கம் தொகுதியிலே, வானூர் என்ற ஊரிலேயிருந்த சரோஜா என்ற ஒரு பெண் வேலூரிலே ரிசர்வ் போலீஸ் கான்ஸ்டபிளின் வலையிலே சிக்கி கொலையுண்ட செய்தியைக் கூட நாம் செய்தித்தாள்களின் வாயிலாக சில ஆண்டுகளுக்கு முன்னால் படித்திருக்கிறோம். அந்த அம்மையார் கொலையுண்ட சம்பவத்தில் கூட மிகத் தந்திரமாகக் கண்டுபிடித்து, வேலூர் செஷன்ஸ் கோர்ட்டிலே 302 ஐ.பி.சி.யின் கீழ் வழக்கு தாக்கல் செய்து அதற்குக் கூட தண்டனை வாங்கித் தந்திருக்கிறார்கள். அந்தச் சிறு குறிப்பு இந்த ஆய்வுரையிலே இல்லை என்றாலும் அதையும் இந்த மாமன்றத்தில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதி அதையும் சொல்கிறேன். ஆகவே, நம்முடைய போலீஸ் நண்பர்கள் எல்லாம் மிகத் திறமையானவர்கள். செயல் திறன் கொண்டவர்கள். கம்ப்யூட்டரின் உதவியினால் தான் சாதாரணமாக வழக்குகள் தொடரப்படுகின்றன. ஒரு போலீஸ் ஹெட் கான்ஸ்டபிள் வாரத்தில் ஒரு நாளாவது அந்த பகுதியில் உள்ள கிராமத்திற்கு சென்று அங்கே நடக்கின்ற குற்றங்கள் சம்பந்தமான விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உண்டாகி இருக்கிறது. ஆகவே, வாரத்திற்கு ஒரு முறையாவது சென்று வருவார்களானால் கிராமங்களில் உள்ள குற்றங்கள் குறைய வாய்ப்பு இருக்கிறது. உதாரணத்திற்கு சொல்கிறேன். ஏதாவது கிரிமினல்



குற்றங்கள் நடக்குமானால் போலீஸ்காரர்களை ஆங்காங்கே நடக்கச் சொல்கிறோம். ஓடச் சொல்கிறோம். காரணம் என்னவென்றால் அந்தப் பகுதி மக்களுக்கு பயம் இருக்க வேண்டும் என்று கருதிதான் அதைச் செய்கிறோம். அந்த முறையிலே யாராவது ஹெட் கான்ஸ்டபிள் ஒருவரை வாரம் ஒரு முறை ஒரு கிராமத்திற்கு அனுப்பி வைத்தால் நல்ல பலன் கிடைக்கும், குற்றமும் குறையும் என்று சொல்லிக் கொள்கிறேன். அவ்வாறு செல்லும் போலீஸ் நண்பர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. இல்லையேல் அவர்களுக்கு வேறுவிதமான எண்ணங்கள் வளர வாய்ப்பு இருக்கும். அவ்வாறு செல்பவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்க அரசு முன்வர வேண்டும். அப்பொழுதுதான் நல்ல முறையில் அவர்கள் செயலாற்றுவார்கள். மேலும் வாக்கி டாக்கிகளை பெரும் அளவு வாங்கிக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஒரு வாக்கி டாக்கி வாங்கி கொடுக்க வேண்டும். அவ்வாறு வாங்கிக் கொடுத்தால்தான் ஒரு போலீஸ் அதிகாரி இன்னொரு போலீஸ் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு குற்றங்களை களைய வாய்ப்பு ஏற்படும்.

தற்போது இருக்கும் துப்பாக்கிகள் எல்லாம் மிகப் பழைய முறையான துப்பாக்கிகள். ஆனால் இப்போது வெளிநாடுகளில் பார்த்தோமானால் பல விஞ்ஞான ரீதியிலே செய்யப்பட்ட துப்பாக்கிகள் எல்லாம் வந்திருக்கின்றன. அது போன்ற துப்பாக்கிகளை வாங்கி நம்முடைய போலீஸ் நண்பர்களுக்குக் கொடுத்தால்தான் உரிய நேரத்தில் அவர்கள் தக்க முறையிலே பாதுகாப்பு கொடுக்க முடியும்.

அதுபோல ஜீப்புகளில் ஒரு போலீஸ் அதிகாரி வேறு போலீஸ் அதிகாரியுடன் பேசுவதற்கு போன் வசதிகளை செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு கொடுத்தால் தான் நம்முடைய போலீஸ் இன்னும் திறமையாக பணியாற்றக் கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இத்துறையிலே நாயை வைத்து கூட குற்றங்களை கண்டு பிடிக்கிறார்கள். பயிற்சி பெற்ற சிறந்த நாய்களை இந்தத் துறை ஒவ்வொரு மாவட்டத்திலும் வைத்து பராமரிக்க வேண்டும். அப்பொழுதுதான் உடனுக்குடன் அந்த நாய்களை குற்றம்

[திரு. மு. பாண்டுரங்கன்] [1986 மே 5

நடந்த இடத்திற்கு கொண்டு போய் குற்றங்களைக் கண்டுபிடிக்க வசதியாக இருக்கும். அந்த அளவிலே இந்த பயிற்சி பெற்ற நாய்களை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் போலீஸ் அதிகாரிகள் கணக்கில் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் சப்-இன்ஸ்பெக்டர்களும், அதற்கு கீழே உள்ள போலீஸ்காரர்களும் நிறைய இல்லை. இவர்களை உருவாக்க வேண்டிய அவசியம் நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அதையும் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல தமிழகத்தில் முதலமைச்சர் அவர்களுக்கு பெர்சனல் செல் என்று ஒரு விங் உருவாக்கித்தர வேண்டும். அவ்வாறு ஏற்படுத்தப்படும் பெர்சனல் விங்கில் உள்ள போலீஸ் நண்பர்கள், மாவட்டங்களுக்கும், தாலுக்காக்களுக்கும், கிராமங்களுக்கும் இங்கிருந்து நேரடியாகச் சென்று அங்குள்ள ஊர்த் தலைவர்கள், ஒன்றிய பெருந் தலைவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதுமட்டுமல்லாமல் போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள், பொதுத் துறையைச் சார்ந்தவர்கள், நிதித் துறையைச் சார்ந்தவர்கள் போன்றவர்கள் பற்றிய குறிப்பு எடுத்து நேரடியாக முதலமைச்சர் அவர்களுக்கு கொடுக்கும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை அவ்வாறு அந்த போலீஸ் நண்பர்கள் நேரடியாக தகவல்கள் கொண்டு வந்து முதலமைச்சரிடம் கொடுத்தால், நாட்டிலே இருக்கின்ற நிலை என்ன என்று தெரிந்து குற்றங்களை குறைக்க முதலமைச்சருக்கு வாய்ப்பு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாதாரணமாக 41 சி.ஆர்.பி.சி.யின் கீழ் சந்தேக கேஸ்களில், கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு வரும் ஏழை எளியவர்கள் மீது போலீஸ்காரர்கள் கேஸ் போட்டுவிடுகிறார்கள். ஆனால் அவர்களை விசாரித்து அவர்கள் அந்தப் பகுதியை சேர்ந்தவர்களா என்று கண்காணித்து நிரபராதியாக இருந்தால் விட்டுவிட்டு, உண்மையாக அவர்கள் மீது குற்றம் இருக்குமானால், சந்தேகம் இருக்குமானால் அவர்கள் மீது



1986 மே 5] [திரு. மு. பாண்டுரங்கன்]

41 சி.ஆர்.பி.சி. யின் கீழ் கேஸ் போட வேண்டுமென்று அறிவுறுத்த வேண்டுமென்று இங்குள்ள அதிகாரிகள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இரண்டு சாரார்கள் அடிதடிச் சண்டை போட்டுக் கொண்டால் சாதாரணமாக 160 ஐ.பி.சி. யின் படி வழக்கு கொடுக்கிறார்கள். அவர்களில் யார் அக்ரஸ்ஸார், யார் அக்ரஸ்வி என்பதைக் கண்டுபிடித்து அந்த அக்ரஸ்ஸார் மீது அதாவது யார் அதிகமாகத் தொந்தரவு கொடுக்கிறார்களோ அவர்கள் மீது வழக்கு போட வேண்டும். இருதரப்பார் சண்டை போட்டுக் கொண்டனர் என்றால், அவர்களில் மீனவர்கள் மீது மட்டும் போலீஸார் வழக்கு போட்டுள்ளார்கள் என்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சற்று முன்பு கூறினார்கள். இதுபோன்ற கிரிமினல் குற்றங்களில் அக்ரஸ்ஸார் யார் என்றும் அக்ரஸ்வி யார் என்றும் பார்த்து அக்ரஸ்ஸார் மீது வழக்கு போட வேண்டும் என்பதுதான் சட்டம். அதன்படி போலீஸார் அக்ரஸ்ஸார் மீது, மீனவர்கள் மீது வழக்கு தொடர்ந்துள்ளார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தீயணைப்பு சம்பந்தமாக ஒரு சிறு கருத்து சொல்லி அமைய முற்படுகிறேன். ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள தீயணைப்பு நிலையங்களிலுள்ள வண்டிகளில் பொருத்தப் பட்டுள்ள மோட்டார்கள் சில சமயங்களில் இயங்காமல் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சில நாட்களுக்கு முன்பு திருவண்ணாமலை கடைத் தெருவில் ஒரு பெரிய தீ விபத்து ஏற்பட்டது. மோட்டாரை இயக்கிப் பார்த்தார்கள். மோட்டார் சரிவர இயங்கவில்லை என்று சொல்லப்பட்டது. பிறகு அண்மையிலே இருந்த வேலூருக்கும் மற்றும் பல இடங்களுக்கும் அதிகாரிகள் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு உரிய வாகனங்களை வரவழைத்து சிறந்த முறையில் அந்தத் தீயை அணைத்தார்கள். அவ்வாறு அணைக்கப்பட்டதன் காரணத்தால் ஒரே ஒரு கடைதான் தீக்கு இரையானது. மற்ற கடைகள் எல்லாம் காப்பாற்றப்பட்டன. இவ்வாறு இந்த இரு துறைகளிலும் இருக்கின்ற அதிகாரிகள் மிகத் திறமையாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த அளவில் இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் வரவேற்று இரு சாராரும்

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு."

என்ற வள்ளுவரின் குறளுக்கேற்ப துணிந்து செயலாற்ற வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. எஸ். என். இராமசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்துள்ள காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழகக் காவல் துறை மிகவும் சிறப்பான முறையில் செயல்படுவது கண்டு நாங்கள் வரவேற்கிறோம். அதேநேரத்தில் நாட்டிலே ஏற்பட்டு இருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கும் பொது மக்களுடைய நலனுக்கும் காவல் துறையினர் பயன்பட்டு வருகிறார்கள். இன்றையதினம் நகரங்களிலும், கிராமங்களிலும் திருட்டுத்தனம் மிகவும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. பத்திரிகைச் செய்திகளைக் காலையிலே நாம் பார்க்கும்போது அடிக்கடி திருட்டுத்தனம் நடப்பது தெரிகிறது. கார்களிலும், மோட்டார் சைக்கிளிலும் சென்று தனியாகச் செல்லும் பெண்களிடம் தாலியையும், நகையையும் அபகரித்துச் செல்கிறார்கள். இதுபோன்ற நடவடிக்கைகள் இன்று இருந்து வருகின்றன. இவற்றை உடனடியாக நீக்க நமது காவல் துறையினர் செயல்பட வேண்டும்.

கிராமங்களில் சின்னச்சின்ன பிரச்சினைகள் நடைபெறுவது வழக்கம். அப்படி நடைபெறுகிறபோது சில சம்பவங்கள் போலீஸ் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றன. அந்தப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் உயர்மட்ட அதிகாரிகள் அவர்களை அழைத்துப் பேசித் தீர்த்துவிடலாம். ஆனால் அங்கே பிரச்சினைகள் பேசப்படும்போது ஆட்களைப் பொறுத்து அதனைப் பெரிதுபடுத்தும் நிலைமை இன்றைக்கு இருந்து வருகிறது. இதுபோன்ற நிலைமை இருக்கக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று



ஒரு திருட்டு வழக்கு சம்பந்தப்பட்டவரை காவல் துறையினர் தேடி வரும்போது அவர் கிடைக்கவில்லை என்றால் அவர்களுடைய குடும்பத்தினரை அழைத்து வந்து காவல் நிலையத்தில் வைத்து சில சித்திரவதைகள் செய்வது போன்ற நடவடிக்கைகள் இருந்து வருகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகள் இன்னும் நீடிக்கக் கூடாது என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.30)

அடுத்து, சந்தேகப்பட்டு யாரையாவது காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள் என்றால் அவர்களை உடனடியாக விசாரணை செய்யாமல் காவல் நிலையங்களிலேயே வைத்திருக்கிறார்கள். அவர்கள் விசாரிக்கப்படாமல் கோர்ட்டுக்குக் கொண்டு வருகிற வரையில் கிட்டத்தட்ட 15 நாட்கள், 20 நாட்கள் அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பதைப் பற்றியே சொல்ல முடியாத நிலைமை இருந்து வருகிறது. உண்மையிலேயே குற்றம் செய்யாதவர்கள் கூட இதற்கு ஆட்படுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல பெண்களை இரவு நேரங்களிலே போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வரக் கூடாது என்று சட்டம் இருந்தாலும் கூட இன்று போலீஸ் ஸ்டேஷனில் இரவு நேரங்களில் பெண்கள் அழைத்து வரப்படுகிறார்கள். அதுபோன்ற நிலைமை ஏற்படக் கூடாது என்று நான் மீண்டும் சொல்லிக் கொள்கிறேன். உண்மையிலேயே பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் ஏழைகளாக இருந்தாலும் கூட (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. எஸ். என். இராமசாமி:** வசதி குறைந்த ஏழைகளாக இருந்தால் அவர்கள் கொடுக்கின்ற கேஸ்களை எல்லாம் சரியாகக் கவனிப்பது கிடையாது என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே காவல் துறையினர் அதையும் நல்ல முறையில் விசாரிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்

அது போல லாரிகளை இரவு நேரங்களில் குடிவெறியில் ஓட்டுகிறார்கள். இதனால் விபத்துக்கள் அதிகமாகின்றன. இரவு நேரங்களில் குறிப்பிட்ட நேரம் வரைதான் ஓட்ட வேண்டும் அதற்குப்பிறகு குறிப்பிட்ட இடத்திலே நிறுத்திவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்கள் இது குறித்து ஒரு ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மேல் அவர்கள் ஓட்டினால் அவர்களுடைய லைசென்ஸ் ரத்து செய்யப்படவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். மேலும் லாரிகளை ஓட்டுகின்றவர்கள் அந்த இருக்கைகளில் அமர்ந்து ஓட்டாது, கண்டக்டர்கள் போன்று கூட இருப்பவர்களை கொண்டு ஓட்டச் செய்வதால் அதன் காரணமாக பல விபத்துக்கள் ஏற்பட்டு பல கோடிக்கணக்கில் நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது. அதுபோன்ற நிலைமைகளை மாற்றியாக வேண்டும். சில காவல் நிலையங்கள் ஊரிலிருந்து வெகு தூரங்களில் கிட்டத்தட்ட 25 மைல் தள்ளி உள்ளாக இருப்பதன் காரணமாக, ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ஒரு டீசல் ஜீப் ஒன்று வழங்கி பொது மக்களிடையே ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய நிலையை உருவாக்க வேண்டும். அந்தக் காவல் நிலையங்களுக்கு வண்டியை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல சிறிய சிறிய வழக்குகள் கூட பல கிராமங்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாத காரணத்தால் நீடிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே உடனடியாக சில்லரை வழக்குகளுக்கு குற்றப் பத்திரிகையை தாக்கல் செய்து விசாரணைக்கு கொண்டு வர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பயிற்சி பள்ளி ஒன்றை நெல்லை மாவட்டத்தில் அமைத்துத் தர வேண்டும் என்று நான் ஏற்கெனவே கேட்டிருக்கிறேன். அதுவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயே நெல்லை மாவட்டத்தில் அமைத்துத் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அது போல என்னுடைய தொகுதியில் தட்டார்மடம் என்னுமிடத்தில் ஒரு காவல் நிலையம் வேண்டும் என்று 3 ஆண்டுகளாகவே கேட்டு வருகிறேன். அந்தப் பகுதி ஒரு பதட்டப்பகுதியாக இருப்பதன்



காரணமாக அங்கு ஒரு காவல் நிலையம் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோலவே பேய்க்குளம் பகுதியிலே ஒரு புறக் காவல் நிலையம் அமைத்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாத்தான் குளத்தில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஐந்தாண்டுகளாக கேட்டு வந்ததன் காரணமாக ஒரு தீயணைப்பு நிலையத்தை இப்போது அங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதற்காக அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல என்னுடைய தொகுதியிலே நாசரேத் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் வேண்டும் என்று இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே கூட்டுறவு நூற்பு ஆலை அதிகமாக இருப்பதன் காரணமாக அங்கே தீயணைப்பு நிலையம் மிக மிக அவசியமாகத் தேவைப்படுகிறது. ஆகவே நாசரேத் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. தமிழரசன்: மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியம், தீயணைப்புத் துறை ஆகியவைகள் குறித்து இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் காவல் துறையின் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னால் பொதுவாகவே காவல் துறையில் அதிகமான முறையில் தலையீடுகளே இல்லை என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய பாராட்டுகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சமூக இயல் அறிஞன் சொல்கிறபோது, ஒரு நல்ல நாடு என்பது எப்படி இருக்க வேண்டும் என்றால், அந்த நாட்டிலேயே நீதிமன்றங்களும் காவல் நிலையங்களும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று சொன்னானாம். எந்த அளவுக்கு காவல் நிலையங்களும் நீதிமன்றங்களும் பெருகுகின்றனவோ அந்த அளவுக்கு அந்த நாட்டிலே அநீதிகளும், சமூகக் கொடுமைகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன என்று தான் அர்த்தம். ஆகவே நீதிமன்றங்களும் காவல் நிலையங்களும் இல்லாத நாடு தான் நல்ல நாடாக இருக்க முடியும் என்று ஒரு சமூக இயல் அறிஞன் சொன்னான். ஆனால்

[திரு. கு. தமிழரசன்] [1986 மே 5

இன்றைக்கு பெரும்பான்மையான கிராமப் பகுதிகளிலே அமைதியின்மை இருந்துகொண்டிருக்கிறது. மார்க்ஸ் மனித குல வரலாற்றைச் சொல்லுகிறபோது, மனித வரலாறு என்பது ஒரு வர்க்கப் போராட்டமாகத்தான் இருக்கிறது என்று சொன்னார். ஆனால் இந்தியாவிலே மனித வரலாறு என்பது ஒரு இனப் போராட்டமாகத்தான் இருந்துக் கொண்டிருக்கிற நிலைமையை இன்றைக்குப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. தினம் தினம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மேட்டுக் குடியினருக்கும் ஏதேனும் ஒரு சச்சரவு, தகராறு, போராட்டம் என்கிற வகையில் கிராமப் புறங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் தான் இன்றைக்கு நம்முடைய காவல் துறை குறித்த மானியத்தை நாம் இங்கு விவாதித்துக் கொண்டிருக்கிறோம். சமூக நீதியின் அடிப்படையில் பிரச்னைகளை நாம் அணுக வேண்டும். ஒரு அரசுக்கு நல்ல பெயர் வாங்கித் தருவதும், கெட்ட பெயர் வாங்கித் தருவதும் காவல் துறையின் கையில் தான் இருக்கிறது. ஏனென்றுச் சொன்னால் கிராமப்புறங்களில் இருக்கிற பாமர மக்கள், படிப்பறிவு இல்லாதவர்கள், ஏழை எளிய சாதாரண தொழிலாளர்கள், அத்தனைபேரும் அரசாங்கம் என்பதே காவல் துறை என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு அவர்கள் சாதாரண பிரச்னைகளுக்கு கூட காவல் துறையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். காவல் துறை தான் இந்த நாட்டின் அரசாங்கம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே காவல் துறை சீராக செயல்படுமானால் அரசாங்கத்திற்கு நல்ல பெயர் கிடைக்கும். எனவே அந்த வகையில் ஒருசில கருத்துக்களை என்னுடைய இயக்கத்தின் சார்பில் எடுத்து வைக்க விழைகிறேன்.

இன்றைக்கு காவல் நிலையங்களில் பதிவு செய்கிற குற்றங்களில் குற்றம் சாட்டப்படுகிறவர்களோ, அல்லது குற்றம் சுமத்துகிறவர்களோ, அல்லது பிராது கொண்டு வருகிறவர்களோ ஏறத்தாழ ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்கிற நிலைமை 50 விழுக்காட்டிற்கு மேல் இருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. காவல் துறை கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். மிகப் பெரும்பான்மையானவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிறவர்களே காவல் துறையில் குற்றம்



1986 மே 5] [திரு. கு. தமிழரசன்]

சாட்டப்பட்டவர்களாகவோ, பிராது கொண்டு வருபவர்களாகவோ இருக்கிறார்கள் என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு தாழ்த்தப்பட்டவர்களாகவே காவல் நிலையங்களில் இருக்கிற நிலைமையை இன்றைக்கு நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். சாதாரணமாக நள்ளிரவில் ஒருவர் ஏழையாகவோ, சமூகத்தின் கீழ்த் தட்டில் இருப்பவர்களாகவோ இருந்தால் நகர்ப்புறங்களில் மருத்துவ மனைக்கு போய்விட்டு கூட திரும்ப முடியாது. சினிமா பார்த்துவிட்டு திரும்ப முடியாது. வழியிலே வருகிற போது இவன் குப்பத்துக்காரன் என்று சொல்லி சந்தேக கேஸ் போட்டு விடுவார்கள். அப்படி இரவில் மருத்துவமனைக்கு போய் விட்டு கூட வர முடியாத நிலை சமூகத்தின் அடித்தளத்தில் இருப்பவர்களுக்கு இருந்து நிலை சமூகத்தின் அடிதளத்தில் இருப்பவர்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது.

அடுத்து, கிராமப்புறங்களில் சாதிக் கொடுமைகள், இனக் கொடுமைகள் தலைவிரித்து ஆடுகின்றன. இதை யாரும் மறுக்க முடியாது. இந்த நிலைமையில் மக்கள் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் எந்த அளவிற்கு அமல் நடத்தப்படுகிறது என்று பார்த்தால், எவ்வளவு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன, அதிலே எவ்வளவு பிரச்னைகள் தீர்க்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பேர்களுக்கு தண்டனை தரப்பட்டிருக்கிறது என்று பார்த்தால் ஏமாற்றமாக இருக்கிறது. வழக்குகள் பதிவாகி இருக்கின்றனவே தவிர தண்டனை தரப்படவில்லை. அந்தச் சட்டத்தைப்பற்றி இங்கே பேசுகிற சில உறுப்பினர்கள் தவறாக குறிப்பிடுகிறார்கள். வேண்டுமென்றே பொய்யாக சொல்கிறார்கள் என்றெல்லாம் சொல்கிறார்கள். அப்படி எங்கேயெல்லாம் தாழ்த்தப்பட்டவர்கள் எங்களை தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஏசினார்கள், ஏளனப் படுத்தினார்கள் என்று பொய்யான வழக்கைப் போட்டிருக்கிறார்கள் என்ற கவலைத் இருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன். உண்மையாகத் தாழ்த்தப்பட்டவர்கள் குற்றம் சொல்லியும் கூட தண்டனை இல்லாமல் இருக்கிறதே தவிர யாரும் பொய்யாக ஜோடித்துச் சொன்னதாகத் தெரியவில்லை.

[திரு. கு. தமிழரசன்] [1986 மே 5]

இன்றைக்குக்கூட கிராமப்புறங்களில் தாழ்த்தப்பட்டவர்கள் செருப்பு அணிய முடியவில்லை. பாதம் வரையில் வேஷ்டி அணிய முடியவில்லை. இன்னும் கேட்டால் சட்டை கூட போட முடியவில்லை. படித்துவிட்டு கிராமப்புறத்திற்குப் போனால், இவனைப் பார்த்தாயா, இவன் சுப்பன் மகன், இவனுக்கு வந்த வாழ்வைப் பார்த்தாய இவன் அணிந்து கொண்டிருக்கிற சட்டையைப் பார்த்தாயா என்று கிண்டல் செய்கிற அளவில்தான் சமூகப் பாதுகாப்பு என்பது அந்த மக்களுக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்று சொன்னால், பாராட்டுகிற அளவிற்கு எந்த விஷயமும் இல்லை. மக்கள் குடியுரிமைச் சட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் தீண்டாமை ஒழிந்து கொண்டிருக்கிறது என்று கொள்கைக் குறிப்பு சொல்கிறது. சென்னையில் கூட ஒரு திரைப்பட நடிகை பத்திரிகையில் பேட்டி கொடுக்கிற போது தாழ்த்தப்பட்டவர்களைப்பற்றி ஏளனமாக பேசினார்கள். நாங்கள் எல்லாம் மக்கள் குடியுரிமைச் சட்டத்தின் கீழ் அந்தத் திரைப்பட நடிகை சுஜாதாவைக் கைது செய்ய வேண்டுமென்று எழுதித் தந்தோம். ஆனால் அந்தச் சட்டத்தின் கீழ் யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. பத்திரிகையில் வந்ததற்கே, நாங்கள் எழுதித் தந்ததற்கே இப்படிப்பட்ட நிலைமையென்றால், கிராமங்களில் எப்படி இதற்கெல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள முடியவில்லை. இப்படி பிரச்னைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

(பிற்பகல் 1-40)

பேரறிஞர் அம்பேத்கார் அவர்களின் சிலையை சென்னையில் அவர்களின் பிறந்த நாள் அன்று உடைத்தார்கள். தாழ்த்தப்பட்டவர்களை இழிவு படுத்த வேண்டுமென்பதற்காகவே அந்த மாபெரும் தலைவரின் சிலையை உடைத்தார்கள். இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை. இங்கே தான் என்பதல்ல, கிராமங்களில் இதுபோன்ற ஏராளமானவை இருக்கின்றன. நானும் குடிநீர் வாரியத் தலைவர் மதிப்பிற்குரிய உக்கம்சந்த் அவர்களும் அவருடைய ஊரிலே ஒரு அம்பேத்கார் மன்றத்தைத் தொடங்கி வைத்தோம். சில நாட்களுக்குள்ளாகவே ஒரு நள்ளிரவில் அந்த மன்றத்தைப் பிரித்தார்கள். அங்கேயிருந்த கொடியை அகற்றி, படத்தையெல்லாம் உடைத்தார்கள். காவல் நிலையத்தில் புகார் செய்தார்கள். ஒன்றுமே நடைபெற



1986 மே 5] [திரு. கு. தமிழரசன்]

ல்லை. இப்படி பல்வேறு வகையிலே தாழ்த்தப்பட்டவர்கள் சமூகப் பாதுகாப்பு இல்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்குக் கூட இந்திய உணவுக் கழகத்திலே போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட நல ஊழியர்கள் போராட்டம் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டவர்களை காவல் துறை கைது செய்தது. இராயப்பேட்டை காவல் நிலையத்திற்கும் ஆயிரம் விளக்கு காவல் நிலையத்திற்கும் கொண்டு வரப்பட்டார்கள். தாழ்த்தப்பட்ட ஊழியர்களுடைய தலைவர்கள், அவர்கள் தலைவர்களாக இருந்தபோதும் கூட லாக்கப்பிலே அடைக்கப்பட்டு, அவர்கள் வெறும் ஜட்டியோடு நிற்க வைக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் காவல் நிலையத்திலே போய் கேட்டேன் அவர்கள் சொல்கிறார்கள், 'லாகப்பிலே அடைக்கும்போது வேறு எப்படி அடைப்பது என்று. அவர்கள் தலைவர்களாயிற்றே, படித்தவர்களாயிற்றே, மத்திய அரசிலே பணி புரிபவர்களாயிற்றே, அவர்களுக்கா இந்த நிலைமை என்று கேட்டால், யாராக இருந்தால் என்ன லாக்கப்பிலே அடைத்தால், நாங்கள் இப்படி ஜட்டியோடுதான் நிற்க வைப்போம் என்று சொல்கிறார்கள். மேலும் தலைவர்கள் கிடைக்காவிட்டல் அவர்களுடைய குடும்பத்திலே இருப்பவர்களை எல்லாம் கொண்டு வந்து கைது செய்கிறார்கள். சங்கர் என்ற தலைவருக்குப் பதிலாக அவருடைய தம்பி மனோகரன் என்பவரைக் கொண்டு வந்து கைது செய்கிறார்கள். சங்கர் என்ற தலைவருக்குப் பதிலாக அவருடைய தம்பி பெரியசாமியைக் கொண்டு வந்து அடைத்தார்கள். செங்கோடன் என்ற தலைருக்குப் அடைத்தார்கள். அவர்கள் வேறு கட்சியாக இருக்கலாம், வேறு கொள்கைகள் இருக்கலாம், ஆனால் போராடிக் கொண்டு இருப்பவர்களுக்குப் பதிலாக அவர்களுடைய வீட்டிலே இருப்பவர்களைக் கொண்டுவந்து காவல் துறையிலே அடைக்கின்ற அளவிற்கு அவர்கள் இன்றைக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்கிறபோது நாங்கள் எல்லாம் வருத்தப்பட வேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு சாதாரண சின்ன விஷயங்களுக்கு எல்லாம் அவர்களைக் கைது செய்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு தர வேண்டியது காவல் துறையினர்தான்.

என்னுடைய தொகுதியில் அண்ணா தி.மு.க. செயலாளர் ஒருவர், பெயர் ராஜப்பன் அவர் ஒரு கிளைக்கழகச் செயலாளர். அந்த ஊரிலே முக்கியப் பிரமுகர், தாழ்த்தப் பட்டவர். 40 ஆண்டுகாலமாக ஒரு நிலத்தைப் பயிரிட்டு வந்தார். திடீரென ஒரு நாள்—குத்தகைச் சட்டத்தின்படி அவர் ஒப்பந்தம் செய்து பயிரிட்டு வந்தார்—அந்த முதலாளி காவல் துறையினரின் ஒத்துழைப்போடு அந்த கிராமத்திற்குச் சென்று அந்த குடிசைகளை எல்லாம் பிரித்து எறிந்துவிட்டு, அவரை அந்த நிலத்திலிருந்து வெளியேற்றினார்கள். நான் புகார் செய்தேன். அவர் ஒரு கிளைக்கழகச் செயலாளர், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு போட்டியிட்டவர், தாழ்த்தப்பட்டவர், 40 ஆண்டுகாலமாக உழைத்துக் கொண்டு இருப்பவர், வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினேன். ஆனால் ஒன்றும் பயனில்லை, ஒருநாள் இரவிலே அவர்களை நிலத்தி லிருந்து வெளியில் அனுப்பினார்கள். இப்படி ஏராளமான கொடுமைகள், எங்கு நோக்கினும் ஒடுக்கப்பட்டவர்கள். சாதாரண மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சமுதாயத்திற்குச் செய்கின்ற கொடுமைகள் இன்னமும் கிராமப்புறங்களில் இருந்து கொண்டு இருக்கின்றன. பெரம்பலூரிலே ஒரு தாழ்த்தப்பட்ட மாணவன் காதலித்ததற்காக அடித்துக் கொல்லப்பட்டான் என்ற செய்தியை அருமைச் சகோதரர் சொன்னார். தென்காசியிலே உள்ள காவல் நிலையத்திலே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் தூக்கிலே தொங்கவிடப்பட்டான். இப்படி இம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்று இருந்தால், தாழ்த்தப்பட்டவர்கள் எப்படி இருக்க முடியும்? ஒன்றுமே இல்லாமல், அடுத்தவேளைச் சோற்றுக்கு வழியில்லாமல், இல்லாமல், அடுத்தவேளைச் சோற்றுக்கு வழியில்லாமல், அடுத்த வேளை கட்டுவதற்கு துணி இல்லாமல் இருப்பவர்களுக்கு என்ன சமூகப் பாதுகாப்பு? எனவேதான் இந்தச் சந்தர்ப் பத்திலே, பேரவைத் துணைத்தலைவர் அவர்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன், பீகாரிலே தந்தையைப்போல, தமிழகத்தி லேயும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதிக்கப்பட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு துப்பாக்கித் தரவேண்டும் என்று. அப்படிப் பட்ட ஒரு நிலைமை வந்தால்தான் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு கிடைக்கும்.





காவல் துறையில் இட ஒதுக்கீடு ஒழுங்காகத் தரப்படுவதில்லை. இன்றைக்கு காவல் துறையில் எஸ்.ஐ.-க்கள் 18 விழுக்காடு இருந்தாக வேண்டும், ஆனால் 11 விழுக்காடுதான் இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்கள் 18 விழுக்காடு இருக்க வேண்டும், ஆனால் 9 விழுக்காடுதான் இருக்கிறார்கள், டி.எஸ்.பி. 18 விழுக்காடு இருக்க வேண்டும். ஆனால் 4.3 விழுக்காடுதான் இருக்கிறார்கள். ஏ.டி.எஸ்.பி. இல்லவே இல்லை. ஆகவே நீங்கள் ஒரு குழுவை நியமித்து, இட ஒதுக்கீடு என்று எல்லாம் நீங்கள் கூறிக்கொண்டு இருக்கிறபோது, இந்த அளவிற்குத்தான் காவல்துறையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு என்று சொன்னால், அந்த மக்களுக்கு எப்படி பாதுகாப்பு தரமுடியும்? எனவே இவைகளை நிவர்த்தி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இனக்கலவரம் பற்றி இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லி இருக்கிறார்கள். திருச்சி தோட்டக்குறிச்சியைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். இந்த தோட்டக்குறிச்சியை நான் நேரிலே சென்று பார்த்தேன். அந்த ஊரே தீக்கிரையாகி இருக்கிறது. கோயிலிலே போய் தாழ்த்தப்பட்ட பெண்கள் வணங்கினார்கள், அவர்களைக் கிண்டல் செய்தார்கள், மேட்டுக் குடியினர் இதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று அவர்கள் புகார் செய்தார்கள். அன்று இரவே தோட்டக்குறிச்சி கிராமம் தீக்கிரையாகியது. கட்டுவதற்கு வேறு துணி இல்லாமல், கட்டிய துணியோடு அந்த மக்கள் இருந்து கொண்டிருக்கிற நிலைமை யைப் பார்க்கும்போது, வேதனையாக இருந்தது. அங்கே போலீஸ், காவலுக்கு இருந்தது. அவர்கள் காவலுக்கு எங்கே இருக்கிறார்கள் என்று போய்ப் பார்த்தால், அவர்கள் குற்றம் சாட்டிய மேட்டுக் குடியினர் வீட்டிலே உட்கார்ந்துகொண்டு இருக் கிறார்கள். அங்கே இருக்கிற அதிகாரிகளிடம் கேட்டேன். ஏன் பாதிக்கப்பட்டவர்கள் இடத்திலே காவல் இல்லை, இங்கே நீங்கள் உட்கார்ந்து இருக்கிறீர்களே என்று. எங்களுக்கு சாப்பாடு போடுவது யார், இந்தக் கிராமத்திலே உள்ள மேட்டுக்குடியினர் தான் சாப்பாடு போடுகிறார்கள், அதனால் நாங்கள் வேறு எங்கு தங்க முடியும் என்று பதில் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. எனவே, இந்தச் சந்தர்ப் பத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இப்படிப்

[திரு. கு. தமிழரசன்] [1986 மே 5

பட்ட ஜாதிக் கலவரங்களினால் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டால், அவைகளை அரசே கட்டித் தரவேண்டும். ஆயிரம் ரூபாய் கொடுத்தாலும், 500 ரூபாய் கொடுத்தாலும் அவர்களுக்கு நிவர்த்தி வந்துவிடப் போவதில்லை. எனவேதான் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காட்டுமன்னார்குடியிலே துப்பாக்கிச் சூட்டை தவிர்த்து இருக்காலம். அங்கே தாழ்த்தப்பட்டவர்கள் மேளம் அடிக்கக்கூடாது, அது இழிவுபடுத்துகிற செயல் என்ற கட்டாயத்தை வைத்திருந்தார்கள், ஒரு ஒப்பந்தத்தை வைத்திருந்தார்கள். வேண்டுமென்றே, தாழ்த்தப் பட்டவர்களை ஏளனப்படுத்த வேண்டும் என்று பக்கத்திலே உள்ள ஒரு மேளக்காரனை அழைத்து வந்து அங்கே மேளம் அடித்தார்கள். இது காவல்துறைக்கு தெரியாமல் இல்லை. அவர்கள் துண்டு அறிக்கை போட்டார்கள். இவன் வந்து மேளம் அடிக்கப் போகிறான் என்று போட்டார்கள். காவல்துறை தடுத்திருக்கலாம். தடுக்காமல் போனதால் துப்பாக்கிச்சூடு நடைபெற்றது. நாளைக்கு வேலைக்கு ஆர்டர் வாங்கியிருந்த ஒரு இளைஞன் அந்தத் துப்பாக்கிச் சூட்டினால் மறைந்து போனான். இப்படி ஏராளமான நிலைமைகள் நடந்துகொண்டிருக்கின்றன. எனவே நான் வேண்டிக் கேட்டுக்கொள்வது, தாழ்த்தப்பட்ட மக்கள்மீது ஒரு சமூக நீதியோடு காவல்துறை அணுக வேண்டும்.

விபச்சாரம் செய்கிறபோது காவல்துறையினரால் பெண்கள் மட்டுமே கைது செய்யப்படுகிறார்கள். ஆண்களுக்கு எந்த விதமான தண்டனையும் காவல் துறையினால் தரப்படுவதில்லை. கவிஞர் கண்ணதாசன் ஒரு வரியிலே சொல்வார் 'வண்டு வந்து தேன் குடித்தால் மலருக்குதான் தண்டனை' என்று. அப்படி காலம் காலமாக இந்தக் குற்றத்திலே பெண்கள் மட்டுமே கைது செய்யப்படுகிற நிலை இருக்கிறது. நான் அரசை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன், விபச்சாரம் செய்கிறபோது ஆண்களையும் கைது செய்ய வேண்டும். அதற்கு ஒத்துழைப்பாக இருக்கின்ற ஆண்களுக்கும் தண்டனை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1986 மே 5] [திரு. கு. தமிழரசன்]

தீயணைப்புத் துறை பற்றி நிறைய சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு கிராமப்புறங்களில், அதுவும் கோடைக்காலம்; சாதாரண குடிசைகளில் வாழுகின்ற மக்கள் அஞ்சி அஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எந்த நேரத்திலே நம்முடைய வீடுகள் தீக்கிரையாக்கப்படுமோ என்று அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். போதிய அளவுக்கு அந்த இடங்களிலே தீயணைப்பு நிலையங்கள் இல்லை. என்னுடைய மாவட்டத்திலே 21 தொகுதிகள் இருக்கின்றன. 13 தீயணைப்பு நிலையங்கள் இருக்கின்றன. என்னுடைய தொகுதி 80 கிலோ மீட்டர் அளவுக்கு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே ஒரு தீயணைப்பு நிலையம் கூட இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் கிராமப்புற மக்களுக்கு பாதுகாப்பு இருக்காது.

நான் இறுதியாக சொல்லிக்கொள்ள விரும்புவது, மக்களிடையே சகோதரத்துவத்தையும், நீதியையும், அமைதியையும், தோழமையையும் நிலைநாட்ட வேண்டிய பெரும்பொறுப்பு காவல் துறைக்கு இருக்கிறது. எனவே காவல்துறை பொறுப்பாளர்களை நான் பணிவன்போடு வேண்டுகிறேன், சட்டக் கண்ணோட்டத்தோடு நீங்கள் பிரச்சனைகளை அணுக வேண்டாம்; அதிகாரக் கண்ணோட்டத்தோடு நீங்கள் பிரச்சனைகளை அணுக வேண்டாம். சமூக நீதியோடு, மனித நேயத்தோடு பிரச்சனைகளை அணுகி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீங்கள் பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று வேண்டிக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றிகூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6—5—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.47 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

ஏதுவுமில்லை

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

170. தமிழ்நாடு காவல் துறை குறித்த ஆய்வுரை, 1985—86 (தமிழ், ஆங்கிலம்).

171. கோரிக்கை எண் 16—தமிழ்நாடு இயணைப்புத் துறை குறித்து கொள்ளக் விளக்கக் குறிப்பு, 1986-87 (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு I

(534 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு காவல் துறை.

### ஆய்வுரை.

1. நம்முடைய அரசு மக்கள் நல அரசாகும். மக்கள் நலனை மேம்படுத்துவது அதனுடைய தலையாய குறிக்கோளாகும். அமைதி நிலவுவதோடு, சமுதாயத்தில் முன்னேற்றத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் ஏற்ற சூழ்நிலை உருவானால்தான் நல்வாழ்வுத் திட்டங்களைத் தீட்டி வெற்றியுடன் நிறைவேற்ற முடியும். எனவே, சமூக நீதியை அடிப்படையாகக் கொண்டு அமைதி, ஒழுங்கு ஆகியவற்றின் அடித்தளத்தை வலுப்படுத்திச் சீர்பெறச் செய்வது அரசின் கடமையாகும். புதிய சமூகப் பொருளாதார முறைகளை உருவாக்கிவரும், மக்களாட்சி மலர்ந்துள்ள இக்கால சமுதாயத்தில், அமைதியைப் பேணிக் காப்பதிலும் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதிலும் காவல் துறை பெரும் பணியாற்றுகிறது.

2. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டிக் குற்றங்களைக் கண்டு பிடித்தல் காவல் துறையினரின் வழக்கமான பொறுப்பாகும். இதுமட்டுமல்லாமல் ஒடுக்கப்பட்ட மக்களின் குடியுரிமைகளை நிலை நாட்டுதல், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை போன்ற சமூகத் தீமைகளைக் கட்டுப்படுத்தி அவற்றைக் களைந்தெறிவது போன்ற மக்களுக்குத் தொண்டாற்றும் வகையில் அமைந்துள்ள பணிகளும் சேர்ந்து காவல் துறையினரின் கடமைகள், பலவாறு விரிந்து பெருகியுள்ளன. காவல் துறையினரின் பொறுப்புகள் பல்வேறு தன்மைகளில் அமைந்திருப்பதோடு பன்மடங்குக் கூடியுள்ளது. இதனால் காவல் துறையினர் பல புதிய பணிகளை ஏற்றுத் திறம்படச் செயலாற்ற வேண்டியுள்ளது.

3. ஒழுங்குப்படுத்தும் பணி, தடுப்பு நடவடிக்கைகள், [illegible] களைக் கண்டுபிடித்தல் என்று மூன்று பெரும் [illegible] காவல் துறையினரின் பல்வேறு பணிகளையும் [illegible] [illegible] சீராகவும் செல்லுமாறு வாகனப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதும், திருவிழாக் காலங்களிலும், பிரமுகர்கள்

[1986 மே 5

வருகையின் போதும் பொதுமக்களுக்கு வழி காட்டியாக அமைந்து செயல்படுவதும் காவல் துறையினரின் ஒழுங்கு முறைப் பணியில் அடங்கும். 1986 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாள் போப்பாண்டவர் சென்னைக்கு வருகை தந்தபோது காவல் துறையினர் செய்திருந்த விரிவான ஏற்பாடுகளை வெகுவாகப் பலரும் பாராட்டினர் என்று இத்தருணத்தில் கூறினால் அது மிகவும் பொருத்தமாக விளங்கும். சமூக நீதியை நிலைநிறுத்தி ஏழைகளின் வாழ்வை மேம்படுத்தும் பல சமூகப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு சட்டத்தை நிலை நாட்டும் கடமை பூண்டுள்ள காவல் துறை உறுதுணை புரிகிறது. இவ்வகையில் காவல் துறையினர் தொடர்ந்து தீவிரமாகச் செய்யும் அரும்பணி காரணமாக தொழில் மற்றும் வேளாண்மைத் துறைகளில் பல முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஏதுவாகிறது என்று கூறத் தேவையில்லை.

4. தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கும் பணியில் தமிழகக் காவல் துறை மிகுந்த விழிப்புணர்ச்சியோடும் சுறுசுறுப்போடும் செயல்படுகிறது. சூழ்நிலையின் பலவிதமான தன்மைகளையும் நன்கு ஆராய்ந்தறிந்து எந்தப் பிரச்சினையையும் முளையிலேயே கிள்ளி எறிந்து அதற்கு ஏற்ற தீர்வுகாணத் தேவையான அனைத்து முயற்சிகளையும் இத்துறை தவறாது எடுத்து வருகிறது. முன் கூட்டியே தகவல்களைச் சேகரித்து அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற கண்காணிப்பு முறைகளையும் பின்பற்றி வருகிறது. அதோடு நிற்காமல், சமூக விரோதிகளைக் கைது செய்து குற்றமிழைக்கக் கூடியவர்களை நன்கு கண்காணித்து வருவது போன்ற முன்னேற்பாடு நடவடிக்கைகளையும் எடுக்கின்றது. சமுதாயத்தின் பல பிரிவினரும் அமைதியுடன் கூடிவாழ்வதற்கு அவர்களிடையே நல்லுறவு நிலவுவது மிகவும் இன்றியமையாததாகும். இதனை நன்குணர்ந்து, இனக் கலவரம் மூளத் தக்க பதட்ட நிலைக்கான அறிகுறி தோன்றினால்கூட, காவல் துறையினர் வெகுவிரைவில் நடவடிக்கை எடுத்து சீரான நிலைமையை உருவாக்குகின்றனர். நிலையான அமைதியை ஏற்படுத்தும் பொருட்டு, பல பிரிவினர்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடத்தவும் பிரச்சனைகள் பெரிதாவதற்கு முன்னரே உரிய நேரத்தில் அவற்றிற்குத் தீர்வு காண உதவி புரிவதற்காக அமைதிக் கண்காணிப்பு குழுக்களைக் கிராமங்களில் அமைக்கின்றனர்.



1986 மே 5]

சமுதாயத்திற்குப் பாதுகாப்பு அளித்து குற்றங்களை ஒழிக்கும் வண்ணம் பணியாற்றுவதுடன், காவல் துறையினர் சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கை எடுத்து வன்முறை தலைதூக்குவதையும் திட்டமிட்டவகையில் குற்ற நிகழ்வுகள் எழுவதையும் கட்டுப்படுத்துகின்றனர்.

5. குற்றங்களைக் கண்டுபிடித்தல், களவுபோன சொத்துக்களை மீட்டுக் கொடுத்தல், குற்றவாளிகளுக்குத் தக்க தண்டனை வாங்கிக் கொடுத்தல் ஆகியவை நீதியை நிலை நாட்டுவதில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகளாகும். இதனைக் கருத்திற் கொண்டு, எத்தகைய குற்ற நிகழ்வினையும் திறம்படக் கண்டறியுமாறு தமிழகக் காவல் துறை முழு அளவில் முடுக்கி விடப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் குற்றமிழைப்பதில் ஊறிப்போனவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று குற்றம் புரிவதோடு காவல் துறையினருக்குப் புலனாகாமல் தப்பித்துக் கொள்ளும் நோக்கத்துடன் புதுப்புது வழிகளைப் பின்பற்றிப் பல தந்திரங்களைக் கையாளுகின்றனர். ஆகவே காவல் துறையினர் நன்கு பயிற்சி அளிக்கப்பட்டு மிகவும் சீரிய பணித்திறமையினைப் பெற்றுத் திகழ்வதோடு துணிவும் நம்பிக்கையும் கொண்டு குற்றவாளிகள்மீது வழக்கு தொடர்வதற்கேற்ற மன உறுதி பெற்று விளங்குகின்றனர். அயராத தீவிரக் கவனத்துடன் மேற்கொண்ட புலன் விசாரணையின் வாயிலாகத் தமிழகக் காவல் துறையினர் நாடெங்கிலும் குற்றம் புரிந்து வந்த கொள்ளைக் கூட்டத்தினரின் பல கடுங்குற்றங்களைக் கண்டறிந்து உண்மையை வெளிக்கொணர்ந்தனர். மேலும் தங்களுடைய உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்தாமல் குற்றவாளிகளைக் கைது செய்தனர்.

6. காவல் நிலையங்களை நாடிவருகின்றவர்களுக்கு மரியாதை கொடுத்து இனிய மனதுடன் அவர்கள் கூறுவதை நன்குணர்ந்து செயல்படுவது காவல் துறையினரின் கடமையாகும். மேலும் சட்டத்தை நிலை நாட்டும்போது நடுநிலையில் நின்று முழுக் கவனத்துடன் பணியாற்றி நேர்மையும், எடுத்த பணியைச் செய்து முடிக்கும் மன உறுதியும் பெற்றுத் திகழ வேண்டும். சமூக நெறிமுறைகளைப் பேணிக்காக்கும் பண்பு, தன்னடக்கம், திறமை ஆகிய சிறப்பு வாய்ந்த மரபுகளை தமிழகக்

காவல் துறையினர் போற்றிக் காத்து வருகின்றனர் என்பது யாவரும் அறிந்ததாகும். அனைவர்மீது அன்பு காட்டி ஒத்துழைப்பையும் நம்பிக்கையையும் பெறுவதற்கு ஏற்ற முறையில் அரசின் கருவியாகப் பணிபுரிந்து காவல் துறை மக்களின் நண்பனாக விளங்குகிறது. காவல் துறையினர் கடமை உணர்வோடும் பணியில் உளமார்ந்த ஈடுபாடு காட்டியும் பணியாற்றி வருகின்றனர். வெள்ளம், புயல் மற்றும் ஏனைய இயற்கை சீற்றங்களின்போது தங்களுடைய உயிருக்கு ஆபத்து ஏற்படும் நிலையிலும் மனம் தளராமல் பணிபுரிந்து தங்களுடைய திறமையைக் காட்டிவருகின்றனர்.

7. காவல் துறையினர் தங்களுடைய பெரும் பொறுப்புக்களைச் சிறந்த முறையில் நிறைவேற்ற வழிவகை செய்யும் பொருட்டு, வேகமாகச் செல்வதற்கான வாகன வசதிகளையும் விரைந்து செயலாற்ற நல்ல செய்தித் தொடர்பு அமைப்பினையும், தமிழக அரசு, காவல் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குற்றங்களைப் புலனாய்வு செய்வதில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும், அன்றாட நிர்வாகத்தில் நவீன முறைகளைக் கையாளுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டின் காவல் துறையைப் பற்றியும் அதனுடைய முக்கிய சாதனைகளைப் பற்றியும் பின்வரும் பகுதிகளில் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

8. காவலர்களின் ஒழுங்குணர்வை நன்கு பேணிக்காக்கும் பொருட்டு காவலர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அரசு ஆண்டுதோறும் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த வகையில் தமிழக அரசு காவல் பணியாளர்களின் குடும்ப வருமானத்தைப் பெருக்குவதற்காக மாதர் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சிறுதொழிற்சாலைகள் ஆகியவற்றை ஏற்படுத்தியும் குடியிருக்க வீட்டுவசதியினைப் படிப்படியாக செய்து கொடுத்தும், காவலர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதிகளைப் பெருக்கியும், அத்தியாவசியப் பண்டங்களை நியாய விலையில் வழங்கியும் அரசு காவலர் நலனைப் பேணுகின்றது.



9. சிறந்த முறையில் பயிற்சி பெற்ற பணியாளர்களும் அதிகார வரம்புகள் தெளிவான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த அமைப்பு முறையும் காவல் துறை நன்கு பணியாற்றுவதற்கு இன்றியமையாததாகும். பணியாளர் தொகுதியைப் பற்றியும் காவல் துறையினுடைய அமைப்பு பற்றியும் பகுதி 1-ல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

10. காவல் துறையில் உள்ள செய்தித் தொடர்பு, வாகன வசதி ஆகியவை பற்றிய குறிப்புகள் பகுதி 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

11. காவல் துறையினரின் பணிப் பளுவினைக் குறைப்பதற்காக காவல் துறையில் பயன்படுத்தப்படும் கம்ப்யூட்டர், விரல் ரேகைப் பதிவுக் கூடம் போன்ற அறிவியல் சாதனங்களைப் பற்றிய குறிப்புகள் பகுதி 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

12. காவலர்கள் திறம்படப் பணியாற்றி சாதனை புரிய வேண்டும் என்றால் அவர்களுக்கு ஊக்கமளித்து பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். காவலர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், பணியாற்றுகின்ற சூழ்நிலைகளை மேம்படுத்தவும் இவ்வரசு அவ்வப்போது புதுத் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. பகுதி 4-ல் இத்திட்டங்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

13. பகுதி 5-ல் மைய அரசு அளித்து வரும் உதவி பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1985 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சட்டம் ஒழுங்கு மற்றும் குற்றம் தொடர்பான முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றி பகுதி 6-ல் உள்ள குறிப்புகள் விளக்குகின்றன.

14. காவலர்களின் பணி அனைத்தும் மக்களுடன் தொடர்பு கொண்டவை. எனவே இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்றால் மனிதாபிமானம் நிறைந்த கண்ணோட்டமும் இரக்க உணர்வும் தேவைப்படுகிறது. இந்த வழியில் நின்று பணி புரியும் தமிழகக் காவல் துறை பொதுமக்களுடன் சிறந்த நல்லுறவினைப் பேணிவளர்த்து வருகின்றது. இது பற்றிய சிறப்பினை பகுதி 7 தெளிவுபடுத்துகிறது. 1985-86 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டுவரும் பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் பகுதி 8-ல் கொடுக்கப்பட்டுள்ளன. பின் இணைப்புகளில் சில புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி 1.

## அமைப்பும் பணியாளர் தொகுதியும்.

15. தமிழ்நாடு காவல் துறையின் மேல் மட்டத்தில் தொடர்ந்து இரண்டு காவல்துறைத் தலைமை இயக்குநர்கள் உள்ளனர். ஒரு தலைமை இயக்குநர் சட்டம்-ஒழுங்கினை நிலை நாட்டும் பணியுடன் பொதுவாக காவல் துறையின் நிர்வாகப் பொறுப்பினையும் கவனித்து வருகிறார். இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (சட்டம், ஒழுங்கு மற்றும் நிர்வாகம்) காவல்துறை- இயக்குநரின் கீழ் பணியாற்றுகிறார். இவர் அன்றாட நிர்வாகத்தினை கவனிப்பதுடன் சட்டம் ஒழுங்கினைத் திறம்பட நிலை நாட்டும் பணியை மேற்கொண்டுள்ளார்.

16. காவல்துறைத் தலைமை இயக்குநர் (குற்றப் புலனாய்வுத் துறை) அவர்களின் பொறுப்பில் நுண்ணறிவு. குற்றங்களைக் கட்டுப்படுத்தல், பாதுகாப்பு, திட்டம் தீட்டுதல், வானொலிப் பிரிவு, விரல் ரேகைப் பதிவுப் பிரிவு மற்றும் கம்ப்யூட்டர் பிரிவு போன்ற தொழில் நுட்பப் பணிப் பிரிவுகள் இயங்கி வருகின்றன.

17. தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இந்தியக்காவல் பணிப் பதவிகள் 160 ஆகும். இந்த ஆண்டில் இந்திய காவல் பணி அதிகாரிகள் எவரும் பணியிலிருந்து ஓய்வு பெறவில்லை. நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து இந்தியக் காவல் பணி அலுவலர்கள் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளனர். மூன்று மாநிலக் காவல் பணி அதிகாரிகள் பதவி உயர்வு பெற்று தமிழ் நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகளில் நியமிக்கப்பட்டனர். 1985 ஆம் ஆண்டு காவல் துறைக் கண்காணிப்பாளர் நிலை I பதவிக்கு யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆயினும் 1982-83 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட 13 பேர் 1985-ம் ஆண்டு நியமனம் செய்யப் பெற்றனர். 29—5—1985 அன்று சென்னையில் உள்ள காவல் பயிற்சி பள்ளியில் 12 பேர் சேர்க்கப்பட்டு அவர்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர்.



18. 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 1 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு காவல்துறையில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 30,723. அதன் விவரங்கள் இணைப்பு—1 இல் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மொத்தம் 3,631 காவல் நிர்வாகப் பணியிடங்களும், 200 அமைச்சுப் பணியிடங்களும், மற்றும் 253 தொழில் நுட்பப் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் விவரங்கள் இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளன

### மக்கள் குடியுரிமைச் சட்டத்தை அமுல்படுத்தல்.

19. இதர இனத்தவர்களால் ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் தீண்டாமை போன்றவற்றை ஒழிக்கும் நோக்கத்தை சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக குடி உரிமை பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் நடப்பாண்டில் திறமையாகச் செயல்படுத்தப்பட்டன.

20. ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார்பு ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஜீப்பும் கொண்ட 22 நடமாடும் காவல் அணிகள் இந்தச் சட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 22 காவல் மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றன. இந்த நடமாடும் காவல் அணிகள் அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், மாவட்ட குற்றப் பதிவு வைப்பறைக்கூடக் காவல் துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கான காவல் துறைத் துணைத் தலைவர் இச்சட்டம் திறம்படச் செயல்படுவதைக் கண்காணித்து வருகிறார். இது தவிர, இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படுகின்ற முன்னேற்றம் தொடர்பான புள்ளி விவரங்களை அவ்வப்போது முறைப்படி மேற்பார்வையிட மாவட்டந்தோறும் (நீலகிரி மாவட்டத்தைத் தவிர) ஒரு புள்ளியியல் ஆய்வாளர் விதம் 21 புள்ளியியல் ஆய்வாளர்களும், ஒரு சார்பு ஆய்வாளர் என்ற அடிப்படையில் 22 காவல் சார்பு ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் மேற்கண்ட பணியாளர்களின் உதவியோடு ஒரு பொருளாதார நிபுணர் மற்றும் ஒரு சமூக இயல் வல்லுநர் அடங்கிய ஒரு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, தீண்டாமை அதிகமாகத் தென்படும் இடங்களில் ஆய்வுகள்

நடத்திக் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்புகிறது. நலிவடைந்த பிரிவினருக்கு குடிநீர், தெரு விளக்குகள், வீட்டு மனை, இடுகாடு போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதில் அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டங்களில் உள்ள குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவுகள் மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுடன் நெருங்கி ஒத்துழைக்கின்றன.

21. நீதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஒவ்வொன்றிலும் ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி மற்றும் பணியாளர்கள் அடங்கிய நான்கு சிறப்பு நீதி மன்றங்கள் தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய சிறப்பு நீதி மன்றங்கள் செயல்படும் மேற்கூறிய நான்கு இடங்களிலும், நீதிமன்றப் பணிகள் அதிகமாக நிலுவையில் இருக்கின்ற தென்னாற்காடு, கோயம்புத்தூர் மற்றும் அண்ணா மாவட்டங்களுக்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காவல் சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய 7 வழக்குத் தொடுப்பு அணிகளும் பணியாற்றி வருகின்றன. 1985 ஆம் ஆண்டில் இவ்வழக்குத்தொடுப்பு அணிகள் 665 வழக்குகளைப் பதிவு செய்ததில் 22 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன.

22. சேமக் காவல் படையின் 182 பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக காவல் படையின் 9 அணிகளும், சட்டம் ஒழுங்கினைத் திறம்பட பேணிக் காத்திட உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி வருகின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் ஆறாவது அணி இம்மாநிலத்திற்கு வெளியே மைய அரசின்கீழ் டில்லியில் அயற்பணியில் உள்ளது.

23. இம் மாநிலத்தில் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய நான்கு இடங்களில் உள்ள துப்பறியும் நாய்ப் படைகள் குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும் காவல் துறையினருக்குத் துணை புரிவதிலும் சிறப்பான பணிகளை ஆற்றி வருகின்றன. இவைகளின் பணி 1985 ஆம் ஆண்டு 357 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டு 132 வழக்குகளில் அவை பயன் உள்ளவையாக இருந்தன.



24. சென்னை, மதுரை ஆகிய இரண்டு இடங்களிலும் குதிரைப் படைப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. சென்னை நகரத்திலுள்ள குதிரைப்படை 34 குதிரைகளுடன் செயல்படுகிறது. மதுரையிலுள்ள குதிரைப் படைப்பிரிவிற்கு 10 குதிரைகள் வாங்கப்பட்டு, அவை அதற்கான பணியாளருடன் சென்னையில் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. கோயம்புத்தூரில் அமைக்கவிருக்கும் பிரிவிற்கு குதிரைகள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

25. மத்திய அரசின் உதவியோடு மாநில அரசு தேசிய நெடுஞ்சாலையில் சென்னை—திண்டுக்கல் பிரிவில் 10 போக்குவரத்து உதவி நிலையங்கள் நிறுவி நெடுஞ்சாலை சுற்றுக் காவல் படையினை வலுப்படுத்தியுள்ளது. இவை நெடுஞ்சாலைகளின் அருகில் உள்ள அந்தந்த மாவட்டத்தைச் சார்ந்த காவல் நிலையங்களில் பணியாற்றி வருகின்றன. சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்தல், தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல், சாலைத் தடைகளை அகற்றுதல் போன்ற பணிகளைச் செய்வதோடு மட்டுமல்லாமல் நெடுஞ்சாலையில் நிகழும் விபத்துக்கள் குறித்து அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு உடனடியாகத் தகவல்களைத் தெரிவிப்பது போக்குவரத்து உதவி நிலையங்களின் முக்கிய பணிகளாகும். 1985 ஆம் ஆண்டு இப்போக்குவரத்து உதவி நிலையங்கள் மாதம் ஒன்றிற்குச் சராசரியாக 200 வழக்குகளைப் பதிவு செய்துள்ளன.

பெண் காவலர்கள்.

26. தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவலரின் பணி பயன் நிறைந்ததாக உள்ளது. மாநிலத்தில் உள்ள பெரும்பாலான முக்கிய நகரங்களில் பெண் காவலர் பிரிவு பணியாற்றி வருகிறது. பொதுவாக போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துதலும் பொது மக்களுக்கு உதவி புரிவதிலும் இவர்கள் முக்கிய பணியாற்றி வருகின்றனர். மேலும் பெண் கைதிகளைச் சோதனையிடுவது, இளம் குற்றவாளிகளைக் கைது செய்து நீதி மன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல் ஆகியவற்றில் அவர்களது பணி திறமையாகச் செயல்படுத்தப்படுகிறது. பெண் காவலர்களின் நலனைக் கருத்திற்கொண்டு 24 இடங்களில் பெண் காவலருக்காக தனியாக காவல் நிலையங்களுடன் ஒட்டியவாறு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

[1986 மே 5

### தேர்வும் பயிற்சியும்.

27. காவல் துறையின் செயல் திறனை மேம்படுத்துவதற்குத் தகுதியான ஆட்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு பயிற்சி அளிப்பது இன்றியமையாத அடிப்படைத் தேவையாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை, சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களில் உள்ள காவல் பிரிவுகளுக்குத் தேவையான இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்ந்தெடுக்க 1985 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 30 ஆம் நாள் ஒரு தேர்வு நடைபெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் ஒரே நேரத்தில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளிகளைத் தவிர இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு இடங்களில் 10 தற்காலிகப் பயிற்சி மையங்களையும் அரசு ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை. மற்றும் மாவட்டங்களில் பல்வேறு இடங்களிலுள்ள காவல் பயிற்சி பள்ளிகளில், இதுவரை சுமார் 4,650 பேர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

### பகுதி—2.
### செய்தித் தொடர்பு.

28. தமிழ்நாடு காவல் துறையின் தகவல் தொடர்பு முறையில் நுண்ணலை மற்றும் மின்னணு முறைகள் அறிமுகப்படுத்தப் பட்டதன் விளைவாக விரைவான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாநிலத் தலைமை இடத்துடன் அனைத்துக் காவல் நிலையங் களும், வானொலிக் கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களும், விரைவான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள இம்முறை உதவுகின்றது. பொதுத் தேர்தல், முக்கிய பிரமுகர்கள் வருகை போன்ற முக்கிய நிகழ்ச்சிகளின்போது காவல் துறையின் பணி பொறுப்பு மிக்கதாகிறது. தமிழ்நாடு காவல் துறையில் தக்க செய்தித் தொடர்பு வசதிகள் இருந்தால்தான். இப்பணிகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற இயலும். இதனைக் கருத்திற் கொண்டு பார்த்தால், தமிழகக் காவல் துறையின் சாதனை பாராட்டத் தக்கதாகும்.

29. அனைத்து மாவட்டங்களும் மாநிலக் தலைமையகத்துடன் நுண்ணலை மற்றும் மீவுயர் அலை அல்லது அதிமீவுயர் அலை வானொலிச் சாதனங்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. இம்முறையின் வழியாக ஒலி மற்றும் தொலையச்சுப் பொறி நேரடித் தொடர்பு வசதி ஏற்படுகின்றது.



1986 மே 5]

30. தமிழ்நாட்டிலுள்ள 984 காவல் நிலையங்களில் 903 காவல் நிலையங்களும், 101 உட்கோட்டங்களில் 56 உட்கோட்டங்களும் மீவுயர் அலை பிணைப்புக் கருவிகள் மூலம் இணைக்கப் பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத் தலைமையகம் மாநிலத்தில் உள்ள ஏறக்குறைய 90 விழுக்காடு காவல் நிலையங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடிகிறது.

31. தற்போது 955 காவல் நிலையங்களுக்கும் 103 புறக் காவல் நிலையங்களுக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது. மீதியுள்ள காவல் நிலையங்கள் மற்றும் புறக் காவல் நிலையங்களுக்கு விரைவில் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

32. இது தவிர பல்முனை வானொலி தொலைபேசித் தொடர்பு முறை சென்னை நகரத்தில் இயங்கி வருகிறது. வானொலி தொடர்புத் திட்டம் மூலம் செயல்படும் இவ்வசதியினால் ஒரு அலுவலர் மற்றொரு அலுவலருடனும் மற்றும் காவல் துறையி லுள்ள உயர் அலுவலர்களுடனும் தொலைபேசியில் பேச வசதி ஏற்பட்டுள்ளது. இந்தியத் தபால் தந்தித் துறையிலுள்ள தொலைபேசிக் கருவிகள் மழை காரணமாகவோ அல்லது தொலை பேசிக் கம்பிகள் (cables) பழுதடைவதன் காரணமாகவோ இயங்காத நேரத்தில் இத்தொடர்பு முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

33. காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் மைய அரசு அளித்த நிதி உதவி மற்றும் மாநில அரசின் நிதி ஆகிய வற்றைக் கொண்டு 1,800 'வாக்கிடாக்கி' கருவிகள் வாங்கப்பட்டு அவை மாவட்டங்களில் உள்ள பல்வேறு காவல் நிலையங்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, சென்னை நகரக் காவல் படை மற்றும் இருப்புப் பாதை காவல் படை. ஆகியவற்றில் பயன் படுத்தப்படுகின்றன. ரோந்து பணி புரியும் காவலர்களுக்காக ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் 2 கருவிகள் வீதம் அளிக்கப் பட்டுள்ளன. இது தவிர 'எல்காட் (Elcot) என்ற தமிழ்நாடு அரசு மின்னணு நிறுவனத்திடமிருந்து 324 கருவிகள் வாங்கு வதற்கு 50 சதவீதம் முன்பணமும் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கையில் எடுத்துச் செல்லும் 10 கருவிகளை இதுவரை வழங்கியுள்ளது.

34. வானொலிச் செய்தித் தொடர்புப் பணிகளை மேற்கொள்வதில் திறமையை மேம்படுத்துவதற்காக பல வழி கொண்ட அதி மீவுயர் நுண்ணலை முறை ரூபாய் 120 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டது. 1985 ஆம் ஆண்டு வேலூர், திருநெல்வேலி, நாகர்கோயில் நீங்கலாக உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மீவுயர் அலை பிணைப்பு முறையில் உள்ள தொடர்புகள் அதி மீவுயர் அலைத் தொடர்பு வசதியாக மாற்றப்பட்டுள்ளன. தூத்துக்குடி, தெற்கு கள்ளிக் குளம் மற்றும் குடியாத்தம் ஆகிய இடங்களில் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பிறகு இவ்விடங்களில் மீவுயர் அலை பிணைப்பு மூலம் இயங்கும் தகவல் தொடர்பு முறை அதி மீவுயர் நுண்ணலை முறையுடன் இணைக்கப்படும். முழுத் தேவைகளையும் பூர்த்தி செய்ய தனியார் மின்னணு தானியங்கி தொடர்பு முறையினை மொத்தம் ஒரு 200 மீட்டர் மைக்ரோ பிராஸசர் சென்னை நுண்ணலைத் தொடர்பு முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலூர், கோயம்புத்தூர், திருச்சி ஆகிய சரகத் தலைமையிடங்களில் ரூபாய் 162 இலட்சம் செலவில் நுண்ணலைத் தொடர்பு வசதி ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான கருவிகள் "பாரத் மின்னணுக் கருவி தொழிற்சாலையில்" இருந்து எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும் ஒன்பது, "புதிய 50 இணைப்பு பிரைவேட் மின்னணு தானியங்கி", இணைப்பகங்கள் தகவல் தொடர்பு முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் மாவட்டங்களுக்கிடையே தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முடிகிறது. புதியதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அண்ணா மாவட்டத்தின் தலையிடமான திண்டுக்கல்லில் அதி மீவுயர் அலை பிணைப்பு முறையின் மூலம் வானொலித் தொடர்பு வசதிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

35. ஆய்வு ஆண்டில் ரூபாய் 188.72 இலட்சம் செலவில் 153 மோட்டார் வாகனங்கள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. காவல் துறையினர் ஒரு இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சென்று தங்களது திறமையினை நன்கு பயன்படுத்தி மக்களுக்கு நல்ல பணிபுரிய வாகனங்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு அரசு செயல்படுகின்றது. பயனற்றதெனக் கழிக்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக ரூ. 87.35 இலட்சம் செலவில் புதிய வாகனங்கள் வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இவ்வாகனங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்காக அரசு ஆவடியில் துவக்கியுள்ள பணிமனை, சென்னை நகரக் காவல் துறை மற்றும் தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. காவல் துறையில் உள்ள வாகனங்களை மட்டும் பராமரிப்பதற்காக தனியாகப் பணிமனைகளை ஏற்படுத்த வேண்டும் என்பதை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து, திருச்சியில் ஒரு காவல் பணிமனை ஏற்படுத்துவதற்கு வேண்டிய முதற்கட்டப் பணிகள் செய்து முடிக்கப்பட்டு தேவையான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.





பகுதி—3.

## அறிவியல் சாதனங்கள்.

36. இந்த நூற்றாண்டில் காவல் துறையில் தொழில் நுட்பவியல் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை அடைந்துள்ளது. தற்போது இத்துறையில், பல நவீனத் தொழில்நுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

**கம்ப்யூட்டர் பிரிவு:**

37. காவல்துறைப் பணிகளில் கம்ப்யூட்டர் மற்றும் மின்னணுக் கருவிகள் மூலம் புள்ளி விவர சேகரிப்பு முறைகளினால் குற்றங்கள் குறித்த தகவல்கள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை, மனித உழைப்பைக் கொண்டு சேகரித்துவைக்கும் வேலைப்பளு படிப்படியாக குறைந்துள்ளது. வெகு தொலைவில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்கும் குறைந்த நேரத்தில் விரல் ரேகை மற்றும் அது சம்பந்தமான வகைப்படுத்தப்பட்ட தகவல்களை இதனால் அனுப்ப முடியும்.

38. காவல் துறையை நவீனமயமாக்கும் மத்திய அரசின் திட்டத்தின்கீழ் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் காவல் துறையில் கம்ப்யூட்டர் பிரிவு உருவாக்கப்பட்டது. இக்கம்ப்யூட்டர் பிரிவுகள் மூலம் குற்றம் மற்றும் குற்றவாளி தொடர்பான தகவல்களைச் சேகரித்து பெறப்படும் முறை, சிறந்த அணுகுமுறையின் மூலம் திறம்படச் செயல்புரியும் தமிழ்நாடு காவல் துறையின் மற்றொரு சிறப்பிற்கு வழி வகுத்துள்ளது.

குற்றங்கள்-குற்றவாளிகள் :

39. கண்டுபிடிக்கப்படாத குற்ற வழக்குகளில் குற்ற முறைகளின் அடிப்படையில் சந்தேகப்படும் குற்றவாளிகள் பட்டியல் தயார் செய்யப்பட்டு புலனாய்வு செய்யும் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறது. 1984 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாவது கட்ட கம்ப்யூட்டர் இணைப்பு முடிவடைந்தபோது நுண்ணலை மூலம் புலனாய்வு அதிகாரிகள் கோரியவுடன் ஒரு சில நிமிடங்களிலேயே குற்றவாளிகள் பற்றிய பட்டியலை அனுப்ப உதவும் ஆன்-லைன் டெலி கம்யூனிகேசன் முறை வெற்றிகரமாக துவக்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு இம் முறையின் வழியாக 15,503 தகவல்கள் அனுப்பப்பட்டன. இவை சொத்து சம்பந்தப்பட்ட திருட்டுக் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் புலனாய்வு அதிகாரிகளின் திறமையை உயர்த்தியுள்ளது.

விரல் ரேகை முறை :

40. இம் முறையைச் செயல்படுத்தும் வகையில் சென்னை விரல ரேகைப் பதிவுக் கூடத்தில் 2,45,022 குற்றவாளிகளின் விரல் ரேகைகளைக் கொண்ட கம்ப்யூட்டர் புள்ளி விவரங்கள் வகைப் படுத்தப்பட்ட வடிவத்தில் பெரும் தொகுப்பு தயாரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன. கம்ப்யூட்டரில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சந்தேகப்படும் குற்றவாளியின் விரல் ரேகைப் பதிவுகளை ஒப்பிட்டுப் பார்த்து குற்றவாளிகள் பற்றிய தகவல்களை மாவட்டத்திலுள்ள காவல் அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்ப முடியும்.

காவல் நிலையப் பதிவேடு :

41. கம்ப்யூட்டர் முறையில் இப்பதிவேட்டை பயன்படுத்தி காவல் நிலையங்கள் மற்றும் சரகங்களின் மாதாந்திர செயல் பாட்டுத் திறன் அடிப்படையில். தகவல்கள் சேகரிக்கப்பட்டு நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்கு மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகின்றது.



பணியாளர் பற்றிய தகவல் தொகுப்பு :

42. இம்முறையின்படி, காவல் துறையின் அனைத்துப் பணியாளர்கள் பற்றிய தகவல்கள் முறையாக வகைப்படுத்தப் பட்டு கம்ப்யூட்டரில் சேமித்து வைக்கப்படுகின்றன. பணிக்கு ஆட்களை எடுத்தல், திட்டமிடல், பதவி உயர்வு, இடமாற்றம், பதக்கம் வழங்குதல், தனிப்பட்ட பகுதிக்கு தகுதியுள்ள ஆட்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற சமயங்களில் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள இம்முறை பெரிதும் உதவுகிறது

மகளிர்மீது இழைக்கப்படும் குற்றங்கள் :

43. புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்குவதற்கு ஏதுவாக மகளிர்மீது இழைக்கப் படும் அனைத்து குற்றங்களும் அவற்றின் தன்மையுடன் கூடிய புள்ளி விவரங்களுடன் கம்ப்யூட்டரில் சேர்த்து வைக்கப்படும். மாதாந்திர அறிக்கைகள் தயாரித்து மாநிலத்தில் மகளிருக்கு எதிராக இழைக்கப்படும் குற்றங்களின் தன்மைகளை அறிதல், குற்றத் தடுப்பு நடவடிக்கைப் பற்றிய திட்டங்கள் தீட்டும்போது இம்முறை பெரிதும் பயன்படுகிறது.

சமூக விரோத சக்திகள் பற்றிய முழு விவரம் :

44. பதிவு செய்யப்பட்ட சமூக விரோதிகளின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த உதவும் வகையில் கம்ப்யூட்டரில் சேகரித்து வைக்க வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் பல்வேறு சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைகள் மற்றும் அவர்களது வாழ்க்கை பற்றிய புள்ளி விவரங்கள் அடங்கியிருக்கும். இதன் மூலம் இனக் கலவரங்கள் ஏற்படக் கூடிய நேரங்களில் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பிடத் தக்க நடவடிக்கைகளில் ஈடுபடும் சமூக விரோத சக்திகளின் நடவடிக்கைப் பற்றிய விவரங்களை மாநிலம் மற்றும் காவல் நிலையம், துணைக் கோட்டம் மற்றும் மாவட்ட அளவில், தேவைப்படும் எந் நேரத்திலும் பெற இயலும். இம் முறை வடிவமைக்கப்பட்டு. சோதனையில் வெற்றியுடன் இயங்கும் என்பது கண்டறியப் பட்டுள்ளது.

**தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடம் :**

45. தமிழ்நாடு காவல் துறையின் பணியினை மேம்படுத்த அரசு முயன்று வருகிறது. புதிய முறைகளைக் கையாளுவதின் மூலமும் தற்போதுள்ள முறைகளைத் திறம்படக் கையாளுவதன் மூலமும் இது ஏதுவாகிறது. விரல் ரேகைப் பதிவுக் கூடம் இதில் ஒன்றாகும். இதன்மூலம் அறிவியல் முறையில் குற்றங்களை எளிதில் கண்டுபிடிக்க ஏதுவாகிறது.

46. தமிழ்நாட்டிலுள்ள விரல்ரேகைப் பதிவுக் கூடம்தான் இந்தியாவிலே மிகவும் நவீன மயமாக்கப்பட்டதொன்றாகும். சந்தேகக் குற்றவாளிகள் மற்றும் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் பற்றிய முழு விவரங்களைப் புலன் விசாரணை செய்யும் அதிகாரிகள் தெரிந்துகொள்ள விரல்ரேகைப் பதிவுக் கூடம் உதவுகிறது. மாநிலத் தலைமையிடத்திலும் மற்றும் அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் இவ்விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் செயல்படுகின்றன. விரல் ரேகைப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள், கொலை, கொள்ளை, கன்னக் களவு போன்ற குற்றங்கள் நடந்த இடங்களுக்கு நேரில் சென்று அவ்விடங்களில் உள்ள விரல் ரேகைகளை எடுத்து விரிவுபடுத்தி, விரல் ரேகைப் பதிவுக்கூடத்தில் உள்ள விரல்ரேகைகளுடன் அவற்றை ஒப்பிட்டுப் பார்த்து குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க புலன் ஆய்வு செய்யும் அதிகாரிகளுக்கு பெரிதும் உதவுகின்றனர். இப் பிரிவில் சுமார் 5.89 இலட்சம் குற்றவாளிகளின் விரல்ரேகைகள் பதிவு செய்யப்பட்டு உள்ளன. நீதிமன்ற விசாரணையின்போது இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகி குற்றச் சம்பவம் நிகழ்ந்த இடத்தில் எடுக்கப்பட்ட விரல்ரேகைகளைப்பற்றி சாட்சியம் அளிக்கின்றனர். சென்னையில் உள்ள விரல் ரேகைப் பதிவுக் கூடத்தில் வகைப்படுத்தப்பட்ட விரல் ரேகைகள் உள்ளன. காவல் நிலையங்களில் இருந்து கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றவுடன் விரல் ரேகைப் பதிவுக் கூடம் தேவையான தகவல்களை அளிக்கின்றது.

47. மிகத் திறமையாகச் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடத்தினை மேலும் நவீனப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் உறுதியான கொள்கையாகும். குற்றச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் எடுக்கப்பட்ட விரல் ரேகை பதிவுகளுடன் மேற்கூறிய "மீரா கோடு" என்ற மின்னணுச் சாதனம் உதவுகின்றது. இச் சாதனத்தில் விரல் ரேகைப் பதிவுடன் நுண்ணிய படமும் அடையாளம் காணக் கொள்ளக்கூடிய குறிப்பு எண்ணும், தோற்றுவிக்கப்படுகிறது. இதன் மூலம் குற்றச் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைகளைக் கண்டுபிடிப்பதற்கு "மீரா கோடு" சாதனத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற விரல் ரேகை ஒப்பிடப்படுகிறது. அடையாளம் காணக்கூடிய விரல் ரேகைகளின் தோற்றங்கள் ஒரு திரையில் பெரிதாக்கப்பட்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவுகிறது.



48. தற்போதுள்ள மீராகோடு திட்டத்தின்படி சுமார் 90 ஆயிரம் கடுங் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகள் முதல் கட்டமாகத் தொகுக்கப்படும். இரண்டாவது கட்டமாக சுமார் இரண்டு இலட்சம் விரல் ரேகைப் பதிவுகள் வகைப் படுத்தப்பட்டு நுண்ணிய படம் எடுக்கப்பட்டு மீராகோடு சாதனத்தில் சேர்க்கப்பட உள்ளன. இதில் சுமார் 69,645 விரல் ரேகைப் பதிவுகள் வகைப்படுத்தப்பட்டு நுண்ணிய அளவில் படம் எடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் கீழ் விரல் ரேகைப் பதிவுகள் வகைப் படுத்தப்பட்டு நுண்ணிய அளவில் படம் எடுக்கப்படுவது முடிக்கப்பட்டவுடன் குற்றம் நடந்த இடங்களில் இருந்து எடுக்கப்படும் விரல் ரேகை பதிவுகள் மீரா கோடு சாதனத்தின் பதிவுகளுடன் ஒப்பிடப்பட்டு, தேவையான புள்ளி விவரங்கள் குறைந்த நேரத்தில் காவல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்தியாவில் தமிழ் நாட்டில் மட்டும்தான் குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடிக்க மீரா கோடு சாதனம் பயன்படுத்தப்படுகிறது.

49. தடய அறிவியலைப் பயன்படுத்தும் முறை தமிழ்நாட்டில், முதல் வேதியியல் ஆய்வாளர் ஆய்வகம் நிறுவப்பட்ட 1849 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. முன்பிருந்த மருத்துவத் துறையைச் சார்ந்த வேதியியல் ஆய்வாளர் ஆய்வகம், காவல் துறையைச் சார்ந்த மாநில ஆவண ஆய்வாளர் ஆய்வகம், மற்றும் வருவாய்த் துறையைச் சார்ந்த மதுவிலக்கு மற்றும் கவால் ஆய்வகம் ஆகியவை இணைக்கப் பெற்று தடய அறிவியல்

ஆய்வகம் 1959 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் வளர்ச்சியின் விளைவாக, இவ்வாய்வகம் அண்மையில் தடய அறிவியல் துறை என்று தனித்தியங்கும் துறையாக உயர்த்தப்பட்டது.

50. தற்போதைய இயக்ககம் தன்னிடத்தே சென்னையில் பதின்மூன்று பிரிவுகளையும் (துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணம், கருவியியல், போதைப் பொருட்கள், ஆயம், பௌதீகம், நிழற்படப் பிரிவு, மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியல் மற்றும் நச்சு இயல்) ஐந்து வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களையும் (கோவை, மதுரை, தஞ்சை, நெல்லை மற்றும் வேலூர்) இரு மாவட்டத் தடய அறிவியல் ஆய்வகங்களையும் (திருச்சி மற்றும் கடலூர்) மற்றும் இருபத்தி மூன்று நடமாடும் தடய அறிவியல் ஆய்வகங்களையும் கொண்டு செயல்படுகிறது. அரசு, சேலத்தில் ஆறாவதாக ஒரு வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தை நிறுவ அனுமதி அளித்துள்ளது. உரிமையியல் வழக்குகளுக்கென்று ஆவணப் பிரிவில் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்த 1985 ஆம் ஆண்டு அரசு அனுமதி அளித்துள்ளது.

51. இந்தியாவிலேயே இந்தத் துறை ஒன்றில்தான் முழு நேர ஈராண்டு தடய அறிவியல்- மூதறிவியல் பட்டப் படிப்புக்கான வகுப்புகள் (M.Sc in forensic Science) நடத்தப்படுகின்றன. இப்படிப்பிற்கு ஆண்டுதோறும் பன்னிரண்டு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். தடய அறிவியல் முனைவர் பட்டத்திற்காக (Ph.D. Degree) ஆராய்ச்சிகளை நடத்தத்தக்க நிலையமாக இத் துறையை சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகரித்துள்ளது. தற்போது இந்த ஆராய்ச்சியில் ஐந்து முழு நேர ஆராய்ச்சி மாணவர்களும், பதினெட்டு பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

52. இந்தத் துறையானது இதுவரையில் 135 ஆண்டு கால ஆய்வகப் பணியையும், 25 ஆண்டு கால தடய அறிவியல் பணியையும் வெற்றிகரமாகச் செய்துள்ளது. 1984 ஆம் ஆண்டு. டிசம்பர் முதல் 1985 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலம் வெள்ளி விழா ஆண்டாகக் கொண்டாடப்பட்டது.



53. தடய அறிவியலில் மிகவும் முன்னேறியுள்ள இத்துறைக்கு மேன்மேலும் புதுமையான ஆய்வுக் கருவிகள் தொடர்ந்து வாங்கப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டில் ரூ. 2.87 இலட்சம் செலவில் அணு உட்கிரகிப்பு நிறமாலைமானி (Atomic Absorption spectrophoto meter) தனிமங்கள் பகுப்பாய்வுக்காக வாங்கப்பட்டுள்ளது. தலைகீழ் நிலை வேறுபாடு நுண்ணோக்கி (Invert Phase Contrast Microscope) ரூபாய் 60,000-மும், ஜூம் ஸ்டீரியோ நுண்ணோக்கி (Zoom Stereo Microscope) ரூபாய் 18,000-மும் அறிவியலாளர்களின் பயன் கருதி வாங்கப்பட்டுள்ளது.

54. இத்துறையின் தலைமை ஆய்வகம், சென்னையில் தன்னுடைய சொந்த இடமான 'தடய இல்லத்தில்' இயங்கி வருகிறது. மதுரையில் வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகம் ரூபாய் 7.2 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள புதுக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. வேலூரில் ஏற்கனவே ரூபாய் 1.2 இலட்சத்தில் ஆய்வகத்திற்காக இடம் வாங்கப்பட்டுள்ளது.

55. இத்துறை ஆராய்ச்சிப் பணியிலும், பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இத்துறையின் இயக்குநர் அவர்கள் மண்டை ஓடுகளை வைத்து அடையாளம் காட்டும் அறிவியலில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு, மண்டை ஓட்டு இணைப்புக் கோடுகளை அறிவியல் பூர்வமாக அடையாளம் காட்டும் முறையினைக் கண்டு பிடித்ததை அறிவித்தார். இவ்வாராய்ச்சிக் குறிப்புகள் சிங்கப்பூரில் நடந்த முதலாவது ஆசிய பசிபிக் காங்கிரஸின் நீதி சார்ந்த மருத்துவ மாநாட்டில் படிக்கப்பட்டது. மின்னணுக் கருவிகளைக் கொண்டு மண்டை ஓட்டு அடையாளம் காணும் புதிய முறை இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழ் நாட்டிலே தான் உருவாக்கப்பட்டுள்ளது. இக் கருவியின் உதவியால் மண்டை ஓட்டையும், புகைப் படத்தையும் பற்பல கோணங்களிலும் பற்பல பகுதிகளிலும் ஒப்பிட்டுப் பார்த்து, ஐயப்பாடற்ற அறிவியல் பூர்வமான முடிவுக்கு வர முடியும். இத் துறையில் பணியாற்றும் ஆராய்ச்சியாளர்கள் கூற ஒன்று பிரச்சனைக்குரிய வழக்குகளில் குறிப்பிட்ட குழந்தையின் பெற்றோர் யார் எனக் கண்டறிவதற்கான புது முறையையும் கண்டறிந்துள்ளது. இதன்படி குருதியின் "எச்.எல்.ஏ". பகுப்பாய்வின்

3,487 குடியிருப்புகளும் 2,445 படை வீடுகளும் கட்டுவதற்கு, ஏழாவது நிதிக் குழு அளித்த தொகையைக் காட்டிலும் கூடுதலாக திருத்திய மதிப்பீட்டுத் தொகையான ரூ. 16.65 கோடிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்காகும் கூடுதல் செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும். இந்த 6,455 வீடுகளும் விரைவில் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

60. இதுவரை 3,285 குடியிருப்புகளும், 1,270 படை வீடுகளும் ஏழாவது நிதிக்குழுவின் மானியத்தினைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகளும் படை வீடுகளும் கட்டுமானப் பணியில் பல்வேறு நிலைகளில் உள்ளன.

### தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம்.

61. காவல் துறையில் பணியாற்றும் காவல் பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டித்தர வேண்டும் என்று உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ரூபாய் 100 லட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் வாயிலாகக் காவல் துறை அலுவலர்களும் காவலர்களும் ஓய்வு பெறும்போது சொந்தமான வீடு பெற இயலும். காவல் துறையினரின் மகிழ்ச்சிக்கு வித்திட்டு தன்னுடைய கடமைகளை நிறைவேற்றும் வகையில் அரசு வீடு கட்ட நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் நாவல்பட்டில் ரூ. 164 லட்சம் செலவில் 670 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஹட்கோ' மற்றும் தமிழக அரசு மேற்படி வீடுகள் கட்டுவதற்கு முறையே ரூபாய் 88.05 இலட்சம் மற்றும் ரூபாய் 50.00 இலட்சம் நிதி உதவி செய்துள்ளன.

62. மேலும் இக்கழகம் கோயம்புத்தூர் மாவட்டம் கணபதிபுரம் என்ற இடத்தில் 432 வீடுகள் கட்டுவதற்கு 'ஹட்கோவில்' இருந்து பெற்ற ரூபாய் 74.49 இலட்சம் நிதி உதவியுடன் ரூ. 194 இலட்சம் செலவில் வீடுகள் கட்டும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது இவ்வீடுகள் கட்டி முடிக்கும் தருவாயில் உள்ளன.

63. மேலும் திருநெல்வேலி மாவட்டம் திம்மராஜபுரத்தில் 247 வீடுகள் கட்டுவதற்கும், வேலூர் தொரப்பாடியில் 65 வீடுகள் கட்டுவதற்கும் இக்கழகம் திட்டங்களை மேற்கொண்டு



கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இதற்காக ஹட்கோ அளிக்கவிருக்கும் கடன் உதவியான ரூ. 22.72 இலட்சத்தில் முதல் தவணையாக ரூ. 5.92 இலட்சம் வழங்கப்பட்டு விட்டது.

64. இக்கழகம் கட்டிய வீடுகளை வாங்குவதற்கு தகுதியுள்ள காவல் பணியாளர்களுக்கு அரசு வீட்டுக் கடன் வழங்குவதற்காக ரூபாய் 1 கோடி ஒதுக்கியுள்ளது. காவல்துறையின் குறைந்த மற்றும் நடுத்தர ஊதியம் வாங்கும் பணியாளர்களுக்கு சீரான விலையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் எண்ணத்துடன் இவ்வாரியம் மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் தொழில் நகரங்களில் உள்ள அரசு நிலங்களை கையகப்படுத்த உத்தேசித்துள்ளது. மேலும் இவ்வாரியம் நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தினால் கிடைக்கக் கூடிய நிலங்களையும், கோவில் நிலங்களையும் விலைக்கு வாங்க முடிவு செய்துள்ளது. இடம் கிடைப்பது அரிதாக உள்ள இடங்கள் மற்றும் வேலை வாய்ப்பு வசதிகள் உள்ள பகுதிகளும் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### காவல் நிலையக் கட்டிடங்கள்.

65. தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்களுக்கு வாடகைக்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் அதிகத் தொகையினைக் கருத்தில் கொண்டு காவல் நிலையங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. தற்போது மாநிலத்திலுள்ள 984 காவல் நிலையங்கள் மற்றும் 187 புறக்காவல் நிலையங்களில் 290 காவல் நிலையங்களும் 97 புறக்காவல் நிலையங்களும் தனியார் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. இக்கட்டிடங்களில் இயங்கி வரும் காவல் நிலையங்களுக்கு வாடகையாக ஆண்டு ஒன்றிற்கு ரூ. 6.50 இலட்சம் செலவிடப்படுகிறது.

66. அரசு மேலும் ரூபாய் 350 இலட்சம் செலவில் 150 காவல் நிலையக் கட்டிடங்களையும், ரூ. 331.71 இலட்சம் செலவில் 95 காவல் நிலையக் கட்டிடங்களையும் கட்ட தீர்மானித்துள்ளது. இதுவரை 116 காவல் நிலையங்கள் கட்டப்பட்டு அவை காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மற்றவை பல்வேறு நிலைகளில் கட்டுமானப் பணியில் உள்ளன.

67. இது தவிர அரசு மாநிலத்தில் உள்ள பெண் காவல் பணியினருக்காக ரூ. 28.50 இலட்சம் செலவில் 60 கட்டிடங்களைக் கட்ட ஒப்புதல் வழங்கியது. இதுவரை 24 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மீதியுள்ள கட்டிடங்கள் பல்வேறு நிலைகளில் கட்டுமானப் பணியில் உள்ளன.

68. காவல்துறையினரிடம் உள்ள செயலாற்றல் மற்றும் திறமையினை ஊக்குவித்து அவை காவல் துறையின் செயல பாட்டிற்கு மேலும் உதவும் வகையில் அமைவதற்கான வழி முறைகளில் ஆக்கமும் ஊக்கமும் அளித்திடும் வகையில் காவல் துறையில் பணி புரிபவர்களுக்கு ஆண்டுதோறும் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. இதனால் காவல்துறையினரிடம் கூட்டாகப் பணிபுரியும் மனப்பாங்கை ஏற்படுத்துவதுடன் காவல் பணியின் குறிக்கோளை அடைய இயலும்.

## குடியரசுத் தலைவரின் காவல் பதக்கமும் காவல் துறைப் பதக்கங்களும்.

69. 1985 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் காவல் துறையினைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஆகிய 49 பேருக்கு சிறப்பான பணிபுரிந்ததற்கான தமிழ்நாடு ஊர்க்காவல் படையினருக்கு குடியரசுத் தின ஊர்க்காவல் படைப் பதக்கமும், நான்கு ஊர்க்காவல் படையினருக்கு சுதந்திர தின ஊர்க்காவல் படைப் பதக்கமும் வழங்கப்பட்டன.

## தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் பதக்கம்.

(வீரச் செயல் மற்றும் கடமையில் பற்றுணர்விற்காக.)

70. 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல்துறையில் பணியாற்றும் அதிகாரிகள், காவலர்கள் ஆகிய 6 பேருக்கு வீரச் செயலுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காவல் பதக்கம் வழங்கப் பட்டது. மேலும் காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஆகிய 22 பேருக்கு வழங்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு இரண்டு முதலமைச்சர் அவர்களின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது. 1985 ஆம் ஆண்டு ஒரு பெண் உட்பட 5 பேர்களுக்கு முதலமைச்சரின் தமிழ்நாடு ஊர்க்காவல் படையினருக்கான பதக்கம் வழங்கப்பட்டது.



## தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

(பாராட்டத்தக்க பணிக்காக.)

71. தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரியும் தலைமைக் காவலர்கள், காவலர்கள் மற்றும் அதற்குச் சமமான பதவியில் உள்ளவர்கள் 10 ஆண்டு காலம் தண்டனை ஏதுமின்றி பணி புரிந்திருந்தால் இத்திட்டத்தின்கீழ் பதக்கங்கள் பெற தகுதி யுடையவர்கள் ஆவர். 1982 ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அரசு முதன் முதலாக இத் திட்டத்தை அறிவித்தது. 1985 ஆம் ஆண்டு இத் திட்டத்தின்கீழ் 1,262 காவலர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1986 ஆம் ஆண்டில் 1,359 பேருக்கு இப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

## தமிழ்நாடு காவல்துறை சேமநல நிதி.

72. தமிழ்நாடு காவல்துறையைச் சேர்ந்த அரசிதழ் பதிவு பெறா அனைத்துப் பணியாளர்களின் நலத்திற்காக தமிழ்நாடு காவலர் நல நிதி தொடங்கப்பட்டது. இந் நிதியின் வருவாய் இத் திட்டத்தில் சேருபவர்களிடமிருந்து பெறப்படும் சந்தா தொகை மற்றும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் நன்கொடை ஆகியவற்றின் மூலம் திரட்டப்படுகிறது. மேலும் அரசு ஆண்டுதோறும் ஒரு தொகையினை நன்கொடை யாக வழங்கி இத் திட்டத்திற்கான நிதியினை அதிகரித்து வருகிறது. ஆண்டுதோறும் அரசு இந்த நிதிக்கு வழங்கி வரும் மானியத்தினை ரூ. 3.5 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

73. இந்நிதி, கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது :—

(அ) காவலர் குடியிருப்புகளில் நூல் நிலையங்கள் அமைத்தல், மற்றும் சஞ்சிகைகள் வாங்குதல்.

(ஆ) அரசிதழ் பதிவு பெறா பணியாளர்களின் குழந்தை களின் தொழில் நுட்பக் கல்விக்கு உதவித் தொகை அளித்தல்

(இ) உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு ஈமச் சடங்கு செலவிற்காக ரூ. 100 வழங்குதல்.

(ஈ) இறந்து போன உறுப்பினர்களின் மனைவி மற்றும் வாரிசுகளுக்கு நிதி உதவி செய்தல்.

(உ) காச நோய், புற்று நோய், தொழு நோய் போன்ற நோய்களினால் அல்லல் படுபவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கும் ஊட்டச்சத்து பெறுவதற்கும் நிதி உதவி அளித்தல்.

(ஊ) மத்திய குழுவின் பரிந்துரையின்படி தேவையானவர்களுக்கு ஏற்ற பொது நல உதவி அளித்தல்.

74. இவை தவிர ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல் போன்ற பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்காக (Diploma) அரசிதழ் பதிவு பெறா ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்லூரிப் படிப்பு, தொழில் நுட்பம் மற்றும் மேல் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு இந் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்பின் தன்மையைப் பொருத்து ஆண்டு ஒன்றிற்கு ரூ. 250 முதல் ரூ. 625 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. காவல்துறை பணியாளர்கள் இறந்தால் அவர் வகித்து வந்த பதவிக்கேற்ப ரூ. 300-லிருந்து ரூ. 700 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டு இத் திட்டத்தின் கீழ் ரூ. 3,46,550 செலவழிக்கப்பட்டது.

**தமிழ்நாடு காவல்துறை நூற்றாண்டுவிழா படிப்புதவித் தொகை.**

75. மேற்கூறிய திட்டம் தவிர அரசிதழ் பதிவு பெறா களப் பணியாளர்களின் தகுதி வாய்த்த குழந்தைகள் கல்லூரிகளில் தொழில் நுட்பம் மற்றும் மேல்படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு வருடாந்திர கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. வருடாந்திர நன்கொடை மற்றும் தர்ம சிந்தனை உள்ளவர்கள் அளிக்கும் நிதி உதவியின் மூலம் இத் திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டு இத் திட்டத்தின் கீழ் படிப்புதவித் தொகையாக ரூபாய் 40,250 வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு காவலர் நல அமைப்பு.**

76. காவல்துறையில் பணிபுரியும் பணியாளர் குடும்பங்களின் வருவாயினைப் பெருக்கி அவர்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடன் காவலர் நல அமைப்பு செயல்பட்டு வருகிறது. அப் பணியாளர்



களின் குடும்ப வருவாயைக் கூடுதலாக்குவதற்காக நூல் நூற்றல், தையல் வேலை, பாய் முடைதல், தறி நெய்தல், தீக்குச்சி செய்தல், பால் பண்ணை, கோழிப் பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

**பகுதி—5.**

**மைய அரசிடமிருந்து பெற்ற உதவி.**

77. 1980-81 முதல் 1989-90 வரையிலான பத்தாண்டு காலத்திற்கு மாநிலக் காவல்துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு இரண்டாவது முறையாக நீட்டித்திருக்கிறது. 1980-81 முதல் 1984-85 வரையிலான ஐந்தாண்டு காலத்திற்கு மைய அரசு ரூ. 319.335 இலட்சத்தைக் கடனாகவும் மானியமாகவும் வழங்கியுள்ளது. இப்பணம் முழுவதும் வி.எச்.எப்., மோட்டார் சைக்கிள்கள், கம்ப்யூட்டர் சாதனங்கள், புலன் விசாரணைக்கு உதவும் கருவிகள், அறிவியல் சாதனங்கள் மற்றும் திருச்சியில் மண்டல காவல்துறை போக்குவரத்து பணிமனை திறத்தல், மதுரையில் மண்டல தடய அறிவியல் துறைக்கான ஆய்வகம் கட்டுதல் ஆகியவற்றிற்கு செலவிடப்பட்டது. திருச்சி, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய சரக தலைமையிடங்களில் நுண்ணலை நிலையங்கள் அமைக்க ரூபாய் 162.05 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. நடப்பு ஆண்டில் அனுமதிக்கப்படவிருக்கும் மானிய உதவியான ரூபாய் 75.14 இலட்சத்தினைக் கொண்டு தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் பாதுகாப் பிற்குத் தேவையான சாதனங்கள், பிக் அப் வேன்கள், ஜீப், மோட்டார் வாகனங்கள் வாங்கவும் மற்றும் தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்திற்கான கட்டிடம் கட்டவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது. மைய அரசின் மானியத்தை தவிர, 1980-81 ஆம் ஆண்டு முதல் 1984-85 ஆம் ஆண்டு வரை ரூபாய் 304.942 இலட்சம் மாநில அரசு செலவிட்டுள்ளது. மேலும் நடப்பு நிதி ஆண்டில் மோட்டார் வாகனங்கள் மற்றும் பல்வேறு கருவிகள் வாங்கவும் வி.எச்.எப். மற்றும் நுண்ணலை திட்டங்களை முழுமையாக்கவும் ரூபாய் 129.18 இலட்சம் செலவு செய்யப்படவுள்ளது. ஏழாவது நிதிக் குழுவின் காலம் 1983-84 ஆம் ஆண்டுடன் முடிந்துவிட்டது. எனவே ஊர்க் காவல் படை, காவல்துறை ஆகியவற்றின் திறனை மேம்படுத்த மைய அரசு நிதி உதவி அளிக்கவில்லை.

## பகுதி 6.

### குற்றம் மற்றும் சட்டமும் ஒழுங்கும்.

**குற்றம்.**

78. பெருகி வரும் குற்றங்களைக் கட்டுப்படுத்தி மாநிலத்தில் சட்டம் மற்றும் அமைதியைக் காப்பதில் சம்பந்தப்பட்ட அனைவரும் மிகவும் விழிப்புணர்ச்சியுடன் பணியாற்ற வேண்டியுள்ளது. நன்கு பயிற்சி பெற்ற, எதற்கும் துணிந்த குற்றவாளிகளினால் குற்றங்கள் இழைக்கப்படுவதால் கடும் குற்ற நிலைமை அண்மைக் காலத்தில் அச்சமூட்டும் வகையில் அமைந்துள்ளது. மாநிலத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கினைத் திறம்படப் பேணிக் காப்பதுடன் காவலர்கள் இக்காலத்தில் பெரும் பொறுப்பினை ஏற்றுப் பணி புரிகின்றனர்.

79. இனக் கலவரங்கள் அதிகமாகும் பொழுது அச்சமயங்களில் பணி புரியும் காவலர்கள் நடு நிலையுடன் கூடிய பொறுப்புணர்வோடு அவற்றைக் கட்டுக்குள் அடக்கி நிலைமையைச் சீர் செய்ய வேண்டியுள்ளது. மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கும் திறமையான தலைமையின் மூலம்தான், சமயத்தாலும் சாதிகளாலும் பல பிரிவுகளைக் கொண்ட சமுதாயத்தில் மதச் சார்பற்ற கொள்கைகளைச் செயலளவில் கடைப்பிடிக்க முடியும்.

80. குற்றங்களைத் திறமையாகக் கட்டுப்படுத்தி சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைநிறுத்தி மேற்குறிப்பிட்ட வகையில் பணி புரிவதில் தமிழகக் காவல்துறை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. குற்றவாளிகளைக் கைது செய்து குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் காவலர்கள் காட்டும் உறுதியையும் விடாமுயற்சியையும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளிலிருந்து தன்கறியலாம்.





தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்களும் கண்டு பிடிப்புகளும்.

| குற்றத் தலைப்பு. | 1984 புகார் செய்யப் பட்டவை. | 1984 கண்டு பிடிக்கப் பட்டவை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆதாயத்திற்கான கொலை .. | 62 | 42 |
| கொள்ளை .. | 101 | 79 |
| வழிப்பறி .. | 338 | 228 |
| வீடு புகுந்து கொள்ளை .. | 9,960 | 5,215 |
| பெரிய திருட்டு .. | 22,533 | 15,298 |
| சிறிய திருட்டு .. | 1,878 | 1,763 |
| கால்நடை திருட்டு .. | 1,015 | 892 |
| மொத்தம் .. | 34,887 | 23,617 |
| கண்டு பிடிப்புகளின் விழுக்காடு. | | 65.5 |

| | 1985 | |
|---|---|---|
| (1) | (3) | (2) |
| ஆதாயத்திற்கான கொலை .. | 76 | 60 |
| கொள்ளை .. | 53 | 33 |
| வழிப்பறி .. | 415 | 285 |
| வீடு புகுந்து கொள்ளை .. | 9,237 | 5,161 |
| பெரிய திருட்டு .. | 22,643 | 16,417 |
| சிறிய திருட்டு .. | 1,788 | 1,691 |
| கால்நடை திருட்டு .. | 1,064 | 975 |
| மொத்தம் .. | 35,276 | 24,622 |
| கண்டுபிடிப்புகளின் விழுக்காடு. | | 69·8 |

**சென்னையிலுள்ள விரல்ரேகைப் பதிவுக் கூடம், மாவட்டம்**

81. சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம், தமிழ்நாடு தடயத்திலுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம், நாய்ப்படை மற்றும் கம்பியூட்டர் பிரிவு அறிவியல் ஆய்வகம், விஞ்ஞான முறையிலான குற்ற ஆய்வு ஆகியவற்றின் உதவியுடன் கடப்பாண்டிலும் குற்றங்களைக் கண்டு பிடிப்பதில் பயன்படுத்தப்பட்டன.

89. ராசிபுரம் (சேலம்) காவல் நிலையக் குற்ற எண் 369/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 'பள்ளநாயக்கன்பட்டி' என்ற கிராமத்தில் 17—8—1985 அன்று மணி மற்றும் அவனது கூட்டாளி 8 பேர் ஒன்று சேர்ந்து பாப்பாயி அம்மாள் என்பவளைக் கொலை செய்து ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், டிரான்சிஸ்டர் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட அயராத புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளிகள் 21—8—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இதில் மேற்கொண்டு புலன் விசாரணை நடந்து வருகிறது.

90. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி காவல் நிலையக் குற்ற எண் 283/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் பாலுச்சாமி என்பவரது மகன் ராஜகோபால் மற்றும் அவனது கூட்டாளியான ராமசாமியின் மகன் ராமகிருஷ்ணன், ஆகியோர் 12—8—1985 முதல் 22—8—1985 வரையிலான காலத்தில் பரமக்குடியைச் சேர்ந்த ரத்தின தேவர் என்பவரைக் கொலை செய்துவிட்டு அவரிடமிருந்து ரூ. 81,000 மதிப்புள்ள தங்க நகைகள், ரொக்கம் மற்றும் கைக்கெடிகாரத்தைக் களவாடிச் சென்றனர். 1—9—1985 அன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுக் களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

91. மதுரை மாவட்டம், திருநகர் காவல் நிலையக் குற்ற எண் 449/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் திருநகர், விநாயக பெருமாள் தெருவைச் சார்ந்த வள்ளிரேஸ்வரி என்பவள் 16—11—1985 அன்று இரவு கொலை செய்யப்பட்டு ரூ. 17,30[illegible] மதிப்புள்ள நகைகள் களவாடப்பட்டு இருந்தன. மதுரை நகர் காவல் துறையினர் மேற்கொண்ட துரித புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளி பாண்டி மற்றும் அவரது கூட்டாளி ஆறுமுகம் ஆகியோர் 30—11—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

92. தர்மபுரி மாவட்டம் மகாராஜ கடை [illegible] ஏரியில் [illegible]—1985 அன்று TNJ 9980 என்ற எண்ணுள்ள லாரியின் [illegible]டிரைவர் மற்றும் அதன் துடைப்பனரும் கொலை செய்யப்பட்டு லாரியில் இருந்த ரூ. 12 இலட்சம் மதிப்புள்ள துணி மூட்டைகள் களவாடப்பட்டன. தர்மபுரி மாவட்ட காவல் துறையினர் மேற்கொண்ட விரைவு நடவடிக்கையின் காரணமாக குற்றவாளி சேகர் மற்றும் அவரது கூட்டாளிகள் மூன்று பேர் 3—1—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.



**கொள்ளை :**

93. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், மதுரவாயல் காவல் நிலையக் குற்ற எண் 62/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 20—1—1985 அன்று வானகரத்தில் அசிம் பாட்சா என்பவரது வீட்டில் மாணிக்கம், நம்பியப்பன், பழனி, சுப்பரமணி, ரத்தினம், மற்றும் தேரிக்குடியான் ஆகியோர் அடங்கிய ஒரு கொள்ளைக் கூட்டம் புகுந்து அங்கு இருந்து ரூ. 15,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடிச் சென்றது. உரிய நேரத்தில் காவல் துறையினர் முறையான நடவடிக்கை எடுத்ததன் பயனாக 27—4—1985 அன்று குற்றமிழைத்தவர்கள் கைது செய்யப்பட்டு திருடப்பட்ட அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

94. செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் திருவள்ளூர் வட்டம் காவல் நிலையக் குற்ற எண் 162/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் காக்களூர் கிராமத்தைச் சேர்ந்த கோவிந்தசாமி என்பவரது வீட்டில் 14—6—1985 அன்று அடையாளம் தெரியாத சில குற்றவாளிகள் கத்தி, தடி ஆகிய ஆயுதங்களைக் கொண்டு அவ்வீட்டின் முன் கதவினை உடைத்து உள்ளே புகுந்து ரூ. 3,060 மதிப்புள்ள நகைகளைக் களவாடிச் சென்றனர். இக்குற்றத்தைத் துப்புத் துலக்க செங்கை மாவட்டக் காவல் துறையினர் சிலர் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக் குழுவினர் கை ரேகை நிபுணர்களுடன் அவ்விடத்திற்கு சென்று அங்கு கிடைத்த சில கைரேகைகளைச் சேகரித்தனர். பிறகு இவர்கள் ஆந்திர மாநிலத்திற்குச் சென்று அங்குள்ள ஸ்டுவர்ட்புரம் குற்றவாளிகளின் விரல் ரேகைப் பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தனர். இவர்கள் ஆந்திர மாநிலக் காவல் துறையினருடன் நல்ல தொடர்பு கொண்டு குற்றவாளி டேனியலையும் அவருடைய கூட்டாளிகள் 6 பேரையும் 8—8—1985 அன்று கைது செய்தனர். இக் குற்றவாளிகள் ரூபாய் 15,000. மதிப்புள்ள தங்க ந[illegible]

ரொக்கம் ஆகியவற்றை இந்த மாதிரி ஏற்கனவே களவாடிச்
சென்றது குறித்து சோழவாரம் காவல் நிலையக் குற்ற எண்
267/85 இல (செங்கை கிழக்கு மாவட்டம்) ஒரு வழக்கு பதிவு
செய்யப்பட்டது. இந்த இரண்டு வழக்குகளும் புலன்
விசாரணையில் உள்ளன.

95. மதுரை (ஊரகம்) மாவட்டத்தைச் சார்ந்த போடி காவல்
நிலையக் குற்ற எண் 88/85 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்
அடையாளம் தெரியாத ஏழுபேர் 24—7—1985 அன்று கள்ள
மாணிக்கம் மேட்டில் உள்ள ஒரு வீட்டினுள் புகுந்து வீட்டிலுள்ள
வர்களிடமிருந்து ரூபாய் 15,000 மதிப்புள்ள நகைகளைக் கவர்ந்து
சென்றனர். காவலர்கள் அயராது மேற்கொண்ட புலன்
விசாரணையின் விளைவாக தேனியைச் சேர்ந்த குற்றவாளி
பாண்டி அவரது கூட்டாளி 6 பேர்கள் 19—9—1985 மற்றும்
9—12—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட
சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்
ளது.

96. தர்மபுரி மாவட்டம் மாத்தூர் காவல் நிலையக் குற்ற
எண் 74/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் மாத்தூர் கிராமத்தைச்
சார்ந்த ஆறுமுகம் என்பவரது வீட்டினுள் 27—6—1985 அன்று
பாப்பனூரைச் சார்ந்த கோவிந்தசாமி என்பவரின் மகன் முத்து
மற்றும் அவரது கூட்டாளி 9 பேர் புகுந்து ரூபாய் 8,640 மதிப்புள்ள
தங்க நகைகள், ரொக்கம் மற்றும் கைக்கடிகாரம் ஆகியவற்றை
களவாடிச் சென்றனர். குற்றவாளிகள் அனைவரும் கைது செய்யப்
பட்டு களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு
புலன் விசாரணையில் உள்ளது.

97. பெரியார் மாவட்டம் சித்தோடு காவல் நிலையக் குற்ற
எண் 306/85 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 14—9—1985
அன்று பாரோடு கிராமத்தைச் சார்ந்த கவுண்டியப்பன் என்பவரது
வீட்டின் கதவினை உடைத்து அடையாளம் தெரியாத ஆறு
நபர்கள் கையில் தடிகளை ஏந்தி உள்ளே நுழைந்து வீட்டில்
இருந்து ரூபாய் 12,450 மதிப்புள்ள நகைகள் மற்றும் பொருட்
களைத் திருடிச் சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட
அயராத புலன் விசாரணையின் விளைவாக ராயர்பாளையத்தைச்





சார்ந்த வெள்ளையன் மற்றும் அவனது கூட்டாளிகள்
11—10—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட
பொருட்கள் மீட்கப்பட்டன வழக்கு புலன் விசாரணையில்
உள்ளது.

வழிப்பறி :

98. கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட்டம் பொள்ளாச்சி கிழக்கு
நகரக்காவல் நிலையக் குற்ற எண் 102/85 இல் பதிவு செய்யப்பட்ட
வழக்கில் 12—3—1985 அன்று பொள்ளாச்சி மத்திய பேருந்து
நிலையத்தில் பொள்ளாச்சியைச் சேர்ந்த துரை, ஆனந்தன்
மற்றும் முத்துக்கிருஷ்ணன் ஆகியோர் சேதுமதி என்பவரை வழி
மறித்து அவரிடம் இருந்து ரூபாய் 22,000 மதிப்புள்ள தங்க
நகைகளை வழிப்பறி செய்தனர். குற்றவாளிகள் 13—3—1985
அன்று கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு
நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

99. திருநெல்வேலி (கிழக்கு) மாவட்டம் மணியாச்சி காவல்
நிலையக் குற்ற எண் 3/85 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்
17—5—1985 அன்று சிவலப்பேரியில் குப்பம்குறிச்சியைச் சார்ந்த
முருகன் என்பவர் வழிப்பறி செய்து அங்கு இருந்து கட்ட
பொம்மன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த ரூபாய் மூன்று
இலட்சம் மதிப்புள்ள TML 1040 என்ற எண்ணுள்ள வண்டி
யினை ஓட்டிச் சென்றார். குற்றவாளி உடனடியாக கைது
செய்யப்பட்டு சொத்து மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற
விசாரணையில் உள்ளது.

100. திருச்சிராப்பள்ளி மாவட்டம் உடையார் பாளையம்
காவல் நிலையக் குற்ற எண் 67/85 இல் பதிவு செய்யப்பட்ட
வழக்கில் 21—5—1985 அன்று அடையாளம் தெரியாத சிலர்,
உடையார்பாளையம் கிருஷ்ணமூர்த்தி என்பவரது வீட்டில்
நுழைந்து வீட்டில் இருந்தவர்களிடம் இருந்து ரூபாய் 60,000
மதிப்புள்ள தங்கம், வெள்ளி மற்றும் ரொக்கம் ஆகியவற்றைத்
திருடிச் சென்றனர். தீவிர புலன் விசாரணையின் காரணமாக
குற்றவாளிகள் பில்லா போஸ் என்ற ராஜேந்திரன் என்கின்ற
புலியன் மற்றும் அவரது கூட்டாளி வைத்தியநாதன் ஆகியோர்
முறையே 16—6—1985 மற்றும் 15—7—1985 அன்று கைது
செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன
வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

101. பசும்பொன்முத்துராமலிங்கம் மாவட்டத்தைச் சேர்ந்த மெடுகப்பட்டி காவல் நிலையக் குற்ற எண் 95/85 இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் மாரியப்பன், முத்து, சேவியர் மற்றும் முத்துராமலிங்கம் ஆகியோர் 23—7—1985 அன்று மேலூரிலிருந்து சிவகெங்கை செல்வதற்காக டி.டி.ஏ. 4774 என்ற எண்ணுள்ள பயணிகள் டாக்ஸி ஒன்றை வாடகைக்கு அமர்த்தினர். அவர்கள் வண்டியில் பயணம் செய்து கொண்டு இருக்கும்பொழுது சிலந்திக்கூடு என்ற இடத்தில் வண்டியின் ஓட்டுநரை வெளியே தள்ளிவிட்டு ரூபாய் 1,10,000 மதிப்புள்ள வண்டியை ஓட்டிச் சென்று விட்டனர். காவல்துறையினர் வெகு விரைவுடன் மேற்கொண்ட விசாரணையின் பயனாக 6—9—1985 அன்று குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு வண்டி மீட்கப் பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

102. திருநெல்வேலி (கிழக்கு) மாவட்டம் திருவேங்கடம் காவல் நிலையக் குற்ற எண் 126/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகள் இராஜேந்திரன், சுப்பிரமணியம், ஜெயசேகர் மற்றும் சார்லஸ் ஆகியோர் 6—8—1985 அன்று திருவேங்கடத் திலிருந்து ராஜபாளையம் செல்வதற்காக ரூபாய் 40,000 மதிப்புள்ள TNU 5194 என்ற அம்பாஸிடர் வண்டியை வாடகைக்கு அமர்த் தினர். வண்டியில் பயணம் செய்து கொண்டு இருக்கும்பொழுது ஓட்டுநர் முத்துகிருஷ்ணன் என்பவரை வெளியே தள்ளிவிட்டு வண்டியை ஓட்டிச் சென்றனர். வெகு விரைவுடன் அயராது மேற் கொண்ட புலன் விசாரணையின் விளைவாக குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு 11—9—1985 அன்று கடத்திச் செல்லப்பட்ட வண்டி மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

103. பெரியார் மாவட்டம் கொடுமுடி காவல் நிலையக் குற்ற எண் 591/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 22—8—1985 அன்று கொடுமுடியில் அருக்காணி அம்மாள் என்பவரது வீட்டினுள் ஸ்ரீனிவாசன், விஜயன் மற்றும் சம்பந்தம் ஆகியோர் புகுந்து ரூபாய் 20,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடினர். குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் 6—9—1985 அன்று கைது செய்யப் பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.



104. திருநெல்வேலி (மேற்கு) மாவட்டம் சங்கரன்கோவில் குற்ற எண் 493/85 ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1—9—1985 அன்று கேரளாவைச் சார்ந்த ஜோசி, ராஜ் மற்றும் பம்பாயினைச் சார்ந்த பாபு ஆகியோர் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து சங்கரன்கோயில் செல்வதற்காக TNI 420 என்ற வண்டியினை வாடகைக்கு அமர்த்தினர். வண்டி செல்லும்போது குற்றவாளிகள் வண்டியின் ஓட்டுநர் மகாலிங்கத்தினை வெளியே தள்ளிவிட்டு ரூபாய் 60,000 மதிப்புள்ள வண்டியுடன் ஓடி விட்டனர். காவல் துறையினர் விரைந்து செயல்பட்டு குற்றவாளிகள் ராஜு மற்றும் ஜோதி ஆகியோரை உடனடியாகக் கைது செய்தனர். குற்றம் சாட்டப் பட்ட பம்பாயினைச் சார்ந்த பாபு என்பவர் தலைமறைவாக உள்ளார். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

105. தஞ்சாவூர் (மேற்கு) மாவட்டம் மன்னார்குடி காவல் நிலையக் குற்ற எண் 570/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 28—9—1985 அன்று சிரமங்கலம் என்ற கிராமத்தில் ஆறுமுகம் மற்றும் தியாகராசன் ஆகியோர் பிச்சம்மாள் என்பவரை வழி மறித்து அவரிடமிருந்து ரூபாய் 15,000 மதிப்புள்ள தங்க நகை களை வழிப்பறி செய்தனர். திறமையான புலன் விசாரணையின் விளைவாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 30—9—1985 அன்று கைது செய்யப்பட்டு நகைகள் மீட்கப்பட்டன. வழக்கு தண்டனை யில் முடிவுற்றது.

106. சென்னை நகரம் அண்ணாசாலை காவல் நிலையக் குற்ற எண் 2144/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1—11—1985 அன்று அடையாளம் தெரியாத சில குற்றவாளிகள் பாய்ராம் ஜங்பதூர் தெருவில் உள்ள ஒரு கார் உதிரிப் பாகங்கள் விற்பனை செய்யும் கடையில் புகுந்து அங்கு இருந்த கமல்குமார் என்பவரிடமிருந்து ரூபாய் 88,000 மதிப்புள்ள தங்கச் சங்கிலி, கடிகாரம் மற்றும் ரொக்கம் ஆகியவற்றினைத் திருடிச் சென்றனர். முறையான புலன் விசாரணையின் காரணமாக, குற்றம் சாட்டப்பட்ட தமிழ்ச் செல்வன், அருணாசலம், தேவராஜ், கணேஷ் ஆகியோர் 16—12—1985 அன்று கைது செய்யப்பட்டு சொத்துக்கள் மீட்கப் பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

நுழைந்து ரூபாய் 18,25,680 மதிப்புள்ள தங்கத்திலான அட்டு நகைகளைக் களவாடிச் சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட துரிதப்புலன் விசாரணை காரணமாக, குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

114. சென்னை நகரம் அசோக் நகர் ஆர். 3 காவல் நிலையக் குற்ற எண் 1765/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் மேற்கு மாம்பலம் ராஜகோபாலத் தெருவில் உள்ள பத்மநாபன் என்பவரது வீட்டினுள் 15—12—1985 அன்று சென்னையைச் சார்ந்த ராஜா மணி என்ற ராஜா உள்ளே நுழைந்து பூட்டினை உடைத்து ரூபாய் 2 இலட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகளைத் திருடினார். குற்றம் சாட்டப்பட்டவர் 29—12—1985 அன்று கைது செய்யப்பட்டு அனைத்துச் சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**சிலைத் திருட்டு :**

115. பெரியார் மாவட்டம் பெருந்துறைக் காவல் நிலையக் குற்ற எண் 14/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 15—1—1985 அன்றிரவு காஞ்சிகோயில் கிராமத்தில் உள்ள நீலகண்டேஸ்வரர் கோயிலின் சுவரேறிக் குதித்து தங்கவேலு மற்றும் அவனது கூட்டாளிகள் ஐந்து பேர் கோயிலின் உள்ளே புகுந்து அங்கிருந்து ரூபாய் 2 இலட்சம் மதிப்புள்ள பஞ்சலோகச் சிலைகளை திருடிச் சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட முறையான புலன் விசாரணையின் காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 4—2—1985 அன்று கைது செய்யப்பட்டு, களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

116. கோயம்புத்தூர் (நகரம்) மாவட்டம், சூலூர் காவல் நிலையக் குற்ற எண் 162/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 10—8—1985 அன்று சூலூரில் உள்ள திருவேங்கடநாதர் பெருமாள் கோயிலின் சுவரேறிக் குதித்து அதன் உள்ளே புகுந்து கோயிலில் இருந்த ரூபாய் 3 இலட்சம் மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான 4 சிலைகளைக் (திருவேங்கடநாத பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி மற்றும் சுந்தரராஜ பெருமாள்) களவாடினர். தீவிரப் புலன்





விசாரணை காரணமாக 24—9—1985 அன்று முருகையன் மற்றும் அவனது கூட்டாளிகள் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் கோயம்புத்தூர் (நகரம்) காவல் நிலையக் குற்ற எண் 108/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் ரூபாய் 6 இலட்சம் பெறுமானமுள்ள மூன்று பஞ்சலோக சிலைகள் (ஸ்கந்தர், அம்மன் மற்றும் மாணிக்கவாசகர்) வழக்கிலும் சம்பந்தப்பட்டுள்ளனர். களவாடப்பட்ட அனைத்துச் சிலைகளும் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

117. கோயம்புத்தூர் (ஊரகம்) மாவட்டம் அவினாசிப் பாளையம் காவல் நிலையக் குற்ற எண் 135/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 31—8—1985 அன்று அழகுமலையில் உள்ள கைலாசநாதர் கோயிலின் கதவினை, திருப்பத்தூரைச் சார்ந்த ராமசாமி என்பவர் உடைத்து உள்ளே புகுந்து ரூபாய் 75,000 மதிப்புள்ள நான்கு பஞ்சலோகச் சிலைகளைக் (கைலாசநாதர், பிச்சாண்டவர், விநாயகர், பிச்சாண்டி) களவாடிச் சென்றார். குற்றவாளி 1—9—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

**திருட்டு.**

118. தர்மபுரி மாவட்டம், தர்மபுரி காவல் நிலையக் குற்ற எண் 2/85-ல் பதியப்பட்ட வழக்கில் கோயம்புத்தூர் மாவட்டம் தாராபுரத்தைச் சார்ந்த ஷேக் அப்துல் காதர், காஜா மற்றும் ஆலம் ஆகியோர் 2—1—1985 அன்று எம்.ஓ.ய்.இசட். 7676 என்ற இலக்கமிட்ட வாடகை வண்டியினை எடுத்துக்கொண்டு ஓசூரில் இருந்து தருமபுரிக்குச் சென்று அங்கு ஒரு விடுதியில் தங்கி இருந்தனர். அங்கு அவர்கள் ஓட்டுநருக்கு தூக்க மருந்தினைக் கொடுத்து அவரை விடுதியில் தூங்க விட்டு விட்டு வண்டியைத் திருடிக்கொண்டு சென்றனர். தர்மபுரி மாவட்டக் காவலர் உரிய நேரத்தில் எடுத்த நடவடிக்கை காரணமாக, குற்றம்சாட்டப்பட்டவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மூன்று வழக்குகள், கர்நாடகா மற்றும் கேரளா மாநிலம் ஆகிய இவ்வொன்றிலும் ஒரு வழக்கு ஆக மொத்தம் ஐந்து வழக்குகளில்

சம்பந்தப்பட்ட ரூபாய் 3,95,000 மதிப்புள்ள 5 களவாடப்பட்ட வண்டிகள் மீட்கப்பட்டன. இவ்வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன.

119. சென்னை நகரம் வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண். 91/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 12—1—1985 அன்று புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள நின்ஷா செல்வமகால் கடையிலிருந்து அபுதீன் மற்றும் இளங்கோவன் ஆகியோர் ரூபாய் 94,000-ஐ களவாடினர். காவலர் உரிய நேரத்தில் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1—10—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட தொகை மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

120. வடஆற்காடு மாவட்டம் ஆம்பூர் ஊரகம் காவல் நிலையக் குற்ற எண் 24/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 24—1—1985 அன்று வடக்குப்பட்டியில் ஒரு லாரியில் (டி.எம்.கே. 56) இருந்து ரூபாய் 91,968 மதிப்புள்ள துணி மூட்டைகளை குற்றம் சாட்டப்பட்ட ராமன், [illegible], சேகர் மற்றும் முருகேசன் ஆகியோர் களவாடினர். காவல் துறையினர் மேற்கொண்ட தீவிரப் புலன் விசாரணை காரணமாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் 28—1—1985 அன்று கைது செய்யப்பட்டு ரூபாய் 75,000 மதிப்புள்ள துணி மூட்டைகள் மீட்கப்பட்டன. வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

121. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம் அம்பத்தூர் தொழிற்பேட்டைக் காவல் நிலையக் குற்ற எண் 165/85-ல் 10—3—1985 அன்று இரவு சிட்கோ தொழிற்பேட்டையில் உதயகுமார், ராஜ், பாபு ஆகியோர் ரூபாய் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் மதிப்புள்ள பித்தளை மற்றும் செம்பு இயந்திரப் பாகங்களைக் களவாடினர். இது பற்றிய தகவல் கிடைத்தவுடன் செங்கல்பட்டு கிழக்கு மாவட்டக் காவல் துறையினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாக விரைந்து சென்று நடவடிக்கை மேற்கொண்டு குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து, அனைத்து பொருட்களையும் மீட்டனர். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.



122. சேலம் மாவட்டம் வேலூர் காவல் நிலையக் குற்ற எண் 127/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 20—3—1985 அன்று சுல்தான்பேட் வேலூரில் குற்றம் சாட்டப்பட்ட தங்கவேலு என்பவர் ரூபாய் 96,750 மதிப்புள்ள டிராக்டர் (டி.டி.டபிள்யூ. 8764) வண்டியினைக் களவாடிச் சென்றார். குற்றவாளி 21—3—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சொத்து மீட்கப்பட்டது. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

123. சென்னை நகரம் வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண் 1912/85-ல் 28—6—1985 அன்று சென்னை நகரக் காவல் துறையின ரால் சென்னையைச் சார்ந்த ரவிக்குமார் என்றும் மஸ்தான் என்றும் ராமச்சந்திரன் என்றும் அழைக்கப்படுகிற ரவி கைது செய்யப்பட்டார். இவருடைய ஒப்புதல் வாக்குமூலப்படி சென்னை, செங்கல்பட்டு, வட ஆற்காடு மற்றும் சித்தூர் மாவட் டங்களைச் சேர்ந்த 30 வழக்குகளில் சம்பந்தப்பட்ட ரூபாய் 3 இலட்சம் பெறுமானமுள்ள ஏழு அம்பாசிடர் வண்டிகள், ஒரு புல்லட் மோட்டார் சைக்கிள், ஒரு ஸ்கூட்டர், ஒரு டி.வி.எஸ். 50, 19 கைக்கடிகாரங்கள், தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் மீட்கப் பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

124. சென்னை நகரம் வேப்பேரி காவல் நிலையக் குற்ற எண் 2430/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 23—8—1985 அன்று பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள மகேஷ் லஞ்சு ஹோமில் முத்தியால் மணி என்கின்ற மணி, ரொக்கம் ரூபாய் 29,000 மற்றும் தங்க நகைகள், ஆக மொத்தம் ரூபாய் 1,64,185 மதிப்புள்ள பொருட்களைக் களவாடினார். உரிய நேரத்தில் மேற்கொள்ளப் பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் 4—10—1985 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சொத் துக்கள் மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

125. சென்னை நகரம் மைலாப்பூர் காவல் நிலையக் குற்ற எண் 2855/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் பி.வி. கோயில் தெருவில் 2—11—1985 அன்று குற்றம் சாட்டப்பட்ட நமச்சிவாயம் என்பவர் ரூபாய் 95,000 மதிப்புள்ள தங்க நகைகளைத் திருடினார்.

130. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் திருச்சி மாவட்டத்தில் உள்ள குற்றங்கள் செய்யும் குழுவினரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள சிறப்புக் குழு, குற்றவாளிகள் பற்றி தகவல்களைச் சேகரிப்பதில் வெற்றிகரமாக செயல்பட்டு பின்வரும் முக்கிய குற்றச் சம்பவங்களை கண்டு பிடித்துள்ளது.

131. கோயம்புத்தூரைச் சார்ந்த டாக்டர் எஸ். சண்முகம் என்பவரிடமிருந்து கோயம்புத்தூர் பாரத ஸ்டேட் வங்கியில் 15—6—85 அன்று ராம்ஜி நகரைச் சார்ந்த கந்தன் என்பவர் 600 அமெரிக்க டாலர்கள் மற்றும் பயணிகள் செக் ஆகியவற்றைத் திருடியது சம்மந்தமாக கோயம்புத்தூர் பி. 4 காவல் நிலையக் குற்ற எண் 712/85-ல் இ.த.ச. பிரிவு 380-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறையினரால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு 30—11—85 அன்று குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு நீதிமன்ற நிலுவையில் உள்ளது.

132. திருச்சி கோட்டைக் காவல் நிலையக் குற்ற எண் 1828/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் திருச்சி மாவட்டம் திருவெறும்பூரைச் சேர்ந்த 5 தொட்டி நாயக்கன் குற்றவாளிகள் 14—10—85 அன்று கைது செய்யப்பட்டனர். குற்றவாளிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் ரூ. 68,225 மதிப்புள்ள ரொக்கம் மற்றும் நகைகள் மீட்கப்பட்டன. வழக்கு விசாரணையில் உள்ளது.

133. சேலம் மாவட்டம், திருச்செங்கோடு காவல் நிலையக் குற்ற எண். 497/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் திருச்செங்கோடு சந்தைப்பேட்டையில் உள்ள வெங்கடாசல கவுண்டர் என்பவரின் கைப்பையில் இருந்து ரூபாய் ஒரு இலட்சம், 16—7—1985 அன்று களவாடப்பட்டது. இது சம்பந்தமாக சென்னைக் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக, திருவெறும்பூரைச் சேர்ந்த ராமன் மற்றும் வேலாயுதம்



ஆகியோர் 29—7—1985 அன்று கைது செய்யப்பட்டு ரூ. 85,500 மதிப்புள்ள ரொக்கம் மீட்கப்பட்டது. வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

**குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் சிலைத் திருட்டு பற்றிய குற்றப் பிரிவினரின் குறிப்பிடத்தக்க பணிகள் பற்றிய குறிப்பு.**

134. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையில் உள்ள சிலைத் திருட்டு பற்றிய குற்றப் பிரிவினர் 1985 ஆம் ஆண்டு 18 சிலைத் திருட்டுகள் பற்றிய வழக்குகளில் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து அவர்களிடமிருந்து 79 வெண்கலச் சிலைகள், இரண்டு பித்தளை வளைவுகள் மற்றும் 2 கற்சிலைகளைக் கைப்பற்றினர். அவற்றின் முக்கிய சில வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

135. சென்னைக் குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் 11—1—1985 அன்று கபிஸ்தலத்தைச் சார்ந்த நக்கம்பாடி செல்வராஜ் மற்றும் கிருஷ்ணன் ஆகியோரைக் கைது செய்து அவர்களிடம் இருந்து நான்கு பஞ்சலோகச் சிலைகளைக் (விநாயகர், சித்தி, புத்தி, அம்மன்) கைப்பற்றினர். குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் குற்ற எண் 1/85-ல் குற்றவியல் சட்ட பிரிவுகள் 41 மற்றும் 102-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகளின் ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் தஞ்சாவூரைச் சார்ந்த ரமேஷ் என்பவரிடம் இருந்து மற்றொரு அம்மன் சிலை கைப்பற்றப்பட்டது. களவாடப்பட்ட இப் பஞ்சலோகச் சிலைகள் ஐந்தும் தஞ்சாவூரிலுள்ள கபிஸ்தலத்தைச் சார்ந்த நக்கம்பாடி கிராமத்தில் உள்ள வெள்ளை வாரண பிள்ளையார் கோவிலில் இருந்து களவாடப்பட்டவை என்று தெரிய வந்தது.

136. தஞ்சாவூர் காவல் நிலையக் குற்ற எண் 1222/85-ல் குற்றவியல் தண்டனைச் சட்டம் பிரிவு 41 மற்றும் 102-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சிலைத் திருட்டுபற்றிய குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் தனிப் பிரிவு 28—4—1985 அன்று புதுக்கோட்டையினைச் சார்ந்த பன்னீர்செல்வம் மற்றும் அவரது சகோதரர் செல்வராஜ் என்ற சின்னநாராயணன் ஆகியோரைக்

கைது செய்து அம்மன் சிலை, மூன்று தங்கத்தாலி மற்றும் பூஜை பாத்திரங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியது. புலன் விசாரணையின்போது வடலூர் காவல் நிலையக் குற்ற எண் 169/84-ல் இ.த.ச. பிரிவு 457 மற்றும் 380-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 2—7—1984 அன்று பனயக்கோட்டை கிராமத்தில் உள்ள வில்லக் காளி அம்மன் கோயிலிலிருந்து களவாடப்பட்டவை இவை என்று தெரியவந்தது. வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

137. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் குற்ற எண் 24/85-ல் குற்றவியல் பிரிவு 41 மற்றும் 102-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் சின்னமனூரைச் சார்ந்த செல்வராஜ் என்பவர் 23—10—1985 அன்று ஒரு பஞ்சலோக ஆழ்வார் சிலை வைத்திருந்ததால் கைது செய்யப்பட்டார். அவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் ஆண்டாள் மற்றும் விஸ்வகேஸ்வரா சிலைகள் கைப்பற்றப்பட்டன. மேலும் அவரது கூட்டாளிகள் பாஸ்கரன், திருநாவுக்கரசு, பிரபாகரன் மற்றும் குருசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். தீவிர புலன் விசாரணையின்போது இச்சிலைகள் மதுராந்தகம் காவல் நிலையக் குற்ற எண் 441/85-ல் பதியப்பட்ட வழக்கில் ஏரிகாத்த ராமர் கோயிலிலிருந்து களவாடப்பட்டவை எனத் தெரியவந்தது.

138. குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் குற்ற எண் 35/85-ல் குற்றவியல் சட்டம் பிரிவு 41 மற்றும் 102-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 31—12—1985 அன்று திருச்சி மாவட்டம் செந்துறையைச் சார்ந்த வெள்ளூர் கிராமத்தில் குற்றம் சாட்டப்பட்ட சுப்பராய உடையார் என்பவர் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை மற்றும் இரண்டு அம்மன் சிலைகளுடன் கைது செய்யப்பட்டார். விசாரணையின்போது, செந்துறை காவல் எல்லைக்குட்பட்ட வெள்ளூர் கிராமத்தில் உள்ள சிவன்கோவிலில் இருந்து செந்துறை காவல் நிலையக் குற்ற எண் 135/85-ல் பதியப்பட்ட வழக்கில் களவாடப்பட்ட சிலைகள் இவை எனத் தெரியவந்தது. வழக்குப் புலன் விசாரணையில் உள்ளது.



## சட்டமும், ஒழுங்கும்.

139. தமிழ்நாட்டில், இனப்பூசல் அதிகமின்றி பொதுவாக அமைதியான சூழ்நிலை நிலவியது. இருப்பினும், மாநிலத்தில் சிற்சில இடங்களில் இனக் கலவரங்கள் நடைபெற்றுள்ளன. உள்ளூர் பிரச்சினைகளே அவற்றிற்கான காரணங்கள். தகுந்த நேரத்தில் காவல்துறையினர் எடுத்த நடவடிக்கைகளினால் நிலைமை அவ்வப்போது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. கீழ்க்கண்ட சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை.

## இனக் கலவரங்கள்.

140. புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூரில் பொன்வாசிநாதர் கோவிலின் ரதம் செல்வதற்கு தடையாக இருந்த முகமதியர் ஒருவரின் கடை முன்பிருந்த கூரையை அகற்றுவதில் ஏற்பட்ட மோதலில், 2—5—1985 அன்று பல கடைகள் சேதப்படுத்தப்பட்டன. இக்கலவரத்தில் காவல் துறையினரில் 10 பேரும், பொது மக்களில் 19 பேரும் காயமுற்றனர். அமைதியை நிலைநாட்ட காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனினும் இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. இச்சம்பவம் தொடர்பான மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணையில், காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

141. திருச்சி மாவட்டம் புத்தாநத்தத்தில் புறம்போக்கு நிலம் ஒன்றை அனுபவிப்பதில் இந்துக்கள் முகமதியர்களிடையே வெகு காலப் பகை இருந்து வந்தது. 30—5—1985 அன்று சுமார் 150 முகமதியர் புறம்போக்கு நிலத்தில் வேலி போட்டதன் காரணமாக இந்துக்கள் மற்றும் முகமதியர்களிடையே ஏற்பட்ட மோதலில் இருதரப்பினரும் காயமுற்றனர். அவர்களுக்கு சொந்தமான கடைகள், வீடுகள், வாகனங்கள் மற்றும் வைக்கோற்போர் ஆகியவற்றிற்குத் தீயிடப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் தொடர்பாக துவரங்குறிச்சி காவல் நிலையக் குற்ற எண் 114/85-ல் முகமதியர்களுக்கு எதிராக ஒரு வழக்கும், குற்ற எண் 115/85-ல் இந்துக்களுக்கெதிராக ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டன. காவல் துறையினர் 51 முகமதியர்களையும், 57 இந்துக்களையும் கைது செய்தனர். 1—9—1985 அன்று சில தீயவர்கள் புத்தாநத்தத்

திற்கு அருகில் முகமதியர் ஒருவரின் நிலத்திலிருந்த ஒரு ஆதி இந்துவுக்கும், மற்றொரு முகமதியரின் குடிசைக்கும் தீயிட்டனர். இது தொடர்பாக இரண்டு வழக்குகள் குற்ற எண்கள் 117, 118/85-ல் பதியப்பட்டன.

142. 25—10—1985 இரவு நேரங்களில் இந்து முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டத்தில் முகமதியக் கூட்டத்தினர் குழப்பம் விளைவித்தபோது பாதுகாப்பு பணியில் இருந்த காவல் துறையினர், அங்கிருந்து விட்டு அவர்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டனர். இதனால் ஆத்திரமுற்ற முகமதியர்கள், காவல் படையினர் மீது கற்களை வீசியதில் உள்ளூர்க் காவல் துணைக் கண்காணிப்பாளர், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் 7 பேர் காயமுற்றனர். கலவரத்தில் ஈடுபட்டவர்கள் ஏராளமான சொத்துக்களை நாசப்படுத்தினர். நிலைமை மோசமாகவே காவல் துறையினர் வானை நோக்கி ஐந்து வெற்றுத் தோட்டாக்களையும் ஒரு வெடித் தோட்டாவையும் சுட்டுக் கும்பலைக் கலைத்தனர். காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. இந்நிகழ்ச்சிகள் தொடர்பாக இரு பிரிவினரும் கைது செய்யப்பட்டு அவர்களுக்கெதிராக 39 வழக்குகள் பதியப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் தொடர்பாக சொத்து சேத மதிப்பு ரூ. 3,58,500 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி விசாரணை செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

143. திருச்சி மாவட்டம் கோட்டத்தூர் கிராமத்தில் மாரியம்மன் திருவிழாவின்போது கவுண்டர் வகுப்பைச் சேர்ந்த இளைஞர்கள், ஆதி திராவிடப் பெண்களைக் கேலி செய்ததைத் தொடர்ந்து இரு வகுப்பினரும் மோதிக்கொண்டு தீயிடுதலில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சிகள் 10—4—1985, 11—4—1985 மற்றும் 15—4—1985 ஆகிய நாட்களில் நடைபெற்றன. இதனால் இரு தரப்பினைச் சார்ந்தவர்களும் மற்றும் காவலர் இருவரும் காயமுற்றனர். ஆதி திராவிடர்களுக்குச் சொந்தமான வீடுகள் மற்றும் குடிசைகளுக்கு தீயிடப்பட்டன. சொத்து சேத மதிப்பு ரூபாய் [illegible] இலட்சம் ஆகும். 10—4—1985 அன்று மோதிக் கொண்ட பிரிவுகளைக் கலைக்க காவல் துறையினர் வெடித்த கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மற்றும் தடியடிப் பிரயோகம் ஆகியவைகள் பலனற்றுப் போனதால், துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனினும்,



துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. திருச்சி மாவட்ட ஆட்சியாளர் அமைதிக் குழுக் கூட்டத்தை நடத்தி இயல்பு நிலைமை ஏற்படுத்தினார்.

144. காட்டுமன்னார்குடி (தென்னாற்காடு) பகுதியில் முரசு கொட்டுவதில் இந்துக்கள்-ஆதிதிராவிடர்களிடையே கசப்புணர்ச்சி நிலவி வருகிறது. இப்பகுதியிலுள்ள ஆதி திராவிடர்கள் தங்கள் இனத்தவர்களை முரசு கொட்டும் பணியிலும், துப்புரவுப் பணியிலும் ஈடுபடுத்துவதை விரும்பவில்லை. ஆகவே அண்மையிலுள்ள கிராமங்களைச் சார்ந்த ஆதி திராவிடர் அல்லாத வேறு இன முதியோர்களுடன், ஆதி திராவிடர்களை முரசு கொட்டும் பணியில் ஈடுபடுத்தக் கூடாது என்று ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதற்கிடையில் 15—8—1985 அன்று கருங்குடி கிராம மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது முரசு கொட்டுவதற்காக வெளியேயுள்ள ஆதி திராவிடர்களை ஜாதி இந்துக்கள் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் [illegible]த்திரமடைந்த கோட்டைமேடு மற்றும் கருங்குடி கிராமத்திற்கு அருகாமையிலுள்ள கிராமங்களைச் சார்ந்த சுமார் 750 ஆதி திராவிடர்கள், ஜாதி இந்துக்களைத் தாக்க முயன்றனர். பாதுகாப்பு பணியிலிருந்த காவல் துறையினர் கும்பலைக் கலைந்து போகுமாறு கேட்டுக் கொண்டனர். ஆனால் கும்பல் அமைதி இழந்து காவல் துறையினரைத் தாக்க ஆரம்பித்தது. நிலைமை மோசமடைந்த காரணத்தினால், காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 14 பேர் காயமுற்றனர். காயமுற்ற ஒருவர் மருத்துவ மனையில் இறந்தார். இந்நிகழ்ச்சியில் கோட்டாட்சியர், காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை அதிகாரிகள் 28 பேர் காயமுற்றனர். இச்சம்பவம் குறித்து நீதி விசாரணை செய்ய ஆணையிடப்பட்டது. இதில் விசாரணை நடத்திய மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

145. மதுரை மாவட்டம் கூடலூரைச் சார்ந்த தேவர் வகுப்பினர் பயன்படுத்தி வந்த உள்ளூர் கோவிலிலுள்ள [illegible]ற்றை, கவுண்டர் வகுப்பினர் அடைவதற்கு முயன்றபோது 12—9—1985 அன்று இரு வகுப்பினருக்கும் மோதல் ஏற்பட்டது. காவல் துறையினரின் எச்சரிக்கை பயனில்லாமல் போனதினால் கண்ணீர்ப் புகை குண்டுகள் வெடிக்கப்பட்டன. கும்பல் கலைந்து செல்லும் நேரத்தில் சில விஷமிகள் தேவர்

வகுப்பினருக்குச் சொந்தமான சில குடிசைகளுக்கும், கடைகளுக்கும் தீ வைத்தனர். இந்நிகழ்ச்சியில் இரு பிரிவினரும், காவல் துறையைச் சார்ந்த சிலரும் காயமுற்றனர். கலவரம் செய்தவர்கள் மீது காவல் துறையினர் 31 வழக்குகள் பதிவு செய்தனர். இதில் 69 பேர் கைது செய்யப்பட்டனர். 8 பேர், நீதிமன்றத்தில் சரணடைந்தனர். மொத்த சேத மதிப்பு சுமார் ரூபாய் 18 இலட்சம் ஆகும்.

146. சேலம் மாவட்டம் கவுண்டம்பட்டியில் செல்லியாண்டி அம்மன் கோவில் திருவிழாவை கொண்டாடுவதில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டு ஆகஸ்டு—செப்டம்பர் மாத மத்தியில் படையாச்சி மற்றும் பந்தர் வகுப்பினரிடையே மோதல்கள் நிகழ்ந்தன. இரு பிரிவினரையும் காவல் துறையினர் கைது செய்தனர். இந்நிகழ்ச்சிகளில் சொத்து சேத மதிப்பு ரூ. 17,820 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

147. 1985 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி சோழபுரம் கிராமத்தில் (காமராசர் மாவட்டம்) அவரார்ந்தை கிராமத்தைச் சேர்ந்த தேவர்களுக்கும் தேசிகபுரம் மற்றும் சோழபுரத்தைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்குமிடையே ஏற்பட்ட வாய்த் தகராறைத் தொடர்ந்து மோதல் ஏற்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிலர் காயமுற்றனர். பின்னர் பெரிய மாரியப்பத் தேவர் என்பவர் ஆதி திராவிடர் சிலரால் தாக்கப்பட்டதால் அவ்விடத்திலேயே மரணமுற்றார். மீண்டும் சில ஆதி திராவிடர்கள் பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்றை நிறுத்தி அதிலிருந்த சிலரைத் தாக்கினர். இந்நிகழ்ச்சிகளின் தொடர்பாக சேத்தூர் காவல் நிலையக் குற்ற எண்கள் 386, 387, 388, 389/85-ல் வழக்குகள் பதியப்பட்டன. 16—10—1985 அன்று 3 ஆதி திராவிடர்கள் கைது செய்யப்பட்டனர்.

148. 1—5—1985 அன்று கன்னியாகுமரி மாவட்டம் பால்கிநாதன்விளை குழுவைச் சேர்ந்த நாடார்களுக்கும் பொலிக்கிறை கிராமத்தைச் சேர்ந்த கிறித்துவ மீனவர் குழுவுக்குமிடையே 'கபடி' விளையாட்டின்போது ஏற்பட்ட வாய்த் தகராறைத் தொடர்ந்து பால்கிநாதன்விளை மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களைச் சேர்ந்த கிறித்தவர்களுக்கும், நாடார்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. 3—5—1985



அன்று இரு வகுப்பினரும் ஒருவருக்கொருவர் சொத்துக்களைச் சேதப்படுத்திக் கொண்டனர். மொத்தத்தில் 24 வழக்குகள் பதியப்பட்டன.

149. கன்னியாகுமரி மாவட்டத்தில் 18—8—1985 அன்று இந்து முன்னணி உறுப்பினர் கிறித்தவர் ஒருவரிடையே ஏற்பட்ட வாய்த் தகராறு மற்றும் அடிதடியைத் தொடர்ந்து இந்துக்கள் மற்றும் கிறித்தவ மீனவர்களிடையே மோதல் ஏற்பட்டது. இதன் காரணமாக 19—8—1985 அன்று ஏறக்குறைய 1,000 கிறித்தவ மீனவர்கள் கொண்ட கும்பல் ஒன்று இந்துக்களின் இல்லங்களுக்கு தீயிட்டது. அவர்களில் சுமார் 200 பேர் வெள்ளவிளை கிராமத்தில் பயங்கர ஆயுதங்களுடன் இந்துக்களைத் தாக்கக் கூடினர். பெரும் மோதலைத் தவிர்க்க காவல் துறையினர் தலையிட்டபோது ஆத்திரமடைந்த மீனவர்களால் இந்துக்கள் தாக்கப்பட்டதுடன் காவல் துறையினர் 4 பேருக்கும் காயமேற்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காத காரணத்தினால் தற்காப்பிற்காகக் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். காயமுற்ற 4 மீனவர்களில் இருவர் மரணமடைந்தனர். இச்சம்பவங்கள் தொடர்பாக காவல் துறையினர் 12 வழக்குகள் பதிவு செய்துள்ளனர். இச்சம்பவம் பற்றி விசாரணை செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. விசாரணை அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

150. 14—9—1985 அன்று மணப்பாடு கிராமத்திற்கு (திருநெல்வேலி கிழக்கு) 'சிலுவைத் திருவிழாவைக்' காணச் சென்றபோது அங்கு புது குடியாத்து கிராமத்தைச் சேர்ந்த அல்போன்ஸ் மற்றும் இரு நாடார்கள் மற்றும் புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த கிறித்தவ மீனவர்களுக்குமிடையே ஏற்பட்ட வாய்த் தகராறைத் தொடர்ந்து இரு பிரிவினருக்குமிடையே மோதல் ஏற்பட்டு சிலரது இல்லங்களுக்குத் தீ வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அல்போன்ஸ் என்பவர் மரணமடைந்தார். இரு தரப்பிலும் சிலர் காயமுற்றனர். கும்பலைக் கலைக்கக் காவல் துறையினர் வானை நோக்கிச் சுட்டனர். காயமடைந்த ஐந்து பேரும், உடன்குடி அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இரு பிரிவினரும் கொடுத்த புகாரின் பேரில், காவல் துறையினர் இரு வழக்குகள்

பதிவு செய்தனர். இச்சம்பவம் குறித்துக் கோட்டாட்சியரின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

151. கிறித்தவ மீனவர்கள், நாடார் பெண்களைக் கேலி செய்கிறார்கள் என்றும் பள்ளிகளில் அவர்கள் விஷமம் புரிகிறார்கள் என்றும் கூறி திருநெல்வேலி மாவட்டம் கோடவிளை கடலுக்கருகில் கூத்தான்குளி அருகிலுள்ள கிறித்துவ மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கக்கூடாது என்று கோடவிளை இந்து நாடார்கள் ஆட்சேபம் தெரிவித்தனர். இது தொடர்பாக, 1—8—1985 அன்று சாத்தான்குளம் வட்டாட்சியர், நாடார்கள் மற்றும் மீனவர்களிடையே கோடவிளையில் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கும்போது, நிசையன்விளையைச் சேர்ந்த சில நாடார்கள் அவ்விடத்திற்கு வாகனத்தில் சென்றனர். நாடார்கள் மீனவர்களைத் தாக்க வருகின்றார்கள் என்று தப்பாக நினைத்து, மீனவர்கள் நாடார்களைத் தாக்கியதில் 7 பேர்களுக்குக் காயமேற்பட்டது. இது தொடர்பாகக் காவல் துறையினர் வழக்கு பதிவு செய்தனர்.

152. 8—12—1985 அன்று பெரிஞ்சகோணத்தில் (கன்னியாகுமரி) இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். இயக்கங்களைச் சார்ந்தவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) (பெரும்பாலும் கிறித்தவர்கள்) இயக்கத்தினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர்கள் நால்வருக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர் ஒருவருக்கும் காயமேற்பட்டது. இரு பிரிவினரும் கொடுத்த புகாரின் பேரில் காவல் துறையினர் இரண்டு வழக்குகள் பதிவு செய்து இரு பிரிவிலும் 8 பேரைக் கைது செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் பெரிஞ்சகோணம் வழியாக ஊர்வலம் நடத்திய போது, சிலர் கல்லெறிந்ததாகக் கூறப்படுவதே இம்மோதலுக்குக் காரணம். 1985 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் தேதி, கஞ்சன்கோடு, கள்ளன்குழி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிறித்தவர்கள் பெரிஞ்சகோணத்திற்கருகில் காக்கநாடு கிராமத்தைச் சேர்ந்த சில இந்துக்களைத் தாக்கியதுடன், இந்து ஒருவரிடமிருந்து ரூபாய் 5,175-ஐ எடுத்துச் சென்றனர். காயமுற்ற அனைவரும் நாகர்கோவில் அரசினர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்,





காவல் துறையினர் வழக்கொன்று பதிவு செய்து 8 குற்றவாளிகளைக் கைது செய்ததுடன் குற்றவாளிகள் பயன்படுத்திய 2 கார்களையும் கைப்பற்றினர். பெரிஞ்சகோணம் கிராமத்தில் இந்துக்கள் மற்றும் கிறித்தவர்களிடையே நிலவி வந்த கசப்புணர்ச்சி காரணமாக திருவட்டாறு காவல் நிலையத்தின் குற்ற எண்கள் 298, 299/85-ல் தக்கலை காவல் துறை ஆய்வாளரால், குற்ற நடைமுறை சட்டம் 107 பிரிவின் கீழ் 40 இந்துக்கள், 33 கிறித்தவர்கள் ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பத்மனாபபுரம் கோட்டாட்சியர் இவ்வழக்குகள் சம்பந்தமாக விசாரணை நடத்தி வருகிறார். அவ்வழக்குகள் விசாரணையிலிருக்கின்றன. காவல் துறையினர் எடுத்துக் கொண்ட உரிய நடவடிக்கையினால் தற்சமயம் அங்கு அமைதி நிலவுவதுடன் நிலைமை கட்டுக்குள் இருக்கிறது.

## தீவிரவாதிகளின் நடவடிக்கை :

153. இவ்வாண்டில், பல முன்னணி அமைப்புகளின் நடவடிக்கைகள் உச்ச நிலையில் இருந்த காரணத்தினால் சில வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றன.

154. இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை, அடக்குமுறைச் சட்டங்கள் இயற்றப்பட்டதாகக் கூறும் குற்றச்சாட்டு ஆகியவற்றை மையமாகக் கொண்டு இவர்கள் போராட்டங்கள் நடத்தினர். அஸ்ஸாம், பஞ்சாப் ஒப்பந்தங்கள், அரசுத் துறைகளில் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, புது ஜவுளிக் கொள்கை, மத்திய அரசின் கல்விக் கொள்கை, மத்திய, மாநில அரசுகள் இயங்கும் முறை ஆகியன பற்றியும் அவர்கள் குரலெழுப்பினர்.

## விவசாய நிலைமை :

155. இவ்வாண்டில் விவசாய நிலைமைகள் பொதுவாக அமைதியாக இருந்தன. இந்திய உழவர்–உழைப்பாளர் கட்சி, விவசாயிகளுக்கு இலவச மின் விநியோகம் கோரி, 25—2—1985 முதல் 3—3—1985 வரை மாநிலத்தின் பல இடங்களில் ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் நடத்தியது.

தொழிலாளர்கள் :

156. 1985 ஆம் ஆண்டில் மாநிலத்தில் பெரும்பாலும் தொழிலாளர் நிலைமை அமைதியாக இருந்தபோதிலும் துறைமுக, போக்குவரத்து, நெசவாலைத் தொழிலாளர்களால் சில வேலை நிறுத்தங்களும், பல தொழிற் சங்கங்களின் பொது வேலைநிறுத்தமும் நடைபெற்றன.

துறைமுகத் தொழிலாளர்கள் :

157. வேலைப் பாதுகாப்பு கோரி, தூத்துக்குடி பழைய துறைமுகத்தைச் சேர்ந்த சுமார் 900 படகுத் தொழிலாளர்கள் (பல தொழிற் சங்கங்களைச் சேர்ந்தவர்கள்) 15—3—1985 முதல் 16—4—1985 வரை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். வேலை நிறுத்த காலத்தில் தொடர் உண்ணாவிரதம் அனுசரித்த 92 தொழிலாளர்கள் மருத்துவ காரணங்களுக்காக கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டனர். ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதையடுத்து 16—4—1985 அன்று வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டு 17—4—1985 அன்று அவர்கள் பணி மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

158. கூலி உயர்வு, இடைக்கால நிவாரணம் ஆகியன கோரி, 16—7—1985 அன்று தொழிலாளர்கள் ஏறக்குறைய 2,600 பேர் அனைத்து தொழிற் சங்கங்கள் நடத்திய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட காரணத்தினால் சேலம் மாவட்டம், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் நிர்வாகம், அதன் நிறுவனங்களுக்கு 16—7—1985 முதல் கதவடைப்பு அறிவித்தது. கதவடைப்பை நீக்கக் கோரி மேற்படி நிறுவனங்களைச் சேர்ந்த 1,300 தொழிலாளர்கள் 12—11—1985 அன்று சேலத்தில் ஊர்வலம் நடத்தினர். சில முக்கிய தலைவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மறியல் செய்ய முயன்றபோது கைது செய்யப்பட்டு பின்னர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர். மேற்கண்ட ஆலையின் கதவடைப்பு நீடிக்கிறது.



159. 4—12—1985 அன்று மீனவர்கள் மீதான காவல் துறையினரின் துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்தும், போராடும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் ஆகியோருக்கு ஆதரவு தெரிவிக்கு முகத்தானும் 11—12—1985 அன்று பல தொழிற் சங்கங்கள் நடத்திய மாநில அளவிலான பொது வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு குறைவாக இருந்ததுடன், மாமூல் வாழ்க்கை பாதிக்கப்படவில்லை. சில கல்லெறிச் சம்பவங்கள், வாகனப் போக்குவரத்துத் தடை ஆகிய சிற்சில சம்பவங்கள் தவிர மாநிலத்தில் பொதுவாக அமைதி நிலவியது. பேருந்து போக்குவரத்து மற்றும் புகைவண்டி போக்குவரத்துக்கள் பாதிக்கப்படவில்லை.

1985 ஆம் ஆண்டில் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடுகள்.

160. 1985 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் காவல் துறையினர் 17 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஒரு நிகழ்ச்சியில் அத்தியாவசியப் பண்டங்களை அண்டை மாநிலங்களுக்குத் திருட்டுத்தனமாகக் கொண்டு சென்ற வாகனத்தை நிறுத்த காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் எவரும் காயமுறவில்லை. "இனக் கலவரங்கள்" என்ற தலைப்பில் குறிப்பிடப்பட்ட தோட்டக் குறிச்சி (திருச்சி), இலுப்பூர் (புதுக்கோட்டை), காட்டு மன்னார்குடி (தென் ஆற்காடு), கீழக்கரை (ராமநாதபுரம்), மணப்பாடு (திருநெல்வேலி) வெள்ள விளை (கன்னியாகுமரி) ஆகிய ஆறு இடங்களில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

161. மீதமுள்ள அனைத்துச் சம்பவங்களின் உண்மை நிலவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

15—1—1985 அன்று மதுரை ஊரக மாவட்டம், சின்னமனூரில் மாட்டுப் பொங்கலன்று மஞ்சுவிரட்டு நடைபெற்றது. சேர்வை வகுப்பினர் ஒருவரின் மாடு, மறவர் வகுப்பைச் சேர்ந்த முதியவர்

ஒருவரை முட்டியதின் தொடர்பாக ஏற்பட்ட வாய்த் தகராறைத் தொடர்ந்து அவ்விரு வகுப்பைச் சேர்ந்த சுமார் 1,000 பேர் கற்களை வீசிக் கொண்டு, ஒருவருக்கொருவர் மோதிக் கொண்டனர். அக்கும்பல் காவற்படை மீது கற்களை எறிந்ததில் ஒரு உதவி ஆய்வாளர், 2 காவலர்கள் ஆகியோர் காயமுற்றனர். தகுந்த எச்சரிக்கை செய்த பிறகு காவல் துறையினர், கும்பலைக் கலைக்க வானை நோக்கிச் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. இது தொடர்பாக சின்னமனூர் கா. நி.கு. எண்கள் 13/85, இ. த. ச. 147, 148, 341, 332, 336, 307 ஆகிய பிரிவுகளில் ஒரு வழக்கும், 14/85-ல் இ.த.ச. 147, 148, 324, 307 ஆகிய பிரிவுகளில் மற்றொரு வழக்கும் பதியப்பட்டது. இது குறித்து பெரியகுளம் உதவி ஆட்சித் தலைவர் விசாரணை நடத்தினார். தற்காப்பிற்காகக் காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது என்ற அவரது அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது.

162. 21—4—1985 அன்று செங்கற்பட்டு மேற்கு மாவட்டம் மாகரல் கிராமத்திற்கு அருகில் திருவள்ளூர் செங்குன்றம் சாலையில் அரிசி கடத்துவதாக சந்தேகப்பட்ட ஒரு லாரியை நிறுத்த திருவள்ளூர் வட்டார விநியோக அதிகாரியின் ஆணையின் பேரில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். எனினும், லாரி ஓட்டுநர் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றார். இது தொடர்பாக, வழக்கொன்று பதிவு செய்து விசாரணை நடைபெறுகிறது.

163. சென்னை நகர் மற்றும் திருவொற்றியூர் ஆகிய இடங்களில் தொடர்ந்த திருட்டு வழக்குகளில் சம்பந்தப்பட்ட 5 குற்றவாளிகளை எண்ணூர் நெடுஞ்சாலை கடற்கரையில் 28—9—1985 அன்று காவற் படையொன்று பிடிக்க முயன்றபோது, அக்குற்றவாளிகள் காவற்படையினரைத் தாக்கியதில் நால்வருக்குக் காயமேற்பட்டது. பின்னர், வண்ணாரப்பேட்டைக் காவல் ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) தற்காப்பிற்காக ஒரு முறை சுட்டார். இத்துப்பாக்கிச் சூட்டில் எவரும் காயமுறவில்லை. காவல் துறையினர் இரண்டு குற்றவாளிகளைக் கைது செய்தனர். மீதமுள்ள குற்றவாளிகள் கடலில் குதித்துத் தப்பிவிட்டனர். காவல் துறையினர் வழக்கொன்று பதிவு செய்துள்ளனர்.



164. காமராசர் மாவட்டத்தில் 6—7—1985 அன்று அதிகாலையில், சொத்து வழக்கில் சம்பந்தப்பட்டுக் காணாமற் போன குற்றவாளிகளையும், மற்றும் 2 பேரையும் பிடிக்க கல்லன்குளம் கிராமத்திற்கு இரண்டு ஆய்வாளர்கள், 5 உதவி ஆய்வாளர்கள், 5 தலைமைக் காவலர்கள், 1 ஆயுதப் படைத் தலைமைக் காவலர், 6 ஆயுதப் படை காவலர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று சென்று அவர்களில் மூவரைக் கைது செய்தது. ஆத்திரமடைந்த அக்கிராமத்தினர் சுமார் 500 பேர் இவர்களைச் சூழ்ந்து கொண்டு தாக்கினர். கைது செய்யப்பட்ட நபர்கள் தப்பிவிட்டதோடு ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் 4 காவலர்கள் காணாமற் போனது கண்டுபிடிக்கப் பட்டது. பின்னர், காவற்படை ஒன்று கிராமத்திற்கு விரைந்து சென்று, பள்ளிக் கட்டிடத்திற்கு அருகில் கிராமத்தினரால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவல் துறையினரைக் காப்பாற்ற முயன்றபோது, அவர்களைக் கிராமத்தினர் தாக்கினர். காவல் துறையினரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அஞ்சிய காரணத்தினால் காவற் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் இராமர், முனியம்மாள் ஆகியோர் மரணமுற்றனர். இச்சம்பவத்தில் 22 காவல் துறையினரும், 15 கிராமத்தினரும் காயமுற்றனர். இது தொடர்பாக காரியாப்பட்டி கா. நி. கு. எண். 115/85-ல் வழக்கொன்று பதியப்பட்டு, குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணை நடத்தினார். அவ்விசாரணையில் காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது.

165. திருச்சி மாவட்டத்தில் நெற்குப்பை, என்புதூர், மறவநத்தம், தொண்டைப்பாடி, வி. களத்தூர், அகரம் ஆகிய கிராமங்கள் வேப்பந்தட்டை, திருவாளந்துறை ஆகிய ஊர்களுக்கிடையே உள்ளது. நெற்குப்பை வழியாக பெரம்பலூர்—திருவாளந்துறை ஆகிய ஊர்களுக்கு நகரப் பேருந்து வசதிகள் கோரி 12—7—1985 அன்று வேப்பந்தட்டை கிராமத்தில் மேற்கண்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள், போக்குவரத்தை மறியல் செய்யத் திட்டமிட்டனர். அதன்படியே 12—7—1985 அன்று வெப்பந்தட்டையில் சுமார் 2,000 பேர் சாலையில் அமர்ந்து

கொண்டு வாகனப் போக்குவரத்தைத் தடை செய்தனர். காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்த பின்னரும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்தனர். வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கிராமவாசிகளின் குறைபாடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த காவல் துறை மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவரைக் கேட்டுக் கொண்டனர். பேச்சுவார்த்தையின்போது கூட்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்து அவைகளின் நகல்களை ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டுமென்று அத்தலைவர்கள் வலியுறுத்தினர். அதன்படியே கூட்ட நடவடிக்கைகளின் நகல்கள் , கொடுக்கப்பட்டு அவ்வொப்பந்தத்தில் தலைவர்கள் கையெழுத்திட மறுத்து ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை விட்டுச் சென்றனர். ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முன்பாக கூடியிருந்த கும்பல், அவ்வலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டு கற்களை வீசித் தாக்கியதில் வருவாய் மற்றும் காவல் துறை அதிகாரிகள் காயமுற்றனர். அக்கும்பல் வன்முறையில் தொடர்ந்து ஈடுபட்டதாலும், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத்தை நாசப்படுத்தியாலும், காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்து அது பயனற்றுப் போன காரணத்தினால், தடியடிப் பிரயோகம் நடத்தினர். இந்நடவடிக்கைகள் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர முடியாத காரணத்தினாலும், காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஒருவர் அவ்விடத்திலேயே இறந்தார். இச்சம்பவத்தில் 47 காவல் துறையினரும், அரியலூர் கோட்டாட்சியரும், அவருடைய கடைநிலை ஊழியரும் காயமுற்றனர். காவல் துறையினரின் 3 லாரிகள், ஒரு ஜீப் தீக்கிரையாயின. வருவாய்த் துறையின் இரண்டு ஜீப்புகள் சேதமடைந்தன. தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவரின் மொபட் ஒன்றும் இரண்டு சைக்கிள்களும் தீக்கிரையாயின. இறந்தவர் அல்லாமல், இரண்டு கிராமவாசிகள் குண்டுக் காயம் அடைந்ததாகக் கூறி மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றுக் கொண்டனர். காயமுற்ற காவல் துறையினரில் 30 பேர் மருத்துவமனையில் உள்நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டனர். இது தொடர்பாக அரும்பாவூர் காவல் நிலையத்தில் வழக்கொன்று பதியப்பட்டு 59 குற்றவாளிகள் கைது செய்ய



பட்டனர். இது குறித்து விசாரணை நடத்த ஆணையிடப் பட்டது. இதில் விசாரணை நடத்திய மாவட்ட வருவாய் அலுவலரின் அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

166. 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் நாளன்று மதுரை மாவட்டம் செல்லாயிபுரத்தைச் சேர்ந்த தனுஷ்கோடி என்பவரைத் தேவாரம் காவல் நிலையத்திற்கு ஒரு குற்ற வழக்கு தொடர்பாக விசாரணை செய்ய (தேவாரம் காவல் நிலையக் குற்ற எண். 253/85) கொண்டு வரப்பட்டார். காவல் நிலையத்தின் லாக்கப்பின் கழிவறைக்குள்ளிருந்த மேல் நிலைச் சன்னலில் இருந்த வலைக் கம்பியில் தூக்கு மாட்டிக் கொண்டு அவர் இறந்ததாக அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாகக் குற்ற எண். 254/85-ல் காவல் துறையினரால் வழக்கொன்று பதிவு செய்யப்பட்டு பெரியகுளம் கோட்டாட்சியரால் விசாரணை செய்யப்பட்டது. சடலத்தை மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பும் நேரத்தில் சுமார் 2,000 பேர் சடலத்தை அகற்றுவதிலிருந்து காவல் துறையினரைத் தடுத்து காவல் நிலையத்தைத் தாக்கியதில் 6 காவல் துறையினருக்கு காயம் ஏற்பட்டது. காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி தடியடிப் பிரயோகம் நடத்தினர். அது பலனளிக்காது போகவே காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் 2 பேர் காயமுற்றனர். லாக்கப்பில் மரணம் ஏற்பட்டது தொடர்பாக காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 3 காவலர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் பணிக்கப்பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப் படுகிறது.

167. தமிழ் ஈழ ஆதரவாளர்கள் அமைப்பு (டெசோ) 1985 ஆம் ஆண்டு அக்டோபர் 3, 4, 5, 6, 7 தேதிகளில் கோயம்புத்தூர், திண்டுக்கல், திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் பேரணிகள் நடத்தி பொதுக் கூட்டங்கள் நடத்தியது. 4—10—1985 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற பேரணியின் போது ஊர்வலத்தினர் வன்முறையில் ஈடுபட்டு அ.இ.அ.தி.மு.க கொடிக் கம்பங்களுக்கு சேதம் விளைவித்ததுடன், எம்.ஜி.ஆர் மன்றத்திற்கு தீ வைத்தனர். காவல் துறையினர் தலையிட்டபோது

வன்முறைக் கும்பல் காவல் துறையினர் மீது கல்லெறிந்து காவல் நிலையத்தைத் தாக்க முயற்சி செய்தது. பதட்ட நிலை ஏற்பட்டதால் உள்ளூர் கோட்டாட்சியரின் ஆணையின் பேரில் காவல் துறையினர் இயல்பு நிலையை ஏற்படுத்த துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் காவல் துறையில் 9 பேர் காயமுற்றனர். இது தொடர்பாக 3 வழக்குகள் பதியப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை தேவையில்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டது.

168. தங்களது காலனியில் நடைபெறும் திருவிழாவிற்கு காசி நாடார் என்பவர் நன்கொடை கொடுக்க மறுத்த காரணத்தினால் ஏற்பட்ட பகைமை காரணமாகப் பெரிய காலனியைச் சேர்ந்த சுமார் 50 ஆதி திராவிடர்கள் செங்கல்பட்டு மாவட்டம், அனுப்பம்பட்டு கிராமத்திலுள்ள மேற்படி காசி நாடாரது இல்லத்தைத் தாக்குவதற்காகப் புறப்பட்டனர். பாதுகாவல் பணியிலிருந்த காவல் துறையினர் அவர்களைக் கலைந்து செல்லுமாறு வேண்டிக் கொண்டனர். ஆனால் அக்கும்பல் காவல் துறையினர் மீது கல் மற்றும் சோடா பாட்டில்களை எறிந்ததில் ஒரு தலைமைக் காவலர், மற்றும் 2 காவலர்கள் காயமுற்றனர். கும்பலில் வன்முறை அதிகரிக்கவே, அக்கும்பல் கலைந்து செல்வதற்காக அக்கிராமத்தில் பணியிலிருந்த மீஞ்சூர் காவல் நிலையத்தின் காவலர் பாலசுப்பிரமணியம் வானை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். காயமடைந்த காவல் துறையினர் பொன்னேரி அரசினர் மருத்துவமனைக்கு அனுப்பப் பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்கொன்று பதியப் பட்டது. இது குறித்து விசாரணை செய்ய ஆணையிடப்பட்டு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

169. 1985 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ஆம் நாளன்று சென்னை, அயோத்தியா குப்பத்தைச் சேர்ந்த சுமார் 500 மீனவர்கள் சென்னை காமராஜர் சாலையில் சாலைத் தடைகளை வைத்து வாகனப் போக்குவரத்தைத் தடுத்ததுடன் அருகிலிருந்த குடிசை மாற்று வாரியத் தலைவரைத் தாக்கினர். காவல் துறையினர் தலையிட்ட போது, அக்கும்பல் காவல் துறையினர் மீது செங்கல் மற்றும் பயங்கர ஆயுதங்களுடன் தாக்கியது. நடுக்குப்பம், நாட்டான் குப்பம், ஆகியவைகளைச்



சேர்ந்த மீனவர்கள் காமராஜர் சாலை, பைகிராப்ட்ஸ் சாலை, லாயிட்ஸ் சாலை ஆகிய சாலைகளின் பல இடங்களில் சாலைத் தடைகளை ஏற்படுத்தி, பல வாகனங்களுக்குத் தீ வைத்தனர். இதற்கிடையில், ஆயிரம் பேர் கொண்ட கும்பலொன்று காமராஜர் சாலையிலுள்ள மெரினா காவல் நிலையத்தைத் தாக்கி, கட்டடத் திற்குப் பெருத்த சேதம் விளைவித்துடன், காவல் துறை யினருக்கும் காயமேற்படுத்தியது. கட்டடத்திற்கு அவர்கள் தீ வைக்க முயன்றபோது சென்ட்ரி காவலர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் ஒருவருக்குக் காயமேற்பட்டது. லாயிட்ஸ் சாலையில் சுமார் 2,000 பேர் ஆத்திரமுற்று, பல்லவன் போக்கு வரத்துக் கழக பேருந்து ஒன்று உட்பட பல வாகனங்களுக்குத் தீ வைத்தனர். அதற்குள்ளாக சுமார் 5,000 மீனவர்கள் குடிசை மாற்று வாரிய ஊழியர்களை அலுவலகக் கட்டடத்திற்குள்ளேயே தாக்கினர். நிலைமையைக் கட்டுப் படுத்த காவல் துறையினர் எடுத்த நடவடிக்கை எந்தப் பலனும் அளிக்கவில்லை. எனவே காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதில் ஐவர் காயமுற்றனர், ஐவர் இறந்தனர். இச் சம்பவங்களில் காவல் துறை ஆணையர், 4 காவல் துணை ஆணையர்கள், 6 காவல் உதவி ஆணையர்கள், 15 ஆய்வாளர்கள் மற்றும் உதவி ஆய்வாளர்கள் உட்பட காவல் துறையில் 89 பேர் காயமுற்றனர். 18 காவல் துறை வாகனங்கள் உட்பட 49 வாகனங்கள் சேதமாயின. பெட்ரோல் பங்க் ஒன்றிற்கும் தீ வைக்கப்பட்டது. இது தொடர்பாக 41 பேர் கைது செய்யப்பட்டு வழக்குகள் பதியப்பட்டன. இது குறித்து மாவட்ட நீதிபதியின் தலைமையில் ஒரு நபர் ஆணைக் குழுவை அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

170. பெரியார் ஆயக்கட்டில் திருமங்கலம் பிரதானக் கால் வாயில் தடங்கலற்ற தண்ணீர் விநியோகம் கோரி, மதுரை ஊரக மாவட்டம், உசிலம்பட்டி தாலுகாவிலுள்ள செல்லம்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்தவர்கள் 13—12—1985 அன்று உசிலம்பட்டியில் வாகனப் போக்குவரத்தைத் தடுத்தனர். அவர்கள், கல்லெறிந்ததில், 4 பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், 2 தனியார் பேருந்துகள், 2 லாரிகள் ஆகிய வற்றிற்குச் சேதமேற்பட்டது. உசிலம்பட்டி உதவி மாவட்ட ஆட்சியரின் (நிர்வாகத் துறை மாஜிஸ்டிரேட்) ஆணையின் பேரில் தகுந்த எச்சரிக்கை செய்த பிறகு காவல் துறையினர் கண்ணீர்ப்

புகைக் குண்டுகளை வெடித்தனர். அது பலனளிக்காது போகவே தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது. ஆனால் வன்முறையாளர்கள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டார்கள். பின்னர், காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமுற்றார். இச் சம்பவத்தில் காவல் துறையில் 13 பேருக்குக் காயமேற்பட்டது. இது தொடர்பாக, செக்காஹாரணி காவல் நிலையக் குற்ற எண் 305/85-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, 58 பேர் கைது செய்யப் பட்டனர். இது குறித்து மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

171. 1985-ம் வருடம் டிசம்பர் 25 அன்று வடார்க்காடு மாவட்டம், தக்கோலம் புறக் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதுகேசாவரத்திலுள்ள சோதனைச் சாவடியில், நெல் ஏற்றி வந்த ஒரு லாரியின் ஓட்டுநர் சோதனைச் சாவடி தடுப்புக் கட்டையை உடைத்துக் கொண்டு சென்னையை நோக்கி வாகனத்தை ஓட்டினார். பின்னர், மற்றொரு லாரி ஓட்டுநரும் சோதனைச் சாவடி தடுப்புக் கட்டையை மோதி விட்டுச் சென்றார். சோதனைச் சாவடியின் பொறுப்பில் இருந்த சிறப்பு துணை வட்டாட்சியரின் ஆணையின் பேரில் லாரியை நிறுத்த தலைமைக் காவலர் சுட்டார். எனினும், ஓட்டுநர் லாரியை நிறுத்தாமல் சென்றார். இது தொடர்பாக ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

## பகுதி 7.

### காவலர் பொதுமக்கள் தொடர்பு.

172. குற்றங்களைக் கண்டு பிடிப்பது, சட்டத்தை நிலைநாட்டுவது ஆகியவை மட்டுமே காவலர்களுடைய கடமை என்று கருதினால் கூட, அது முழு நேரப் பணியை விட அதிகமாகும். ஆனால் காவலர்களின் பணி மேலும் தொடர்கிறது. காவல் துறையினரின் பெரும் பகுதி நேரமும், ஆற்றலும், குற்றம் மற்றும் குற்றவாளிக்குச் சற்றும் தொடர்பற்ற மனிதாபிமான பிரச்சினைகளைக் கவனிப்பதில் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. ஒருவருக்கொருவரிடையே உள்ள கருத்துவேறுபாடு காரணமாக ஏற்படும் தகராறுகளில் காவல் துறையினர் தலையிட்டு அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவும், அவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தவும் உறுதுணை புரிகின்றனர்.



173. பொதுமக்களிடையே நல்லுணர்வை ஏற்படுத்துவதில் காவலர்களின் பங்கு தமிழ்நாட்டில் மிகச் சிறந்ததாக உள்ளது. வெள்ளம், புயல், வறட்சி, விபத்துக்கள், தீ விபத்துக்கள் போன்ற இயற்கைச் சீற்றங்கள் மற்றும் மனித சக்தியால் ஏற்படும் விபத்துக்கள் ஆகியவற்றின் போது மக்களுக்குத் தொண்டாற்றும் உணர்வுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரக்கம் காட்டி, உதவி செய்து காவல் துறையினர் அரும்பணி புரிகின்றனர். விளையாட்டு விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், கல்வி பற்றிய கருத்தரங்கு, ரோட்டரி கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்குபெற்று காவலர்கள் பொதுமக்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள முடிகிறது. மேலும் காவலர்கள் சிறு வயதில் குற்றம் இழைப்பவர்களைத் திருத்துவதிலும் ஒரு சிறப்பான பணி புரிகின்றனர்.

174. இனக் கலவரங்கள் அதிகமாக ஏற்படும் இடங்களில் அமைதிக் குழுக்களை ஏற்படுத்தி இருதரப்பினரின் ஒத்துழைப்புடன் நிலையான அமைதியையும், ஒற்றுமையையும் உருவாக்க காவல் துறையினர் அரும்பாடு படுகின்றனர்.

175. அந்தந்தப் பகுதிகளில் கிராமக் கண்காணிப்புக் குழுக்களை அமைந்து குற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, காவல் துறையினர் பொது மக்களுடன் நெருங்கிப் பழகி வருகின்றனர். அண்மைக் காலங்களில் சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் பரபரப்பூட்டிய கொள்ளை போன்ற குற்ற நடவடிக்கைகள் இல்லாதிருப்பது பொதுமக்கள்—காவலர்களுக்கிடையே உள்ள ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டாகும்.

176. மாநிலங்களுக்கிடையே நடந்த விளையாட்டுப் போட்டிகளில் தமிழகக் காவல் துறை பெரும் பங்கு கொண்டு பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. மேலும் இத்துறை 16—2—1985 முதல் 24—2—1985 வரை திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 34-வது அனைத்திந்திய காவல் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டது. 24—6—1985 முதல் 26—6—1985 வரை சென்னையில் நடைபெற்ற காவல் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளிலும் மற்றும் தடை. தாண்டுதல் பந்தயங்களிலும் 30 காவலர்கள் பங்கு கொண்டனர். 7—8—1985 முதல் 11—8—1985 வரை திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 34-வது அனைத்திந்திய காவல் நீச்சல் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு காவலர் அணி

பங்கு கொண்டது. 15—12—1985 முதல் 22—12—1985 வரை பாட்னாவில் நடைபெற்ற 29 ஆவது அனைத்திந்திய காவல் விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாடு அணி பங்கு கொண்டு இரண்டு தங்கம், மூன்று வெள்ளி மற்றும் ஐந்து வெண்கலப் பதக்கங்களையும் பெற்றது. தமிழகத்தில் ரோந்துப் பணி வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. இது குற்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவுவதுடன் குடிமக்களின் குறைகள் மற்றும் கருத்துக்களை அறியவும் உதவுகிறது. இது பொது மக்களுடைய நம்பிக்கைக்கு பெரிதும் துணை செய்கிறது.

### ஊர்க்காவல் படை.

177. ஊர்க் காவல் படையினரின் அமைப்பானது காவல் துறையினருக்கு உதவி புரிவதில் ஒரு துணை அமைப்பாக விளங்குவதோடு பொதுமக்களுக்கு நண்பனாகவே இருந்து உதவும் ஒரு அமைப்பாகவும் விளங்குகிறது. சமுதாயத்திலுள்ள பல்வேறு பட்ட பிரிவினரும் இவ்வமைப்பில் இடம் பெற்றுள்ளனர். தற்போது 10,010 ஆண்களும், 550 பெண்களும் சேர்ந்து பணி புரியும் அளவிற்கு ஊர்க்காவல் படை விரிவாக்கப்பட்டுள்ளது. போக்குவரத்தினை ஒழுங்குபடுத்துதல், இரவு நேர சுற்றுக் காவல், மாவட்டங்களிலுள்ள பல்வேறு கோவில் திருவிழாக்களில் பாதுகாப்பு ஏற்பாடு, குற்றப் புலன் தகவல்களைச் சேகரித்தல், மீட்புப் பணி, தமிழ்நாடு ஊர்க்காவல் படை விதி 1963-ல் பிரிவு 11-ல் குறிப்பிட்டுள்ளவாறு தீ அணைப்புப் பிரிவுகளை ஏற்படுத்தல், வடகிழக்கு பருவக் காற்றின்போது ஏற்படும் வெள்ள நிவாரணப் பணிகளில் பங்கு கொள்ளுதல், முப்படையில் பணியாற்றும் இராணுவ வீரர்களுக்காகக் கொண்டாடப்படும் கொடி நாள் விழாவின்போது உண்டியல் ஏந்தி பணம் வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளுக்காக 1985 ஆம் ஆண்டு ஊர்க் காவலர் களின் பணி பயன்படுத்தப்பட்டது.

178. 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் புயலின்போது ஊர்க் காவல் படையினர் ஆற்றிய பணி பாராட்டத்தக்கதாகும். இப்புயலினால் தஞ்சாவூர், தென்னாற் காடு, செங்கல்பட்டு மற்றும் சென்னை மாவட்டங்களிலுள்ள பொதுமக்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டதன் 10,000-க்கு மேற்பட்ட பொதுமக்கள் வீடிழந்தனர். இப்புயல் மழையின்போது ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்



பட்ட மக்களுக்கு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற் கொள்ளுவதில் தங்கள் உயிரினையும் பொருட்படுத்தாமல் காவல் துறையினர், குடிமைப் பாதுகாப்புப் பிரிவு மற்றும் ஊர்க்காவல் படையினர் ஆகியோர் பணியாற்றினர். அனைவரும் இரவு பகலாகக் கண் விழித்து உடைப்புகளை அடைப்பதற்கும், உணவு மற்றும் தங்குவதற்கு இடம் அளிப்பதற்கும், துன்பத்திற்கு ஆளான மக்களுக்குப் போக்குவரத்து வசதி அளித்து, நோய் வாய்ப்பட்ட மற்றும் உறுதியிழந்த மக்களுக்கு பாதுகாப்பான இடம் மற்றும் மருத்துவமனைகளில் சேர்த்தல் போன்றவற்றில் பெரும் பணியாற்றினர்.

179. ஊர்க்காவல் படையினரில் சிலர் நாக்பூரிலுள்ள குடிமைப் பாதுகாப்பு அலுவலர் பயிற்சி மற்றும் குடிமைப் பாதுகாப்பு போதகர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். அடிப்படை மீட்பு பயிற்சி, அடிப்படை இயணைப்புப் பயிற்சி மற்றும் முதல் உதவி பயிற்சி மற்றும் விபத்தில் காயமுற்றோர்களை அனுப்புதல் பயிற்சி, நீர்த் துறை பயிற்சிக்காக ஆகியவற்றிற்காக புதுடெல்லிக்கும், பெங்களூருக்கும் சில ஊர்க்காவல் படையினர் 1985 ஆம் ஆண்டு அனுப்பப்பட்டனர்.

### வீரச் செயலுக்கான விருது.

180. திரு. அய்யம் பெருமாள் என்ற காவலர் (எண் 2062) மதுரை நகரம் பி. 3 காவல் நிலையத்தில் பணியாற்றி வந்தார். விழுப்புரத்தைச் சேர்ந்த ரவிச்சந்திரன் என்பவர் 11/12—6—1985 அன்று பி. 3 காவல் நிலையத்தில் அய்யாக்கண்ணு என்ற சமூக விரோதியால் கத்தியால் குத்தப்பட்டுவிட்டதாக கொடுத்த புகாரின் பேரில் காவலர் அய்யம்பெருமாள் மற்றொரு காவலருடன் சம்பந்தப்பட்ட குற்றவாளியைப் பிடிப்பதற்காகச் சென்றார். காவலர்கள் குற்றவாளியைக் கைது செய்ய முற்படும்பொழுது குற்றவாளி காவலர் அய்யம்பெருமாளை அவரது நெஞ்சில் கத்தியால் குத்தி தன்னைக் கைது செய்வதை எதிர்த்தார். காவலர் அய்யம்பெருமாள் தனக்கு ஏற்பட்ட மரணக் காயத்தையும் பொருட்படுத்தாமல் வீரத்துடன் போராடி குற்றவாளி தன்னுடன் வந்த காவலரையும் குத்துவதைத் தடுத்து அவனைத் தன் பிடியில் இருந்து தப்பாது பிடித்துக் கொண்டார். தனக்கு ஏற்பட்ட காயத்தினால் காவலர் அய்யம்பெருமாள் மரணம்

அடைந்தார். இச்செயலின் வாயிலாக அவர் தமக்கு கடமையின் பால் உள்ள பற்றினையும் காவலருக்குரிய கடமை உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளார். அவரது செயலைப் பாராட்டி மரணத்திற்குப் பின் வீரச் செயலுக்கான விருது அவருக்கு வழங்கப்பட்டது.

181. கோயம்புத்தூர் நகரக் காவல் மாவட்டத்தில் உள்ள காவல் நிலையத்தில் திரு. ராஜரத்தினம் என்ற காவலர் (எண் 1435) பணி புரிந்து வந்தார். விஜயன் என்பவர் தனது பெட்டிக்கடை மற்றும் சொக்கம் ஆகியவற்றை பாபு மற்றும் சம்பத் என்பவர்கள் 29—4—1985 அன்று வழிப்பறி செய்தனர். குற்றவாளிகளைப் பார்த்ததும் அவர்களைக் கைது செய்வதற்காக காவலர் ராஜரத்தினம், மற்றொரு காவலர் மற்றும் புகார் மனுதாரர் விஜயனுடன் ஒரு சைக்கிள் ரிக்ஷாவில் சென்றனர். குற்றவாளிகளைப் பார்த்தும் அவர்களைக் கைது செய்வதற்காக காவலர்கள் வண்டியிலிருந்து இறங்கினர். குற்றம் சாட்டப்பட்ட பாபுவின் கைகளைக் காவலர் ராஜரத்தினம் கட்டுவதற்கு முயற்சி செய்தபோது அவன் தான் வைத்திருந்த கத்தியினால் காவலர் ராஜரத்தினத்தின் நெஞ்சில் பல தடவை குத்தி விட்டு தப்பி ஓடினான். காவலர் ராஜரத்தினம் அந்த இடத்திலேயே மரணம் அடைந்தார்.

182. காவலர் ராஜரத்தினம் தனது 19 ஆண்டு பணிக்காலத்தில் 17 வெகுமதிகள் பெற்றுள்ளார். மேலும் அவர் பெரும் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு பல தடவை தனது அதிகாரிகளுக்குப் பேருதவி புரிந்திருக்கிறார். தனது உயிரையும் பொருட்படுத்தாது குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு வீரத்துடன் போராடி தனது கடமை உணர்வை வெளிப்படுத்திய அவரது வீரச் செயல் அவருக்கு மரணத்துக்கு பின் வழங்கும் வீரச் செயலுக்கான பதக்கம் பெறத் தகுதியை அளித்துள்ளது.

183. திரு. ராமச்சந்திரன் என்பவர் (எண் 652) நாகர்கோவில் காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வந்தார். தூத்துக்குடி இரயில்வே காவல் நிலைய குற்ற எண் 1/85-ல் இ.த.ச. பிரிவு 392-ல் பதியப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளியைக் கைது செய்வதற்காக அவர் வேறு சில காவலர்களுடன் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவரின் வீட்டினை



11—2—1985 அன்று தனிக் காவலர் குழு சூழ்ந்து கொண்டு
அவ்வீட்டினை சுற்றிலும் தட்டியது. குற்றம் சாட்டப்பட்ட
தருமர், சின்ன ராமச்சந்திரன் மற்றும் ஏழு பேர் பயங்கர
ஆயுதங்களுடன் வீட்டிலிருந்து வெளியே வந்தனர். குற்றம்
சாட்டப்பட்டவர்களை விசாரணையின் பொருட்டு காவல்
நிலையத்திற்கு வருமாறு கேட்டுக்கொண்டபோது குற்றம்
சாட்டப்பட்ட சின்ன ராமச்சந்திரன், காவலர் ராமச்சந்திரனையும்
மற்றொரு தலைமைக் காவலரையும் கத்தியால் குத்தினான்.
காவலர் ராமச்சந்திரன் தனக்கு ஏற்பட்ட காயத்தையும் பொருட்
படுத்தாது வீரத்துடன் போராடி குற்றம் சாட்டப்பட்ட தருமர்
என்பவனைப் பிடிக்க முயன்றபோது அவரைக் குற்றவாளி
தருமர் அரிவாளால் தாக்கியதால் காவலர் அவ்விடத்திலேயே
மரணம் அடைந்தார். குற்றவாளியின் மறைவிடத்திற்குச்
சென்று அவர்களைக் கைது செய்வதற்கு காவலர் காட்டிய வீரம்
உண்மையிலேயே பெரிதும் குறிப்பிடத்தக்கது. இவ்வீரச்
செயலின் மூலம் இவர் தமிழ்நாடு காவல் துறையின் வரலாற்றில்
என்றும் நீங்கா இடம் பெற்றுள்ளார். அவருக்கு மரணத்திற்குப்
பின் வீரச் செயலுக்கான பதக்கம் பெறத் தகுதி ஏற்பட்டுள்ளது.

184. சேலம் மாவட்டம் இடப்பாடியில் திரு. சுந்தரராஜன்
என்பவர் காவல் ஆய்வாளராகப் பணியாற்றினார். இடப்பாடி
சந்திப்பில் 11—4—1984 அன்று அலச்சம்பாளையத்தைச்
சேர்ந்த ஒரு தேங்காய் வியாபாரி ஒருவர் இடப்பாடி சந்தையில்
அவ்வூர் மேட்டுத் தெருவைச் சார்ந்த வேலு என்பவரால்
தாக்கப்பட்டார். 11—4—1984 அன்று ஆய்வாளர் சுந்தரராஜன்
ஒரு பெரிய மோதல் உருவாவதைத் தடுத்தார். ஆயினும்
அலச்சம்பாளையத்தைச் சார்ந்த சுமார் 2,000 பேர் கையில்
ஆயுதங்களுடன் இடப்பாடி சட்டமன்ற உறுப்பினர் மற்றும்
அவர் குடும்பத்தினரைத் தாக்கும் பொருட்டு இடப்பாடியை
நோக்கி 12—4—1984 அன்று சென்றனர். பாதுகாவலுக்கு
நின்றிருந்த காவலரை நோக்கி அவர்கள் நாட்டு வெடி
குண்டுகளையும், கற்களையும் எறிந்து முன்னேறிச் சென்றனர்.
அவர்கள் சட்டமன்ற உறுப்பினருக்குச் சொந்தமான
பண்ணையையும் எரித்தனர். நிலைமை கட்டுக்கு அடங்காமல்
போகவே காவலர்கள் தகுந்த எச்சரிக்கைக்குப் பிறகு
துப்பாக்கியால் சுட்டனர். இதற்கிடையில் கூட்டத்தினர்

அருகில் நின்று கொண்டிருந்த காவல் ஆய்வாளரை முதுகில் கட்டியால் குத்தியும், தலையில் அரிவாளால் வெட்டியும் காயம் ஏற்படுத்தினர். காவல் ஆய்வாளர் தனது உயிரையும் பொருட்படுத்தாது வன்முறைக் கூட்டத்தை அருகிலிருந்த காவல் உதவி ஆய்வாளரைத் தாக்குவதைத் தடுத்தார். இவ்வுதவி ஆய்வாளர் தனக்கு காயம் ஏற்பட்ட எலும்பு முறிவையும் பொருட்படுத்தாது மற்றொரு உதவி ஆய்வாளர் வரும்வரை அங்கேயே இருந்தார். காவல் ஆய்வாளரால் உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை காரணமாக மக்களுக்கும், அவர் தம் சொத்துக்கும் ஏற்படவிருந்த பெரிய ஆபத்து தடுக்கப்பட்டது. தனது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்தாது உறுதியுடன் போராடி ஏற்படவிருந்த பெரிய ஆபத்தினைத் தடுத்தார். அதற்காக அவருக்கு வீர தீரச் செயலுக்கான விருது வழங்கப்பட்டது.

185. மேற்குறிப்பிட்ட கலவரத்தில் 12—4—1984 ஆம் நாள் சுமார் 2,000 பேர் கொண்ட கூட்டம் கலவரம் செய்தபோது கும்பலில் இருந்த சில நபர்கள் அருகாமையில் நின்று கொண்டிருந்த காவல் ஆய்வாளரை பின்புறமாக கட்டியால் குத்தி அவரது தலையில் அரிவாளால் வெட்டினர். இதைக் கண்ட உதவி ஆய்வாளர் ராகவன் அவரை மீட்க விரைந்து வந்து, அக்கும்பல் மேலும் முன்னேறுவதைத் தடுத்தார். அவ்வாறு செய்கையில் அக்கும்பல் கல் வீசியதால் அவரது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இருந்தபோதிலும் அவர் மற்றொரு உதவி ஆய்வாளர் வரும்வரை உறுதியுடன் நின்று நிலைமையைச் சமாளித்தார். தனது உயிருக்கு ஆபத்து நேருமென்று நன்கு தெரிந்தபோதிலும் கலவரத்தைக் கட்டுப்படுத்த உரிய நேரத்தில் அவர் எடுத்த நடவடிக்கை அவருக்கு தமிழ்நாடு காவல் துறையில் பாராட்டத் தக்கதோர் இடத்தை பெற்றுத் தந்ததுடன், இத்தகைய பதக்கத்திற்கு அவரை உரியவராகவும் ஆக்கியது.

186. சென்னை நகர ஆயுதக் காவல் படைக் காவலர் (6770) ரவீந்திரன் மருத்துவ விடுப்பில் திருநெல்வேலி மாவட்டத்தில் தனது சொந்த ஊராகிய காயலூரணி கிராமத்தில் இருந்தார். 27—9—1983 அன்று மாலை சுமார் 5.30 மணியளவில் கிராமத்தின் வடக்கு பக்கமிருந்த வைக்கோல் போர் ஒன்று தீப்பிடித்துச்



சாம்பலாகியது. இதனால் அருகில் இருந்த குடிசைகளுக்குத் தீ பரவி அவை சாம்பலாயின. அவ்வாறு தீப்பற்றிய குடிசைகளில் ஒன்று ஜோதி அம்மாளுக்குச் சொந்தமாகும். நிகழ்ந்த ஆபத்தை அறியாது அப்பெண்ணின் இரு குழந்தைகள் குடிசையினுள் தூங்கிக் கொண்டிருந்தனர். ஜோதியம்மாள் வேலைக்காக தூத்துக்குடி சென்றிருந்தார். சூடு பொறுக்காமல் விழித்துக் கொண்ட அக்குழந்தைகள் எழுப்பிய கூக்குரலைக் கேட்டு ஆபத்தை உணர்ந்த காவலர் ரவீந்திரன் அக்குடிசையின் கதவை உடைத்து அக்குழந்தைகளைக் காப்பாற்றினார். இந்த அமளியில் அவரது காலில் நிறைய தீப்புண்கள் ஏற்பட்டு அவர் 27—9—1983 முதல் 18—2—1984 வரை தூத்துக்குடி அரசினர் மருத்துவமனையில் உள்ளிருப்பு நோயாளியாகத் தங்கி சிகிச்சை பெற்றார். தன்னுயிரையும் பொருட்படுத்தாது, ஆபத்திலிருந்து குழந்தைகளை மீட்க அவர் நேரடியாக தீயினுள் பாய்ந்தார். இவரது இத்தீரச் செயல் மூலம் இவ்விருது பெற இவர் தகுதி உடையவராகிறார்.

## பகுதி 8.

## நடப்பு ஆண்டில் வழங்கப்பட்ட சில முக்கிய ஆணைகள்.

187. வளர்ந்து வரும் காவல் துறையினரின் தேவையைக் கருத்திற் கொண்டு 1985-86 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்களுக்கும் சாதனங்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

188. பெருகி வரும் சட்டம்-ஒழுங்கு பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அரசு நிலைமையை திறம்பட சமாளிக்க தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் மேலும் இரு அணிகளை உருவாக்கிட ஒப்புதல் வழங்கியுள்ளது.

189. காவல் துறையினர் தங்களது பணிகளில் வெற்றி பெற்று தங்கள் குறிக்கோளை எய்தும் வகையில் செயல்பட துரிதமான வாகன வசதி முக்கியமான தேவைகளில் ஒன்றாகும். ஆகவே வாகனங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கு ஏற்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு ரூ. 100 இலட்சம் செலவில் வாகனங்கள் வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

[1986 மே 5

190. காவல் துறையினர் சமுதாயத்திற்கு சிறந்த பணியாற்றிட காவல் துறையினரின் அலுவல் பரப்பு குறைவாக இருக்க வேண்டும் என்பது சாலச் சிறந்த நெறிமுறையாகும். எனவே, இந்நிலையை எய்தும் பொருட்டு அரசு ஒவ்வொரு ஆண்டும் புதிய காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்கள் திறக்க வேண்டுமென்று கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது. இதன்படி வட ஆற்காடு மாவட்டத்தில் ராணிப்பேட்டை தொழிற்பேட்டை தர்மபுரி மாவட்டத்தில் பங்களா குருபார பள்ளி மற்றும் நாகரசம்பேட்டை, தஞ்சாவூர் மாவட்டத்தில் ஹரித்துவாரமங்கலம், புதுப்பட்டினம், சேதுபாவா சத்திரம், செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தில் கொரட்டூர், திருநெல்வேலி மாவட்டம் மாசார்பட்டி மற்றும் சென்னை ராயபுரம் மீன்பிடி துறைமுகப் பகுதி ஆகிய 9 இடங்களில் காவல் நிலையங்களும், தென் ஆற்காடு மாவட்டம் இடைக்கல் கிராமத்தில் ஒரு புறக்காவல் நிலையமும் திறக்க இந்த ஆண்டு அரசு ஒப்புதல் வழங்கியது.

191. காவல் துறையில் உள்ள நிர்வாகப் பணியிடங்கள் மற்றும் பல பிரிவுகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை உயர்வால் ஏற்பட்ட பணிப் பளுவிற்கு ஏற்ப, அரசு இந்த ஆண்டு பல்வேறு நிலைகளில் 200 அமைச்சுப் பணியாளர்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

192. அண்மையில் அமைக்கப்பட்ட சம்பளக் குழுவின் மூலம் அரசு, காவல் படையின் ஒருங்கிணைந்த உறுப்பாகவும் அடிக்கடி பொது மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டிய நிலையிலும் உள்ள இரண்டாம் நிலைக் காவலர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்களுக்கு நன்மை செய்ய விரும்பியது. எனவே, அரசு அவர்களது சம்பள விகிதத்தினை மற்ற துறைகளில் அவர்களுக்கு சமமான தகுதியுள்ளோரின் விகிதங்களைவிட ஒரு படி மேலே உயர்த்தி, சம்பள விகித அமைப்பை திருத்தி அமைத்தது.

193. காவல் வானொலிப் பிரிவில் பணியாற்றும் இளநிலை உதவி ஆய்வாளர் (தொழில் நுட்பம்) மற்றும் அனைத்து மாவட்டங்களில் உள்ள சேமப் படையில் பணிபுரியும் இளநிலை உதவி ஆய்வாளர் ஆகியோரின் பதவிகள், உள்நேர் காவல் துணை/சார்பு ஆய்வாளர் தகுதிக்கு உயர்த்தப்பட்டன.



1986 மே 5]

194. ஓட்டுநர்கள் மற்றும் கம்பியில்லாத் தந்திப் பிரிவில் பணி புரியும் ஆபரேட்டர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் சிறப்பு ஊதியத்தை முறையே ரூ. 40, ரூ. 25 என்ற அளவிற்கு அரசு உயர்த்தியது.

195. காவல் சார்பு ஆய்வாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த உணவுப்படி ரூ. 4.50-லிருந்து ரூ. 6 ஆகவும், ஆய்வாளர்களுக்கு ரூ. 6-லிருந்து ரூ. 7.50 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

196. விடுமுறை நாட்களிலும், மற்றும் சிறப்புப் பணிக்கு காவலர்கள் கடமையாற்ற அழைக்கப்படும் நாட்களிலும் அவர்களுக்கு கூடுதல் நேரத் தொகை அளித்து ஈடு செய்யப்படுகிறது. இதற்கான படியினை அரசு ரூ. 7-லிருந்து ரூ. 10 ஆக உயர்த்தியுள்ளது.

197. காவல் துறையினருக்கு முன்னர் அளிக்கப்பட்டு வந்த காக்கி சீருடை கடினமான பணியினால் அன்றாடம் கசங்கி எடுப்பற்ற தோற்றத்தைக் கொடுத்தது. எனவே மிடுக்கான தோற்றத்துடன் காவலர்கள் பணி புரிய அரசு அவர்களுக்கு பருத்தி சீருடைகளுக்குப் பதிலாக டெரிக்காட்டன் சீருடையை அளித்தது. இவ்வாறு அரசு அளித்து வந்த டெரிக்காட்டன் சீருடை மற்றும் கருப்புக் காலணிகள் வழங்கப்படுவதற்கான கால அளவினை மாற்றி அமைத்து ஆணை வெளியிட்டுள்ளது.

198. தமிழ்நாடு சிறப்புக் காவல் படையிலுள்ள மற்ற அணிகளுக்கு இணையாக இருக்க வேண்டியதன் அவசியம் கருதி, அரசு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் உள்ள முதலாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது அணிகளில் 'காரிசன்' பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

199. பெரிய குற்ற வழக்குகளைப் புலன் விசாரணை செய்ய குற்றப் புலனாய்வுத் துறை குற்றப் பிரிவை வலுப்படுத்தும் பொருட்டு 1 காவல் துணைக் கண்காணிப்பாளர், 7 ஆய்வாளர்கள், 14 உதவி ஆய்வாளர்கள், 14 தலைமைக் காவலர்கள், 35 இரண்டாம் நிலைக் காவலர்கள், 1 அலுவலக உதவியாளர் ஆகிய பதவிகளைத் தோற்றுவிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

200. காவல் நிலையக் கட்டிடங்களைச் சிறந்த முறையில் பராமரிக்கும் பொருட்டு கழிவிடமில்லாத காவல் நிலையங்களுக்கு கழிவிட வசதி அளிப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

201. காவல் துறை பணியாளர்களின் நலனில் அரசு எப்பொழுதுமே முதன்மையான கவனம் செலுத்தி வருகிறது. காவல் பணியாளர் நல்ல நிலையில் இருந்தால்தான் சிறந்த முறையில் செயலாற்ற முடியும். காவல் துறையினரின் ஒழுங்குணர்வை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தால்தான் மனஊக்கமூட்டும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். இதனைக் கருத்தில் கொண்டு அரசு, கடலூரில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும் ஆக மேலும் 2 காவல் மருத்துவ மனைகளை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

202. காவல் துறையினரின் ஒழுங்குணர்வை மேம்படுத்த அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு நலத் திட்டங்களில் தமிழ்நாடு காவல் துறை சேம நல நிதித் திட்டமும் ஒன்றாகும். ஆய்விலுள்ள இந்த ஆண்டில் அரசு இந்நிதிக்கு அளித்து வந்த மானியத்தினை ரூ. 3.5 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

203. போக்குவரத்து காவலர்கள் பணியிலிருக்கும்போது அவர்களை வெயிலின் கொடுமையிலிருந்து காத்திட அரசு, மாநிலத்தின் பல்வேறு இடங்களில் 122 போக்குவரத்து நிழற் குடைகள் அமைத்திட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

204. தென் ஆற்காடு, விழுப்புரத்தில் காவல் கட்டுப்பாட்டு அறை ஒன்றை ஏற்படுத்தவும், அதற்குத் தேவையான பணியாளர்களாகிய ஒரு காவல் ஆய்வாளர், ஆறு உதவி ஆய்வாளர்கள், ஒன்பது தலைமைக் காவலர்கள், பன்னிரண்டு முதல்நிலைக் காவலர்கள் ஆகிய பதவிகளின் நியமனங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

205. காவல் துறையினரின் திறமையை மேம்படுத்த தொலைத் தொடர்பு சாதனங்கள் அடிப்படையில் முக்கியமான ஒன்றாகும். இதனைக் கருத்திற் கொண்டு முன்னுரிமை அடிப்படையில் அனைத்து காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்களுக்கு தொலைபேசிகள் அமைத்திட அரசு உத்தேசித்துள்ளது. இந்த



ஆண்டு அரசு 95 காவல் நிலையங்களுக்கும், ஒரு புறக்காவல் நிலையத்திற்கும் தொலைபேசி அமைத்திட ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

206. அனைத்து காவல் நிலையங்களுக்கும், அனைத்து மாவட்டங்களிலுள்ள சேமப் படை பிரிவுகளுக்கும், காவல் வானொலிப் பிரிவிற்கும் மூன்று ஆண்டுகளில் திட்டமிட்ட முறையில் முதலுதவிப் பெட்டிகள் வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது.

207. சென்னை நகரில் பி-3 கோட்டை காவல் நிலையத்திற்குக் கூடுதல் பணியாளர் நியமனத்திற்கு அரசு ஒப்பளிப்பு அளித்துள்ளது.

208. போக்குவரத்துக் காவலர்கள் இரவு நேரங்களிலும் முக்கியமான சாலை சந்திப்புகளில் பணியாற்றுகின்றனர். எதிரில் வரும் வண்டிகளினின்றும் அவர்களைப் பாதுகாத்திட அனைத்துப் போக்குவரத்து காவலர்களுக்கும் பிரதிபலிப்பு ஏற்படுத்தக்கூடிய வில்லைகள் பதிக்கப் பெற்ற தோல் பெல்ட்டுகள் அளிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

209. காவல் துறையிலுள்ள பல்வேறு பிரிவுகளுக்கு மரத்தாலான மேஜை நாற்காலி போன்றவை வாங்க அரசு ரூ. 88,861 ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

210. காவல் துறையிலுள்ள சலவைத் தொழிலாளர்களின் உபயோகத்திற்காக ரூ. 49,550 செலவில் 122 சலவைப் பெட்டிகள் வழங்க அரசு ஆணை பிறப்பித்து உள்ளது.

211. காவல் பயிற்சிக் கல்லூரியில் உள்ள கல்வி போதிக்கும் உபகரணங்களை நவீனமயமாக்கும் முயற்சியில் ஒரு 35 மி.மீ. திரைப்படக் கருவி வாங்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

212. சென்னை நகரில் காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு வீடுகள் கட்ட அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டுள்ளது.

213. ஆய்விலுள்ள இந்த ஆண்டில் ரூ. 56.86 லட்சம் செலவில் மேனிலை நீர்த் தொட்டிகள், கூடுதல் கட்டிடங்கள், கட்டுப்பாட்டு அறைகள், வட்ட ஆய்வாளர் அலுவலகங்கள் ஆகியவை கட்ட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

214. எல்லாவற்றிற்கும் மேலாக அரசு சமுதாயத்திற்கும் பொது மக்களுக்கும் சேவை செய்வதைக் கொள்கையாகக் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. நிர்வாகத்தை திறம்பட நடத்தவும் அதன் பலனை சாதாரண மனிதனும் அடைய வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டு மாவட்டங்கள் இரண்டாக, மூன்றாகப் பிரிக்கப்படுகின்றன. இந்த முறையில் முன்பிருந்த இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், காமராஜர் மாவட்டம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம் என மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது. அதே போன்று மதுரை மாவட்டமும் முறையே மதுரை நகரம், மதுரை ஊரகம் மற்றும் அண்ணா என மூன்று காவல் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதற்குத் தேவையான கூடுதல் பணியாளர்களும், வாகனங்களும் மற்றும் புதிய 10 காவல் நிலையங்களுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

215. பெண்களுக்கெதிராக இழைக்கப்படும் குற்றங்கள் நாடு முழுவதும் அதிகரித்து வருகின்றன. இதன் முக்கியத்துவத்தையும் குற்றவாளிகளை உரிய நேரத்தில் தண்டனைக்குட்படுத்தி நியாயம் வழங்கிட வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு சென்னை நகரம் உட்பட மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வரதட்சிணைக் கொடுமை வழக்குகளை விசாரணை செய்ய சிறப்புப் பிரிவுகள் அமைத்திட அரசு ஒப்பளிப்பு வழங்கி, உடனடித் தேவைக்கு தற்போதுள்ள கட்டமைப்பிலிருந்து தேவையான பணியாளர்களைப் பயன்படுத்திக் கொள்ள ஆணையிட்டுள்ளது.

## பகுதி 9.

## முடிவுரை.

216. மக்களின் நல்வாழ்வை நாடும் அரசில் காவல் துறையினரின் பணியானது சட்டத்தைக் காத்திடும் அமைப்பாக மட்டுமின்றி, பொருளாதார மற்றும் சமுதாயத் துறையில் மக்களுக்கு நன்மை பயக்கும் அரசின் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தும் ஒரு கருவியாகவும் அமைந்துள்ளது. தமிழ்நாடு காவல் துறையினர் இத்தகைய பொறுப்புக்களை மிகச் சிறந்த முறையில் ஏற்றுச் செயல்பட்டு வருகின்றனர். இவ்வாறு பணியாற்றும் காவலர்களுக்கும் மக்கள் தொகைக்கும் இடையே உள்ள விகிதம் 1 : 1000 என்ற அளவிலேயே உள்ளது.



217. இத்துறையின் அன்றாடப் பணிகளை மேற்கொள்ளும் பொழுது தமிழகக் காவல் துறையினர் தங்களுடைய கடந்த கால அனுபவத்திலிருந்து வகுக்கப்பட்ட நெறி முறைகளைக் கடைபிடிக்க பெரிதும் முயன்று வருகின்றனர். இந்நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளிவிவர நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம்தான் அக்குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிட வேண்டும். காவல் துறை, நீதிமன்றங்கள், சிறைத் துறை மற்றும் குற்றவாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம், தன் வசமுள்ள வரையறுத்த அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்தவோ, சிதறடிக்கவோ கூடாது. மதுவிலக்கைப் பொருத்தவரை கள்ளச் சாராயம் காய்ச்சுதல், அவற்றைக் கடத்தல், அவற்றைப் பெருமளவு கையிருப்பு வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவற்றைத் தடுப்பதில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

(இ) காவலரிடம் முறையிட, குற்றம் சாட்டப் பட்டவராகவோ அல்லது உதவி கோரியோ வருபவர்களில் பெரும்பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை காவல் துறையினர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அவர்களிடம் காவலர் அன்புடனும், அனுசரணையுடனும் நடந்து கொள்ள வேண்டும்.

(ஈ) காவல் துறையினர் நேர்மையாகவும் திறமையாகவும் இருப்பார்கள். இதற்காகக் கட்டுப்பாடு மற்றும் எல்லாப் பணிகளிலும் உயர்வான தரம் ஆகியவை நிலைநாட்டப்படும். மேலும், குறிப்பாக நேர்மையும் மற்றும் திறமையற்றவர்களைப் பொறுத்தவரை தயவு தாட்சண்யமின்றி செயல்படுத்தப்படும். இவ்வாறு செயல்படும்போழுது காவலர்களை விடக் காவல் துறை அதிகாரிகளைப் பொறுத்தவரை இது மேலும் தாக் கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படும்.

(உ) காவல் துறையினரின் தூய்மையையும், திறமையையும் உறுதி செய்யும் பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும் கட்டுப்பாட்டையும் உயரிய நிலையில் பேணி வர வேண்டும். இதைச் சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொது மக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை உடையவர்கள் ஆவர். எனவே, இதுகாறும் போதிய அளவு காவலர் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல் நிலையங்கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற காவலர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.

(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்பு கிட்டுவதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத்தப் படும். காவல் துறையை நவீனப்படுத்தலும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்தல், விலங்குகளைக் கொடுமைப்படுத்துவதைத் தடுத்தல், துப்புரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக் கேடு ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல் துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஒ) பொது மக்களின் நன்மதிப்புடன் பெறும் ஆதரவு இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில் மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணிகளைத் தொடர வேண்டும்.



218. சமுதாயத்தின் நன்மதிப்பையும், அன்பையும் பெறுவது தான் காவல் துறையினரின் தலையாய கடமையாகும். அதற்குப் பின்தான் அவர் தன் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்த வேண்டும். அவர் தன் பணிக் காலத்தில் பெறுகின்ற வெகுமதிகள் மற்றும் பதவி உயர்வுகள் போன்றவற்றால் பெற முடியாத மனநிறைவினை இதன் மூலம் மட்டுமே அவர்கள் பெற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, காவல் துறையினர் சட்டம் ஒழுங்கைக் காக்க கடும் பணி ஆற்றுவதோடு குற்றக் கண்டுபிடிப்பு, மற்றும் சமூகப் பணி ஆகியவற்றில் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். காவல் துறையினருக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக இருந்து அரசியல் தலைவர்கள் செயல்பட்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால் காவல் துறையினரின் பணி, மற்றும் கடமைகள் எளிதாகும்.

219. மேலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில காவல் துறையினர் தொடர்ந்து செயல்படுவர். வருங்காலத்திலும் மேலும் அவர்கள் திறம்படப் பணியாற்றும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு காவல் துறை மேற்கொள்ளும்.

## பிற்சேர்க்கை 1.

**1985 டிசம்பர் 31 ஆம் தேதியில் காவல் துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை.**

| | |
|---|---|
| காவல் துறைத் தலைமை இயக்குநர்கள் | 2 |
| காவல் துறைத் தலைவர் | 1 |
| காவல் துறைத் துணைத் தலைவர்/காவல் துறை ஆணையர் | 21 |
| காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் | 54 |
| காவல் துறை இணைக் கண்காணிப்பாளர்கள் | 5 |
| காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் | 3 |
| தளவாய்கள். | 10 |
| துணைத் தளவாய்கள் | 4 |
| காவல் துறை உதவி கண்காணிப்பாளர்கள் | 12 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-1 | 219 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-2 | 23 |
| உதவித் தளவாய்கள் | 50 |
| அட்சுடன்ட் ஆய்வாளர்கள்/காவல் துறை ஆய்வாளர்கள் | 1,188 |
| காவல் துறை சேமப்படை ஆய்வாளர்கள் | 91 |
| காவல் துறை உதவி ஆய்வாளர்கள் | 3,870 |
| காவல் துறை சேமப்படை உதவி ஆய்வாளர்கள் | 518 |
| தலைமைக் காவலர்கள் | 5,538 |
| ஹவில்தார்கள் | 872 |
| நாயக்குகள் | 772 |
| லான்ஸ் நாயக்குகள் | 697 |
| காவலர்கள்—நிலை-1 | 4,763 |
| காவலர்கள்—நிலை-2 | 41,133 |
| காவல் துறைப் பெண் உதவி ஆய்வாளர்கள் | 82 |
| காவல் துறைப் பெண் தலைமைக் காவலர்கள் | 73 |
| காவல் துறைப் பெண் காவலர்கள் | 666 |
| மொத்தம் .. | 60,723 |



## பிற்சேர்க்கை 2.

**1985 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் பணியாளர் பற்றிய விவரங்கள்.**

(அ) நிர்வாகம்—

| | |
|---|---|
| 1. காவல் துறைத் தலைவர் | 1 |
| 2. காவல் துறைத் துணைத் தலைவர் | 2 |
| 3. காவல் துறை உதவித் தலைவர் | 1 |
| 4. காவல் துறை கண்காணிப்பாளர் | 2 |
| 5. தளவாய் | 2 |
| 6. காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர். | 4 |
| 7. காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்—நிலை 1. | 9 |
| 8. காவல் துறைக் கண்காணிப்பாளர்—நிலை 2. | 9 |
| 9. உதவி தளவாய் | 18 |
| 10. காவல் துறை ஆய்வாளர் | 58 |
| 11. ரிசர்வ் ஆய்வாளர் | 3 |
| 12. காவல் துறை உதவி ஆய்வாளர் | 229 |
| 13. காவல் துறை சேமப்படை உதவி ஆய்வாளர் | 9 |
| 14. தலைமைக் காவலர்கள் | 247 |
| 15. ஹவில்தார்கள் | 212 |
| 16. நாயக்குகள் | 154 |
| 17. லான்ஸ் நாயக்குகள் | 150 |
| 18. காவலர்கள்— நிலை-1 | 104 |
| 19. காவலர்கள்—நிலை 2. | 2,417 |
| மொத்தம் .. | 3,631 |

[1986 மே 5

பிற்சேர்க்கை 2—தொடர்ச்சி.

(ஆ) அமைச்சுப் பணியாளர்கள்—

| | |
|---|---|
| 1. நேர்முக உதவியாளர் | 6 |
| 2. கண்காணிப்பாளர் | 50 |
| 3. உதவியாளர் | 100 |
| 4. இளநிலை உதவியாளர் | 30 |
| 5. தட்டச்சர் | 6 |
| 6. சுருக்கெழுத்தாளர் | 5 |
| 7. பதிவாளர் | 3 |
| மொத்தம் .. | 200 |

(இ) தொழில் நுட்பப் பணியாளர்கள்—

| | |
|---|---|
| 1. விரல் ரேகைப் பிரிவு கண்காணிப்பாளர் | 2 |
| 2. விரல் ரேகை நிபுணர் | 4 |
| 3. விரல் ரேகை பரிசோதகர் | 4 |
| 4. உதவி ஆய்வாளர்/துணை உதவி ஆய்வாளர் (நுட்பம்) (5+17) | 22 |
| 5. வானொலி தொழில் நுட்பர் | 4 |
| 6. அறிவியல் உதவியாளர் | 2 |
| 7. புகைப் படக் கலைஞர் | 2 |
| 8. புகைப் பட உதவியாளர் | [illegible] |
| மொத்தம் .. | [illegible] |



1986 மே 5]

பிற்சேர்க்கை 2—தொடர்ச்சி.

(ஈ) மற்றவர்கள்—

| | |
|---|---|
| 1. காவலர்-வழக்குரைஞர் நல்லுறவுக் குழுவின் செயலாளர். | 1 |
| 2. முதுநிலை அறிக்கையாளர் | 4 |
| 3. இளநிலை அறிக்கையாளர் | 7 |
| 4. புள்ளி விவர ஆய்வாளர் | 1 |
| 5. தொடர்பாளர் | 42 |
| 6. துப்புரவுத் தொழிலாளர்/தண்ணீர் கொணர்வோர் | 64 |
| 7. சமையல்காரர் | 1 |
| 8. சுத்தம் செய்பவர் | 9 |
| 9. முடி திருத்துவோர் | 19 |
| 10. சலவையாளர் | 22 |
| மொத்தம் .. | 212 |

இணைப்பு

(40-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

மானியக் கோரிக்கை எண் 16.

கொள்கைக் குறிப்பு 1986-87.

நம் நாட்டில் ஆண்டு தோறும் தீ விபத்து காரணமாக எண்ணற்ற உடைமைகளுக்குச் சேதமும் உயிரிழப்பும் ஏற்படு கின்றன. தமிழ்நாட்டிலும் தீயினால் கணிசமான அளவிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும், தீயினால் சுட்டவடு ஆறுவதற்கு முன்னரே, வெள்ளத்தினாலும் பிற இயற்கைச் சீற்றங்களினாலும் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும், பயிர்களுக்கும் சேதம் ஏற்பட்டு அதனால் மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தில் மூழ்கி விடுகின்றனர். எனவே, தீ விபத்துக்களைத் தடுப்பதும் தீயினாலும், இதர இயற்கைச் சீற்றங்களினாலும் பாதிக்கப் பட்டோரை மீட்டு அவர்களின் துயர் நீக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் தீயின் அழிவைக் குறைப்பதும் தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் முக்கியக் குறிக்கோளாக இருந்து வருகிறது.

2. மத்திய அரசினால் அளிக்கப்படும் கடன் உதவித் தொகை களை ஏற்றுக்கொண்டும் மத்திய அரசால் அங்கீகரிக்கப் பெற்ற நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் வசதிகள் மூலமாகவும் இம் மாநிலத்தின் நிதி நிலைமைக்குட்பட்டும் முடிந்த அளவு தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதே அரசின் குறிக் கோளாகும். இம் மாநிலம் முழுவதும் 25 கி.மீ. தூரத்துக்கு ஒன்று வீதம் ஒவ்வோரிடத்திலும் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசு பெருமுயற்சி எடுத்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிகம் வாய்ப்புடைய தொழிற்சாலைகள் அல்லது குடிசைகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தமிழகத்தில் புதிய தீயணைப்பு தொடங்க அரசு ஒப்புதலளித்து நகரங்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலிலிருந்து நிதி நிலைமைக்கேற்ப ஒவ்வோராண்டும் தீயணைப்பு நிலையங்கள் தொடங்க அரசு ஒப்புதலளித்து வருகிறது.



3. சிறந்த நவீன தொழில் நுட்பம் வாய்ந்த புதிய ஊர்திகளை யும் இதர தீயணைப்பு சாதனங்களையும் வாங்குவதன் மூலம் இம்மாநிலத்தின் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்துவதற்கு அரசு பெரிதும் முயன்று வருகிறது. இதற்காக இந்தியப் பொது ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து அவ்வப்போது கடன் பெறப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டில் ரூ. 106.71 இலட்சங்கள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து தேவையான ஊர்திகளும் மற்ற தீயணைப்பு சாதனங்களும், கருவிகளும் வாங்க கடனாகப் பெறப்பட்டது. இந்த ஆண்டிற்கும் இந்திய அரசு, இம் மாநிலத்திற்கு நவீன சாதனங்கள் வாங்கும் பொருட்டு ரூ. 162.46 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

4. தீயணைப்புப் பணியாளர்களின் நலன் காக்க அரசு உரிய கவனம் செலுத்தி வருகிறது. காவல் துறையில் வழங்கப்படுவது போலவே இத் துறையிலும் உதவிக்கோட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் அப் பதவிக்கு கீழுள்ள பதவிகளிலுள்ள பணி யாளர்களுக்கும் சில இன்றியமையாத உணவுப் பொருட்கள் மலிவு விலையில் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

5. தீயணைப்பு துறையின் முக்கிய பணிகளும் 1985-86 ஆம் ஆண்டில் இத் துறையின் சாதனைகளும் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன. 1967 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித் துறையாக இயங்கி வரும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை இந்நாட்டிலுள்ள மிகத் திறமை வாய்ந்த துறைகளுள் ஒன்றாக இயங்கி வருவதோடு சிரிய திறன் வாய்ந்த துறைகளுள் ஒன்று என்ற நற்பெயரையும் தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. தீ விபத்துக்களினின்று உயிரையும், உடைமைகளையும் காப்பாற்று வதே இத் துறையின் முக்கியக் குறிக்கோளாகும். தீ விபத்தினைத் தடுப்பதும், தீயை அணைப்பதும் இத் துறையின் தலையாய பணியாகும்.

தீ விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுத்தல், தீயணைக்கும் பணியைச் செய்தல் ஆகிய பணிகளுடன் இத் துறையின் கடமை முடிவதில்லை. அவசரக் கால இடருதவிப் பணியையும் செய்து வருகிறது. தீ விபத்துக்களால் மட்டுமின்றி வெள்ளம், புயல், நிலநடுக்கம், கட்டிடம் இடிதல் போன்ற இயற்கை சீற்றங்களாலும் விஷக்குளவிகள், விஷப் பாம்புகள், வெறி நாய்கள் போன்றவை

ளால் ஆபத்து ஏற்படும்போதும், மற்ற எல்லாவித விபத்துக் களின்போதும் உயிரையும் உடைமைகளையும் பாதுகாப்பதில் தங்கள் சேவை முழுவதையும் இவர்கள் இலவசமாகவே அளிக் கின்றனர். பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் தீத்தடுப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், சிதைந்த கட்டடங்களின் இடி பாடுகளில் சிக்கியவர்களையும் ஆழ்கிணற்றில் விழுந்தவர்களையும் வெள்ளத்தில் மூழ்கியவர்களையும் அபாயமான விளைவிக்கக்கூடிய பூச்சிகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் இதுபோன்ற பிற இடர்களில் சிக்கிய மக்களையும், கால்நடைகளையும் மீட்டு நற்பணி புரிந்து வருகிறது. மிகப் பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகளையும் பராமரித்து வரும் இத்துறை, இவ் ஊர்திகளின் மூலம் நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல குறைந்த கட்டணத்தை வாடகையாகப் பெற்றுக்கொண்டு செயலாற்றுகிறது. அடி மட்டத்திலுள்ள ஏழை எளிய மக்களை இலவசமாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்கிறது.

விபத்துக்கள் ஏற்படும் சமயம் தீயணைப்போர்கள் விபத்துக் குள்ளான நபருக்கு முதலுதவி அளிப்பதோடு உடனடியாக அவர்களை மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அழைத்துச்செல்லவும் உதவுகிறார்கள். அரசுக் கட்டடங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை சென்று ஆய்வு செய்து தீ விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றி அறிவுரை வழங்குவதும் இவர்களுடைய பொறுப்பாகும். தீ விபத்தின்போது எல்லா விதமான உதவியும், நிவாரணமும் அளிப்பதில் இத் துறை தனித்தன்மையுடன் திகழ் கிறது. எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுதல்கள் காரண மாகத் தீ விபத்து ஏற்படுமென்று அஞ்சி சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளுக்கும் சென்று செயல்படுவது போன்ற அனைத்துச் சூழ்நிலைகளிலும் உதவி வேண்டுவோருக்கு இத் துறையினர் உதவி செய்கின்றனர். இவ்விதமாக இத் துறையினர் இரவு பகல் எனப் பாராது எந் நேரத்திலும் பொது மக்களுக்கு உதவுவதற்கெனவே காத்திருக் கின்றனர். தொத்து நோய்கள் பெருவாரியாகப் பரவும் காலங் களில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத் துறை பெரிதும் உதவி



புரிகிறது. தேர்தல் காலங்களின்போதும், கலவரங்களின் போதும், பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போதும், காவல் துறையினருடன் இணைந்து பணியாற்றத் தீயணைப்புப் பணி யாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பல தரப் பட்ட வகையில் மனிதாபிமானத்துடன் பணியாற்றி வரும் இத் துறையை சேர்ந்த அலுவலர்கள் பல்வேறு விதிகளின்கீழ் உரிமம் பெறப்பட்ட அல்லது உரிமம் பெறப்பட வேண்டிய பல்வேறு இடங்களையும் ஆய்வு செய்கின்றனர். இவ்விதம் மேற்கொள்ளப் பட்ட கட்டிடங்களின் விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப் பட்டுள்ளன.

சென்னையில் 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய தொழில் மற்றும் சுற்றுலா பொருட்காட்சியில் தீயணைப்புத் துறை முதன் முதலாகப் பங்கெடுத்துக் கொண்டு மேற்படி பொருட்காட்சியிலேயே சிறந்த அரங்கம் என்ற பரிசு பெற்றதோடு, பொது மக்கள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களது பாராட்டையும் பெற்றது.

**6. நிர்வாக அமைப்பு:**

தமிழ்நாடு தீயணைப்புத் துறை, இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இம்மாநிலம் இரண்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று சென்னையை யும் மற்றொன்று மதுரையையும் தலைமையிடமாகக் கொண்டு தனித்தனி துணை இயக்குநரின்கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும், கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின்கீழ் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு நிர்வாக மற்றும் செயல் பணிகளில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவி புரிகிறார். அண்மையில் பல புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்ட தன் விளைவாக, ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. படிப்படியாக தற்போதுள்ள கோட்டங்களை மேற்கொண்டு பிரிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. முதற் கட்டமாக, 1982-ல் சேலம்—தர்மபுரி—வட ஆற்காடு மற்றும் திருநெல்வேலி—கன்னியாகுமரி—இராமநாதபுரம் ஆகிய இரு

[1986 மே 5

கோட்டங்களையும் தேவையான பணியாளர்களுடன் பிரிப்பதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்தது. 1983-ல் திருச்சிராப்பள்ளி-புதுக்கோட்டை-தஞ்சாவூர் கோட்டமும், 1985-ல் தென்னார்க்காடு-செங்கற்பட்டு கோட்டமும் பிரிக்கப்பட்டன. மேலும் 1985 ஆம் ஆண்டு மதுரைக் கோட்டத்தை, இரண்டாக பிரித்து ஒன்று மதுரையைத் தலைமை இடமாகக் கொண்டு மதுரைக் கோட்டம் என்றும், மற்றொன்று திண்டுக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு அண்ணா கோட்டம் என்றும் பிரிக்கப்பட்டு, அவ்விதம் அவைகள் செயல்பட்டு வருகின்றன.

**7. தீயணைப்பு நிலையங்கள் :**

இம்மாநிலத்தில் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள் நிலவரப்படி, மொத்தம் 137 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன (விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன). இவற்றில் 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னை மாநகரிலும், இதர 116 தீயணைப்பு நிலையங்கள் மற்ற மாவட்டங்களிலும் அமைந்துள்ளன. மேற்சொன்னவைகளைத் தவிர அரசினால் ஏற்கனவே ஒப்பளிக்கப்பட்ட 36 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன. (விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன). ஊர்திகளுக்கு மேற்கூடுகள் கட்டுமானம் செய்வதற்காக போக்குவரத்துக் கழகங்களிடம் ஒப்பளிக்கப்பட்டுள்ள புதிய ஊர்திகள் தயார் ஆனவுடன் இந்த 36 தீயணைப்பு நிலையங்களும் திறக்கப்படும். புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பட்டியலில் உள்ள நகரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**8. பணியாளர் எண்ணிக்கை :**

1986 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு தீயணைப்புத் துறையிலுள்ள செயல் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**9. தீ விபத்து அழைப்புகள் :**

1985 ஆம் ஆண்டில் இம் மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு 8,795 தீ விபத்து அழைப்புகள் வந்தன. மேற்படி தீ விபத்து அழைப்புகளில் 123 பெருந் தீ விபத்து அழைப்பு



1986 மே 5]

களாகும். இவை ஒவ்வொன்றிலும் ரூ. 50,000-க்கு மேற்பட்ட உடமைகளுக்குச் சேதமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டது. இம் மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால் அழிந்துவிட்ட அல்லது சேதம் அடைந்த உடமைகளின் தோராய மதிப்பு ரூ. 5.84 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தீயின் அழிவினின்றும் காப்பாற்றப்பட்ட உடமைகளின் தோராய மதிப்பு ரூ. 68.65 கோடியாகும்.

**10. உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள் :**

1985 ஆம் ஆண்டில் 1,926 அவசர மற்றும் மீட்பு அழைப்புகளை இத் துறை ஏற்றது. 1985-ல் எப்போதும் கண்டிராத அளவிற்கு வெள்ளம் ஏற்பட்டபோது தீயணைப்புத் துறை அதிகாரிகளும், பணியாளர்களும், அல்லும் பகலும் அயராது பணி புரிந்தனர். அனைத்து மீட்பு பணிகளில் இப் பணியாளர்கள் ஆற்றிய சேவை, பொதுமக்களாலும் பத்திரிகைகளாலும் பெரிதும் பாராட்டப்பட்டது. இந்த ஆண்டு சுமார் 2,194 நபர்களையும், 340 கால்நடைகளையும் மீட்டு இத் துறை காப்பாற்றியுள்ளது.

**11. நோயாளர்களைக் கொண்டு செல்லும் ஊர்தி:**

ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும் ஊர்திகளும் சில தீயணைப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வூர்திகள் 1985-86 ஆம் ஆண்டில் 4,147 அழைப்புகளை ஏற்றன. இவற்றுள், கட்டண அழைப்புகளின் எண்ணிக்கை 3,962 ஆகும். நோயாளர் ஊர்திகளில் நோய்வாய்ப்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதற்காக வாடகை கட்டணமாக ரூ. 1,09,221 வசூலிக்கப்பட்டது.

**12. ஊர்திகளும் சாதனங்களும்:**

இத் துறையில் ஒரே ஒரு விபத்து உதவி வண்டி உள்ளது. இது தென் சென்னைக் கோட்டத்தை சார்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்து

களில் கவிழ்ந்து சிதைந்த ஊர்திகளைத் தூக்கி அகற்றவும், இழுத்துச் செல்லவும் இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின் போது அதிக எடையுள்ள கட்டிடப் பகுதிகளை அகற்றவும ஏற்றவாறு இவ்வூர்தியில் தனித் துணை பாகங்கள் பொருத்தப் பட்டுள்ளன.

பல மாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீத் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 1980 ஆம் ஆண்டு "ஸ்நார்க்கல்" என்ற நவீன வசதிகள் கொண்ட ஓர் ஊர்தி இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டது. இப்புதிய ஊர்தி சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப் புறங்களில் ஏற்படும் சில பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின்போது பங்கேற்று பணியாற்றுவதில் இத் துறைக்கு பெரிதும் உதவி புரிந்தது.

துறை ஊர்திகள், சாதனங்கள் பெருமளவில் பழுதுறும்போது அவற்றை செப்பனிடுவதற்காக சென்னையில், மாநிலப் பணிக் களறியை இத் துறை பராமரித்து வருகிறது. மேலும், இத் துறையின் மாநிலப் பட்டறையை புனரமைக்கும் முகமாகவும் இப் பட்டறை செம்மையாக இயங்கவும் ஓர் ஊர்திப் பொறியாளர் (தானியங்கி) பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அப் பதவியில் நியமனம் செய்யப்படவிருக்கும் உதவி பொறியாளர் மேற்பார்வையின்கீழ் இம்மாநிலப் பட்டறை இயங்க ஆகு ஏற்பாடு செய்து வருகிறது.

## 13. பயிற்சி:

சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரடியாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சியளித்து வருகிறது. இப்பயிற்சிப் பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு, அவரது பணிகளில் நிலையத்



தீயணைப்பு அலுவலர் இருவரும் உதவி புரிகின்றனர். இப் பயிற்சி வகுப்புகளில் சென்ற ஆண்டில பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே வருமாறு:—

| | துறையைச் சார்ந்தவர்கள். | மற்றவர்கள். |
|---|---|---|
| நிலைய தீயணைப்பு அலுவலர் பயிற்சி .. | 69 | ... |
| தீயணைப்போர் பயிற்சி .. | 224 | 20 |
| தீயணைப்போர் ஓட்டி பயிற்சி .. | 44 | .. |
| இயந்திரக் கம்மியர் ஓட்டி பயிற்சி .. .. .. | 17 | .. |
| நிலைய தீயணைப்பு அலுவலர் மறுபயிற்சி .. .. .. | 20 | .. |
| முன்னணி தீயணைப்போர் மறுபயிற்சி .. .. .. | 76 | .. |

நிலைய அலுவலர்கள்/பயிற்றுவிப்போர் பயிற்சி இந்த ஆண்டு நிலைய அலுவலர்கள் இருவர் நாகபுரி தேசிய பெற நிலையத் தீயணைப்பு அலுவலர்கள் இருவர் நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

## 14. வெகுமதி:

தீயணைப்புத் துறைப் பணியாளர்களுக்கு ஓராண்டில் கீழ்க் காணும் பதக்கங்கள் வழங்கப்படுகின்றன:—

### இந்திய அரசின் பதக்கங்கள்.

(1) குடியரசு தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் வீரச் செயல் புரிந்ததற்காகவும் அல்லது தன்னிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காகவும் வழங்கப்படும் தீயணைப்புத் துறையினருக் கான குடியரசுத் தலைவரின் பதக்கங்கள்.

(2) குடியரசு தினத்தன்றும், சுதந்திர தினத்தன்றும் வீரச் செயல் புரிந்ததற்காகவும் அல்லது தன்னிகரற்ற கடமைப் பற்றுறுதிக்காகவும் வழங்கப்படும் தீயணைப்புத் துறை பதக்கங்கள்.

[1986 மே 5 ஆம்

மாநில அரசின் பதக்கங்கள்.

(3) அண்ணா பிறந்த நாளன்று (செப்டம்பர் 15 ஆம் நாள்) வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் துறை பதக்கங்கள்.

(4) பொங்கல் நாளன்று (ஜனவரி 14 ஆம் நாள்) வழங்கப்படும் தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புத் துறை பதக்கம்.

1985 ஆம் ஆண்டு வீர தீரச்செயல் புரிந்தமைக்காக இந்தியக் குடியரசுத் தலைவரின் தீயணைப்புத் துறை பதக்கம் தீயணைப் போர் ஒருவருக்கும் தன்னிகரற்ற பணிக்கான தீயணைப்புத் துறை பதக்கங்கள் நிலைய தீயணைப்பு அலுவலர்கள் இருவருக் கும், முன்னணித் தீயணைப்போர் ஐவருக்கும், தீயணைப்போர்— ஓட்டிகள் மூவருக்கும், ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் ஒருவருக்கும் மற்றும் தீயணைப்போர் ஐவருக்கும் வழங்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று தன்னிகரற்ற பணிக்காக வழங்கப்படும் தீயணைப்புத் துறை பதக்கம் நிலைய தீயணைப்பு அலுவலர் ஒருவருக்கும், முன்னணி தீயணைப்போர் ஒருவருக்கும், ஓட்டுநர் இயந்திர கம்மியர் ஒருவருக்கும், மற்றும் தீயணைப்போர் ஒருவருக்கும் வழங்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புத் துறை பதக்கங்கள், முன்னணித் தீயணைப்போர்கள் 31 பேருக்கும், ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் 8 பேருக்கும், தீயணைப்போர் ஓட்டிகள் 38 பேருக்கும் மற்றும் தீயணைப்போர்கள் 43 பேருக்கும் வழங்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் அண்ணா பிறந்தநாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் காவல் துறைப் பதக்கங்கள் நிலைய தீயணைப்பு அலுவலர் மூவருக்கும், முன்னணி தீயணைப்போர் ஒருவருக்கும், ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் ஒருவருக்கும், தீயணைப்போர் ஓட்டி ஒருவருக்கும் மற்றும் தீயணைப்போர் ஒருவருக்கும் வழங்கப்பட்டன.

1986 ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சரின் தீயணைப்புத் துறைக்கான பதக்கங்கள் முன்னணித் தீயணைப்போர்கள் 34 பேருக்கும், ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் 19 பேருக்கும் தீயணைப்போர் ஓட்டி



1986 மே 5]

23 பேருக்கும் மற்றும் தீயணைப்போர் 44 பேருக்கும் வழங்கப்பட்டன. இது தவிர, 1985 ஆம் ஆண்டில் தீயழைப்புகள் மற்றும் மீட்பு அழைப்புகளில் நல்ல பணிகள் செய்தமைக்காக 1,155 பணியாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

15. செயல் திறனை அதிகரிப்பதற்காகச் செயல்படுத்தப்பட்ட சில திட்டங்கள் :

பெரும்பான்மையான தீ விபத்துக்கள் அடிக்கடி குடிசைப் பகுதிகளில் ஏற்படுகின்றன. இதனால் பெரும் இழப்பு ஏற்படுகிறது. தீ விபத்து அடிக்கடி ஏற்படும் காலங்களில் பற்கோல், கூரைத் தீக்கொக்கி முதலிய எளிய தீயணைப்புச் சாதனங்களுடன் தற்காலிக புறநகர் தீயணைப்பு நிலையங்கள், குடிசைப் பகுதிகளில் நிறுவப்பட்டன. இப்புறநகர் தீயணைப்பு நிலையங்களில் எந்நேரமும் தீயணைப்போர் இருந்தனர். அவர்கள் இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்து வந்தனர். இந்த நிலையங்களில் காவல் துறையிலிருந்து மினிகாம் செட்டுகள், இரவலாக பெற்று பொருத்தப்பட்டன. மேலும், இவைகளில் சங்கிலித் தொடர் செய்திகள் அனுப்பும் பணிகளும் பொருத்தப்பட்டன. தீயணைப்பதில் இந் நிலையங்கள் மிகவும் உதவியாக இருந்ததால் சென்னை மாநகரில் இந்த ஆண்டில் குடிசைப் பகுதிகளில் தீ விபத்து ஏற்படுவது மிகவும் குறைந்து விட்டது. இதுபற்றிய விவரம் வருமாறு :

| ஆண்டு. | தீயணைப்பு அழைப்புகள். |
|---|---|
| 1982 .. .. | 386 |
| 1983 .. .. | 362 |
| 1984 .. .. | 291 |
| 1985 .. .. | 80 |

16. தீயணைப்புத் துறை சேம நல நிதி:

துயருற்ற தீயணைப்புத் துறை பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத் துறை சேம நல நிதி தொடங்கப்பட்டது. காசநோய், தொழுநோய் அல்லது புற்று

நோயினால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கோ அவர்களின் மருத்துவச் செலவிற்காகவும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விக்காகவும், பணியாளர்களோ அவர்களைச் சார்ந்தவர்களோ இறக்க நேரிட்டால் அவர்களின் ஈமச்சடங்கு செலவிற்கும், இந் நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. எல்லாப் பணியாளர்களுக்கும், பணியிலிருந்து ஓய்வு பெறும் சமயம் தலா ரூ. 200 (ரூபாய் இரு நூறு மட்டும்) இந் நிதியிலிருந்து அடையாள உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 1985 ஆம் ஆண்டில் 48 ஓய்வு பெற்ற சந்தாதாரர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ. 6,876. இந் நிதியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,148 ஆகும். 1985 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தா தொகை ரூ. 32,595. 1985 ஆம் ஆண்டில் இந் நிதியிலிருந்து 260 உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையின் மதிப்பு ரூ. 29,522. இந் நிதிக்கென ஆண்டு மானியத்தை ரூ. 10,000-லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தி 1985 ஆம் ஆண்டு அரசு ஆணைகள் வழங்கியுள்ளது.

**17. நலன்:**

உதவிக்கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவி அதற்கு கீழ் நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்களை காவலர்களுக்கு வழங்குவதுபோன்று அரசு மலிவு விலையில் வழங்குகின்றது. இத்திட்டம் 1—1—1981 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் பின் வருமாறு :—

| நிதியாண்டு. | | செலவுத் தொகை. (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1983—84 | .. | .. 12.61 |
| 1984—85 | .. | .. 14.49 |
| 1985—86 | .. | .. 20.43 |

(31—1—1986 வரை).



2. அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்க வேண்டி முதற்கண் தீயணைப்பு பணியாளர்களுக்கு ரூ. 40.50 இலட்சம் செலவில் உடுமலைப்பேட்டை, ராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்ட அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் மற்ற நகரங்களிலுள்ள பணியாளர்களுக்கும் படிப்படியாக குடியிருப்பு வசதி செய்து தரக் கருதப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தீயணைப்புத் துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சம்பந்தமாக அரசு அளித்த சலுகைகளின் விவரங்கள் இணைப்பு 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**18. பொது:**

அரசு ஏற்கெனவே எடுத்த கொள்கைக்கு இணங்க திருச்சியை தலைமையிடமாகக் கொண்ட மத்திய வட்டாரம் என்ற புதிய வட்டாரம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் சென்ற ஆண்டு நிர்வாக ஆளுகையில் பெரிய கோட்டங்களாக இருந்த தென் ஆற்காடு—செங்கல்பட்டு மற்றும் மதுரைக் கோட்டங்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டன. இந்திய அரசு அளித்துள்ள மாதிரி தீயணைப்பு சட்ட முன் வடிவின் அடிப்படையில், தமிழ்நாடு தீயணைப்புப் பணிச் சட்டம் ஒன்று சென்ற ஆண்டு சட்டமாக்கப் பட்டது. இச்சட்டம் அமுலுக்கு கொண்டு வரும்போது தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் நிர்வாகம் முடுக்கி விடப்பட்டு அதனால் செயல் திறனில் பெருமளவில் முன்னேற்றம் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறாக தீயணைப்புத் துறை பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

## இணைப்பு 1

**இயணைப்புப் பணியாளர்களால் பல்வேறு விதி மற்றும் சட்டங்களின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட இடங்களின் விவரங்கள்.**

| சட்டங்கள். (1) | ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. (2) |
|---|---|
| (அ) தமிழ்நாடு திரைப்பட ஒழுங்கு முறை விதிகள் .. .. | 416 |
| (ஆ) 1948 ஆம் ஆண்டு திரைப்படக் கருவிகள் விதிகள் .. .. .. | 49 |
| (இ) பொதுமக்கள் கூடுமிடங்கள் குறித்த சட்டம் .. .. .. | 440 |
| (ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்—மாநகராட்சிகள் சட்டம் | 1,375 |
| (உ) தமிழ்நாடு மாவட்ட குழுக்கள் சட்டம்—தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் .. .. .. | 1,341 |
| (ஊ) தொழிற்சாலை விதிகள் .. | 1,487 |
| (எ) ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் | 1,517 |
| (ஏ) படைக்கலச் சட்டம்—விதிகளின் கீழ் ஆய்வு செய்யப்பட்டவை. .. | 871 |



## இணைப்பு 2.

**28-2-1986 ஆம் நாள் நிலவரப்படி இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை.**

| மாவட்டத்தின் பெயர் (1) | வட்டத்தின் பெயர் (2) | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (3) |
|---|---|---|
| வடக்கு வட்டாரம் | | |
| சென்னை மாநகர் கோட்டம் | | |
| | சென்னை மாநகர் (வடக்கு) .. | வண்ணாரப்பேட்டை. |
| | | எஸ்பிளனேடு. |
| | | இராயபுரம். |
| | | வியாசர்பாடி. |
| | | செம்பியம் |
| | | கீழ்ப்பாக்கம். |
| | | வேப்பேரி. |
| | | தண்டையார்பேட்டை. |
| | | வ.உ.சி. நகர். |
| | பொன்னேரி .. | எண்ணூர் |
| | | மணலி. |
| | சென்னை மாநகர் (தெற்கு) .. | எழும்பூர். |
| | | திருவல்லிக்கேணி. |
| | | மைலாப்பூர் |
| | | தேனாம்பேட்டை. |
| | | அசோக் நகர். |
| | | சைதாப்பேட்டை. |
| | | கிண்டி. |
| | | கிண்டி ஆளுநர் மாளிகை வளாகம். |
| | சைதாப்பேட்டை .. | தாம்பரம். |
| | | அம்பத்தூர். |

| மாவட்டத்தின் பெயர். (1) | வட்டத்தின் பெயர். (2) | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (3) |
|---|---|---|
| | **தென் ஆர்க்காடு கோட்டம்.** | |
| தென் ஆர்க்காடு : | | |
| | சிதம்பரம் | சிதம்பரம். |
| | கடலூர் | கடலூர். |
| | | நெல்லிக்குப்பம். |
| | பண்ருட்டி | பண்ருட்டி. |
| | விருத்தாச்சலம் | விருத்தாச்சலம். |
| | | வேப்பூர். |
| | கள்ளக்குறிச்சி | கள்ளக்குறிச்சி. |
| | திருக்கோயிலூர் | திருக்கோயிலூர். |
| | உளுந்தூர்பேட்டை | உளுந்தூர்பேட்டை. |
| | விழுப்புரம் | விழுப்புரம். |
| | திண்டிவனம் | திண்டிவனம். |
| | செஞ்சி | செஞ்சி. |
| | **செங்கற்பட்டு கோட்டம்.** | |
| செங்கற்பட்டு : | | |
| | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம். |
| | ஸ்ரீபெரும்புதூர் | ஸ்ரீபெரும்புதூர். |
| | மதுராந்தகம் | மதுராந்தகம். |
| | செங்கற்பட்டு | செங்கற்பட்டு. |
| | திருவள்ளூர் | திருவள்ளூர். |
| | கும்மிடிப்பூண்டி | கும்மிடிப்பூண்டி. |
| | **சேலம்-தருமபுரி கோட்டம்.** | |
| சேலம் : | | |
| | சேலம் | சேலம். |
| | சேலம் | சேலம் உருக்காலை. |
| | திருச்செங்கோடு | திருச்செங்கோடு. |
| | ஆத்தூர் | ஆத்தூர். |
| | மேட்டூர் | மேட்டூர். |
| | நாமக்கல் | நாமக்கல். |
| | இராசிபுரம் | இராசிபுரம். |
| தருமபுரி : | | |
| | தருமபுரி | தருமபுரி. |
| | ஓசூர் | ஓசூர் (சிப்காட்). |
| | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி. |
| | அரூர் | அரூர். |



| மாவட்டத்தின் பெயர். (1) | வட்டத்தின் பெயர். (2) | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். (3) |
|---|---|---|
| | **வட ஆர்க்காடு கோட்டம்.** | |
| வட ஆர்க்காடு : | | |
| | வேலூர் | வேலூர். |
| | வாலாஜா | இராணிப்பேட்டை (சிப்காட்). |
| | வாலாஜா | இராணிப்பேட்டை. |
| | அரக்கோணம் | அரக்கோணம் |
| | வந்தவாசி | வந்தவாசி. |
| | ஆரணி | ஆரணி. |
| | திருவண்ணாமலை | திருவண்ணாமலை. |
| | செங்கம் | செங்கம். |
| | திருப்பத்தூர் | திருப்பத்தூர். |
| | வாணியம்பாடி | வாணியம்பாடி. |
| | வாணியம்பாடி | ஆம்பூர் |
| | குடியாத்தம் | குடியாத்தம். |
| | போளூர் | போளூர். |
| | **தென் வட்டாரம்.** | |
| | **மதுரைக் கோட்டம்** | |
| மதுரை : | | |
| | மதுரை (தெற்கு) | மதுரை. |
| | மதுரை (வடக்கு) | தல்லாகுளம் |
| | மேலூர் | மேலூர். |
| | உசிலம்பட்டி | உசிலம்பட்டி. |
| | பெரியகுளம் | பெரியகுளம். |
| | பெரியகுளம் | தேனி-அல்லி நகரம். |
| | உத்தமபாளையம் | உத்தமபாளையம். |
| | உத்தமபாளையம | போடிநாயக்கனூர். |
| | பெரியகுளம் | ஆண்டிப்பட்டி. |
| | பெரியகுளம் | மயிலாடும்பாறை. |
| | திருமங்கலம் | திருமங்கலம். |
| | **அண்ணா கோட்டம்—திண்டுக்கல்.** | |
| அண்ணா மாவட்டம் | | |
| திண்டுக்கல் : | | |
| | நத்தம் | நத்தம். |
| | நிலக்கோட்டை | வத்தலகுண்டு. |
| | திண்டுக்கல் | திண்டுக்கல். |
| | பழனி | பழனி. |
| | | ஒட்டன் சத்திரம். |

1986 மே 5]

| மாவட்டத்தின் பெயர். | வட்டத்தின் பெயர். | செயல்படும் இயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|---|
| )1) | (2( | (3) |

கோயம்புத்தூர்—பெரியார்—நீலகிரி கோட்டம்.

| | | |
|---|---|---|
| கோயம்புத்தூர் : | | |
| | கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் (தெற்கு). |
| | கோயம்புத்தூர் .. | கோயம்புத்தூர் (வடக்கு). |
| | மேட்டுப்பாளையம் .. | மேட்டுப்பாளையம். |
| | பல்லடம் .. | திருப்பூர் |
| | பொள்ளாச்சி .. | பொள்ளாச்சி. |
| | உடுமலைப்பெட்டை .. | உடுமலைப்பேட்டை. |
| பெரியார் : | | |
| | ஈரோடு .. | ஈரோடு. |
| | தாராபுரம் .. | தாராபுரம். காங்கேயம் |
| | கோபிச்செட்டிப் பாளையம். .. | கோபிச்செட்டிப் பாளையம். |
| நீலகிரி : | | |
| | கூடலூர் .. | கூடலூர் |
| | உதகமண்டலம் .. | உதகமண்டலம். |
| | குன்னூர் .. | குன்னூர். |

திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம்.

| | | |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி : | | |
| | திருச்சிராப்பள்ளி .. | திருச்சிராப்பள்ளி. |
| | திருச்சிராப்பள்ளி .. | ஸ்ரீரங்கம். |
| | முசிறி .. | முசிறி. |
| | துறையூர் .. | துறையூர். |
| | பெரம்பலூர் .. | பெரம்பலூர். |
| | பெரம்பலூர் .. | ஜெயங்கொண்ட சோழபுரம். |
| | கரூர் .. | கரூர். |
| | மணப்பாறை .. | மணப்பாறை. |
| புதுக்கோட்டை : | | |
| | புதுக்கோட்டை .. | புதுக்கோட்டை. |
| | அறந்தாங்கி .. | அறந்தாங்கி. |
| | திருமயம் .. | பொன்னமராவதி. |